

# பரராசசேகரம்

ஐந்தாம்பாகம்


பதிப்பாசிரியர்

பிரம்மஸ்ரீ பொ. ஸ்ரீபதி சர்மா

ௐ

சிவமயம்

# பரராசசேகரம்

ஐந்தாம் பாகம்

ஏழாலை ஐ.பொன்னையா என்பவரால் 1935 ல்
பதிப்பிக்கப் பெற்றதின் மீள் பதிப்பு

பதிப்பாசிரியர்

பிரம்மஸ்ரீ பொ.ஸ்ரீபதி சர்மா D.A.M
ஆயுர் வேத வைத்யர்– சச்சிதானந்தா வைத்யசாலை
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

பிரம்மஸ்ரீ .பொ.ஸ்ரீபதிசர்மா லக்ஷ்மி அம்மாள் தம்பதிகளின்
சதாபிஷேக வைபவத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டது

வெளியீடு

நியந்த்ரீ
சிவன்கோவில், நல்லூர், யாழ்ப்பாணம்.

சுபானு வருடம் ஆவணி 1ம் நாள் திங்கட்கிழமை
18.08.2003

நூல் :- **பரராசசேகரம் (ஐந்தாம் பாகம்)**

முதற்பதிப்பாசிரியர்:- **ஏழாலை ஐ.பொன்னையா**
பவ வருடம் தை 1935
திருஞானசம்பந்தர்
அச்சியந்திரசாலை,
மல்லாகம்.

மீள் பதிப்பாசிரியர் :- **பிரம்மஸ்ரீ பொ.ஸ்ரீபதிசர்மா** D.A.M
சச்சிதானந்தா வைத்தியசாலை
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

பதிப்பு :- சுபானு வருடம் ஆவணி 1ம் நாள்
18.08.2003

பிரதிகள் :- 300

வெளியீடு :- **நியந்த்ரீ**
சிவன்கோவில், நல்லூர்,
யாழ்ப்பாணம் - இலங்கை.

அச்சுப்பதிப்பு :- ஹரிஹரணன் பிறிண்டேஸ்
கணனி வடிவமைப்பு.

# முகவுரை

**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்,**
**கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**தலைவர் - நியந்த்ரீ, சிவன் கோயில், நல்லூர்.**

யாழ்ப்பாணத்தில் வடமராச்சிப் பிரதேசத்தில் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக வைத்தியத் துறையில் அளப்பரிய பணியாற்றிவரும் காசியப கோத்திரத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ பொன்னையா ஐயர் ஸ்ரீபதி சர்மா, D.A.M. அவர்கள் தமது எண்பது வருடப் பூர்த்தியில் 18.08.2003 அன்று தமது இல்லாளுடன் சதாபிஷேகம் காணும் பேறு பெற்றுள்ளதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். மங்கள கரமாக நிகழும் இவ்வைபவம் ஒருவரது வாழ்வில் கிடைத்தற்கரிய அரிய பேறாகும். தமது இல்லாளுடன் இனிமையான இல்லறவாழ்வு கண்டு தமது பிள்ளை களாலும் சுற்றத்த வராலும் பாசத்துடனும் பக்தி யுடனும் விநயத்துடனும் நடாந்தப்படும் இவ்விழாவைக் காண்பது பிரம்மஸ்ரீ சர்மா அவர்களுக்கு ஓர் இனிமையான அனுபவ மாகும். அறுபதாவது வயது நிறைவில் ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் நிகழ்வது போல் எண்பதாவது வயது நிறைவில் நிகழ்வது சதாபிஷேக வைபவமாகும்.

பிரம்மஸ்ரீ ஸ்ரீபதி சர்மா அவர்கள் 1923ம் ஆண்டு பிரம்மஸ்ரீ பொன்னையா ஐயர் தெய்வயானை தம்பதியர்க்குப் புத்திரனாகப் பிறந்தார் இவர் தமது பாடசாலைக் கல்வியைப் பெற்றதன் பின்னர், 1942 - 1948 வரையுள்ள காலப்பகுதியில் லங்கா ஆயுர்வேதக் கல்லூரியில் கல்விகற்று ஆயுர்வேத வைத்தியத் துறையில்

D.A.M. என்னும் பட்டம் பெற்றவர். பின்னர் தமது இருபதாவது வயது முதல் தம்முடைய இல்லத்தி லேயே சச்சிதானந்தா என்னும் பெரில் வைத்திய நிலையத்தை ஆரம்பித்து இன்றுவரை எளிமை, சேவை மனப்பான்மை, கடமையுணர்வு ஆகிய விழுமியங்களின் இருப்பிடமாக விளங்கி கடமைணர்வு ஆகிய விழுமியங் களின் இருப்பிட மாக விளங்கி, கடமையாற்றி வருபவர் தமது சுய முயற்சியினாலும் அனுபவத்தினாலும் அத்தியா வசியமான ஆயுர் வேத மருந்துகளைத் தயாரித்து நெல்லியடி, மந்திகை பிரதேச சபை ஆயுர்வேத வைத்திய நிலையங்களுக்கு வழங்கி வந்தள்ளமை இவரது சிறந்த பணிகளிலொன்றாக அமைந்தது. மேலும் நெல்லியடி பிரதேச சபை வைத்தியசாலையில் அவ்வப் போது தற்காலிகமாக தமது சேவையை வழங்கி, உதவி வந்துள்ளார். இவரது வைத்திய சேவையினால் வடமாரட்சி பிரதேச மக்களுக்குக் கிடைத்த நன்மைகள் அளப்பரியன. எனவே இவர் அவர்களது அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திராக விளங்கி வருபவர்

தமது வைத்தியக் கடமைகளுடன் தினமும் வரமராட்சியில் தம் குல தெய்வமாகிய இணவொல்லை முருகன் கோவிலில் பூஜை செய்வதையும தமது குலக்கடமையாக ஏற்று பக்தியுடன் நிறைவேற்றி வருகின்ற பண்பாளர். சில வருடங்களுக்கு முன் இவ்வாலயத்தைப் புனரமைத்து மஹாகும்பாபிஷேகத்தை நடாத்திய பெருமையும் இவருக்குண்டு.

இவருக்கு இரு புதல்வர்களும் ஐந்து புதல்வியரும் உள்ளனர். இவரது புதல்வர்களில் ஒருவராகிய பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கிருஷ்ணானந்த சர்மா B.A (Hons) வாழ்நாட் பேராசிரியர் அமரர் இலக்கிய கலாநிதி பிரம்மஸ்ரீ.கா.கைலாசநாத குருக்கள் அவர்களிடத்தும் என்னிடத்தும் கல்வி கற்ற மாணவராவார். யாழ். பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பை நிறைவு செய்து சம்ஸ்கிருதத்தில் சிறப்புச் சித்தி பெற்று சம்ஸ்கிருதத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றிவருவர். அவர் தமது ஏனைய சகோதரர்களுடன் இணைந்து நியந்த்ரீ அமைப்பின் அனுசரணையோடு சதாபிஷேகம் காணும் தமது தந்தைக்கு உவந்த பரராஜசேகரம் (5ம் பாகம்) என்னும் நூலை மீள்பதிப்பு செய்து வெளியிட முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கதொரு முயற்சியாகும். தமது அன்பின் காணிக்கையாக தமது தந்தைக்குப் பிள்ளைகள்

அர்பணிக்கின்றமை வரவேற்கத்தக்க முயற்சியாகும். 1930களில் ஏழாலை ஐ.பொன்னையா பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்ட இந்நூலை காலத்தின் தேவையாகக் கருதி சதாபிஷேக வைபவத்தை முன்னிட்டு மீள்பதிப்பு செய்வது பொருத்தமனதாகும். நீண்டகால இடைவெயியையடுத்து செய்வது பொருத்தமானதாகும். நீண்டகால இடைவெளியையடுத்து மீள்பதிப்புப்பெறும் இந்நூல் வைத்தியத் துறை சார்ந்தவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். இந்நூலில் இடம் பெற்றுள்ள விடயங்கள் இத்துறைசார் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவக் கூடியவை. இம் முயற்சியை வைத்திய உலகம் மனமுவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

சதாபிஷேகம் காணும் பிரம்மஸ்ரீ ஸ்ரீபதி சர்மா தம்பதிகள் மேன்மேலும் பல்லாண்டு காலம் இனிதே தமது சுற்றம் சூழ வாழ்ந்து தாம் சார்ந்துள்ள புனிதமான துறையாகிய வைத்தியத்துறைக்கு அளப்பரிய பணியாற்ற எல்லாம் வல்ல ஸ்ரீகமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமியின் திருவருள் துணை நிற்பதாகுக. விழாக்காணும் தம்பதியர்க்கு எம் மனமுவந்த நல்வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக!

விழா அனைத்து நிலைகளிலும சிறக்க நியந்த்ரீ தேவியின் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

**பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்**
கலைப்பீடாதிபதி

**யாழ் - பல்கலைக்கழகம்**
**14.08.2003.**

# அணிந்துரை

சித்தமருத்துவம் பற்றி யாழ்ப்பாணத்தில் பல நூல்கள் 20ம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் பரராசசேகரம் முதன்மையானது. பரராசசேகரம் என்னும் வைத்தியநூல் ஏட்டுப் பிரதிகளிலிருந்து கேசரித்த விடயங்களை பெருந்தகை ஐ.பொன்னையா அவர்கள் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளமை சித்தமருத்துவத்திற்கு அவர் ஆற்றிய அர்ப்பணிப்புடன் அமைந்த சமூக சேவை என்று கூறினால் மிகையாகாது. பரராசசேகரம் என்ற நூல் தொகுக்கப்பட்ட போது பல ஏட்டுப் பிரதிகள் சிதைவடைந்திருந்தமையால் கிடைக்கப்பெற்ற பகுதிகள் மட்டுமே புத்தக வடிவத்தில் பதிப்பாசிரியர் ஐ.பொன்னையா அவர்களினால் வெளியிடப்பட்டது.

அவரால் வெளியிடப்பட்ட புத்தகங்கள் இன்று வைத்தியர்களிடையே காணப்படுவது அரிதாகவே உள்ளது. இதனை வைத்திருக்கும் வைத்தியர்களும் மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றனர். அவர்களிலும் பலர் இந்த நூல்களளை மற்ற வைத்தியர்களுக்கு கொடுப்பதை அதன் முக்கியத்துவம் கருதி தவிர்த்து விடுகின்றனர். ஆனால் துன்னாலையைச் சேர்ந்த வைத்தியர் மதிப்பிற்குரிய பொன்னையா ஐயர் ஸ்ரீபதிசர்மா அவர்கள் தான் பெற்ற செல்வங்கள் மற்றவர்களும் பெற வேண்டும் என்ற பரந்தபட்ட உள்ளம் கொண்டவர். தன்னிடம் உள்ள பரராசசேகரம் (முழுப் பாகங்களும்) சொக்கநாதர் தன்வந்திரியம், இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், செகராசசேகரம், சுதேச வைத்திய ஔடதத் திரட்டு போன்ற பல நூல்களை மீள் பதிப்பு செய்து மக்களுக்கு பயன்படச்செய்ய வேண்டு மென்ற உயரிய நோக்கத்துடன் வடகிழக்கு மாகாண சபையின் சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு வழங்கி ருந்தார்.

நான் சுதேச மருத்துவப் பணிப்பாளராக கடமையாற்றிய போது 4 இலட்சம் ரூபாவை ஒதுக்கி ஐயா இவர்களின் 3 புத்தகங்களை மீள்பதிப்பு செய்யக் கூடிய வாய்ப்பை எல்லாம் வல்ல இறைவன் திருவருள் எனக்கு கிடைக்கச் செய்தது. ஸ்ரீபதி சர்மா அவர்களின் பரந்த பண்பினால் இந்த காரியம் நிறைவேறியது.

ஸ்ரீபதி சர்மா அவர்கள் 1942-1948 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் லங்கா ஆயுள்வேதக் கல்லூரியில் பெருமை பெற்ற அக்கால வைத்தியர்களான திரு.பற்குணம், திரு.அந்தோனிப் பிள்ளை, திரு.இராசரத்தினம். திருகனகசபை,திரு.சுப்பிரமணியம் ஆகிய ஆசிரியர்களிடம் கல்வி பயின்றதுடன் பருத்தித்துறை தாமு வைத்தியர், வேலுப்பிள்ளை வைத்தியர் ஆகியோரிடமும் செயன் முறையாக வைத்திய விடயங்களைக் கற்றவராவர்.

தம்முடைய இல்லத்தில் சச்சிதானந்தா வைத்திய சாலை என்னும் பெயரில் வைத்திய நிலையத்தை அமைத்து தமது இருபது வயது முதல் இன்று வரை வைத்திய சேவையைச் செய்து வருகின்ற சர்மா அவர்கள் நாராயண தைலம், தாழங்காய் எண்ணெய், பருத்தி இலைச்சாறுத் தைலம் போன்ற தைலங்களையும் சௌபாக்ய சுண்டி, அழுக்கரா, நெல்லிக்காய் லேகியம் போன்ற குளம்பு வகைளையும் பல்வேறு குளிசை, தூள் மருந்து வகைகளையும் தயாரிப்பதில் சிறப்பு வாய்ந்தவர். இவர் நெல்லியடி, மந்திகை பிரதேச சுதேச வைத்திய நிலையங்களுக்குச் சில காலம் மருந்துகள் தயாரித்து வழங்கியும் நெல்லியடி சுதேச வைத்திய நிலையத்தில் அவ்வப்போது தற்காலிகமாகக் கடமை புரிந்து வந்தமையும் குறிப்பிடக் கூடியதாகும். இத்துடன் திருப்பதியைடந்து விடாத ஸ்ரீபதி சர்மா அவர்கள் தனது சதாபிஷேக பூர்த்தியை (80 வயது) முன்னிட்டு பரராசசேகரத்தின் ஐந்தாம் பாகமாகிய மேகம், பிளவை, பவுந்திரம், கைக்குழித் தாமரை ரோக நிதானங்கள், வன்மவிதி, சிரைவிதி, இரட்சை விதி விடயங்களடங்கிய நூலை வைத்தியர்கள், மருத்துவ மாணவர்கள் மற்றும் கல்விமான்கள், பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்குடன் மீள்பதிப்பு செய்து விநியோகிக் சித்தம் கொண்டுள்ளமை எமக்கு கிடைத்த ஒரு கொக்கிஷமாகும்.

வைத்திய சேவையில் ஸ்ரீபதிசர்மா அவர்களின் பங்களிப்பு மக்கள் உணர்ந்ததே. ஆனால் இந்த புத்தகத்தை தனது சொந்த நிதி வளத்தை உபயோகித்து வெளியிடுவது வைத்திய உலகிற்கு அவர் செய்யும் அரும்பெரும் சேவையாகும். ஐயா அவர்கள் நூறுவருடங்கள் வாழ்ந்து இன்னும் பல சேவைகளை செய்து நீடுழி வாழ எல்லாம் வல்ல நல்லையின் 'சிவகுடும்பம்' சகல அருளையும் பாலிக்க வேண்டுமென பிராத்திப்பதுடன் அவர் நோயற்ற வாழ்வுடன் சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

**வளர்க உங்கள் அரும்பணி**

**அன்புடன்**

**பேராசியரீ சு.பாவானி.**

**சித்தமருத்துவத்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# பதிப்புரை

ஆரோக்கியமான இனிய உயிர்வாழ்க்கையை உகந்தளிப்பதே தர்மங்கள் அனைத்திலும் மேலானது என காசியப சம்ஹிதை கூறுகின்றது. நாம் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை அனுட்டான விதிகளாகக் கூறி உடல்உள ஆரோக்கி யத்தைப் பேணவேண்டிய முறைகள் பற்றி வாழ்க்கை யினூடு நமது சமயம் போதிக்கின்றது. இம்மையில் குறைவற்ற செல்வமாகிய நோயற்ற வாழ்வை வாழ்ந்து மறுமைக்குரிய நல்ல செயற்பாடுகளைச் செய்வ தற்கு உடல் உள ஆரோக்கியம் நன்கு அமைதல் வேண்டும். “பலம்து ஏவ விஜிக்ஞாசி தவ்யம்” எப்போதும் சரீரபலம் வேண்டும் என சாந்தோக்கிய உபநிடதமும் “சரீரம் ஆத்யம் கலு தர்ம சாதனம்” சரீரம் காப்பதற்கு வேண்டிய பொருள்களுள் முதன்மையானது என கவி காளிதாசனும் கூறுவதனைக் காணலாம்.

இருக்கு வேதத்திற்கும் அதர்வ வேதத்திற்கும் உபவேதமான ஆயுர்வேதம் பிணிகளைப் போக்கவும் ஆரோக்கியத்தைக் காக்கவும் ஆயுளைப் பெருக்கவும் ஆதாரமானதாகும். “வித்” என்னும் அடியிலிருந்து பிறந்த வேதம் என்ற சொல்லானது அறிவு, அறிதல் எனப்பொருள்படும். தீமையை விலக்கி நன்மையைப் பெறுவதற்கு இம்மையில் நாம் கண்ணாலோ ஊகத்தாலோ அறிய முடியாத சாதனத்தை எது தெரிவிக்கின்றதோ அதுவே வேதம். “பிரத்யக்ஷேண அனுமித்யாவா யஸ்து உபாயயோ ந புத்யதே ஏனம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேததா”

பிணிகளைப் போக்கவும், ஆரோக்கியத்தைக் காக்கவும் ஆயுளைப் பெருக்கவும் ஆதாரமான ஆயுர்வேதம் பிரம்மாவினால் முதலில் வெளிப்படுத் தப்பட்டது. நான்கு வேதங்களையும் கற்ற பிரம்மா பின்பு ஆயுள் வேதத்தைச் செய்தார் எனப் பிரம்ம வைவர்த்த புராணம் கூறுகின்றது. இருக்கு வேதத்தின் உபவேதமாக ஆயுர்வேதத்தைச் சௌனகர் சரணவியூகம் என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். இதில் சத்திர சிகிச்சை பற்றிய விடயங்களே அதர்வத்திலிருந்து பெறப்பட்டவை எனவும் கூறுகின்றார். சுசுருதர், சரகர் என்போர் அதர்வத்தின் உபவேதமே ஆயுர் வேதம் என்பர். உலக நன்மையை நாடி வெளிவந்த ஆராய்ச்சியை ஆதாரமாகக் கொண்ட ஆயுளை விருத்தி செய்து ஆரோக்கியத்தைக் காக்கும் உபாயங்களை உபதேசிப்பதால் வேதத்தோடு ஒத்தசான்றோர்களுக்குகந்த சாஸ்திரமாக ஆயுள் வேதத்தை அக்கினி வேசர் குறிப்பிடுகின்றார். ஆப்தோப தேசமான இவ்ஆயுர் வேதம் சிறப்புற்ற அறிவினாலும், அனுபவத்துடன் கூடிய அனுஷ்டானத்தினாலும் முதலி லேயே வியாதிகளைத் தடுக்கவும் தோன்றிய வியாதிகளை நீக்கவும் ஏற்ற சாதனமாகும் என சரகர் குறிப்பிடுகின்றார்.

ஹேதுஸ்காந்தம் (காரணம்) லிங்கஸ்காந்தம் (குறிகள்) ஔஷதஸ்காந்தம் (சிகிச்சை) என மூன்று பகுதிகளாகக் கூறப்படுகின்ற ஆயுர்வேத சாஸ்திரமானது சரீரசாஸ்திரம், வநஓஷதி சாஸ்திரம், பதார்த்த விஞ்ஞானம் பற்றிய அறிவுகளை உள்ளடக்கியது. ஆத்ரேய சம்பிரதாயம், தன்வந்தரி சம்பிரதாயம் என இரண்டு பாரம்பரியங்களையுடையது. சரீரம், நிதானம், ஒஷதி விபாகம், ஔஷதகல்ப்பம் சிகித்சை விதி என ஒருவகையாகப் பகுக்கப்பட்ட இவ்வாயுர் வேதம் காய சிகிச்சை, சல்லிய சிகிச்சை என வகைப்படுத்தப்படும்.

இவற்றில் காயசிகிச்சை ஆத்ரேய சம்பிரதாயத்தையும் சல்லிய சிகிச்சை தன்வந்தரி சம்பிரதாயத்தையும் பின்பற்றி வளர்ச்சியடைந்தது என்பர்.

இறைவனுக்கு வைத்யநாதன் என்ற ஒரு பெயர் உண்டு. ஆன்மாக்களின் உடல் உள்ளத்தைப் பண்படுத்தி முக்திக்கு அழைத்துச் செல்பவர் இறைவன். இருக்கு வேத சதருத்திரிய பாடல் "ப்ரதமோதைவ்யோ பிஷக்" பிஷக்தமம் த்வா பிஷஜாம்ஸ்ருணோமி" பிறவிப் பிணிக்கு வைத்யன் "அயம்மே விஷ்வ பேஷஜோயம் சிவாபீமர்சன" இது எல்லாப் பிணிகளுக்கும் மருந்து எனக் கூறுகின்றது. மேலும், "சரீரம் மே விசர்ஷணம்" எனது உடல் ஆரோக்கியமுடையதாக இருக்கட்டும் - மேதா சூக்தம். " "ஆப்யாயந்து மமாங்கானி" வாக்ப்ராணசக்ஷு: ச்ரோத்ர மதோ பல மிந்திரியாணிச சர்வாணி" என அவயவங்களான வாக்கு, பிராணன், கண்கள், காதுகள், மற்றும் எல்லாப்புலன்களும் மிகுந்த ஆற்றலுடன் விளங்கட்டும் எனவும், "தன்னோ வாதோ மயோபுவாது பேஷஜம் தன்மாதாப்ருதிவீதத் பிதாத்யெள! தத் க்ராவாண: ஸோமஸு"தோ மயோபுவஸ் ததச்வினாச்ருணதம் திஷ்ண்யாயுவம்" காற்றும் பூமித்தாயும் தந்தையாகிய வானமும் நமக்கு ஆனந்தத்தைத் தருவதான மருந்தை அளிக்கட்டும். ஆனந்தம் தருவதான மருந்தை தயாரிப்பதற்கான கற்களை சோமனின் மகனான புதன் நமக்கு தரட்டும். இரட்டையரான அஸ்வினி சகோதரர்கள் நமக்கு புத்தியில் ஒளியைத் தரட்டும் எனவும், இருக் 101.163 பாடல்கள் அக்ஷீப்யாம்தே சூக்தம் நோயற்ற வாழ்வைச் சுயதூண்டுதல் மூலம், பிரார்த்தனை மூலம், நீக்கப்படும்முறைமை ஒவ்வொரு அங்கங்களிலிருந்தும், ஒவ்வொருமுடிச்சுக்களிலிருந்தும் நோயை விரட்டுகின் றேன் என்ற வகையில் பிரார்த்தனையாகவும் அமைகின் றது. அதர்வவேதத்திலும் நோய்நீக்குவதற்கு மூலிகைகள்

ஒஷதிகள், மந்திர ஜபங்கள் என்பன பயன்படுத்தப் பட்டுள்ளன. அக்கினி புராணத்திலும் ஜ்வரம், வாதம், சித்த ஔஷதம், ரோகவர்ணனம் என்பன பற்றிக் கூறப்படு கின்றது. "அதர்வவேதேச பக்திராதேஸ்யா" யது பாகம அதர்வவேதஸ்ய" என்னும் சரக சுஸ்ருதவாக்கியங் களும் மற்றும் பிறவும் வைதிக இலக்கியங்களிற்கும் ஆயுர்வேதத்திற்கும் இடையேயான தொடர்பினை நன்கு குறிப்பிடுகின்றன. அதர்வ அங்கிரஸ மகரிஷிகளாலும் தேவர்களாலும் மனிதர்களாலும் உண்டாக்கப்பட்ட பலவித ஒஷதிகள் தோன்றி வளர்ந்தமை பற்றியும், ஒவ்வொரு அவயவங்களையும் அவற்றில் தோன்றும் வியாதிகளையும் நீக்கும் முறைமைகளையும் அதர்வம் குறிப்பிடுகின்றது.

உத்தரகாமிகம் எழுபத்தி ஐந்தாவது படலம் நோய்தீர்க்கும் முறைமை பற்றிக் கூறுகின்றது. பலி, தானம், பிரதிவிம்பதானம், விபூதி தரித்தல், விபூதிஸ்நாதம், மந்திர கும்ப தீர்த்தத்தை அபிஷேகித்தல், தெளித்தல், மந்திரஜபம் தாயத்துக்கள் அணிதல் என்னும் முறைமைகள் மூலம் நோய்களை நீக்குதல் பற்றிக் கூறுகின்றது. மேலும், ஔதி மூலிகைகள் ஆயுர் வேதவைத்ய முறையில் நன்கு பயன்படுத்தப்படுகின்றது வைதிக ஆகம கிரியைகளிலும் ஒஷத மூலிகைகள் பயன்படுத்தப்படுவது பிரசித்தமாகும். கிரகங்களுக்குரிய தானியம், சமித்து, தேவதைகளுக்குரிய சமித்து வில்வம் என்பன ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. பும்ஸவன கிரியையில் ஆலம்மொட்டு, நெற்கதிர் என்பன பயன்படுத்தப்படுகின்றது. விவாஹ காலத்தில் மணமகளின் பூமாலையில் சிறிய மூலிகைகள் சேர்த்து அணிந்து கொள்ளுவதால் மணமகளுக்கு வைதவ்யம் ஏற்படாது. சக்களத்தி ஏற்படாது என கூறப்படுகின்றது. "வாசவதத்தை சபத்னீ" "மர்த்தன" மூலிகையை விவாஹ காலத்தில் மாலையில் சேர்க்கவில்லை என ஸ்வப்ன வாசதத்தத்தில்

பாசர் குறிப்பிடுகின்றார். பிரசவகால நேராக இல்லாமல் சிக்கல் ஏற்படின் பெண்ணின் கைகால்களில் ஹிரணயபுஷ்டி, சவர்ச்சலா, விசல்யா என்ற மூன்று மூலிகைகளைக் கட்டினால் சீக்கிரம் சுகப்பிரசவமாகும் என சுசுதருர் குறிப்பிடுகின்றார். (சுசுருதசம்ஹிதை அத்10) பலதீபிகை, சாராவலி போன்ற சோதிட நூல்களும் கிரகங்கள் தேவதைகள் ஆகியவற்றின் வழிபாட்டினாலும் நோய்களை நீக்கலாம் எனக் கூறுகின்றன. அஷ்டாங்க ஹிருண்யத்தில் குறிப்பிடடே தேவதைகளை வழிபடுவதனால் குறிப்பிட்ட நோய்கள் நீங்கும் எனக் கூறப்படுகின்றது. பலதீபிகையில் ரோக நிர்ணயம் என்னும் பகுதியில் நோய்கள் அவற்றிற்கான பரிகாரங்கள் என்பன கூறப்படுகின்றன.

யோகசாஸ்திரத்தில் சிறந்த சூத்திரங்களையும், வைத்ய சாஸ்திரத்தில் சிறந்த சம்ஹிதைகளையும் ஆதிஷேட அவதாரமாகக் கருதப்படும் பதஞ்சலியே இயற்றினார் எனக் கூறப்படுகின்றது. சரகசம்ஹிதையில் கூறப்பட்டுள்ள சில வாக்கியங்கள் பதஞ்சலி யோக சூத்திரத்திலும் காணப்படுகின்றது. இராமபத்திரதீக்ஷிதர் தமது பதஞ்சலி சரித்தத்தில் "சூத்ராணி யோக சாஸ்த்ரே வைத்ய சாஸ்த்ரேச சம்ஹிதாமதுலாம் க்ருத்துவா பதஞ்சலி முனி:" எனக்கூறுகிறார். விக்ஞான பிக்ஷுவின் யோகசாஸ்திர வார்த்திகம், சக்ரபாணியின் சரகடீகை, சிவதாசனுடைய சக்ரதத்தடீகை சிவராமனுடைய வாசவ தத்தா வியாக் யானம் ஆகியவற்றிலும் இக்கருத்து நிலவுகிறது. இவற்றிலிருந்தும் கி.பி. 1706ல் நாகே சபட்டனின் லகுமஞ்சூசை என்னும் வியாகரண நூலி லிருந்தும், சரகரும் பதஞ்சலியும் ஒருவர் என்ற கருத்தும் கூறப்படுகின்றது.

இவ்விதமாக வைதிக, ஆகமகிரியைகள், சோதிடம், யோகசாஸ்திரம், இரச சாஸ்திரம் என்பவற்றோடு தொடர்புடைய இவ் ஆயுர்வேத சாஸ்திரம் பற்றி பிரம்ம தேவர், அஸ்வினிதேவர், இந்திரன், சூரியன், நகுலன், சகாதேவன், இயமன், ச்யவனர், சனகர், அகத்தியர் ஆகியோர் முறையே இயற்றிய சம்ஹிதை களாக, பிரஜாபதி சம்ஹிதை அஸ்வினி சம்ஹிதை, வலிபித்தசம்ஹிதை, பாஸ்கர சம்ஹிதை வைத்திய சர்வஸ்வம், வியாதி சிந்து, விமர்த்தனம், ஜீவனார்ணவம், ஜீவதானம், வைத்திய சந்தேக பஞ்சனம், த்வைத நிர்ணயதந்திரம் என்னும் நூல்கள் கொள்ளப்படுகின்றன. இவை தவிரப் சரக, சசுருத, சம்ஹிதைகள், சாலக்யதந்திரம், கௌமாரபிருத்தியம், மாதவநிதானம், சித்தயோகம், சக்ரசங்கிரகம், பாவப்பிரகாசம், இரசார்ணவம், இரசரத்தின சமுச்சயம், இரசசூடாமணி, இரசப்ரதீபம், தாதுமஞ்சரீ போன்ற இன்னும் பல நூல்கள் ஆயுர்வேதம் பற்றி காணப்படுகின்றன. அஷ்டாங்கஹ்ரு தயம் என்னும் வாக்படரால் இயற்றப்பட்ட நூலும் குறிப்பிடத்தக்கது.

மேலும் அகத்திய முனிவரால் சௌமியசாகரம், இரணவைத்ய ஆரூடம், பரிபூரணம், வைத்தியவல்லாதி, குருநாடிசாஸ்திரம், வாதஞான சௌமியம்,குணவாகடம், செந்தூரம், பரிபாஷத்திரட்டு, வைத்தியதைல முறைகள் என்னும் நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அகத்தியர், தன்வந்தரி, திருமூலர், தேரையர், பிரமமுனி, கோக்கர், மச்சமுனி, கமலமுனி, புலிப்பாணி, போகரனையோர், வரருஷி, யூகிமுனி, சட்டமுனி, நந்திசர் ஆகியோர் இயற் றிய பல நூல்கள் ஆயுர்வேத சாஸ்திரத்தில் காணப்ப டுகின்றன. அஷ்டாங்க ஹ்ருதயம், சரகசுசுருத சம்ஹிதை கள் என்பன இந்தியதமிழ் நாட்டு அரசு மூலம் மொழி

பெயர்ப்புடன் மூலமும் இணைந்ததாக பதிப்பிக்கப் பட்டுள்ளது.

வடமொழி மூலமான செகராசசேகரம், பரராஜசேகரம் என்னும் வைத்திய நூல்களை யாழ்ப்பாண சிங்கைநகரை அரசாட்சி செய்த மன்னர்களாகிய செகராசசேகரன், பரராஜசேகரன் ஆகிய மன்னர்கள் மொழி பெயர்த்துள்ளனர். மூல நூலினைக் கற்றுணர்ந்து தமிழில் பா வடிவில் இவ்விரு நூல்களும் மன்னர்களால் ஆக்கப்பட்டது.

செகராசசேகரன் காலத்தை 1380-1414 எனவும் பரராசசேகரன் காலத்தை1478-1519 எனவும் கொள்வர். இவ்விரு நூல்களையும் யாழ். இருபாலைச் செட்டியார் இயற்றிய வைத்திய விளக்கம், அமிர்தசாகரம், பதார்த்த சூடாமணி, சொக்கநாதர் தன்வந்தரியம், வைத்தியத் தெளிவு என்னும் நூல்களை ஏழாலையைச் சேர்ந்த சுதேச வைத்தியர் திரு. ஐ. பொன்னையா அவர்கள் யாழ்ப்பாண மருத்துவ நூல்களின் வெளியீட்டு வரிசையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். கிடைக்கப்பெற்ற பிரதிகளைக் கொண்டு செகராசசேகரத்தை ஸ்ரீ முகவருடத்திலும் மற்றும் நூல்களை 1927ம் ஆண்டும் வைத்தியத் தெளிவு அனுபந்தத்துடன் 1930 இலும் பரராசசேகரம் நூலினை பல பாகங்களாக 1930-1936 களிலும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இவற்றின் பிரதிகள் அருகிப்போனமை யினால் காலத்தின் தேவை கருதி வடகிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினர் என்னிடம் இருந்து மேற்படி நூல்களை வாங்கி பரராஜசேகரம் தவிர்ந்த ஏனைய நூல்களை பேராசிரியர். சு. பவானி அவர்கள் இத்திணைக்கழத்திலிருந்த போது 2000ம் ஆண்டில் பதிப்பித்துள்ளார்.

பரராஜசேகரம் என்னும் இந்நூலிடைய பாகங்களான கெர்ப்பரோக நிதானம் 1998, பாலசேகர நிதானம் வ. சிவப்பிரகாசம் என்பவருடைய பொழிப்புரை யுடன் 1999, வாதரோகம் - 2001, சுரரோக நிதானம், சிலோத்துமரோக நிதானம் -2002 காலப்பகுதிகளில் உரையுடன் வெளியிடப்பட்டன. வைத்திய கலாநிதி க. வே. துரைராசா அகத்தியர் வைத்தியசாலை & மருந்தகம் என்பவருடன் இணைந்த மீள்பதிவுக்குழு இந் நூல் தொகுதிகளைப் பதிப்பித்து வெளியிட்டது.

எமது சதாபிஷேக வைபவத்தை முன்னிட்டு எனது விருப்பத்திற்கிணங்க பரராசசேகரத்தின் ஒரு பகுதியை மீள்பதிப்புச் செய்து வெளியிடலாம் என எண்ணி யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைப் பேராசிரியர் சு.பவானி அவர்களை அணுகி ஆலோசனை பெற்றோம். பேராசிரியர் அவர்கள் பரராஜசேகரத்தின் ஐந்தாம் பாகத்தை வெளியிடுவது சிறந்தது என எமக்கு ஆலோசனை வழங்கி வாழ்த்துரையும் வழங்கியுள்ளார். அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். வைத்திய கலாநிதி க. வே. துரைராசா அவர்களையும் சந்தித்து அளவளாவிய போது உரையோடு வெளியீடு செய்வது நல்லது எனத்தெரிவித்தார். காலஅவகாச மின்மையால் மூலநூல் அவ்விதமே பதிப்பித்து வெளியிடப்படுகின்றது. ஆலோசனைகள் வழங்கிய மீள்பதிப்புக் குழுவினராகிய வைத்தியக் கலாநிதி க. வே. துரைராசா அவசர்களுக்கும் நன்றிகள். எனது சதாபிஷேகத்தை முன்னிட்டு நியந்த்ரீயின் வெளியீடாக பதிப்பித்து வெளியிடப்படும் இந்நூலிற்கு சிறந்த வாழ்த்துரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ

ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்நூற் பதிப்புப் பற்றி வேண்டிய ஆலோசனைகள் வழங்கி உற்சாகமூட்டிய லங்கா ஆயுர்வேதக் கல்லூரிச் சபையின் தலைவரும், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவருமாகிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கும் எமது நன்றிகள். குறுகிய காலத்தில் இந்நூலினைச் சிறந்த முறையில் பதிப்பித்த ஹரிஹணன் அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

பிணியால் வருந்துபவன் ஆரோக்கிய நிலையை மீண்டும் அடைய மிக்க ஆவல் கொள்கின்றான் (குமாரசம்பவம் 1-32) என காளிதாசர் கூறுகின்றார். நோயுற்றவன் சிகிச்சை மூலம் ஆரோக்கியத்தை அடைவதற்கு சரகரின் வாக்கிற்கு ஒப்ப அனாதியான அழிவற்ற நித்தியமானதுமான ஆயுர்வேதசாஸ்திரமானது உதவவேண்டும். இவ் அறிவு பரந்து வளர வேண்டும்.

**பத்ரம் கர்ணேபி : ஸ்ருணு யாம தேவா:**
**பத்ரம பஸ்யே மா அக்ஷபி: யயத்ரா :**

**பொ.ஸ்ரீபதிசர்மா**

**சச்சிதானந்தா வைத்யசாலை**
**துன்னாலை வடக்கு,**
**கரவெட்டி.**
**18.08.2003**

யாழ்ப்பாண வைத்திய நூல் வெளியீடு 10

உ
சிவமயம்

# பரராசசேகரம்

## ஐந்தாம் பாகம்

மேகம், பிளவை, பவுந்திரம், கைக்குழித்தாமரை
ரோக நிதானங்கள், வன்மவிதி, சத்திரவிதி, சிரைவிதி,
இரட்சைவிதி, அனுபந்தத்துடன்

பதிப்பாசிரியர்

ஏழாலை
ஐ. பொன்னையா

திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை
மல்லாகம்
பவ ஸ்ரீ தை மீ
1935

உரிமை பதிவுசெய்யப்பெற்றது.

# முகவுரை

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் பரராசசேகரத்தின் ஐந்தாம் பாகம் இப்போது வெளியிடப்படுகின்றது. இதில் சேர்க்கப்பட்டிருக்கும் வன்மவிதி, சத்திரவிதி, சிரைவிதி, இரட்சைவிதி என்பன இதற்குமுன் தமிழிலே வெளிவராத புதிய பகுதிகள். வன்மவிதி, சத்திரம், சல்லியம் முதலியவற்றால் ஊறுபடின் அபாயத்தை விளைவிக்கும். தானங்களைப் பற்றிக் கூறுவது. சத்திர விதி : புண்கள், கட்டிகள் முதலியவற்றைக் கீறுதல் முதலிய வேலைகளுக்கு வேண்டிய கருவிகளின் தன்மை, அளவு என்னும் இவைகளைப் பற்றிக் கூறுவது. சிரைவிதி : வேறு சிகிச்சைகளால் தீராத நோய்கள் சிலவற்றில் இரத்தம் எடுக்கும் முறைகளும், சிரையென்னும் காரிரத்தோட்ட நரம்புகளின் நிலைகளும் முதலியன பற்றிக் கூறுவது. இரட்சைவிதி சில நோய்களிற் சுடுந்தானங்களும், அதற்கு வேண்டிய கருவிகளின் இலட்சணங்களும் என்னும் இவை முதலியன கூறுவது.

இவற்றின் கையெழுத்துப்பிரதி ஒன்று மாத்திரமே எம்மிடமுள்ளது. அதுவும் தொட்டால் ஒடிந்துவிழக்கூடிய அத்துணைப் பழமைவாய்ந்ததும், இராமபாணம் முதலியவற்றால் பெரிதும் பழுதடைந்தும் இருக்கும் நிலையிலுள்ளது. இவற்றால் அப்பகுதிகளை நன்கு செப்பஞ்செய்து பூரணமாக வெளியிட்டுக்கொள்ள முடியவில்லை. சிரைவிதியில் ஏறக்குறைய நூற்றைம்பது செய்யுட்களும், சத்திரவிதியில் முப்பது செய்யுட்களுக்கு மேலும், வன்மவிதியில் நூறு செய்யுட்களுக்கு மேலும் பிரதியிற் காணப்படும் செம்மை செய்து கொள்ள முடியாமையினாற் தவிர்க்கப்பட்டன. ஏறக்குறைய 500 செய்யுட்கள் வரையுள்ள சத்திரகர்மவிதி, நயனசத்திரவிதி, சல்லியவிதி என்பன எழுதப்பட்டிருக்கும் பாகம் அத்துறைகளிற் பயிலும் வைத்தியரொருவர் எம்மிடம் வாங்கியிருந்தார். பின் நாம்

போய்கேட்ட போது, பிரதிசெய்துவிட்டுத் தருவதாகச் சொல்லிப் பலதடவைகள் அலைத்துவிட்டு முடிவில், வைத்தவிடத்திற் காணாமற் போய்விட்டது என்று சொல்லி எமக்கு வெறுங்கையைக் காட்டிவிட்டார். நாமும் பெரிய ஏட்டிலிருந்து அப்பாகத்தைப் கழட்டிக்கொடுத்த எமது குற்றத்தையே நினைத்து நொந்து கொண்டு திரும்பிவிட்டோம்.

சந்திரகர்மவிதி : புண்கள், பிளவைகள், முதலியவற்றின் இலட்சணங்களும், அவற்றைக் கீறுதல் முதலிவற்றின் தன்மைகளும் கீறியபின் செய்யவேண்டிய சிகிச்சைகளும் என்னும் இவை முதலியவற்றைப் பற்றிக் கூறுவது. நயன சத்திரவிதி : சத்திரம் பண்ண வேண்டிய நயன ரோகங்களின் இயல்புகளும் அதற்குரிய கருவிகளின் இயல்புகளும் முதலியன பற்றிக் கூறுவது. சல்லியவிதி: உடம்பினுட் பொருந்திய எலும்புகள் முதிர்ந்தாயினும் இடந்தப்பியாயினும் நரம்புகள் தசைநார்கள் முதலியவற்றை தாக்கினால் அதனால் ஏற்படும் குறிகுணங்களும் முன் ஆணி முதலிய அன்னிய பொருட்கள் அவையவங்களில் ஏறினால் அதனால் ஏற்படும் குணங்குறிகளும் அவற்றையகற்றும் குணங்குறிகளும் பின் செய்ய வேண்டிய சிகிச்சைகளும் ஏற்புவலி தோன்றும் குறியும் சிகிச்சையும் முதலியன பற்றிக் கூறுவது. இவை கிடைக்குமாயின் பின்னர் வெளியிடப்படும்.

இப்போது அச்சிலிருக்கும் நூல்கள்

பரராசசேகரம் 6ம் பாகம்

1. உதரரோகநிதானம்
   குன்மம், சூலை, கவுசி முதலியன. மூலரோகநிதானம், கிரகணி, அதிசாரரோகநிதானங்கள்.
2. வாகடதத்துவம், இதில் வைத்தியர்களும் மற்றையோரும் அறிந்து கொள்ள வேண்டிய அரிய பொருள்கள் பல உள்ளன.
3. நாடிதீபிகை

ஐ. பொ.

உ
சிவமயம்

# பரராசசேகரம்

## பதினொராவது
## மேகரோகநிதானம்

வாரண வதனத் தெந்தை மலரடி வணங்கி வாழ்த்தி
ஆரண மறியா வண்ண லருளிய வாயுள் வேதம்
தாரணி யுள்ளோ ருய்யத் தமிழினால் விரித்த வற்றுள்
நீரணி மேகத் தாதி நிகழ்த்துவ முணர்ந்து கொள்ளே 1

### மேகநோய் உண்டாதற்கு ஏது

மாதர் மயக்க மிகுதியினான் மதியி லச்ச மிகுதலினால்
போதை தருங்கள் ளருந்துதலாற்புலான்மீனிறைச்சி நெய்பாலால்
சீத வுணவாற் பதனழிந்த தீனை விரும்பித்தின்பதனால்
ஓது முணவின் மேலுணவா லுடம்பு மிகவும் பருத்தலினால் 2

அருந்து முணவிலினிப்பதிக மாக வுறலா லிராக்காலம்
பொருந்து முறக்கந் தவிர்தலினாற் புசிப்புக்குறைவான் மிகுதியினால்
திருந்து மடவார் போகமற விடலான் மிகலாற் றேகமிக
வருந்த வெயிலின் மிகுநடையால் வந்து தோன்றும் பலமேகம்

### தோன்றுங்குறியும் வகையும்

மேனியுந் தடித்து நொந்து வேதினை யதிக மாகி
ஊனுடல் தாகந் தோன்றி யுண்டா நீரழிவு மேகம்
ஆனது பித்தந் தன்னி லாறதாஞ் சேற்ப னம்பத்
தீனமாம் வாத நான்கர மிதில்வாதந் தீரா நீரே 4

## அவற்றின் பெயர்

செப்பிய பித்தந் தன்னிற் சேர்ந்திடு மாறு மேகம்
அப்பியஞ் சுரோணி நீல மந்தர மவிட்டா னம்மே
ஒப்புறு மதங்க மென்ப ரோதிய சேற்பம பத்தும்
வெப்புறு சிக்கா மேக மிகுபுலா லவண மேகம் 5

மேகமார் மதமா னந்த மிகுமகா மேகங் காச
மேகமே வெறிமே கந்தான் வெறுத்திடு தாக மேகம்
போகமார் சுக்கி லத்திற் பொருந்திய மேக மென்ப
வேகமார் வாத நான்கில் விளைந்திடு மேகஞ் சொல்வாம் 6

மேகமார் மதுமே கந்தான் விளம்பிய திருணி மேகம்
வேகமா ரரித்திர மேக மிகுந்திடு சோக மேகம்
மேகமிவ் வாறதாக விளம்பின ரிருப தென்றே
சோகமா ரிவற்றிற் றோன்றுங் குணங்களு மருந்துஞ் சொல்வாம் 7

## பித்தமேகம் 6ல்

### 1. அப்பியமேகம்

பித்ததோ ஷத்தில் வந்த பிரமிய மாறி லப்யம்
நித்திரை போன்மயக்க நெஞ்செரி வுடம்பு காந்தல்
அத்தியிற் சுரநீர் பெய்தா லதுவெண்ணெய் போலக் காணல்
சித்தம்வே றாதல் பின்னைச் சிவந்துதான் மலம்பே தித்தல் 8

### 2. சுரோணிகேம்

குருதியாய்க் கழியுநீரே யுவந்தது தேடுங் கொள்ளார்
விரைவொடு நீர்க டுக்கும் வெளுத்துடல் வற்று நாளில்
இருமல்போற் புகையுந் தொண்டை யெப்போதுந் தாகமாகும்
சுரிவட மனைய மின்னே சுரோணியின் மேகமாமே 9

### 3. நீலமேகம்

செய்யவே மதிம யக்குஞ் சிற்றின்பந் தேடுங் கூடா
மெய்யெலாம் வரளுங் காந்து மிகுந்துநீர் நீலம் போலாய்ப்
பெய்யுநீ ரடியிற் சீயே பெருகிடு மிலமிடாது
பய்யவே தாது நாசம் பத்திய மிறங்கா தென்னே 10

### 4. அந்தரமேகம்

அந்தர மேக நீர்தா னன்னமுந் தயிர்மோர் வேண்டும்
சந்துக்குள் வலிக்குஞ் சற்றுச் சற்றாய்நீர் வீழ்ந்து காட்டும்
வந்துற்ற கூரை நீர்போன் மஞ்சட்போற் சாம்பல் நீராம்
இந்தநீர் குன்றிப் பின்னை யினிப்பொடு புளிப்புத் தேடும் 11

### 5. அவிட்டான மேகம்

நீரதை வற்றக் காய்ச்சி னெய்யென வடிவந் தோன்றும்
நீருணத்தாபமாகு நெஞ்செரித்த பருங்கைகால்
நீருணத் தாக மாகு நீளவே நரம்பாய் வீழும்
நீர்முகி குலாய மேக நிற்சய மவிட்டா னம்மே 12

மலம் பேதித்திருக்கு மானை மதமென நீரிறங்கும்
சலங்காய்ச்சி லடியில் வண்டல் சாற்றுவர் மண்போற்றாழும்
பெலங்கெடு முடம்பு காந்தும் பெய்யுநீ ரதிகமாகும்
வலங்கெடுஞ் சிகிச்சை தாழ்க்கின் மரணமுமாக்குமன்றே 13

### 6. மதங்கமேகம்

இன்னமு மதங்க மேக மெடுக்குநீர் புளிப்பா யானை
முன்னிய மதம்போற் கண்டு முடுகியே தாக முண்டாம்
அன்னமு மிறங்கி டாதே யாண்மைபோ மிருமுஞ் சற்றே
சென்னியுங் கனத்து நோவாய்த் தினவொடு சிரங்கும் பற்றும் 14

## சிகிச்சை

### மருதந்தோற் குடிநீர்

மருதுமா விவற்றின்பட்டை மருதோன்றி கருவேல் வன்னி
கருவேம்பி னீர்க்கு மல்லி கழறதி மதுரஞ் சாதி
பெருமரப் பட்டை சுக்குப் பேணிய முத்த மேலம்
தெரிநாறு கரந்தை யெல்லாஞ் சேரவே காய்ச்சிக் கொள்ளே 15

### வல்லாரற்குடி நீர்

வல்லாரை துளசி யேல மருதந்தோ லவரைத் தோலும்
அல்லியின் விதையும் வேலு மறுகம்வேர் நாணல் வேரும்
சொல்லியநாழி கொண்டு தூணியி லெட்டொன் றாக்கி
மெல்லவே யுண்ண வந்த மேகநீ ரழிவு போமே 16

முன்னை யிலாமிச் சிலந்தைவேர் முருக்கம் வித்து வில்வமிலை
கன்னிச் சருகு முடக்கொற்றான் கரிய துளசி யதிவிடயம்
மன்னற் கோட்ட மதிமதுரம் வகையோ ரொன்று சமன் கொண்டு
நன்னீர் விட்டே யெட்டொன்றாய் நாடிக் காய்ச்சிக் கொள்வீரே 17

### சூதநாதஉண்டை

சூத நிறையே காரீயஞ் சொல்லுங் காந்த மிதற்கிரட்டி
ஈதி லாவிரை வித்திரட்டி யிதனி லிரட்டி தெங்கின்றா
தோது மலர்போற சரியெடுத்தே யொக்க விடய மதுரமுத்தம்
சாதி கராம்பு சிற்றேலந் தம்மைச் சேர்த்தே யரையாயே 18

அரைக்க வெருமை மோர்தெளித்தேயந்த மருந்தைக் கழங்களவு
நிரைக்கத் திரட்டிப்புத்தோட்டினிழலிலுலர்த்தித் தயிர்தேனெப்
உரைக்குங் குடிநீர் தனிலருந்த வுடனே பித்தத் தெழுந்துடலைக்
கரைக்கு மேக நீராறுங் காணா தோடி யொழித்திடுமே

**பித்தமேகம் 6ேம் முற்றிற்று.**

## சிலேற்பன மேகம் 10ல்

### 1. சிக்காய்மேகம்

மிக்கசேற் பனத்தெ ழுந்த மேகநீர் பத்துங் கேளாய்
சிக்காயங் கலங்க னீராய்ச் சிறுகெண்டைச் சினைபோற் றோன்றி
ஒக்கவே துவர்ப்பாய் முற்றி யுடல்கரைந் திறங்கும் வானீர்
விக்கல்கொட் டாவி தும்மன் மிகுந்திடுங் குணங்க ளாமே 20

### 2. புலால் மேகம்

கேட்டிடாய் புலான்மே கந்தான் கெம்புமீன் கழுவு நீர்போல்
மூட்டிய வனலாய்ச் சுட்டு மூக்குநீ ரிறக்க மாகும்
கோட்டிகள் பலவு முண்டாங்குறியடி நோகும் புண்போல்
நாட்டினி லிதன்கு ணத்தை நவின் றனர் பெரியோர் தாமே 21

### 3. இலவணமேகம்

விரும்பிய லவண மேக மிகுந்துநீ ருப்பு றைக்கும்
துரும்பென மேனி வற்றுந் தொண்டையுங் கன்றி நோவாம்
திரும்பநீர் காய்ச்சிப் பார்க்கிற் சிவந்துவுப் பாகித் தோன்றும்
குரும்பையின் முலைநன் மாதே கோசமு மெரிவுண் டாமே 22

### இம்மூன்றுக்கும் குடிநீர்

வில்வம்வேர் மருதம் பட்டை வெந்தயங் கராம்போ டேலம்
குல்லையா விரையி லந்தை கொடுப்பைநன் னாரி மூலம்
வல்லாரால் சிற்ற மட்டி மருதோன்றி யத்திப் பட்டை
நல்லவிம் மருந்தை நீரி னாட்டியே யைந்தொன் றாக்கே 23

வற்றிய குடிநீர் தன்னில் மதுரம்வெந் தயங்க ராம்பு
உற்றதோர் விடயஞ் சாதி யுவந்தவா வாரை யல்லி
கற்றாழஞ் சருகு நேராய்க் கழஞ்சரைத் துண்ணும் போது
முற்றிய சிக்காய் மேக மொழிபுலால் லவண நீர்போம் 24

### 4-மதமேகம்

மதமேகஞ் செய்கு ணந்தான் வாயது கசந்து காட்டும்
இதம்வரும் பின்னெ டுக்கும் யானைமும் மதமே போல
முதியநீ ரெடுக்கும் பாலே முற்றிய புளிப்பு நாடும்
அதிகமாய்த் தாகமுண்டா மயர்ந்துடல் வலிக்கு மென்னே 25

### 5 - ஆனந்தமேகம்

திட்டமா னந்த மேகஞ் சிறுகரும் பினிற்சா றொத்து
விட்டநீர் குளிர்ந்து காட்டும் வேதினை மயக்க முண்டாம்
முட்டமே லுளைந்து ளைந்து முதுகந்தண் டெலும்பு நோவாம்
அட்டபே தாதி சூத்திர மாய்ந்திடு மென்று காணே 26

### 6. மகாமேகம்

செப்பிய மகாமே கந்தான் சிக்காய மிறங்கு நீரின்
துப்பெனத் தெறித்து வீழுஞ் சுருக்கெனக் குறுக்கிற் குத்தும்
குப்புறத் தள்ளிக் காட்டுங் குணம்வரும் வெகுநீ ருண்டாம்
இப்படிக் குணங்க ளாமென் றியம்பினார் முனிவர் தாமே 27

### *சிகிச்சை*

வன்னிவல் லாரல் கோட்டம் மணியுறு முத்தக்காசு
சின்னிவேர் கொத்த மல்லி செவ்வாம்பல் கொற்றான் மூலம்
இன்னிவை பதக்கு நீரிட் டெட்டொன்றாய்க் காய்ச்சி யூற்றி
மன்னிப வங்க பற்ப மருந்துசெய் நன்ற தாமே 28

மருந்துவில் வாதி யெண்ணெய் மகாபலாட் சாதியெண்ணெய்
பொருந்துமே லாதியெண்ணெய் புளிசந்த னாதியெண்ணெய்
திருந்தவப் பிரகந் தம்மைச் செய்திட மதமே கந்தான்
நிரந்தவா னந்தமேக மகாமேக நீரும் போமே 29

### 7. காசமேகம்

இயம்பிய காச மேக மேதமாய் வாயி னிக்கும்
வியன்பெற முகங்க றுக்கும் வெண்ணுரை நீரே வீழும்
அயர்ந்துகண் டுக்க முண்டா மடிரண்டுங் காந்த லாகும்
நயந்துசற் றிரும லுண்டா நயந்தவர் நவின்ற வாறே 30

### 8. வெறிமேகம் சிகிச்சை

வெறிமேகம் பக்கமாகி மிகவெறி போலக் காட்டும்
அறியுமாட் டிறைச்சித் தண்ணீ ராமென நீரி றங்கும்
இறுகியே மலம்வி டாதா மிதற்குமுற குடிநீர் தன்னில்
நெறியதா யப்பி ரேக நிசமிடத் தீருமன்றே 31

### 9. தாகமேகம் - சிகிச்சை

தாகமார் மேகச் செய்கை தயிர்மோர்போல் நீரி றங்கும்
வேகமாய் வரும்பா லன்னம் பலதினுந் தாகங்கொள்ளும்
சோகமாய்க் கண்ம யக்கு மெரிந்திடு மதுர முள்ளி
பாகமாய்க் குடிநீர் வங்க பற்பமிட் டுண்ண நீங்கும் 32

### 10 சுக்கிலமேகம்

சுக்கில மேகம் வாயினுள்ளேதான் புண்ணாய் நாறும்
பக்கத்திற் கண்ணீர் பாயும் பாதிநீர் சலம்போல் வீழும்
தொக்குடல் காயும் வற்றுஞ் சூட்சத்தில் மின்போ லாடும்
கக்குமே கோழை யாக விக்குணங் கண்டி டாயே 33

## சலசரிசிந் தூரம்

கெந்த முடனே ரசமொன்று கிளருந் தங்க மிதிற்பாதி
வந்த கூத்தங் குதம்பைநீர் வார்த்தே யரைப்பாய் காண்மூன் றுக்
கந்த மருந்தைக் குப்பிக்கு ளடைத்து நாலு விரற்கடையாய்த்
தந்த மாசித் தாளிக்குண் மணலைச் சொரிந்து மேல்வையே 34

சொரிந்த மணலைக் குப்பியின்வாய் தோன் றப்பரப்பிக்கமலமென
விரிந்த காடாக் கினியிடும்பின் மின்னே மறுநாண் மால்தேவி
மருந்துக்கொன்று பொடிதூவி வாய்க்க மூன்று நாள்வெந்தே
எரிந்த மருந்தின் சரியாக வெடுப்பாய் காந்த சிந்தூரம் 35

சிந்துர வப்பி ரேகஞ் சிவக்கவே வைத்து வங்கம்
முந்திய பற்பமிந்த முறையாகச் சேர்த்துக் கொண்டு
இந்துவி னுதலாய் தேனி லிட்டிடச் சேற்ப னத்தில்
வந்தநீர பத்தும் வாதமேகநீர் நாலும் போமே 36

**சிலேற்பனமேகம் 10ம் முற்றிற்று**

# வாதமேகம் 4ல்

## 1. மதுமேககுணம்

விதமிகு வாத நாலின் மேகநீர் கனலே போன்றும்
வதசினை யுருளை போன்று மடிக்கடி நீரி றங்கும்
புதியதே னிரத முத்துப் போலநீர் நுரைத்தி றங்கும்
அதிகமா மருந்திற் றீரா வசாந்திய மென்ன லாமே 37

## 2. திருணிமேகம்

திருணி மேகம் புளிகரைத்த நிறமா யதுபோ லேநாறும்
பெருக விறங்குநீர்மலமும் பேய்ப்பு டோல்போ லுலர்ந்துவந்
தெரியப் படிக மெனமாந்தி யியக்கித் தியக்கித் தாகிக்கும்
விரியுங் கண்ணி லிமைப்பொடுக்கு மேலோர் சொன்ன நூலாமே 38

## 3. இரத்தமேகம்

மங்கையே யிரத்த மேகம் வாயது கசக்கும் பின்னை
அங்குநீர் மஞ்சள் போலா மதுபோல நாற்றங் காணும்
கங்குலின் மருளுங் கண்கள் கைகால்க ளெரிவுண் டாகும்
பங்கயன் மாயோன் காணாப் பரனருள் புரிந்த தாமே 39

## 4. சோகமேகம்

விள்ளுவாய் சோக மேக மின்னிய வீக்க மாகும்
எள்ளெண்ணெய் போல நாறு மிறங்குசீர் சிறுத்து வீழும்
முள்ளெனச் சிங்கு பாறு முழுதுமெய் யெரிவுண்டாகும்
உள்ளவிக் குணங்க டம்மி லோரொரு குணமுங் காணும் 40

மண்டலந் தொண்ணூ றாநாண் மாதமா றெட்டாந் திங்கள்
விண்டவோர் வருடம் பின்னை மென்மேலு மொன்று கூட்டப்
பண்டித னருளி னாலே பன்னிரண்டாண்டாய் நிற்கும்
கண்டுநீர்க் குணத்தைப் பார்த்துக் கருதியே மருந்து செய்யே 41

## நாட்சென்றபிரமியத்திலுண்டாகும் நோய்கள்

பிரமியமெடுத்து அனேகநாட்சென்று பெருகியே யுதரத் தில்வாயு
நிறையவேயடுத் துச்சலமுமேயெடுத்து நெடுகநாட்சென்றிடுமாகில்
மறிபடுநீ ரும்மட்டிகள் செருக்கென் வாயது திறக்குமாப் போலப்
பறிபடும்பின்னைப் பறிந்து பின்னடைக்கும் பாரதிலிலிங்காரஞ்சூலை 42

சூலையே மிகுக்கி லக்கினி யெழும்புந்
தோன்றிடு மிலிங்கத்திற் கடுப்புச்
சாலவே முள்ளுத் தைத்தபுண் போலச்
சற்றுள்ளே சுருக்கெனக் குத்தும்
மேலெலா மயர்ந்து கிடுகிடு வென்ன
வெகுபிள்ளைப் பிறவிநோக் காடு
போலவே முக்கின் மலமுடன் சலமும்
பொதுபொது வாமென விழுமால் 43

விழுமினு மனேக வேதனை செய்யு
மிகும்படி முன்புபோ லிருக்கும்
எழும்விழும் பின்னை யெட்டினிற் பத்தி
லேறவு மனேகநாட் செல்லில்

பழையவே போல வேதனை யெடுக்கும்
பாய்ந்திடு முட்டணத் தறையில்
கழும்பது கல்லாய்த் திரண்டிடும் பலநோய்
கண்டிடும் மறைமொழி காணீர் 44

மொழிந்திடும் பழைய பிரமியந் தன்னான்
முடுகிடுங் கிடுப்பொடு வாதம்
குழிந்தெழும் பிளவை பவுந்திர மின்னுங்
கொதித்திடு மண்டத்தின் சூலை
சுழிந்திடுங் கிரிச மிலிங்கத்தி லடைப்புத்
தொடுத்திடும் வெகுசலக் கழிச்சல்
பொழிந்திடுந் துளைபோ லிருக்கினு மிதனைப்
போக்குறும் வகையினைப் புகல்வாம் 45

**சிகிச்சை**

உரைத்தகா ரிய மிரசமுங் கூட்டி
யொன்றித்த சிந்துரங்தொள்க
நிரைத்தலங் கணமுஞ் சிந்துர மதுவு
நேர்பட வழமையாய்க் கொள்க

வரைத்ததோர் தண்டிற் கர்ப்புரம் புனுகு
வளம்படு சலாகையிற் செலுத்த
நுரைத்தநல் லெண்ணெய் குளிர்மையாய் வைத்து
நுகர்ந்தது பற்றியே யிடுங்கால் 46

**காந்தக்குளிகை**

மாந்தருக்கு நீரழிவு வந்தா லதுநீங்கக்
காந்தக் குளிகை கழறக்கேள் - சேர்ந்ததொரு
சுத்திசெய்த காரீயஞ் சூதத்திற் சேர்ந்தெடுத்து
மற்றுஞ் சரக்கு வகையுரைப்பன் - குற்றமறும்

மேகரோகநிதானம்

காந்தங் கெருட பச்சை சன்மதஞ் சாதிலிங்கம்
வாய்ந்த வவின் சாத் திரபேதி - ஆய்ந்திடுநற்
சாதிக்காய் பத்திரியுஞ் சாருங் கடல்றாஞ்சி
ஓதுமுள்ளி தேற்றா வறுவிரையும் - தீதற்ற
முத்தக்கா சாவரந்தோல் முற்றல்விரை யுங்கொழுந்தும்
துத்திவிரை யும்புளியின் வித்தோடும் - மற்றும்
முருங்கைநிம்பம் வாகைவிளா முட்கருவேல் வெள்வேல்
வரும்பிசினு மெள்ளும் வகையாய்ப் - பொருந்தவே
பன்னற்காய் தேன்பூவின் பன்னீர் கரிசாலை
மன்னு மெருமைத் தயிரைந்தும் - துன்னவே
வெவ்வேற தாய்விட்டு வீக்கியரைத் தேகுளிகை
செவ்வையாய்த் தேற்றா விதைபளவாய் - எவ்வமறச்
சர்க்கரையிற் றேனிற் றயிரி லோருகுளிகை
ஒக்க வருதே வுடனெரிப்பு - அக்கி
பரதா கநீரழிவு பாழாங் கிரிச்சம்
சுரதாக முங்கடுப்புச் சூழ்பிணிகள் - பெருகாமற்
பின்காட்டி மூவேழ் பிரமியமுந் தீருமென
முன்காட்டிச் சொன்னார் முனி

## மதுக்கினிரசாயனம்

பஞ்ச மூல முயிலமொடு பகர்நா கம்பூக் கராம்பரத்தை
விஞ்சு * திரிசா தகமதுரம் விளங்கு முந்திரி பேரீஞ்சு
துஞ்சு முக்குண் டவியோமந் தூய்நன் னாரி வேர்கோட்டம்
** அஞ்சு மிதற்குச் சரியாக வசுவ கந்த +மதுக்கினியே
துன்னு மருந்து சரிகூட்டித் தூய நறுநெய் தேன்கலந்து
தின்ன வருநீர் பிரமேகந்தீராக் கரப்பன் கிரந்திகுட்டம்
பின்னு மிருமல் தாதுநட்டம் பித்தங் கைகா லெரிப்புளைவு
இன்னு மன்ன மறுப்பதுவு மேகு மதுக்கினி ரசாயனமே

**சுவறப்பீடிப்பானுண்டை**

§ நாற்பால்மரத்திற்பட்டை - பலம் - 80, ஆவரம்பட்டை - பலம் - 40, கடலிறாஞ்சிப்பட்டை - பலம் - 20, காலைப்பட்டை, கயட்டைப் பட்டை, நீர்ப்பூலாப்பட்டை - வகை, பலம் - 4, இலந்தையடைக் கொழுந்து - பலம் - 2, பட்டையெல்லாம் மேற்பொருக்குத் தள்ளியிடித்து, எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு ஒரு மரக்காலாகக் காய்ச்சிப் பிழிந்த கஷாயம், திரிபலை வகை பலம் - 10, 4 மரக்கால் தண்ணீர் வைத்து 1 - மரக்காலாகப் பிழிந்த கஷாயம், இவையிரண் டையும் ஒன்றாகக்கலந்து குறுக்க காய்ச்சி, வடிகட்டிக்கொள்ளவும்.

நன்கு சத்திசெய்து முலைப்பலாற் சந்தனம்போல் அரைத்து லர்த்தின காரீயம், பயறுபோல் நெரித்துக் கோமூத்திரத்திலிட்டு வற்றக்காய்ச்சி வறுத்துப் பொடி செய்த கிட்டம், குளவிந்தமஞ்சள், வெண்குன்றிப்பருப்பு, மேற்றோல் போக்கிய தேற்றாவிதை - வகை கழ - 10, கஷாயநீரில் அரைத்துக் கரைத்துக் குழம்பாக்கி விளாம்பிசின் பலம் - 5 பொடித்துத் தூவிக் குழம்பாக்கி யரைத்துக் கழஞ்சு வீதம் உண்டை செய்து மேற்கட்டிக்குக் கீழ் வைத்து நிழலுலர்த்தி வைக்கவும், நேரம் ஒரு உருண்டை எருமை மோரிற்கரைத்து ஆவரம்விதை மாவும் பருத்திவிதை மாவும் கழஞ்சு மேற்பொடியிட்டுக் குடிக்கவும், பத்தியம் ஆவரங்காய்க்கறி அதிகமாய்க் கூட்டவும், மீன், கைப்பு புளிப்புத்தவிரவும்.

* திரிசாதகம் - கல்நார், கல்மதம், சாத்திரபேதி.

** அஞ்சு - சுக்கு, திப்பிலிமூலம், பேரரத்தை, கொடுவேலி, செவ்வியம்

\+ மதுக்கினி - பறங்கிக்கிழங்கு

§ நாற்பால்மரத்திற்பட்டை - அத்தி, இத்தி, ஆல், அரசு

# பிரமேகம் - 20

### 1. வாதப்பிரமேகம்

ஓதிடும் வாத நான்கி லுற்றிடு சலமே தென்னில்
தீதுமாங் கிஷத்தி லோங்கிச் சேற்றுநீர் கரைத்தாற் போலப்
போதவே யிறங்கித் தாகம் பொருந்திடும் போகம் வேண்டா
மாதராய் வாதத் துற் றபிரமேகம் வகுத்த தாமே

### 2. தாமமேகம்

தாமமென் வாத மேகஞ் சலத்தினை மிகம றிக்கும்
ஓமெனு முதிரமூளை யுறும்புலால் தரையுந் தண்ணீர்
ஆமென விறங்குந்தண்ணீ ரவாவிடும் விக்க லுண்டாம்
வேமென வெரியு மாகம் விதித்தசொற் பிதற்று மன்றே

### 3. கரப்பன் மேகம்

என்றிடுங் கரப்பன் மேகத் தெழும்பிர மேகம் வன்னி
நின்றிடு நெய்யே போல நீர்விடு மிளைக்கு மேனி
அன்றிடக் கீடம் போல வரித்திடு மருந்திற் றீரா
கொன்றிடு நாற்றஞ் செய்யுங் கோவின்மூத் திரம தாமே

### 4. கோபமேகம்

கோவின்மூத் திரம்போ னாறுங்கோதிலூற் றிறங்குந் துய்ய
நாவினில் வரட்சி யுண்டா நல்லுண வருந்தி னாலும்
தாவிய பசியுண் டாகுஞ் சரீரம துலர்ந்து தந்தம்
மேவிடா துதிர்க்கு நாற்ற மிலச்சையும் விலக்கு மாதோ

### 5. தாதுப்பிரமேகம்

மாதே தாதுப் பிரமேக மதிநே ரெலும்புந் தோல்போலும்
தாதே யாவி னிணம்போலுந் தசையு வீழுந் தாகமுமாம்
ஈதே மாது வேண்டாதா மிதுவு மருந்தின் மீளாது
தீதே யிறக்குந் தப்பாது செலுத்து மருந்தை யகற்றீரே

### 6. சலப்பிரமேகம்

அதுவே சலத்திற் பிரமேக மறியிற் சுண்ணந் தானாறும்
கதுமே தாக மிகவுண்டாங் கமழ்நீ ரதனை யெறும்பருந்தும்
பொதுவாம் போகம் விரும்பாது பொருந்துந்தந்தமுதிர்ந்து விடும்
துதிசேர் மயிலே விடாயுண்டாந் தோற்றுஞ் சலமேயழல்நாறும்

### 7. அழற்பிரமேகம்

அழலா மதுவே பிரமேக சலந்தான் றெறிக்கு மாண்கடுக்கும்
விழலாய் நடக்க வொட்டாது மிகவுந் தாகம் பசியுண்டாம்
கழலே யயரு முடம்பெரி யுங்கனவு மிகுக்கு நித்திரையில்
அனமே யனைய மடமாதே யறிஞ ருரைத்த குணந்தானே 56

### 8. ஆசரியாப்பிரமேகம்

தனையா சரியாய் பிரமேக சலந்தான் றாளி யிதழ்நிறம்போல்
அனைநீ ரழியு மெரிவுண்டா மாகநிறந்தான் மஞ்சணிக்கும்
புனைசேர் தந்த முதிர்ந்துவிடும் போதப் பசிக்கு முடம்பிளைக்கும்
தினைநீர் முடையா நாற்றமதாஞ் சேய்தா நயனத்திருமாதே

### 9. அவனிப்பிரமேகம்

திருவே யவனிப் பிரமேக சலந்தான் செய்யுங் குணமுரைக்கில்
உருவா நயனஞ் சிவந்திருக்கு மொழுகுஞ் சலநல் லுதிரமெனத்
தருமே வெறிச்ச நாற்றமுடன் சரீர மிளைக்குங் களையுண்டாம்
பொருமேசெருக்கென்றெரிவுடனே போதச்சலமுந்தெளிந்திடுமே.

### 10. பித்தப்பிரமேகம்

இழிந்த சலந்தா னுதிரம்போ லெகின மதுபோ னீலமதாய்
உழுந்துநிறமாய்ச்சாம்பல்கரை த்துறுநீர துவாய்ச்சலந்தோன்றில்
எழுந்த கனக வரையிரண்டா யிணைசேர் தனத்து மடமாதே
கொழுந்து மனலிற்பிறந்தபித்தசலத்தின் குணத்தையுரைத்தோமே

அகலும் பித்தப் பிரமேக சலந்தா னறியி லானைமத
இகல்சேர் நாற்ற மிகநாறு மெரியு முடம்பு தாகமுண்டாம்
மிகவுங் கடுப்புமெரிப்புமிகு மிளநீர் வைக்கற் சிவப்புடனே
புகலும் பச்சை நிறங்காணும் பொருந்து மருந்திற் குணமாமே.

### 11. வலிப்பிரமேகம்

ஆமே வலியின் பிரமேக மடருஞ் சலந்தா னழல்நாறும்
வேமே யுடலந் தாகமுண்டாமிகவு மிளைக்குங் குமரிச்சா
றாமே யென்ன வூனழியு மருநெய் யதுபோற சலந்தோன்றும்
பூமே னயன மஞ்சணிக்கும் புலம்பு மிதுவென் றுரைத்தனரே

### 12. சேற்பனப்பிரமேகம்

உரைப்பா யையின் பிரமேகமுரை நீர்வெளுத்துத் தடித்திருக்கும்
கரைத்தே யிழியுஞ் சலங்காய்ச்சிக் காய்ந்தாலினிக்குமுப்பில்லை
புரைத்தே நீர்தான் போமளவிற் புகலுங் கடுப்பு மெரிப்புமில்லை
வரைத்தே தனத்தாய் கண்வெளுக்கும் வருமிச் சிறுநீர் நாறாதே

நாறாச் சிறுநீ ரைமேகங் கள்ளுநாறு நாடேறும்
மாறாச் சலந்தான் சிக்கிவிழும் வளருந் தேக மிளைப்பாகும்
வீறாய்த் தந்தம் விழுமிருமு மிகவுஞ் சிரநோ மிடறுபுண்ணும்
நீறாச் சொறியு முடல்விறைக்கு நிறுத்துங் குணங்க ளிவையாமே

### 13. சத்திப்பிரமேகம்

இதுவாஞ் சத்திப் பிரமேக மிழியும் பனையி னுங்கதுபோல்
கதமாம் வயிறு மிகவெரியுங் கடுகுபோலப் பருக்கைவிழும்
அதமா யாணுங் கடுத்திருக்கு மாகம் வெளுக்குங் கண்கனலும்
மதிநேர் முகத்து மடமானே மாறு மருந்தைப் புகட்டீரே

### 14. வெட்டைப்பிரமேகம்

போடீர் வெட்டைப் பிரமேகம் புகலில் வெளுப்பாய் நீரிறங்கும்
நாடி யதனை யேந்திவைக்கி னலமாக் கரைத்த வதுபோலாம்
கோடுஞ் சிறுநீர் சிக்கிவிழுங் குலவு நீர்தான் பலநிறமாம்
தேடு மிதுதான் மருந்ததனாற் றீரும் பின்னும் வருந்தானே.

### 15. சுவேதப்பிரமேகம்

தானே சுவேதப் பிரமேக சலந்தான் வெளுக்கு மழல்நாறும்
தேனேர் கோழை யதுபோலாஞ் சிறந்த பசிபோம் பல்லுதிரும்
மானே சுண்ணந் தானாறு மற்றுங்குதிரைக் கதநாறும்
கானே பெற்ற குழன்மாதே கண்டீரிந்தக் குணந்தனையே

## 16. சனிப்பிரமேகம்

இந்தச் சனியாம் பிரமேக மிழியுந் தேன்போ னாற்றமுண்டாம்
வந்தே தாகம் பசிமிகுக்கும்வ ற்று முடம்பு திசைவாகும்
நொந்தே நடுங்கு முவாந்தியுண்டா நோக்கந்தூங்குஞ் சிரமிடிக்கும்
கொந்தா ரழக மடமானே குணமா மிதுதான் குறித்தனரே

## 17. உவட்டிப்பிரமேகம்

தனையே யுவட்டி நீருரைக்கிற் றவிடு கரைத்த சலம்போலாம்
மனையாள் வேண்டு மடிவயிற்றை வலிக்கும்வருநீர்தனைப்பார்க்கில்
நனைநீருப்புப் போன்றிருக்கு நயக்கு மருந்தி லுணர்விலதாய்ப்
புனைநேர் மயிலே வாகடத்திற்பொருள்பூ வோர்க்குப்புகன்றதுவே

## 18. பிரமியப்பிரமேகம்

புகன்றோ மேகப் பிரமியத்தைப் புலால்போ னாறுமாண்கடுக்கும்
மிகுந்தே தாக முண்டாகு மிகவும் பசிக்கு மிளைப்புண்டாம்
உகந்தே பேசும் வாய்ப்புண்ணா முடம்பு வெளுக்குஞ் சோகையுறும்
செகந்தான் மதிக்கும் பெண்ணரசேதிகழ்வாகடத்தினியல்பிதுவே

சகந்தான் மதிக்க விறங்கியிடுஞ் சலந்தான்கருப்பஞ் சாறதுபோல்
மிகுந்தே கழியுங் கனத்திருக்குமேலு மிருமலுண்டாகும்
உகந்தே மருந்துக் கதிகமதா முளையு மிடுப்புத் துடைகடுக்கும்
சுகந்தா னடைய விதுகண்டாற் சுருதிப்பொருளைத் துதித்திடுமே.

## 19. கிரிச்சிரப்பிரமேகம்

இடுமே மூத்திரக் கிரிசமெனு மிழிநிாக் குணந்தான் றித்தித்து
விடுமேநீரு நடந்தக்கால் மிகுவே தனைய துண்டாகும்
படுநீர்பொறுக்கிற் கலைநனையும் வாதைம்படுத்து முடன டுக்கும்
வடுநோ கண்ணாய் மருந்துதின்றால் மாறும் பின்னும் வருமன்றே

என்னே கிரிச முத்திரத்தி னியல்நான் கருப்பஞ் சாறதுபோல்
மின்னே கள்ளு மோர்போல மிகுந்து கழியு மாண்கடுக்கும்
சொன்ன சலத்திற் சுக்கிலம்போற்றோன்றி யிழியு மடியதனிற்
பொன்னே மணலைப்போலிருக்கும் புகன்றோங்கிரிசகுணந்தானே

### 20. உட்டணப்பிரமேகம்

விதியாய் வந்த வுட்டணத்தின் மேக மதுதா னீர்கனத்துச்
சதியாயிறங்கா தெரிவுகுத்துச் சலமு முடைத்துத் தானிறங்கும்
கெதியா யிறங்குஞ் சிக்கி நிற்குங் கேடா யுடம்பு பாழாகும்
மதியால் வெல்லற் கரிதாகு மரண மாகு மடமயிலே

## பிரமேகம் 20 க்கும்

### அயக்காந்தக்குளிகை

பருத்தபூ வரசம் பட்டை பகர்கட லிறாஞ்சிப் பட்டை
திருத்தகு கடுக்காய் நெல்லி சிறந்தநற் றான்றி கொன்றை
உருத்தகுசம்புப் பட்டை யோரொன்று பொடியாய் நாழி
இருத்திய வூசிக் காந்த மிருபது கழஞ்சு கொள்ளே

கொள்ளிடு முருக்க ராவிக் கூட்டிரு பதுப லந்தான்
வெள்ளீய காரீ யந்தான் மிக்கபத் துப்ப லத்தோ
டுள்ளிய கரிய வேலி லுறுபிசின் பலந்தா னாலு
தெள்ளுறு விளாம்பி சின்றான் சேர்ந்திட வடைவு கொள்ளே

கொண்டிடும் பிருங்க மேலோர் குறித்தவா வரம்வித் தோடு
வண்டவிழ் துடரி வித்து வளங்கொள்வெண் குன்றிவித்துக்
கண்டிடோ ரொன்று பத்துப்பலமதாய்க் காய்த லுற்ற
பண்டுபோற் பொடித்துச் சீலை வடிகொண்டு பகரக்கேளே

கேள்கையான் றகரை நீர்ப்பூல் கிளர்ந்திடு முகட்டைச் சாறு
நாழிதா னிரண்டு கொண்டு நலம்பெற வதனில் விட்டு
ஆழ்வுறு வறுநா ளிச்சா றருத்தியே யரைம ருந்தை
வாழ்வுறு கழற்சி தன்னேர் வருமுண்டை நிழலு லர்த்தே

உலர்ந்தபின் பொடி செய் மீண்டுமொருபாண்டந் தன்னில்வைத்தே
அலர்ந்தவா வரையின் றண்டி லமர்குழித் தயிலந் தன்னைக்
கலந்தனிற் புடத்தில் வாங்கிக் கல்வத்தி லிட்டு முன்னே
உலர்ந்திடு பொடியுங் கூட்டி யரைத்துண்டை நிழலு லர்த்தே

எண்ணுறு கழஞ்சி ரண்டா யேற்றதோ ருண்டை செய்து
நண்ணுறு புளிப்பு வேண்டி னற்பசு மோரி லாக
உண்ணுதித் திப்பு வேண்டி லுயர்தேன்பா லொடுநல்லெண்ணெய்
எண்ணமில் லாதோ ருண்டையிடப்பிர மேகம் போமே.

எரித்திடும் பித்த மேக மிசைந்தசீ மேகந் தணடு
மரித்திடு மேகம் புண்ணாய வதிந்திடுங் கிரிச்சம் பாளை
தரித்திடு துள்ளி மேகஞ் சலக்கட்டு மேகந் தாகம்
விரித்திடு மேகம் போக விதித்தநன் மருந்து கேளே

கேட்டிடு பறங்கிப் பட்டை கிளத்துகெந்தகஞ்சா திக்காய்
காட்டிடு கராம்பு நாகங் கர்ப்புரஞ் சாதி பத்ரி
ஈட்டிடு மசுவ கந்தி யியல்கொடு லேலி மாஞ்சில்
நாட்டுசர்க் கரைநெய் கூட்டி நயந்துணத் தாகம் போமே.

**வங்கபற்பம்**

நன்கு சுத்தி செய்த வெள்ளீயம் - பலம் - 1 ஈசலிறகு போலத் தட்டி பொடியாகக் கத்திரித்து ஓமம் - பலம் - 1 மஙசள் - பலம் - அரை பொடி செய்து கோணிட்பட்டில் ஈயத்துக்கு மேலுங் கீழும் போட்டுச் சுருட்டி நூலினாற் சுத்திக் கட்டி, கசபுடம்போட வங்கம் பற்பமாரும், பணவிடை பற்பத்தில் மனிதரெலும்புப் பொடி காசிடை கூட்டி வெண்ணெயில் எழு நாட் கொள்ள பிரமேகம் சலக்கழிச்சல் மேகக் கடுப்பு முதலியன தீரும்.

# சலக்கழிச்சல்

## சலக்கழிச்சலுண்டாதற்கு ஏது

விந்துவை மூத்திர ரத்தை மிகுதியும் பெருக்கு மூணால்
மந்தமை மிகலாற் றேகம் வளமுறப் பெருத்த லான்மீன்
வந்திடு மிறைச்சி நெய்பால் மதுக்குடி மிகலான் மற்றும்
சந்ததமாதர் போகந் தன்னிலாழ்ந் திருக்கை யாலும்

மேகரோகநிதானம்

வெய்யிலி னடக்கை யாலும் மிகுகொழுப் பாக்கு மூணை
மெய்யுற நாளு முண்டு வேலையற் றிருத்த லாலும்
செய்யுறு மெண்ணெய் தன்னைத் தேய்த்தலை விடுகையாலும்
பெய்யுநீ ரழிவுண் டாகு மெனமறை பேசு மன்றே

## சலக்கழிச்சலின் பொதுக்குணம்

சீரழிக்கும் வயிறெரியும் வெளுத்தாள் வற்றுந்
தீன்மறக்கு நாவுலருந் தாக முண்டாம்
ஏரழிக்கு மிரவுசலந் தானே சோரு
மெழுந்துநடக் கரிதுகண்ணு ழின்னிச் சோரும்
காரழிக்கும் பனிமழைக்குங் கடின மாகுங்
கால்வழிநீர் பெருகிமெத்தக் கவலை யாக்கும்
பேரழிக்கு நீரழிவிற் குணமீதென்று
பேசினா ராயுண்மறை யுணர்ந்த மேலோர். 84

## வாதசலக்கழிச்சல்

உளைந்திடுங் கடுத்துக் குத்தி யுண்டியு மொறுத்தாள் வற்றி
விளைந்தநா வரண்டுவெப்பும் வெட்டையுஞ் சலமும் முண்டாய்க்
களைந்திடுஞ் சரீரந் தன்னைக் கழிந்திடுஞ் சலமு மிஞ்சி
அளைந்திடுஞ் சரீர நீர்தா னாறெட்டிற் கொலையுங் செய்யும் 85

ஏதமுற வயிறெரியும் வேர்வை யுண்டா
மெழுந்துநடக் கரிதுகண்ணு மின்னிச் சோரும்
சீதநீர் மோரிளநீர் தாக முண்டாந்
தீன்மறக்கு நாவுலரு முளைவுண் டாகும்.
சேதமுற நீர்தெளிந்து நுரையில் லாமற்
றியக்கமுறப் பகலிரவு கழிந்தாள் வற்றி
வாதைமிகுங் காதடைக்கு முறக்கம் வாரா
வாதசலக் கழிச்சலென வகுத்தா ரன்றே 86

இனித்திடு மெறும்பீ மொய்க்கு மிரவிள நீரா மென்னக்
குனித்திடச் சலங்க ழிந்தே கொதித்துநா வரண்டு தாகம்
நனித்துறப் பெலனுங் குன்றி நாவுலர்ந்தயர்ந்து சோரும்
பனித்திடு வாத நீர்தான் படுமுயிர்க் கால னாமே 87

## பித்தசலம்

சலஞ்சிவக்கு மலம்வளருந் தாக முண்டாஞ்
சவிகேடாய் நாவரண்டு காலு மோயும்
கலஞ்சுரக்கப் பகலிரவு கழிந்தாள் வற்றிக்
கஞ்சிமறந்தருந்துயராய்க் களையுண் டாகும்
நிலஞ்சுரக்க வயிறெரியு நடுக்க முண்டா
நீண்டவிழி மஞ்சணித்துக் கிறுதி யாகும்
நலஞ்சுரக்க வேர்வையுண்டாய் வெதும்பு மேனி
நல்குபித்த சலக்கழிச்ச னவிலுங் காலே 88

## சிலேற்பனசலக்கழிச்சல்

வேர்த்திடுங் களையுண் டாகும் வெகுசலங் கழிந்து சோர்வாம்
ஆர்த்திடுந் தாக மிஞ்சி யனலுற வெளுக்கு மேனி
எர்த்திடுங் கண்பஞ் சாடி யெழிலழிந் திடுந் தொய் வாகும்
பார்த்திடுஞ் சேற்ப னத்திற் பகர்சலங் கடின மாமே. 89

## வாதசிலேற்பனசலம்

வாதத்திற் சிலேற்பனந்தான் பகைத்துத் தோன்றி
மாங்கிஷத்தைப் பற்றிநின்றே யுருக்கி நீராய்ச்
சேதமுறச் சலப்பையி லூறி நாளுந்
தியக்கமுறப் பகலிரவு கழிந்து சோரும்
பேதமுறத் தீன்மறந்து சரீரங் குன்றும்
பெருந்தாகந் திமிர்வரட்சி யெரிவு தோன்றும்.
வாதைமிகுந் துடல்வெயர்க்கு முளைவு குத்து
வளருநீர் வெளுத்திருக்கு மரணந் தப்பா 90

பொருந்திடு நாபிக் கமலத்தி னழல்தான்
பொறியெனக் கொதித்துமே லெழுமேல்
இருந்திடுஞ் சலப்பை யுள்ளுட லுருக
விடாதாய்ச் சலங்கழிந் திடுமால்
வருந்திடுஞ் சலமெண் ணாழிநீர் கழியு
மரணமுஞ் சிறிதுநா டம்பில்
அரிந்திடும் வெகுநீர் வாதசேற் பனமீ
தவலமென் றறைந்திடும் வேதம் 91

காலெரியும் வயிறெரியுங் கடுக்குங் காலுங்
காதடைக்கு நாவுலருந் தாக மிஞ்சும்
மேலெரியுந் தலைதிமிர்க்கும் வேர்த்துத் தொய்வாம்
வெப்புமிகுந் துளைந்துகுத்தித் திமிர்க்கு மேனி
நூலெரியுஞ் சலம்வெளிறு நோவுண் டாகு
நுவலுமது வெண்ணாழி சலமுண் டாகும்
மூலெரிவி னுறுவாத சேற்ப னந்தான்
முடிக்குமுயி ரெனவேத மொழியு மன்றே. 92

## இரத்தப்பித்தசலம்

உருத்தே வெதும்பித் தாகமுண்டா யுவாதிமிகுந்து நாவரளும்
பெருந்தே யிரத்த சலமாகப் பெலத்தே கடுத்தங் கடிக்கடி போம்
கருத்தோ டன்ன மிறங்காது காலுங் கடுத்தே சவிகேடாம்
வருந்தா திரத்த சலக்கழிச்சல்மதித்தேயறிந் துமருந்து செய்யே

இரத்த மாறிச் சலமாகி லிதமா மிரத்த மிகுந்திருக்கில்
உரத்தே சலமுங் கிறுகிறுப்பு முடனே வேர்த்துக்களையுண்டாம்
கருத்தைக் கெடுத்தோங் காளமுறுங் கஞ்சி தண்ணீ ரிறங்காது
பெருத்தா லிரத்த சலக்கழிச்சல் பிழைக்கு நெறியு மிலையாமே.

## பிளவைச்சலம்

பொற்புறு மேனி வாடிப் பொருமியே போக மற்றுச்
சொற்பெறு சலங்க ழிந்துசுரமென வெப்பு முண்டாய்க்
கற்பெறும் பிளவை கட்டிக்கடினமா யுவாதி செய்யும்
நிற்புறும் பிளவைக் கட்டி னேர்சலங் கடின மாமே.

## வெட்டைச்சலம்

மோராய்ச் சியலாய்ப்பூளையதாய்முக்கிக்கடுத்துத் துளிதுளியாய்ச்
சீரா யடைத்துப் பறிந்தெரிந்து சிதறிப் பரந்தே யடிக்கடிபோம்
நீராய்த் துளித்து மெரிந்தழற்றி நீங்கா திரவிற் கடினமுறும்
தீரா வெட்டைச் சலக்கழிச்சல் சிலநாள் நிறகுங்கண்டுகொள்ளே

கடுத்திடுஞ் சலமு மடிக்கடி கழியுங்
　　கஞ்சிமோ ரிளநீர்த் தாகமுண் டாகும்
விடுத்திடுஞ்சிலநாள் வெட்டையுண் டாகும்
　　வெகுசலஞ் சிக்கிச் சிதறியே வீழும்
கெடுத்திடு நாளுஞ் சரீரத்தின் பலத்தைக்
　　கிளத்திடு மிரவிற் கடினமாய்க் கழியும்
அடுத்திடு வெட்டைச் சலமிது வெனவே
　　யறைகுவ ராயுரு வேதத்தை யுணர்ந்தோர் 96

## பிரமேகவெட்டைச்சலம்

அரிந்துசல மடிக்கடிபோஞ் சரீரம் வற்று
　　மன்னமொறுத் திடுமுறைந்து கடுக்கு மேனி
எரிந்திடுமா துயர்மிஞ்சி வரளு நாவு
　　மிரவுசல மதிகமிஞ்சிச் சோர்வுண் டாகும்
பரிந்துசில நாட்சென்று பற்றும் பாடு
　　படுத்துமிது பகற்போகந் தன்னா லுண்டாம்
பிரிந்துசியன் மோர்மாவாய்ச் சலத்திற் காணும்
　　பிரமேக வெண்டையினிற் சலமி தாமே. 97

## அவசலம்

அதிக சலமாய் மிகக்க ழிந்தே யவலமாகி நாவரண்டு
சதியாய் மயக்கி வேர்வையுண்டாய்த் தாக மிகுந்து சவிகேடாய்
மதியு மயங்கி வசமழிந்து மயக்கி விறைத்தே யறிவு கெடில்
விதிதான் விதித்த வசலந்தான் விளம்பினார்முன் றேழெட்டே

## சிலேற்பனசலத்தில் அசாத்தியக்குறி

நீரே பெலத்துக் கழித்துவரி னிறைய வொருபொற் கலத்தேந்தி
மோரே போலுந் தயிர்போலு முற்றிச் சழிந்த நெய்போலும்
பாரே நெற்லிற் கழுநீர்போற் பகர்மாப் போலு முறைந்திருக்கில்
தீராக் கட்ட சாத்தியத்தின் சேற்ப சலங்கண்டறிவீரே 99

## வாதபித்தசிலேற்பன சலங்களின் பேதம்

வாதநீர் சிவந்திருக்கும் பித்த மாகின்
மஞ்சணித்தே யிருக்கும்மது சேற்ப மாகில்
போதவே வெண்மைநிற மாகித் தோன்றும்
பொருந்துமையிற் பித்தத்தி லெடுத்த ரோகம்
தீதறவே யுடன்மருந்து செய்யப் போகுந்
தீராது வாதத்திலெடுத்த ரோகம்
ஏதுசல மாயிடினு நாட்கள் செல்லி
னியமபுரம் போக்கிவிடு மென்பர் ராதோ 100

## அசாத்திய சாத்தியாமறிய

சலத்தின்மேற் றிலத்திலெண்ணெய் தனித்து விட்டாற்
றாழ்ந்துமின்னிப் பச்சிலை போற் றழம்பு மாகில்
பெலத்தசலக் கழிச்சலது தீரா தாகும்
பேதமின்றி மிதந்திருக்கிற் பிழைப்புண் டாகும்
நலத்தசேற் பனவாதக் கழிச்ச லாகில்
நாண்மூன்றி லேழிலெட்டி னாச மாக்கும்
சொலத்தகுநீ ரழிவுபித்த சேற்ப மாகிற்
சொல்லினா ரறுமதிமும் மதியாண் டொன்றே 101

ஒன்றா நீரைக் கலத்தேந்தி யுரைக்கு மெண்ணெ யொருதுளியை
நன்றாய் விட்டுப் பார்த்திடுகி னவிலும் வட்டம் போனிலைத்தால்
சென்றே தீருஞ் சிதறிடினுஞ் சேர்ந்தே நீரிற் கலந்திடினும்
அன்றே தாழ்ந்து கீழ்ப்புகினு மைய மின்றிக் கொன்றிடுமே.

## சலக்கழிச்சல்

(வேறுபிரதியின்படி)

சலக்கழிச்சல் 20 வகையாயிருக்கும். அவை; வாதத்தில் - 4, பித்தத்தில் - 6, சிலேற்பனத்தில் - 10, அவற்றின் பேதம் மூத்திரத்தினால் அறியப்படும்.

## குணம்

வாதசலத்துக்கு, - உடம்புநடுங்கும், நாவுலரும், நெஞ்சுலரும், வயிறுவலிக்கும் நித்திரைவராது.

பித்தசலத்துக்கு, - சோகம், மூர்ச்சை, மலபந்தம் உண்டாகும். சிலேற்பனசலத்துக்கு, - உண்ட உணவு செமியாது, அரோசியும் உவாந்தியும், மிகுநித்திரையுமுண்டாகும். பிரமேகத்தினால் எல்லாச்சலமுமுண்டாகும்.

## சலத்தின் பேதம்

வாதசலம்: - வெண்மையாயும் கருமையாயும் பலவர்ணமாயும், புளிப்பாய் புலால் நாற்றமாயிருக்கும், நெய்மிதக்கும், சற்றே வெச்சென வைத்துத் திரிதோய்த்துக்கொழுத்தினால் எரியும், அவை: முறையே: 1 கோமயம்நாறும், 2 - பால்போல்நாறும், 3 - இறைச்சி கழுவின நீர்போல் நெய்மிதக்கும், 4 - தேங்காய்ப்பால் போல நாறும். இவை நாலும் தீராது.

பித்தசலம் 6ம்:- பொன்னிறமாயும், மஞ்சள்நிறமாயும், இரத்தநிறமாயுமிருக்கும், அவை முறையே: 1 ஆனைமதம்போல் நாறும், 2 கற்பாளை போல் நாறும், 3: அழல்நாறும் நீர்பட்ட இடமெல்லாம் எரியும், 5 - எறும்பரிக்கும், 6- கடுத்துக்கடுத்து நீரிறங்கும். இவை ஆறும் விரைவில் மருந்து செய்தால் தீரும். நாட்சென்றால் தீராது.

கிலேற்பனசலம் 10ம்: வெளுத்திருக்கும். அவை முறையே 1 கருப்பஞ்சாறுபோலும், தேன்போலும் வாய்நீர் போலுமிருக்கும். 2 - இளநீர்போலிருக்கும். 3 - இரத்தம் போலிருக்கும். 4 - உப்புக்கரைத்தது போலிருக்கும். 5 - மாக்கரைத்தது போலிருக்கும். 6 - வெளுப்பாய்த் தோன்றித் தித்திக்கும். 7 - நீர்பட்ட இடமெல்லாம் எறும்பரிக்கும், 8 - கடுத்துக் கடுத்துக்கழியும் 9, கருப்பஞ்சாறு போலருசியாயிருக்கும், 10 - குதிரைமூத்திரம்போலிருக்கும், உள்ளங்கை உள்ளங்காலெரியும் உரோமத் துவார மெல்லா முட்டணமாயிருக்கும்.

## உருசி

சலத்தைக் காய்ச்சினால்;- வாதத்தின் கூறுபுளிக்கும் பித்தத்தின் கூறு தித்திக்கும் சிலேற்பனத்தின் கூறு துவர்க்கும்.

## மேகசலத்தின்பேதம்

நீர் தெளிந்த தெளிவாய் வெண்மையாய்க்குளிர்ந்து உறக்கத்திலே கழிவது உதரமேகம்

சற்றே கலங்கி நுரையோடு கூடக் கருப்பஞ்சாறு போலே இனித்திருப்பது ஊஷரமேகம்

அறத்தடித்து, இராத்திரிக்கு வைத்துப் பார்த்தால் அடியிலே உறைந்திருப்பது சந்திரமேகம்.

கலாவாதினையாக ஏற்றி வைத்துப் பார்த்தால் மேலே தெளிந்து அடியிலே குழம்பியிருப்பது சுலாவானியமேகம்

மாக்கரைத்தது போலக் கழிவது அலர்மேகம்
நீலமாய்க் கறுத்திருப்பது நீலமேகம்
மை போல இருப்பது காளமேகம்
மஞ்சள் போல இருப்பது அரித்திரமேகம்
உட்டணமாய் உப்புறைத்திருப்பது இரத்தமேகம்
மாமிசம் கரைத்தது போலச் சவ்வாய் விழுவது மேகவாதம்

சலம் கடுத்துக் கடுத்து விட்டு மலம் விடாமலிருந்தால் அத்திமேகம், அத்தியைப் பற்றின சலம் தேன்போலிருக்கும். சலம் கண்ட உடனே பரிகாரம் தாமதமின்றிச் செய்யவேண்டும். அல் அதிகப்படும்.

## மதுமேகம்

எந்த நீர்க்கழிச்சலானாலும் முற்றினாம் மதுமேகமாம். அதன் குணம்:- மதுவைப்போற் தடித்து நீரிறங்கும், கடுக்கும், தாகமதிகப்படும், நாவரளும், குளிர்ந்தநீரிலே இச்சையாயிருக்கும், மூத்திரத்திலே ஈ எறும்பு விழும்.

## சலரோகமுண்டாதற்கான முற்குறிகள்

உடம்பிற் சோர்வுதோன்றுதல், கனப்புக்கொள்ளுதல், வெயர்வையதிகரித்தல், நாற்றமுண்டாதல், எந்நேரமும் படுத்துத் தூங்குவதில் இச்சையுண்டாதல், தாகமதிகரித்தல், நாக்குவரளுதல், நாக்கிலே நெய்த்தன்மையுண்டாதல், வாயினித்தல், குளிர்ந்த பானங்களிலும் உணவிலும் இச்சையுண்டாதல், தொண்டையும் நெஞ்சுங்காய்ந்து போதல், மயிரும்நகமும் அதிகமாக வளருதல், மூத்திரத்தில் ஈ எறும்பு விழுதல் முதலிய குறிகளுண்டானால் சலரோகந்தோன்றுமென அறிதல் வேண்டும்.

## மேகமிருபதுக்கும்

### பத்தியம் அவபத்தியமறியும்படி

காய்த்தநெல்லிப் புளியாகுங் கடுகுவர்க்க மாகா
  கறிதுவர்ப்பெ லாமாகுங் கைப்பனவு மாகா
வாய்த்தமதுத் தேனாகு மற்றைமது வாகா
  வாழைக்காய்ப் பிஞ்சாகும் வழுதலைக்கா யாகா
பாய்ச்சலறாக் காடைகவு தாரிகறி யாகும்
  பருவரால் மீனாகும் பாகற்கா யாகா
தூய்த்தகுழன் மடவார்கள் புணர்ச்சிமிக வாகா
  சொல்லுவர்கள் பெரியோர்கள் சுகமாக நீர்க்கே

நெய்த்தொலியாந் தோடாகு நீர்ச்சுறவ மாகு
  நித்தலுமாஞ் செந்நகரை நீண்முரலு மாகும்
அத்திபழம் பிஞ்சாகு மவரைக்கா யாகா
  வானசிறு கீரையா மறைக்கீரை யாகா
மத்திபமே பூசினிக்காய் வளர்சுரைக்கா யாகா
  மற்றவ்விலை கொழுந்தாகா வரியுளுவை யாகா
பத்துசிறு கத்தரிக்காய் பலநாளு மாகும்
  பாவையரை யொருநாளும் பார்த்தலுமா காதே

வெள்ளாட்டுக் கறியாகு மிக்காடு மாகா
  வியன்றேளிக் கருவாடா மிக்கமீ னாகா
எள்ளோடு பிண்ணாக்கு மெண்ணெய்முத லாகு
  மெலிகோழி பன்றிமுத லீரவுள்ளி யாகா

மேகரோகநிதானம்

கள்ளேறு பனங்கிழங்காங் கருணைக்கிழங் காகுங்
கறிதுவரை பயறாகுங் கரும்பயறு மாகும்
உள்ளான நோய்தீரு மூர்க்குருவி தின்றா
லொருக்காலு மாகாதே யொண்டொடியார் நீர்க்கே

## சிகிச்சை

### சலக்கழிச்சல்பலவுக்கும் கைமருந்துகள்

எருமைமோர் இருநாழி சட்டியில் விட்டு வேடுகட்டி வேட்டின்மேல்: ஆவரந்துளிர் அரைப்பிடி. கராம்பு - 5, கோரோசனை அரைப்பணவிடை இவற்றை வேட்டின் மேல்வைத்து மூடியவித்து நன்றாயவிந்த உடனே யெடுத்துக், கல்வத்திட்டு மேற்படி சட்டியிலுள்ள மோர்வார்த்தரைத்து அம்மோரிலேயே கலக்கிக் காலைவேளையில் குடிக்கவும், இப்படி அரைமண்டலங்கொள்ளச் சகல நீரிழிவும் சாந்தமாகும். அவபத்தியம் நீக்கவும்.

மலர்தாங்கி சமூலம் நிழலுலர்த்திச் சூரணஞ்செய்து காலை நெய்யிலும், மாலை தேனிலும் தின்று வெந்நீர் குடித்து வரவும்.

கருவேலம்பிசின்கழஞ்சு - 4, பருத்திப்பருப்பு கழ - 3, ஆவரையரிசி கழ -2, வெண்குன்றிப்பருப்பு கழ - 1, எருமைமோரிலரைத்துக் கலக்கிக் குடிக்கவும்.

ஆவரங்கொழுந்து, கருவேலங்கொழுந்து, அவுரியிலை இவற்றை வாழையிலையிற்சுருட்டி உமிக்காந்தலிற்சுட்டு நல்லெண்ணெய் வார்த்தரைத்து நல்லெண்ணெயிற் கொள்ளவும்.

நெல்லி முள்ளியை எருமைமோரிலூறவிட்டு மறுநாட்பிசைந்து பிழிந்து, அதில்: ஆவரையரிசி, பட்டை, வில்வம்பட்டை, கடுக்காய்பொடித்துக் கலக்கிக்குடிக்கவும்.

முருங்கைப்பட்டை, ஆவரைசமூலம் இவற்றைத் தேன்வார்த் தரைத்து மோரிற் கலக்கிக் குடிக்கவும்.

ஆவரைசமூலம், கொன்றைவேர், கல்மதம், தேற்றாவிதை புளியங்கொட்டைக்கயர், கழற்சி முசுட்டை, விடத்தல், நாவல், துடரி

இவற்றின் துளிர் இவற்றையரைத்து எருமைத்தயிர் மோர் பசுமோர், ஆமணக்கெண்ணெய் முதலிய அனுபானங்களுடன் கொள்ளவும்.

பிளவையோடு கூடிய சலக்கழிச்சலுக்கு;- முருங்கைப் பட்டையை மேற்புறணிதள்ளித்தேன் வார்த்தரைத்து மோரிற்குடிக்க நன்று ஆவரைவேர்சீவியரைத்து எலுமிச்சங்காயளவு ஆமணக்கெண் ணெயிற் கொள்ளவும்.

முற்றியபூவரசம் வேர்ப்பட்டை, குதிரைவாலிசமூலம், ஆவரைமொட்டு, அதனிலை, வேர்ப்பட்டை - வகைக்கு - அரைப்பிடி, பருத்திப்பருப்பு - காற்பிடி, தேற்றாப்பருப்புங் கூட்டியரைத்து எலுமிச்சங்காயளவு புளித்த எருமை மோரிற் குடிக்கவும்.

ஆவரை யஞ்சுங் கூட்டி யதிகமா யிடித்து மாவாய்
மேவுபொற் சிமிழில் வைத்தே வெருகடி தயிரிற் கொள்ளில்
தாவுறு சலக்க ழிச்ச றங்குநீ ரழிவு தாகம்
நாவுறு வரட்சி தீரு மெனமுனி நவின்ற தாமே.

## தவிடு

கறுப்புநெல்லு வரகுழுந்து சாமை காவாய்க்
கதிர்குரக் கனாம்பல்விதை சமனாக் கொண்டு
வறுத்திடித்துத் தெள்ளியதைப் பதனம் பண்ணி
வாய்த்தெருமைத் தயிருடனே குழைத்துத் தின்றால்
இறுக்குசலக் கழிச்சல்வெட்டை தண்ணீர்த் தாக
மியல்பான பிரமேக மாதி நோய்கள்
பொறுக்குமிந்தத் தவிடுசலக் கழிச்ச லுக்குப்
பொருந்தவுரைத் தனர்மருந்தைத் திருந்தச் செய்யே

முற்றியபொன் னாவரையி னரிசி யோடு
முதிர்குரக்க னெட்பருப்பு வரகு தானும்
பற்றியநற் கறுப்புநெல்லி னரிசி யெல்லாம்
பண்புபெற வறுத்திடித்துப் பதனம் பண்ணிச்
சொற்றவெரு மைத்தயிரிற் குழைத்த ருந்தத்
தூயவெள்ளி னெய்யுடனே தேனு மாகும்
மற்றுநீ ரழிவுவெட்டைச் சலங்க ளெல்லா
மாறுமிது கைகண்ட மருந்தா மன்றே.

## பிட்டு

மலைதாங்கித் துளிருடனா வாரை தன்னில்
வருதுளிருங் குறுவையினி லரிசி மாவில்
நலமாகப் பிட்டவித்து மேதி தன்னி
னல்லதயி ருடன்கூட்டி யுண்ண நன்றாம்
திலமான வெண்ணெய்பிண் ணாக்குங் கூட்டித்
தினமருந்த நன்றாகுங் கழற்கொ ழுந்தும்
குலமான மூக்கறைச்சிக் கொழுந்து மெள்ளின்
குலவுபொரி யரிமாவிற் பிட்டுக் கொள்ளே.
கறுப்புநெல்லின் றவிட்டுடனே குரக்கன் மாவுங்
கலந்துமுன்னே சொன்ன துளிர் வகையுங் கூட்டி
இறுக்கமுறப் பிட்டவித்துத் திலத்தி லெண்ணெ
யெருமையினிற் றயிர்கூட்டி யுண்ண நன்றாம்
நறுக்குதுளிர் வகைகோரைக் கிழங்கு மாவு
நல்லவெள்ளின் பொரிகறுப்ப ன்ரிசி தன்னில்
வறுத்தமா வுடன்கூட்டிப் பிட்ட வித்து
வழங்குமெண்ணெ யுடன் றயிருங் கூட்டி யுண்ணே

சிறுக்கறுப்ப னரிசியுமெட் பருப்புத் தானுஞ்
சிவந்தவா வரைவேர்த்தூள் தானுங் கூட்டி
மறுக்கவொன்றா யிடித்ததனை மாவாயத்தெள்ளி
மதிக்கவெள்ளி னெண்ணெய்குழைத் தருந்தி வந்தால்
பொறுக்குமிதிற் சலக்கழிச்சல் தண்ணீர்த் தாகம்
பொருவரிய நாவரட்சி யுழலை காந்தல்
வெறுப்புறுமவ் வயிற்றெரிவு தீரு மென்று
விளம்பினா ராயுண்மறை தெரிந்த மேலோர்

பொன்னா வரையின் றுளிருடனே பூவு மெள்ளின் பிண்ணாக்கும்.
துன்னு மெள்ளி னெண்ணெயுடன் சுண்டித் தின்னக்கறிநன்றாம்
முன்னே சொன்ன துளிர்வகை களவையுங் கறியா மூக்கறைச்சி
மன்னு மெள்ளின் பொரியதுவு மதித்துத் தினமுமருந்த நன்றே
உற்ற குளத்திற் றண்ணீரை யுவப்பாய்க் காய்ச்சிக்குடித்திடலாம்
மற்றுங் குளிக்க முழுகிடவும் வாய்ப்பாம் பட்டை வகையுமிட்டு
வற்றக் காய்ச்சின் மிகநன்றா மாறாத்தாக மிகவுண்டாய்
இற்றுச் சரீர மிகவற்றி யிருக்கிற் கொல்லுஞ் சலரோகம்.

## குடிநீர்

கருப்பஞ்சாறு போறகழியுஞ்சலத்திற்கு:- வட்டத்திருப்பி, கருங்காலிப்பட்டை, கொன்றைப்பட்டை எட்டொன்றாய்க் காய்ச்சித் தேன்கூட்டிக்குடிக்கவும்.

மதுப்போறகழியுஞ்சலத்திற்கு: பெருங்கரும்பை, முத்தக்காசு, நெருஞ்சிவேர், கொடுவேலிவேர், செவியம், வட்டத்திருப்பி, திரிபலை - அவித்துக்குடிக்கவும்.

வெள்ளிலோத்திப்பட்டை, கடுக்காய், பெருங்குமிழ், மரமஞ்சள், வாய்விளக்கம், கருங்காலிவேர், மருக்காரைவேர், சீந்திற்றண்டு, முத்தக்காசு சமன் குடிநீர் கொள்ளவும்.

பித்தசலத்திற்கு: - தேற்றாங்கொட்டை - பலம் - 1 நெல்லி முள்ளி - பலம் - 2 மஞ்சள் பலம் - 3 முருங்கைப்பட்டை பலம் - 4 கடுக்காய் பலம் 5 எட்டொன்றாயவித்துக் குடிக்கவும்.

வட்டத்திருப்பி, மரமஞ்சள், திரிபலை, கருவேப்பந்தண்டு, வேர், தேற்றாங்கொட்டை, கடலிறாஞ்சிப்பட்டை, ஆவரையரிசி, வேர், கருங்காலிவயிரம், ஆலம்வேர், மூங்கிலிலை, நிலப்பனை இவை சமன் எல்லாங்கண்டளவு முருங்கைப்பட்டை கூட்டி முன்போறகுடிநீர் காய்ச்சி அசனத்தின்மேல் ஏழுநாட்கொள்ளவும்.

## சஞ்சீவிக்குடிநீர்

கேளழிஞ்சில் நாவல்கொன்றை கடலி றாஞ்சி
    கிளர்மருது பூவரசு கருவே லத்தி
கோளிலொதி யாவரைநீர்ப் பூலா வாத்தி
    குலவுவெள்வே லிம்மரங்க டமிற்றோல் சீந்தில்
நீள்தடிநற் கருங்காலி வயிரம் வில்வ
    நெருஞ்சிகன்னி வெண்குன்றி சிவையீ தெல்லாம்
தூளிவையொன் றொருநாழி தென்னம் பாளை
    துலங்குமதி மதுரமத்திப் பிஞ்சுஞ் சொல்லே

## மேகரோகநிதானம்

நிறைகுருகு செங்கழுநீர் நெய்தன் மூலம்
வல்லவினவ யோரொன்று பலந்தா னெட்டு
வசுவாசி கராம்புசா திக்கா யேலம்
ஒல்லுசெண்ப கமுகைகச் சோலங் கொத்த
மிலவங்கஞ் சுக்கொன்றோர் பலந்தா னீட்டே

ஈட்டுசந்தம் பலம்பத்துத் தேற்றாங் கொட்டை
யிரண்டுரிகொண் டிடித்திடுமித் தூளில் நாழி
ஊட்டுபுன லெண்ணாழி புகட்டிக் காய்ச்சி
யொருநாழி யெனவிறக்கி யாற வைத்து
மீட்டுமிதை யிராவசனஞ் செய்த பின்னர்
மிசைந்துவர மூவகைநீ ரழிவு மாறும்
ஆட்டிடுசர்க் கரைமேற்போட்டருந்து வீரே
லடர்ந்தசல ரோகமெலா மகன்று போமே

அத்திசெங் கிளுவை நாவ லாவரை மருது நிம்பம்
இத்தினிற் பட்டை சீந்திற் றண்டிவை பலம்பன் னைந்து
பத்திசேர் கடவி றாஞ்சிப் பட்டையும் பலமா றைந்து
வைத்தசித் திரைப்பா லாவி பற்படாம் பிடியோ ரொன்றே.

ஒன்றுதான் றிக்காய் நூறு முயர்தேற்றா விதைதான் பத்தும்
அன்றியுங் கடுக்கா யைமப தருங்களிப் பாக்குப் பத்துக்
குன்றவே யிடித்தங் காறு குறுணிநிர் புகட்டி யொன்றாய்
நின்றிடக் கஷாய மாக்கி நேரமோ ருரிகொள் வீரே

கொள்ளுமிக் கஷாய மாந்திக் குணமுறு வாழைக் காயும்
எள்ளலி லத்திக் காய்மற் றெருமையின் றயிர்பால் தானும்
தெள்ளிய முயல்பூ வாலந் திருக்கைபத் தியங்கொள் வீரேல்
அள்ளுநீ ரழிவ தெல்லா மகலுமென் றுரைத்தார் தூயோர்.

கோட்டமுடன் செங்கழுநீ ரீச்சம் பாளை
கொன்றையா வரையத்தி கடலி றாஞ்சி
ஈட்டமுறு நாவலுடன் றென்னம் பாளை
யியலரசு புளியவிதைக் கயருங் கூட்டி
நாட்டமுடன் பட்டையெலா மிடித்துநன்றாய்
நற்குளத்தி னீருற்றியவித்துட் கொள்ளில்

கூட்டுசலக் கழிச்சலுடன் குலையு மென்று
    கோதிலா வாயுள்மறை கூறு மாலோ.
அத்தியுட னாவல்கட லிறாஞ்சிப் பட்டை
    யதற்கிரட்டி கொன்றையா வரையிற் பட்டை
இத்தனையு மிராவடுப்பி லூற வைத்தே
    யிதமாக வசனஞ்செய் திருக்குநேரம்
கொத்தலங் குழல்மடவாய் வடித்துச் சற்றே
    குடித்தியலும் பத்தியமா யிருப்பீ ராகில்
பித்தமுத லாமூன்றிற் பிறந்தி ருக்கும்
    பெருகுசலக் கழிச்சலெலா மாறிப் போமே

ஆவரம் பட்டை யதன்வேரு மரிய கிளுவைப் பட்டையும்வேர்
தாவு மலைதாங் கியின் வேருந் தக்க மருது கடல்றாஞ்சி
மேவு மிவைகள் பலமாறு மிக்க கடுக்காய் நூறுடனே
காவி னெல்விக் காய்நாழி கதித்த தேற்றாம் விதைநூறே

தேறு மஞ்சள் பலங்கால்கொள்சேர்த் தேயிடித்துப் பாண்டமதில்
கூறுங் குளத்தி னீர்வார்த்துக் குறுகக் காய்ச்சி முழுப்பொழுதும்
ஊறு மசனங் கொண்டெழுந்த வுடனே குடிக்கி னாலைந்தாய்ப்
பாற வருத்துஞ் சலநோய்கள் பறந்தே யோடும் பார்த்தறியே

அத்திப்பட்டை, ஒதியம்பட்டை, துவரம்பட்டை சமன் இடித்துக் குளத்துநீர் குறுணிவிட்டு நாழியாகக் காய்ச்சிப் பிழிந்து அதில்; ஆவரையரிசியும் கத்திசெய்த பொன்னரிதாரமும் பொடிசெய்து ஊறவைத்துக் கொண்டு குடித்துவரவும்

## தாகத்திற்குக்குடி நீர்

நெற்பொரிசுக் கதிமதுரஞ் சீந்திற் றண்டு
    நெல்லிமுள்ளி யாலமுகிழ் பெருங்கு ரும்பை
பற்படக மிலாமிச்சோ டாடா தோடை
    பரிமளஞ்சேர் செங்கழுநீர்க் கிழங்கு தானும்
திற்பலிமுந் திரிகைதனிற் பழமோ ரொன்று
    திறமாகச் சமனிடித்துப் புனனா னாழி
அற்புடனொன் றாக்கிநறுந் தேனுங் கூட்டி
    யருந்திடிற்றா கம்வரட்டி யாறுந் தானே

பின்வரும் சரக்குகளிற் சிலவற்றையாயினும் பலவற்றையாயினுங் கூட்டிக் குடிநீர் கொள்ளவும்; வெள்ளிலோத்தி, அத்தி, ஆல், அரசு, நாவல், மருது, கிளுவை, ஆவரை, முருங்கை, கடலிறாஞ்சி, கருங்காலி இவை பட்டை, முத்தக்காசு, திரிபலை, மரமஞ்சள், வட்டத்திருப்பி, தேற்றாவிதை முதலியன.

## சஞ்சீவிச்சூரணம்

சலமிரு பதுக்கு நல்ல சஞ்சீவி யமிர்த மான
பெலமிகு சூர ணத்தைப் பேசு வனுற்ற சுக்கொன்
றிலகூசிக் காந்த மொன்றா மிதனுட னிலிங்கம் ரண்டு
மலர்விழி மானே கேளாய் மதித்ததோர் கராம்பு நாலே
நாலுடனவினு மூன்று நாற்சாதிக் காயி ரண்டு
பாலுறு மோம மொன்று பத்திரி யிரண்டா வாரை
ஆலுறு மதன்வித் தொன்று மாகவொன் பதும ருந்தும்
சீலமா யெடுத்த ரைத்துச்செப்பினிற் பதனம்பண்ணே.

பண்ணுமிச் சூர ணத்தைப் பணவிடை தேனிற் கொள்ள
நண்ணுறு சலமைந் நான்கு நலித்திடு மப்பி ரேகம்
எண்ணுறு பவளம் வங்க மியைந்திடு வெள்ளி யாதி
உண்ணுறு பற்பமீதிற் கூட்டிடவுவப்பா மன்றே.

## ஏலாதிச்சூரணம்

நன்னாரி கோரையதி விடயமில வங்கமோமநளின மலருற்ற தாது நற்சீர கங்குரா சானிவசு வாசியவி னல்லசந் தனநெல்லியும், பொன்னாரிருப்பைமலர் பேரீஞ்சி னற்கனி புகன்றகஸ் தூரிகோட்டம் புதியகோ ரோசனை கராம்புசா திக்காய் பொருந்து கர்ப் பூரமேலம், மின்னாரு மாவரையி னஞ்சுவகை யுஞ்சமன்வெயிறனி லுலர்த்தியுரலின் மிகவிட் டிடித்தம்மி தனிலரைத் துத்துகிலின் மெம்மைபெற வேயரித்துச், சொன்னோ மருந்திதற் கிருபங்கு சர்க்கரை துலங்கவிட் டேயரைத்துச் சுகமாக நேரமோர் கழஞ்சருந் திருப்பருகு கட்டவெந்தீரதனையே.

சுட்டவெந் நீர்பருகி யுப்பொடு புளிப்பினைச் சுகமுற மறந்து பால்நெய் துய்த்துநற் பத்தியம தாய்வரிற் பலபிணிக டொலையும் வகைசொல்லுவாம், கட்டமுறு நீரிழிவு மேகவகை யிருபதுங் கடிதாக

வோடுசலமுங் கனநீர்க் கடுப்பொழுகு சலமிவையொட ரிசலங் கருதிய கிராணி வகைபோம், சிட்டர்புக ழுமுதவல் வியின்மருவு சர்க்கரை சிறக்கவிரு பலமுமிதனிற் செறியவிட்டுப் பிசைந் துண்டையொர் கழஞ்சதாச் செய்தருந் துகினுமினிதரம், வட்டமிட் டடிகனத்துப்பணைத் திறுமாற்து மதனின்மணிமகு டமிடறி வடங்கொளுங் குவடொடிய வளருமிரு தனகிரியை மருவுமட மயிலினாளே.

## ஏலாதிசஞ்சீவிச் சூரணம்

ஏலமில வங்கமதி மதுரங் கோட்ட
மியல்பான முத்தஞ்செண் பகத்தி னோடு
சீலமுள்ள சந்தனஞ்செம் பிளிச்சங் கொட்டை
சீரகந்தா மிரண்டினோ டிலாமிச் சின்வேர்
ஞானமுள்ள வெட்டிவேர் கமல மூல
நறுநெய்தன் மூலமுடன் கதலி மூலம்
கோலமுள்ள மாதளைமுந் திரிபே ரீஞ்சிற்
கொழுங்கனிகஸ் தூரிவிளாங் கனியி னோடே.

தானுலவு நிலப்பனையுந் தண்ணீர் விட்டான்
தாளிசபத்திரிகராம்பு சாதிக் காயும்
தேனுலவு மதிவிடய மக்க ராவுந்
திறமான கர்ப்பூரங் கல்நார் தானும்
ஆனுலவு கோரோச னைகல் மதந்தா
னருங்கடுக்காய் தான்றிகற் கடக சிங்கி
கானுலவு வில்வக்காய் முள்ளி வித்துக்
காசுக்கட்டி களிப்பாக்குச் சாதி பத்ரி

கூட்டியசூ ரண மிவைகள் மூன்று பங்கு
குலவமுத சர்க்கரைதா னொருபங் காக்கி
நாட்டியதேன் வெண்ணெய்நெய்பா லிஞ்சி யோடு
நாறுமெறு மிச்சின்கனிச் சாற்றி னாலும்
சூட்டியே வெருகடிசூ ரணந்தான் கொள்ளிற்
சுகமாகு முட்டினம்போம் பித்த நீங்கும்
காட்டியநீர்ச் சுருக்குடனே சலரோ கம்போங்
கருதுங்கா லேலாதி காயத் தோரே.

## வெட்டுமாரன் சூரணம்

ஏலமவி னதிவிடயஞ் சாத்ர பேதி
யிருசீரந் திப்பிலியோ டுசிக் காந்தம்
சாலவரை பொடிநெல்லி முள்ளி யோமஞ்
சாம்பிராணி சாதிக்காய் சடைக்கஞ் சாவும்
கோலவசு வாசிமது மத்தங் கொட்டை
கூறுகராம் போரொன்று கழச்செ டுத்துச்
சீலமோ டிடித்தரித்து வெந்நீர் தன்னிற்
றின்றிடவே சலக்கழிச்சல் தீர்ந்து போமே.

## வெட்டுப்பெருமாள் சூரணம்

சாதிக்காய் வசுவாசி கராம்பு காந்தந்
தக்கவச மோதகங்கைப் பிருக முஞ்சாய்
நீதியுடன் சாதிலிங்க மொருக முஞ்சாய்
நிறுத்திடுகா ரீயமுமங் கதனிற் பாதி
சோதிபெறு மத்தவிரை காலுங் கூட்டித்
தூய்தாக விளம்பதமாய் வறுத்துத் தூள்செய்
தேதமறு தேன்தனி லருந்து வீரே
லிடர்புரியுஞ் சலக்கழிச்ச லேகுந் தானே.

## அயனாதிக்குளிகை

திருவுறுங் கொன்றை நாவல் திண்கட லிறாஞ்சி தான்றி
மருவுபூ வரசு நெல்லி மரங்களிற் பட்டைத் தூளும்
கருவுறு காந்த மோரொன் றங்கது கழஞ்சு கூட்டி
உருவுறு வங்க பற்ப மோரெழு கழஞ்சு வாங்கே

வாங்குநற் கரிய வேலின் வருபிசின் கழஞ்சு மூன்று
ஆங்குநல் விளாம்பி சின்பி னைங்கழஞ் சதனி னோடே
பாங்குறு முருக்குத் தூளும் பதின்கழஞ் சுடன்பு ரோசம்
தூங்குமா வரைவெண் குன்றி துடரியில் வித்துத் தானும்

தானிவை யொன்று நாலு கழஞ்சினைத் தகர்த்துத் தூள்செய்

தானவத் திரகா யஞ்செய் தருங்கையான் றகரைச் சாறும்
ஈனமில் முசுட்டைச் சாறுங் கலந்தேழு நாள ரைத்துக்
கானுறு கழல்வித் தேபோ லுருட்டியே காய வையே.

வைத்ததைப் பொடிய தாக்கி வழுத் துமா வரைம ரங்கள்
மெத்தவே கொணர்ந்திடித்து விரைந்தொருதுலாமோர் பாண்டத்
தித்தையிட் டிடுபா தாள வெந்திர மாகச் செய்தே
உத்தம வழலங் கிட்டே யுருகிவீழ் தயிலம் வாங்கே

வாங்கிய தயிலந் தன்னில் வருமிரு கழஞ்சு வீதம்
ஓங்குநல் லுண்டை யாக்கி யுயர்பழ மோரி லாதல்
தேங்குமெள்ளெண்ணெய் பால்தேனிவற்றாதலுண்டைசேர்த்தே
ஆங்குணில் மேக ரோகத் தடர்சலக் கழிச்சல் போமே

## காந்தரசக்குளிகை

ஊரிக்காந்தம் பலம் - 1, இரசம் பலம் 2, ஆவரையரிசி பல 1, தென்னம்பூ உரி, தென்னங்குரும்பை 4 எருமைமோர் வார்த்தரைத்துக் காசிடை உருட்டி நிழலுலர்த்தி வைக்கவும்.

சலம்விட்டால் அடியிற் சுண்ணாம்பு போலிருப்பதற்கு:- வெட்பூலாக்கொழுந்து, மாயப்பச்சிலைக்கொழுந்து வகைக்கு இரண்டு பிடி சட்டியில் மோர்வார்த்துப் பிட்டவியலாயவித்துப் பிழிந்து இரண்டு குளிகையுரைத்து மோர்கூட்டிக் குடிக்கவும். கோமூத்திரம் போறகழிந்தால் - கட்டிக்கொடிவேரை இருநாழிநீர்வார்த்து இராவடுப்பில்வைத்து உரியாகக்காய்ச்சி வடித்து அதில் ஒரு ஆழாக்கும் 2 குளிகையும் தேன் ஒரு காசிடையும் கூட்டிக்குடிக்கவும். நீர் போற கழிந்தால்:- முற்றின மருதம்பட்டை பலம் - 6, துவைத்து எட்டொன்றாயவித்து முன்போற குளிகையிட்டுக் குடிக்கவும்.

எருமைத்தயிரைவடிகட்டி ஆழாக்கு நல்லெண்ணெயும் குளிகை 2ம் கூட்டிக்குடிக்கச் சலம்நாலுவன்னமுந்தீரும். தாகம் அதிகமானால் வேப்பங்கொழுந்தும் சீனியுமரைத்துத் தின்னவும். இதில் நில்லாவிட்டால், கோழிமுட்டை நெய்யுருக்கித் தேன்கூட்டித் தின்னவும்.

## காந்தாயக்குளிகை

ஊசிக்காந்தம், வெண்குன்றிவிதை, தேற்றாவிதை, மஞ்சள் விளாவேர் - வகை - கழஞ்சி 5 காரீயம் - கழ- 16 ஆவரையரிசி - கழ 15 முருங்கைப்பட்டை - கழ - 10 திரிபலைக்கஷாயத்தாலாட்டி அரைக்காசிடை உருட்டி வெந்நீரிற் கொள்ளவும்.

## வெள்ளைக்குன்றி மணிக்குளிகை

வெண்குன்றி, பருத்தி, ஆவரை இவை வித்து, விளாவேர், கருவேலம்பிசின், காந்தம் சமன் வறுத்துத் தூள்செய்து கடுக்காய்க் கஷாயத்தாலாட்டி முன்போலுருட்டித் தேனும் நல்லெண்ணெயுங் கூட்டி உட்கொள்ளவும்.

## மனோசிலைக்குளிகை

மனோசிலை கழஞ்சு - 15 காந்தம் கழ - 18 காரீயம் கழ - 16 இரசம் கிட்டம் வகை கழ - 2 விளாம்பிசின் கழ - 10 வெண்குன்றி, தேற்றாவிதை வகை கழ - 6 இரசமொழிந்த மற்றச் சரக்குகளைப் பொடிசெய்து சீலையிலிட்டுக் குழியாக்கி அதில் இரசத்தை விட்டுக்கட்டி செந்நெலரிசிக் கழுநீரில் ஊறவைத்து நாலாநாள் எடுத்துக் காடி வார்த்தரைத்துக் குன்றியளவுருட்டி நிழலுலர்த்தவும். தேன் மோர் முதலிய அனுபானங்களிலிடப் பிரமேகம் சலரோகந்தீரும்.

## பிரமேகக்குளிகை

குக்கில், காவிமண். எள்ளு, தேற்றாவித்து, முசுட்டைவித்து, விளாம்பிசின், கருவேலம்பிசின், இலகம்பிசின், காந்தம், அரைபொடி, இரசம், கெந்தகம், அஞ்சனம், துத்தம், காரீயம் சமன் சுத்திசெய்ய வேண்டியவைகளைச் சுத்திசெய்துகொள்ளவும் ஆலம்பட்டை, கடலிறாஞ்சிப்பட்டை, ஆவரம்பட்டை, ஆற்றுமருதம்பட்டை, தாதுமாதளைவேர், பதமானஈச்சங்காய், வரட்சுண்டி வகை - பலம் - 2 துவைத்துப் பதக்கு நீர் விட்டு எட்டொன்றாய் வற்றவைத்துப் பிழிந்த நீர் விட்டரைத்துத் தூதுளங்காயளவுருட்டி நிழலுலர்த்திக் கொள்ளவும். ஆவரைப்பஞ்சாங்கப் பொடி ஒருபங்கும் குளிசை இருபங்கும்,

மோரிற்கொடுக்க வாதப்பிரமேகமும் நெல்லிக்காய்ச்சாற்றிற் பித்தப்பிரமேகமும் தேனிற் சிலேற்பனப்பிரமேகமும் தீரும்.

இரசம் கெந்தகம் காந்தம் காரீயம் வகைக்கு விராகனிடை 2 கிட்டம் கழ - 2 ஆவரையரிசி கழ - 8 தென்னங்குரும்பை 10 அதன் பூகழ 8 முகிழ் 4 எருமைமோரால் அரைத்து உருட்டி எருமைமோரிலிடவும்.

வரட்பூலாக்கொழுந்து ஒரு சிறு தேங்காயளவு உயரமாய் வளர்ந்திருக்கும் அம்மான் பச்சரிசி ஒரு பிடி இரண்டையும் நானாழி எருமைமோரில் வண்டுகட்டி ஆவிபோகாமல் அவித்தெடுத்து அதனுடன் அபின் நாலு காசிடை சேர்த்தரைத்துக் கழற்சிபோல உருட்டி நிழலுலர்த்தவும். அடியிலே சுண்ணாம்பு கரைத்தது போலுறைந்திருக்கும் மதுப்பிரமியத்துக்கு:- இரண்டு குளிகை பொடித்து அறுபது நாழிகை சென்றமோரிற் கொடுக்கவும். கோமூத்திரம் போல இருந்தால் கட்டுக்கொடிவேர் இராவடுப்பில் எட்டொன்றாய்க் காய்ச்சி அதில் இரண்டு குளிகையிட்டுக் கொடுக்கவும். இளநீர் போலக்கழிந்து இனித்திருந்தால் முற்றின மருதம்பட்டை பலம் 6 முன்போலக் கஷாயமிட்டு இதில் இரண்டு குளிகை கொடுக்கவும்.

வடிகட்டிய எருமைத்தயிர் உரியும் நல்லெண்ணெய் ஆழாக்கும் கூட்டி முறியப்பிசைந்து 7 நாட்காலைவேளையிற் கொள்ளவும். உப்புப்புளி ஆகாது.

இரசம் கெந்தகம் வகை பலம் - 2 பசுப்பாலில் நறுவிலிப்பட்டையிட்டு அதில் தோலாபந்திரமாக அவித்தெடுத்து, காரீயம் பலம் - அரை உருக்கி இரசம்விட்டு மத்தித்துக் கொண்டு ஆவரைப்பூவும் பிஞ்சுமான பொடி நாழி மோரில் வேடுகட்டியவித்து அதுவுங் கூட்டி எருமைமோராலரைத்துக் கழற்சி விதையளவுருட்டி நிழலுலர்த்தி வடிகட்டின தயிரில் 2 குளிகை தின்னவும்.

காந்தம், நெல்லிமுள்ளி, கள்ளிவேர் வகை கழ - 5 ஆவரையரிசி பலம் - 3 இடித்துப் பொடிசெய்து கறட்பற்றுள்ள கலத்தில் நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து நாழிமருந்துக்கு இரு நாழி தண்ணீர் பானையில் விட்டு ஒரு பல்லாகையிற் சீலைகட்டி அதன் மேல் மருந்திட்டுப் பின்னுமொரு சீலைகொண்டு கட்டிப் பானையிலே கவிழ்த்து தண்ணீர் வற்றுமளவு ஆவரம்விறகாலெரித்து

எண்ணெய்பழகின கலசத்தில் வைத்துக் கொள்ளவும். பாக்களவு மருந்தில் வங்கசிந்தூரம் பணவிடை கூட்டிக் கருவாழைப்பழத்தி லிடவும்.

இரசம், அபின், காரீயம், வரட்சுண்டிவேர் சமன் எல்லாங் கண்டளவு ஆவரையரிசி, ஈயத்தை உருக்கி இரசம்விட்டு மத்தித்துப் பொடிசெய்து தேனிலரைத்துக் தூதுளங்காய் போலுருட்டி அனுபான பேதமறிந்து கொடுக்கவும்.

புற்றாம்பழச்சோறுமுட்டை எடுத்துப் பிசைந்துலர்த்தி, எருமைப்பால் வார்த்தரைத்து ஒருநாள் வைத்து மறுநாளெடுக்க ஆடை படர்ந்திருக்கும். அதையெடுத்து விட்டுப் பால் வார்த்தரைத்துத் திரட்டி நிழலுலர்த்தி அரிந்து பொடித்துச் சிமிழில் வைத்துக் கொண்டு தினம் நெல்லிடை கொள்ளவும.

புற்றாம்பழச்சோறு வறுத்துப் பொடிசெய்து உழக்குப்பொடிக்கு ஒரு கழஞ்சு சுத்திசெய்த பொன்னரிதாரம் கலந்தரைத்து வைத்துக்கொண்டு காசிடை கொள்ளவும்.

## திரிலோகவடகம்

ஆவரைசமூலம், கடலிறாஞ்சி, கட்டுக்கொடி, நாவற்பட்டை, கருவேலம்பட்டை, மருதம்பட்டை வகை பலம் - 100 இருகலம் நீர் வார்த்து எட்டொன்றாய்க் காய்ச்சிவடித்து: அயம், காந்தம் கிட்டம், இரசம், மரமஞ்சட்புறந்தோல், புளியங்கொட்டைக்கயா், விளாம்பிசின், வேப்பம்பிசின், கருங்காலிப்பிசின், தேற்றாவிதை சிறிவீஷணன், அதிராக்தம் வகை பலம் - 1 ஆவரைவிதை நாழி - 1 தான்றிப்பொடி, நெல்லிப்பொடி உழக்கு, கஷாயநீர் வார்த்தரைத்துக் கலக்கிக்காய்ச்சிப் பதத்திலிறக்கி பாக்களவு உருண்டைசெய்து நிழலுலர்த்திக் கொள்ளவும். விநாயகபூசை அதிதிபூசை செய்து உண்டையொருபங்கும் ஆவரையரிசிப் பொடி இருபங்கும் கூட்டித் தேனிறதின்று பின்வரும் குடிநீர் குடிக்கவும்.

குடிநீர்:- கடுக்காய், கடலிறாஞ்சி, மொளிமஞ்சள், தேற்றாவிதை, நெல்லிமுள்ளி வகைகழ - 2 இருநாழி நீர் உழக்காய்க் காய்ச்சிக் கொள்ளவும்.

## வச்சிரகபாடக்குளிகை

அத்தி கருவேல் நாவல்கொன்றையாவரையைந்துஞ்சமூலமுடன்
சுத்தக் கைப்புங் கன்மதமுந் தூய தேன்றா விரைகாந்தம்
மெத்தும் புளியங் கொட்டையர் மிடுக்காஞ் சாய வேர்பூலா
ஒத்த வீஞ்சு தென்னையிவை பாளை விரியா ததுங்கொள்ளே.

கொள்ளு முருக்கி னரைபொடியுங்குலவு மெள்ளின் பிண்ணாக்கும்
விள்ளுங் கடலி னிறாஞ்சியதும் விரித்த சரக்கும் பட்டைகளும்
உள்ள படியொன் றொருநிறையா யுடனே யிடித்து மாவாக்கி
அள்ளு நாவற் பட்டையினீ ரதனை விட்டே யரைத்திடுமே.

அரைத்த குளிகை தூதுளங்கா யளவா யுருட்டி நிழலுலர்த்தி
உரைத்த சலத்தின் பெருக்கறிந்த வுடனே யெருமைத்தயிரதனிற்
கரைத்தே மோரிற் குளிகையுண்ணிற் கடிய சலநீரவைவற்றி
விரைத்த தாக நாவரட்டி விட்டே யகன்று தீர்ந்திடுமே.

## பெரிய குளிகை

அப்பிரகஞ் செங்கழுநீர் கோட்டங் கைப்பு
மரிதான சந்தனங்கன் மதம்வெண் குன்றி
செப்பருங்கோ ரோசனைமுத்துப் பவளந் தங்கந்
திகழீச்சம் பாளைதென்னம் பாளை கொன்றை
துப்புறுமா வரையைந்து கடலி றாஞ்சி
தூயவா சாத்திசம்புபட்டை வெட்டித்
தப்பாமற் பெருங்குளநீர் விட்ட வித்துச்
சாரமுறப் பிழிந்துவடித் தெடுத்துக் கொள்ளே.
கொண்டசரக் கினியிடித்து மாவாய்த் தெள்ளிக்
குறித்தபட்டை யவிநீரை விட்ட ரைத்துக்
கண்டதின மூன்ற தன்பி னத்திக் காய்போற்
கதியாம லுருட்டிநிழ லுலர்த்திப் பேணி
மிண்டிமிகச் சலங்கழியி னெருமைத் தயிரில்
விரும்பியிந்தக் குளிகைதனில் நாலு கூட்டித்
தண்டாம லந்திசந்தி யருந்து வீரேற்
றவறாது சலக்கழிச்சல் தணிந்து போமே.

## மேகநாதக்குளிகை

அப்பிரக நாறகழஞ்சு சூத பற்ப
மதுவுமிரு கழஞ்சுசலா சத்தி ரண்டு
செப்புகரு வங்கமதிற் சிந்தூ ரந்தான்
சேருமறு கழஞ்சுடனே கெந்தி தாரம்
தப்பறவே சுத்திசெய்து கழஞ்சு பத்துச்
சாற்றுநிம்பங் கருங்காலி கருவேல் வெள்வேல்
இப்பிசின்கள் மரமஞ்சள் சித்ர மூல
மியன்பியகஸ் தூரிமஞ்சள் தெங்கின் பூவும்

பூவுநிலப் பனைக்கிழங்குங் கழஞ்சி ரண்டு
புளியவிதை மேற்றோல்வெண் குன்றி வித்து
மேவியகற் கடகசிங்கி தேற்றங் கொட்டை
விளம்பியகாற் பாசத்தின் விதைப்பருப்பு
யாவும்வகைக் கொருகழஞ்சு கடுக மூன்று
மவைபதினா றிவையனைத்தும் பொடித்துக்கொண்டே
ஆவரையி னிலைச் சாற்றால் மூன்று நாட்க
ளாட்டியபி னிலந்தையிலைச் சாற்றி னாலும்

கொன்றையிலைச் சாற்றாலு மாட்டி முன்போற்
குறையாதே தேற்றுவிதை யளவு ருட்டி
நன்றுபெற நிழலுலர்த்திச் செப்பில் வைத்து
நலமாகக் காலையிலோ ருண்டை தேனில்
தின்றுவர மாலைக்குக் கஷாயங் கேண்மின்
றிரிபலைமுத் தக்காக தேற்றாங் கொட்டை
அன்றியுநீர்ப் பூலாவேர் கடலி றாஞ்சி
யாரையிம் பூறலுடன் வில்வம் வேரே.
வேருடனே பொன்முசுட்டை துடரி சுண்டை
விளங்கியநீர்ச் சுண்டிகருங் காலி சீந்தில்
சூரையிவை வேரனைத்துஞ் சமனாக் கொண்டு
தூய்தாக விடித்தொருமட் புதுப்பாண்டத்தில்
நீருமிட்டு வேடுகட்டி ரவிமுகத்தி
னினைவாக வைத்தொருகாண் மறுநாட் காய்ச்சிக்
கூரவதை நாலொன்றா யிறுத்துக் கொள்ளக்
கூறியநீ ரழிவுசல மோகம் போமே.

## கபாடசிந்தாமணிக்குளிகை

சாதிக்காய் வசுவாசி கராம்பு காந்தஞ்
சாதிலிங்கங் கெருடபச்சை காய்ச்சுக் கட்டி
ஏதமறுங் குறாசானி யக்றா கார
மியைந்தகல்நார் கன்மதமிங் கிவையோ ரொன்று
சோறிபெறு மத்தவிதை யரைக்க ழஞ்சு
தூய்தாகக் கண்டவெடைக் கபினுங் கூட்டிக்
கோதறுமிங் கிவையனைத்து மொருபங் காகக்
கூட்டுவா யாவரைவித் தொருபங் காமே.

பங்கான வித்ததனை யிளவ றுப்பாய்ப்
பண்புபெறக் கூட்டியிடித்தெருமை மோரால்
மங்காம லரைத்ததனைச் சுண்டைக் காய்போல்
வழிததுருட்டி நிழலுலர்த்தி யெருமை மோரில்
நங்காய்கே ளதன் றயிரிற் காலை மாலை
நயந்தவொரு மண்டலங்கொண் டதற்கு மேலே
இங்கேமுன் னுரைத்திருக்குங் குடிநீ ரொன்றை
யேற்றபடி கொள்கவென விசைத்தார் தூயோர்

## அயகாந்தக்குளிகை

காரீய முடன்சூதஞ் சேர்த்து ருக்கிக்
கண்டபொடி கிட்டமரை பொடிநற் காந்தம்
சீராரு மப்பிரசங் கடுக்காய் நெல்லி
தேற்றாவித் துடன்மஞ்சள் விளாத்தி யோடு
பாராரும் வேலிரண்டும் பிசினில் வெல்லாம்
பகருமொரு நிறையாகப் பொடித்துக் கொண்டு
பேராரு மருந்தரைக்கக் கஷாயங் கேளும்
பெருமத்தி யாவாரை கடலி றாஞ்சி

கருவேல்செங் கிளுவையொதி வெள்வே லோடு
காட்டியபூ வரசுடனே செம்ம ணாத்தி
மருவாரும் பட்டைவகை பலம்பத் தாக
வாங்கியிடித் தீரிரண்டு மரக்கா னீரில்
பரிவாக வெட்டுநா ளெரித்து வற்றிப்
பார்க்கவொரு படியிருந்தாற் பிழிந்து விட்டுச்

மேகரோகநிதானம்

சரியாக வரைத்தொருபாக் களவு ருட்டிச்
சாருநிழ லுலர்த்தியபின் சாற்றக் கேளே

கேளுமதைப் பொடியாக்கி யொருபங் குக்குக்
கிளத்துமா வரையரிசி யிருபங் காக
வாள்விழியாய் பொடிசெய்து தேனிற் கூட்டி
மாந்தியபின் வெள்ளில்விளாப் பொன்முசுட்டை
நாளுமுத்தங் கருங்காலிப் பட்டை யோடு
நவில்கடுக்காய் செந்தொட்டி சீதை யெல்லாம்.
தாளிதனி லெட்டொன்றாய்க் கஷாயங் கொள்ளச்
சலரோக நீரழிவு தீருந் தானே.

## அப்பிரககவர்ணக்குளிகை

அப்பிரக சிந்தூரம் பவள பற்ப
மயக்காந்தஞ் சூதபற்பம் வகைக்கிரண்டு
மிக்கதங்க ரேக்கதுவு மொன்று பாதி
வேண்டுகரு வங்கமதிற் சிந்தூ ரந்தான்
தொக்கவிவை குமரிமடற் சாற்றா லாட்டித்
தூய்தாகப் புடமிட்டுக் சண்டெ டைக்குத்
தப்பறவே சரிபாதி சாதி லிங்கந்
தான்கூட்டி முன்போலப் புடத்திற் போடே
போட்டதுபோ லெழுமுறை புடத்திற் போடப்
பொலிவான சிந்தூர நிறங்கு றைந்தால்
மீட்டுமொரு கழஞ்சிலிங்கங் கூட்டி யாட்டி
விளங்கவொரு புடம்போட்டுக் கொங்கை பாலால்
ஆட்டியபின் பணவிடை போற் குளிகை கட்டி
யதைப்பொடித்து வெண்ணெயினிற் றேனி லன்றிக்
கூட்டியமுன் லேகியத்திற் கிருதந் தன்னிற்
கொள்ளவே சலக்கழிச்சல் குலையு மன்றே.

## வச்சிரசிந்தாமணிநெய்

சலமிரு பதுவுந் தீரத் தக்கநெய் சாற்றக் கேண்மின்
குலவிய தேற்றா நாவல் கூடுமா மருது நெல்லி
பலமிகு மரசா வாரை பகர்கட லிறாஞ்சி யத்தி

அலருறு கரிய காலி யாலொதி யெல்லாம் பட்டை

பொடுதலை தென்னம் பாளை பொருந்திய முத்தக் காசு
வடிவுள கதலி வேரு மாதளங் கனிலா மிச்சுத்
திடமிகு வெட்டி வேருந் திறமுள வில்வக் காயி
னுடன்வட்டத் திருப்பி வேரு மோரொன்று பலம்பத் தாமே.

இருபதிற் றொன்றிற் கூடு மிருநூற்றப் பத்தை யுந்தான்
மருவிட விடித்துக் கொண்டு வளமுறு கலனே தூணி
பருகுநீர் விட்டுக் காய்ச்சிப்ப தக்கதா யிறுத்துக்கொண்டு
மவுருநெய் குறுணி தன்னை மதித்ததிற் கலந்து கொள்ளே

கொண்டபின் பசுவின் பாலுங் குறுணியங் கதிலே விட்டுக்
கண்டபின் காய்ச்சுக்கட்டி கஞ்சாவித் துடன்சா திக்காய்
மிண்டிய வபின்க ராம்பு விடயமுஞ் சன்னி வித்தும்
விண்டதோர் கரிய காலிப் பிசின்வேம்பின் பிசினுங் கூடடே

கூட்டே யிலவு புரோசுவிளாக் கொள்ளு மிவையும் பிசினாகும்
நாட்ட முடனோர் குறுணிநெய்க்கு நாலு கழஞ்சு நிறையாகப்
போட்டுக்கலவந்தனிலரைத்துப் பொருந்தக்கரைத்துக் காய்ச்சியதை
வாட்ட மறுநற் பதந்தன்னில் வடிதா னியத்தில் வைத்திடுமே.

வைத்தே யெடுத்த நெய்யிலிரு கழங்சு வாங்கி வங்கமுடன்
முத்தே பவளம் வெள்ளிதங்க முறையாய்ச் செய்த வப்பிரகம்
ஒத்தே யிவற்றின் பற்பங்க ளொன்றென் றாலும் பலவெனிலும்
உய்த்தே யுண்ணப் பிரமேக மொழியாச் சலமு மொழிந்திடுமே

ஒழியுந் தாக நாவரட்சி யுடம்பும் பெலக்கு முள்வெக்கை
விழியு லெரியுந் தீர்ந்துவிடும் விளம்பு மருந்து மண்டலத்தில்
மொழியு மவபத் தியநீக்கி முறையா யுண்ண நன்றாகும்.
அழியுஞ் சலங்க ளிருபதுக்கு மாகுமருந்தொன் றறையக்கேள்

**நாவல்நெய்**

நாவலத்தி கொன்றையா வரையின் பட்டை
நல்லரசி னுடன் கருவேல் கடலி றாஞ்சி
மேவுமிவை பட்டையிடித் தவித்த நீரில்

மேகரோகநிதானம்

விளம்புநறு நெய்நாழி விட்டுக் காய்ச்சி
வாவிநறுஞ் செங்கழுநீர்க் கிழங்கு கோட்டம்
வகுத்தவெள்ளைக் குன்றிமணி கன்மதமப் பிரகம்.
தாவியொன்றோர் கழஞ்சரைத்து வடித்த நெய்யைத்
தானருந்தச் சலக்கழிச்சல் தணிந்து போமே.

போமேநீ ரழிவுவெட்டை பிரமே கங்கள்
பொல்லாத சலக்கழிச்சல் புண்ணெ ரிப்புத்
தாமேவு நாவரட்சி தண்ணீர்த் தாகந்
தயங்கியமோர் மண்டியெனச் சரியு மேகம்
தீர்மவு மிரத்தசலக் கடுப்பு மூலந்
தீராத நீர்க்கடுப்புக் காய்ச்சல் கூதல்
தேமேவு கதிரவன்முன் பனியே போலத்
தீருமென வாயுண்மறை செப்பு மன்றே.

**வச்சிரசிந்தாமணி ரசாயனம்**

அத்திநறு விலிகருவேல் கடலி றாஞ்சி
யாலுடனே முள்ளிலவு மருது சூதம்
ஒத்திடுமுட் புல்லாந்தி நீர்ப்பூ லாவு
மொதியெல்லாம் பட்டைகீழ் நெல்லி வட்டத்
துத்தியம்மான் பச்சரிசி யிவைவே ரெல்லாஞ்
சொல்லியமுள் ளிலவினுறு பிசின் விளாத்தி
அத்திலுறு பிசின்கம்பிப் பிசினும் பின்னை
யறைந்ததொரு கொம்பரக்கு மனவமு வாறும்

வகையொன்று பலம்பத்தாஞ் சுக்குத் திப்பில்
வகுத்தபடி யைந்துபத்துப் பலமே கொண்டு
தொகையொன்று கருவேம்பி னிலையிற் றண்டு
சோராமல் நூறுபல மாகக்கூட்டி
மிகையென்று கருதாமல் நாற்க லந்நீர்
விட்டெரித்துக் குழம்புபோற் பிழிந்து கொண்டு
தகவொன்று மிஞ்சியினிற் சாறு தானுஞ்
சாற்றினார் நானாழி யாகக் கூட்டே.

கூட்டுவாய் மாதளையின் பழத்திற் சாறு
கொள்ளவொரு நாழிவிட்டுக் கூட்டுங் கற்கம்
ஈட்டுமிள குப்பொடியு மீரு ழக்கா

யிசைந்தவபின் விராகனைந்து கணிதபேதி
ஒட்டில்வெந்த வப்பிரசம் பலமைந் தாகு
முரியபொடிச் சர்க்கரையு மைம்ப லந்தான்
போட்டதிலே தேன்நாழி விட்டுக் கிண்டிப்
புகன்மெழுகு பதமதிலே யிறக்கி டாயே.

இறக்கியதை வெருகடிதா னந்தி சந்தி
யியன்றபடி பத்தியமாய் மண்ட லங்கொள்
பொறுக்குமிதிற் கலக்கழிச்சல் தண்ணீர்த் தாகம்
போகாத நீரழிவு பிரமே கங்கள்
வெறுப்பளிக்கு மதிசார மெலும்பு ருக்கி
வினைதீரு மிம்மருந்திற் சம்பி ரத்தின்
சிறப்புறுமப் புளிகுறுணி விட்டுக் காய்ச்சச்
செப்பினார் நீர்ழிவி னீக்கிச் செய்யே.

**கரும்புரசாயனம்**

செய்யகரும் பினிற்சாறு காற்பா சத்தற்
சேருமிலை யிற்சாறு படிகால் வீதம்
ஐயமறு குட்டிவிளா விலையிற் சாறங்
கரைப்படியா யதிற்கரைக்குங் கற்க மேலம்
செய்யவில வங்கமுட னூசிக் காந்தஞ்
சேர்துத்தங் கராம்புகளிப் பாக்குக் கைப்பு
மையலறுங் கர்ப்பூரங் கழஞ்சொவ் வொன்று
வாலுளுவை யரைசூதம் வராக னொன்றே.

வருசூத மதைப்பருத்தி யிலையின் சாற்றின்
மாசறவே சுத்திசெய்தங் கதனிற் சேர்த்துப்
பொருமவினும் வராகனொன்று சரக்க னைத்தும்
பொடிசெய்து கலுவத்தி லரைத்துக் கூட்டி
மருவுறுநற் றேன்விட்டு லேகி யஞ்செய்
மதிக்கவரு மளவறிந்து கொள்ள லாகும்
வெருவு றுமச் சலக்கழிச்ச லனைத்துந் தீரும்
விளம்பியமுற் கஷாயவகை மேலே கொள்ளே.

மருந்திவை யுண்ணும் போது மாந்திடக் கஷாயங் கேண்மின்
பொருந்திய நாவ லத்தி புகலொதி கடலி றாஞ்சி

மருந்திவை பலமொன் றாகும் மற்றுமா வரைநற் கொன்றை
திருந்துமீர் பலமுங் கூட்டிச் செப்பிய நீர் கொள்ளே.

## தேற்றாங்கொட்டையெண்ணெய்

தேற்றின் கொட்டை பல நூறு சிதற விடித்துப் பதக்குநீர்
ஊற்றியெட்டொன்றாகவடித்துறுமெள் ளெண்ணெயொருபடியும்
சாற்று மஞ்சண் மரமஞ்சள் தகுபொன்மெழுகு மனோசிலையோ
டேற்ற முறுநற் சந்தனமு மியைந்த பருத்திக் கொட்டையுமே.

மேவு கருங்கா லியின்பட்டை வெள்ளி லோத்திப் பட்டையுடன்
தாவு விளாவேர் வில்வம்வேர் தகுவெண் குன்றி வேர்ப்பட்டை
பாவு தகரை யதிலுறுவேர் வட்டத் திருப்பி யரிமேதம்
யாவு மிவைக ளொருகழஞ்சா யடைத்துக் கரைத்து வடித்திடுமே.
இடுமே யிரும்புப் பாத்திரத்தி லெண்ணெ யூற்றி வைத்திருந்து
கொடுமே யுள்ளுக் களவறிந்து கொள்ளும்போது தலைமுழுகப்
படுமே யெண்ணெய் பகரக்கேள் பருமாம் பட்டைநெல்லிமுள்ளி
எடுமேயழிஞ்சிபட்டை யிடித்தெட்டொன்றாக்கி யெண்ணெயுடன்

விட்டுக் கற்க மரமஞ்சண் மேவுமஞ்சள் வெண்குன்றிப்
பட்டையரைத்துப் பதமாக வடித்து முழுகப் பாங்காகும்
இட்ட முறவே பத்தியங்கே ளெருமை மோராந் தூதுளங்காய்
நட்ட மறுகத் தரிப்பிஞ்சு நல்ல முருங்கைப் பிஞ்சதுவும்

அதுவுஞ் சுட்டே யாறினநீ ராறு மசனஞ் சந்தமகில்
அதுவு மாகுமாகாத பதார்த்தம் பால்நெய் மீனிறைச்சி
அதுவும் வெல்ல மாப்பண்ட மாவின் றயிருந் தித்திப்பா
மதுவு முப்புக் கடுடுமிள காகாக் காயஞ் சுக்கிளநீர்

## வங்கசிந்தூரம்

உரைபெறுநல் வங்கமதை யெலுமிச்சம் புளியதனி
லுருக்கிச் சாய்த்தே
பரிவுடனிவ் வண்ணமதிற் பத்துமுறை புளியிலைச்சா
றதிலே பத்து
வருமுறையே நாவன்மரப் பட்டைச்சா றதிற்பத்து

வருநன் னீரில்
திருவுறவே பத்துமுறை யிப்படிநாற் பத்துமுறை
செய்தெ டுத்தே
பின்னுருக்கிய திலாடா தோடைவரு சாறுவிட்டுப்
பிழையு றாமே
மன்னுறுமக் கம்பாலே கிண்டிவறுத்திடப்பொடியாய்
மருவு மீதில்
துன்னவொரு பலங்காந்தஞ் சாதிலிங்க முடன்சூத
நாற்க ழஞ்சு
பொன்னினரி தாரமனோ சிலைதுத்த மிருகழஞ்சாய்ப்
புகல யத்தின்
பொடியுமறு கழஞ்சிவற்றைத் தனித்தனியே சுத்திசெய்து
பொருந்துங் கல்வத்
திடையரைத்துப் பொடியாக்கி வங்கத்தின் பொடியுடனே
யிசையக் கூட்டி
வடிவுபெறு குகையிலிட்டு மேலுமொரு குகைமூடி
மண்ணுஞ் செய்தே
அடைவுபெறு பானையிலே மணலிட்டங்கொருகு றுணி
யதன்மேல் வையே
வைத்தபின்னு மணல்சொரிந்து பானைவாய் சட்டியினா
லிடையின்றி மருவ மூடி
அத்திலெழு மண்சீலை செய்துலர்த்தி நன்றாக
விநாயகனுக் கறுகி னாலே
பத்தியுட னருச்சித்து மோதகமும் பழந்தேங்காய்
பலபண்டம் படைத்துப் போற்றிச்
சித்திபெற வைத்தடுப்பி லோரிரவு முழுவதுமே
யிடையின்றித் தீயிட்டாற்றி

எடுக்கவதைச் செவ்வரத்தம் பூப்போலச் சிவந்திருக்குஞ் சிந்தூர மெடுத்து நன்றாய்ப், பொடித்துவைத்துக் கலங்கொம்பு நற்சந்த மாவின்கோரோசனையுங் கழஞ்சாறு பொருந்தொவ்வொன்றும், வடுத்தவிருஞ் சாதிக்காய் கராம்பேலம் வெண்காரந் திப்பிலியுஞ சாத்ர பேதி, தொடுத்தவிவை நாற்கழஞ்சு கர்ப்பூரங்கழஞ்சிரண்டு செம்மைபெறத் தூளாய்ச் செய்தே.

செய்ததூள் நன்னுடனே சிந்தூரஞ் சமன்கலந்து சர்க்கரை யிற் றேனிற் றின்னப் பெய்தருநீ ரழிவுசலக் கழிச்சல்பிர மிய வாதம் பிரமேக நீர்ச்சு ருக்கு, வெய்தெனவுள் ளெரிச்சல்சலக் கடுப்புமூத் திரப்பாளை

நீர்க்கட்டு வெள்ளை வெட்டை, பொய்மருவு மூர்க்கருக்குச் சொன்ன புத்தி போலாகப் போகுமெனப் புகலும் வேதம்.

புகன்றமுறை சுத்திசெய்த காரீயம் பலநாலு
சட்டியிலே போட்டுருக்கிப் பொருந்து மத்தில்
தகுந்தபடி சமனாக நாயுருவி சமூலமதைப்
பொடிப்பொடியாய் நறுக்கியதூள் தானு மிட்டு
மிகுந்தவெரி யிட்டிலுப்பைக் கம்பாலே வறுத்துவரச்
சட்டியினி லொட்டியிடின் மேலு முன்னர்ப்
புகன் றவகை நாயுருவி யேழுகட்டுப் பொடியாக்கி
யிட்டுவறுத் ததுசிவந்த பூப்போல் வந்தால்

வந்தபடி யிறக்கியதைச் சட்டியிலே யாறவிட்டுப்
பின்னெடுத்துச் சிமிழில்வைத்து வழுவு றாமே
சிந்துரத்துக் கனுபான வகையுரைப்ப னதிமதுரஞ்
சாதிக்காய் பத்திரியுஞ் சேர்க ராம்பும்
சந்தமுறு திரிபலையு நிலவாகை விதையுமா
வரையரிசி பொற்காணி தன்னில் வித்தும்
கொந்துலவு மதன்வேரு நாவலுடன் றுடரியும்பின்
றுவரைமுள்ளி தமிழ்கொழுந்துஞ் சொன்னன் னாரி

நன்னாரி கோரையிவை சமனாகப் பொடிசெய்து
வெருகடியி லொன்றுபன விடைசிந் தூரம்
தன்னோடு மெருமைவெண்ணெயிறகொடுக்கச்சலக்கழிச்சல்
பலவகையுந் தவறாது தணியு மின்னும்
பொன்னாரு மாவனயி லஞ்சுவகை யும்பொடித்துக்
கழஞ்சிரண்டு சிந்தூரங் கூட்டித் தேனில்
சொன்னாரங் கதுவன்றி நெல்லியினிற் பருப்புடனே
தான்றியின்காய் சூரணமாய்க் கூட்டி யுண்ணே.

உண்ணவரு மனுபான மின்னுமுண்டு கூகையினீ
றுடன்கூட்டிச் சிந்தூர முணவு நன்றாம்
எண்ணவரு மூமத்தை சமுத்திராப் பழஞ்சமனாய்ப்
பொடியாக்கி யிரண்டுபண விடையிற் கொள்க
நண்ணுமிது நெஞ்செரித்தால் மூத்ததயிர் சேர்த்துணவு
கொளலாகு நிலவாகை விரைபொ டித்துப்

பண்ணியதூள் காசிரண்டிற் சிந்தூரந் தேனிலுணப்
பயனுண்டா மரசுகட விலாஞ்சி யோடே

புலிதொடக்கி வேருமெனு மிவைமூன்றும் வகைமூன்று
பலமாக விடிபொடித்துப் புனலெண்ணாழி
வலிதுபெற வெண்டொன்றாய்க் குறுக்கியதி லாழாக்கு
நீரிறுத்துச் சிந்துரமு மதனி னோடே
பொலனமரு மாவரையின் விதைத்தூளுங் கூட்டியுணச்
சலக்கழிச்சல் பிரமேகம்வெள்ளை வெட்டை
பலவுமுடன் றீருமென வாயுண்மறை முறையுணர்ந்த
முனிவரர்முன் னாராய்ந்து பகர்ந்த தாமே.

**சந்தனாதியெண்ணெய்**

விரைகமழு நறியசந்த னாதியெண்ணெய் சந்தனமீ
ராறுபலம் வில்வந் தண்டா
மரைவளைய மகில்சீந்தில் வாய்ந்தசிற்ற மட்டியிலா
மிச்சிவைவேர் வகையோரொன்றுக்
குரியவறு பலங்கொண்டு தறிததிடித்தீர் தூணிபுன
லெண்ணாழி யாகக் காய்ச்சிப்
பெரிதுபிழிந் திடுநீரோ டெள்ளெண்ணெ யாறுபடி
கூடவிட்டுப் பின்ன தோடே
சொன்னபொன்னாங் காணிநொச்சி சாத்தா வாரி
சுந்தரக்கற் றாழைமுருக் கிளநீர் வீழி
வன்னமிகு பாலிவைக ளிருமுந் நாழி
வாய்ப்புறவிட் டினிச்சரக்கு வையைக் கேண்மோ
மின்னுவசு வாசிநற்கச் சோல மாஞ்சில்
வியன்மதன் பூ விருவேலி யேல மோமம்
பன்னுசெழு பச்சிலைமஞ் சிட்டி சாதி
பத்திரிதக் கோலம்வெட் பாலை தானே.

தாளிசபத் திரியாரத்தை யதிமதுரஞ் செவ்வள்ளி
குறாசானி சாத்ர பேதி
கோளில்வங்கந் தேவதரு நாகம்பூச் செண்பகப்பூச்
செங்கழுநீர்க் கிழங்கு கோட்டப்
நீளினிய செஞ்சந்தம் விழாலரிசி யஞ்சனக்க

லுடன்றகரங் கடுகு ரோணி
கேளின்னுஞ் சாதிக்காய் திரிகடுகு கராம்புவெள்ளி
லோத்திரமுங் குறையா வண்ணம்.

கொண்டவிவை யோரொன்றுக் கறுகழஞ்சு பொடியாக்கி
யரைகரைத்துக் கஷாய மீதில்
மிண்டுகையாற் கரைத்தூற வைத்துப்பி னடிபற்றா
தெரித்துமெழு காம்ப தத்தில்
அண்டவடித் தாறாமுன் கஸ்தூரி குங்குமப்பூக்
கோரோச னைகர்ப் பூரம்
கண்டலின்பூ மேற்பொடியிட் டுடலாதி கேசாந்தந்
தடவிவெந்த நீரின் மூழ்க

மாறுமிதிற் பலவிதநீ ரழிவுதுன்மாங் கிஷவளர்ச்சி
நிணமுருக்கி நீர டைப்புத்
தேறுமுக வெரிவுசுர முள்ளருக்கி செறிமேக
மிந்த்ரகண்டி மூத்ர பானம்
கூறியவந் திப்பில்லாங் காதிற்குத் தீருமல்நீர்ச்
சாய்வுகொர்ப்ப சூலை பின்னும்
வீறுதொண்டைப் புகைச்சல்கைகா லெரிவுசெவி யிரைச்ச
லுடன் தலைவலிநீர்க் கடுப்புந் தானே.

தானமிகும் வாய்நாற்றம் வழுவ முப்புத்
தலையெரிவு மண்டையிடி மண்டை தன்னிற்
பீநசங்கண் ணெரிவைக ளனைத்துந் தீரும்
பேசமிந்தத் தயிலம்போற் பிறிதொன் றில்லை
ஆனசரீ ரந்தூவித் தழகுண் டாகு
மடிகனத்துப் பணைத்திறுகிச் சுணங்கு பூத்து
வானிமிர்ந்து செவ்விளநீ ரெனப்பூ ரித்து
வட்டமிட்டுத் தடித்தமுலை வனச மாதே.

## பிரமேகசந்தனாதியெண்ணெய்

அறிந்தசந்தந் தேவதரு பலநா லாகு
மரத்தசந்தம் பலமொன்று கஷாய மாக்கிச்
செறிந்தநெல்லிக் காய்ச்சாறு தண்ணீர் மீட்டான்
செப்புதா மரைவளைய மீஞ்சு தன்னில்

நிறைந்தகுரு கிவையனைத்துஞ் சாறு நாழி
நேர்பசுவின் பால்நாழி கொம்ப ரக்கில்
உறைந்தசல மொருநாழி யத்தி வேரி
லூறலொரு நாழிகட லிறாஞ்சி வேரே.

வேரூற லொருநாழி நெல்லி தன்னில்
வேரூறல் துவரைவே ரூறல் நாழி
நீரூறுஞ் சதாவேரி கீழ்காய் நெல்லி
நிலக்குமிழ்சிற் றாமணக்குச் சிற்ற மட்டி
பேரேறு மட்டிசிறு நெருங்சி கொற்றான்
பெருகுமுத்த நன்னாரி பற்ப டாகம்
சீரேறு கூவிளை பொற் காணி யோடு
சீதேவி நிலப்பனையோ ரிதழின் கஞ்சம்

காஞ்சமுடன முதவல்லி யசுவதந்தி
கரிசாலை பாதிரிகூத் தன்கு தம்பை
எஞ்சலுறு மூவேழும் பிடியொன் றாகு
மிருவேலி யிலாமிச்சுப் பலமொவ் வொன்று
தஞ்சமுறு புனலிட்டுக் கஷாய மாக்கித்
தான்பிழிந்து கூட்டியதி லெள்ளி லெண்ணெய்
மிஞ்சவிட்டுக் கற்கவகை மதுர மேலம்
விழாலரிசி வெட்பாலை தேவ தாரு

தாருவுடன் பச்சிலைகள் சோல் மாஞ்சில்
சாதிக்காய் திரிபலைநற் கண்டில் வெண்ணெய்
பாரிலுறு பூதவிர்க்க மருக்கொ முந்து
பருகமகில் தற்கோலஞ் சிறுநா கம்பூச்
சீரசநற் செங்கழுநீர்க் கிழங்கு கோட்டஞ்
செவ்வள்ளி யிலவங்கஞ் சாதி பத்ரி
வேரிபெறு செண்பகப்பூக் கராம்பி னோடு
மிக்கவத்தித் திப்பிலிநற் கறுவாத் தேடே.

தேடியிவை யிருமூன்று கழஞ்சு வீதஞ்
சேர்த்தரைத்து மெழுகுபதந் தனில்வடித்து
நாடியகோ ரோசனைமுக் கழிஞ்சுமின்னு
நவில்புனுகு சட்டமறு கழஞ்சு தூவி
மூடிவைத்துப் பாதாகி கேசந் தேய்த்து

மேகரோகநிதானம்

முழுகிவர நீரழிவு நீர்க்க டுப்பு
வாடியுறுஞ் சத்திவிக்கல் தாகம் பித்தம்
வயிற்றெரிவு மூலமுதற் பாண்டு போமே.

## அமுதகலையெண்ணெய்

வாத்தில் நாலும் வளர்பித்தத் தோராறும்
சீதமுறு சேற்பனத்தி லீரைந்தும் - பேதமுற
வந்து சலங்கழிந்து வாதை மிகுத்துதென்றால்
பைந்தொடியீ ரெண்ணெய்வைக்கும் பான்மைகேள் - கொந்த விழும்
ஆலரசு நாவ லழிஞ்சில்கரு வேலத்தி
சீலமுறு மாவாரை செங்கிளுவை - கோலமுறும்
வஞ்சி கடல்றாஞ்சி மாநெல்லி யோடொதியும்
விஞ்சு புரசு குளவடம்பு - தஞ்சமுறும்
மாம்பழத்துக் கொன்றை வருமீஞ்சி லிவ்வனைத்தும்
ஆம்படிவேர்ப் பட்டை யவற்றுடனே - வேம்புதரும்
பட்டையும் முள்ளிலவிற்பட்டை காட்டாத்தியுறும்
பட்டையிவை நாலைந்து பண்புடனே - நட்டமுறும்
சீந்திலுடன் கோவை செறிந்ததண்டு நெல்லிமுள்ளி
சேர்ந்தமுத்தஞ் செப்பு நெருஞ்சியினும் - வாய்ந்ததொரு
பேய்ப்புடோல் தென்னை பெறும்பாளை நாலிரண்டும்
சேர்ப்பாய் வகைக்குப் பலமூன்று - காப்பாய்
இடித்து மிடாவொன்றி லிட்டுக் குளநீர்
வடித்துப் பதக்கு வருதூணி - அடுத்ததிலே
விட்டுநற் சந்தனந்தான் மென்மையுற வேசீவி
இட்டமுடன் மூன்றுபல மேற்கவே - இட்டுப்பின்
ஏழுநாட் காய்ச்சியதை யெட்டுக்கொன் றாய்ப்பிழிந்து
வாழ்வுபெற வேயடுப்பில் வைத்துக்கேள் - ஈழமுறும்
ஏலமில வங்கமுட னேற்றவதன் பத்திரிதக்
கோல மதிமதுரங் குக்கில்கல்நார் - சீலமுள்ள
செண்பகப்பூ வெண்கோட்டஞ் செவ்வள்ளி தேவதரு
கொம்பரக்கு மஞ்சிட்டி கூர்மஞ்சள் - வம்பவிழும்
சாதிக்காய் பத்திரியுஞ் சாருநற்சீர் சாத்திரத்தின்
வேதி பெருங்குரும்பை சிற்றரத்தை - ஓதும்
சிறுநாக ம்பூமாஞ்சில் செப்புசத குப்பை
வெறிசேர் கராம்பு விரிதகரம் - அறியும்
அகிற்புட்பம் வேம்பி லமர்ந்தபிசின் கம்பி

உகப்பாம்பிசின் விளா வுற்றபிசின் - மிகுத்தபுலி
தன்னினகங் குங்குமத்திற் சார்பட்டை யாமனைத்தும்
மன்னும் பலங்காலாய் வாங்கியே - முன்வடித்த
நீலிலரைத் துக்கலக்கி நேருமெண்ணெ யோர்குறுணி
சாரும் பசுப்பால் தருகுறுணி - சேருமதில்
நற்சந் தனமவுரி நன்னாரி சாணாக்கி
உற்ற நெருஞ்சி யசுவகந்தி - சொற்றதொரு
தாமரையி னல்லியுடன் சாரு மழிஞ்சிலிவை
ஆமெட்டு மொவ்வொர்பல மாய்வாங்கி - நாமுரைத்த
வண்ணமரைத் துக்கரைத்து மற்றடுப்பி லீரெழுநாள்
எண்ணமுற வேகாய்ச்சி யேற்றபதம் - நண்ணுகின்ற
பக்குவத்திற் சோராமற் பார்த்துவடித் தேயதனை
மிக்க தலையினிலு மேனியெங்கும் - ஒக்கவே
தேய்த்து முழுகச் சிகைக்காய் பயறுசிலம்
வாய்த்தவொன்றைச் சேர்க்க வளமாகும் - சூத்திரத்திற்
செப்பசல நாலைந்துந் தீரு மழல்கடுப்பு
வெப்பாம் பிரமியமு மேகவகை- அப்பின்மேற்
தாக மசதி தருநோய்க ளாமனைத்தும்
போகவதி லையமுண்டோ பூவையே - நாகமதி
பூண்டசிவ நாமமதைப் போற்றுமடி யார்பவம்போய்
மாண்டதவஞ் சித்திக்கும் வாறதுபோல் - ஈண்டிமிகும்
நோயனைத்துந் தீர்ந்து நுநவன்றசுக முண்டாம்
ஏயிதனைச் செய்வீ ரிசைந்து

## நீரழிவுச்சந்தனாதியெண்ணெய்

மாதருடன் மோகம் வருந்தினால் மானிடரே
தாதுகெடு நீரழிவு தான் றோன்றும் - போதவே
காந்த லெடுத்துக் கணகணத்துக் கஞ்சி தண்ணீர்
வாங்கியுடன் மெத்த் வருந்துமே - பாங்குடனே
பல்லோர்க்கு நல்ல பயன்சந்த னாதியெண்ணெய்
வல்லோரே வைத:துக்கொள் மாநிலத்தில் - எல்லோர்க்கும்
அம்மையுமை பாகத் தரனை யடிவணங்கிச்
செம்மையுள வாகடத்தைச்செப்பக்கேள் - நன்மையுறச்
சந்தமுடன் கோட்டஞ் சதாவேரி நன்னாரி
முந்தியபொன் னாங்காணி முத்தக்கா - சந்தகிலும்

வில்வம் வேர் சீந்தி லிலாமிச்சு வெட்டிவேர்
சொல்லுமா விந்தமதிற் சூழ்வளையம் - நல்லதொரு
சிற்றமட்டி வேர்த்தொலியுஞ் சேரவகைக் காறுபலம்
முற்றுந் தறித்திடித்து மொய்குழலே - குற்றமற
ஈர்துணி தன்புனல்விட் டெட்டொன் றெனவற்றும்
நாரம் பழிந்ததனி னல்லாவின் - கீரமுடன்
செவ்விளநீ ரெள்ளெண்ணெய் சேரவகைக் காறுபடி
கவ்வையுடன் சாறு கழறக்கேள் - எவ்வமறும்
தாளி கொடுப்பை சதாவேரி கற்றாழை
வீழி முருக்குநொச்சி வேர்க்குமரி - வாழ்வுறவே
ஓரொன்று மூன்றுபடி யொன்றாய்க் கலந்துவிட்டுச்
சேருகின்ற கற்கவகை செப்புக்கேள் - பாரமுறு
சந்தனம் வெட்டிவேர் சாதிக்காய் பத்திரியும்
வந்தவசு வாசி மகரப்பூப் - பைந்தொடியீர்
பச்சிலைகச் சோலம் பருமாஞ்சில் மஞ்சிட்டி
வைச்சதொரு செங்கழுநீர் வண்கோட்டம் - அச்சமறும்
ஏலமில வங்க மிருவேலி சிற்றரத்தை
சீலமுறு தேவதரு செவ்வள்ளி - கோலமுறும்
தக்கோலங் கடுரோணி சாற்றியவெண் குந்துருக்கம்
முத்தமிலா மிச்சினுடன் மேய்குழலே - நட்பான
*கிள்ளையுறை நாகம்பூக் கேடில் குராசானி
வெள்ளி லதிமதுரம் வேதிக்கல் - நல்லவிழால்
வெட்பாலை யுநதகரம் வேண்டியசெஞ் சந்தனமும்
ஒப்பா யறுகழஞ்சங் கொன்றுபடத் -தப்பாமல்
ஆவின்பால் விட்டே யரைத்துக் கரைத்தடுப்பில்
மேவும் வசனபதம் வவெந்துவந்தால் - ஆவியுற
வட்டிலெடுத்து மகாதாழம் பூப் பரப்பிக்
கட்டி வடித்தெடுத்துக் கஸ்தூரி - கொட்டமுடன்
குங்குமப்பூக் கோரோச னையும் புனுகுசட்டம்
தங்குபச்சைக் கர்ப்பூரஞ் சாரவே - அங்கதிலே
கூட்டிக் கலந்துவைத்துக் கொண்டு விநாயகனுக்
காட்டிச்சிவனுக்கு மம்பிகைக்கும் - நாட்டமது
பன்னிரண்டு கொண்டசிவ பாலகற்கு மன்புடனே
மன்னு மபிடேகம் வாய்ப்பவே - பின்னமறச்
செய்து விளக்கெரித்துச் சிந்தித்து நோய்தீர
எய்துதவ மாயினபின் னின்புடனே - மெய்முழுதும்

தேய்த்துவெந் நீர்மூழ்கசெப்புசல மாற்றுதற்கு
வாய்த்தசந்த னாதியெண்ணெய் வைத்துக்கொள் - மூத்திரத்தில்
சேரும் பலதோஷஞ் செப்புகின்ற கல்லடைப்பு
நீரழிவு தாக நிணமுருக்கி - தீராத
இந்திரிய காந்தி யிதனிற் சதையடைப்பு
வந்த வுடல்வரட்சி வாயுவுடன் - தந்தியில்லா
மூத்திர பான முகமெரிவு கண்ணெரிவு
வாய்த்தெரியுஞ் சூலை வரட்சிபித்தம் - நேத்திரத்திற்
கல்லே கடுப்பு முளைவுங் கபாலவலி
பில்லம் வருநீரும் பேசரிய - தொல்லைதரும்
மண்டை வலியு மருவு மதிற்குத்தும்
தொண்டை யிருமல் துரப்புனே - துண்டமதிற்
பீநச மீளை பிடர்நோய் பிழைகுரலும்

வாய்நாற்ற மற்ற வழுவழுப்பும் - தேனார்தம்
கெர்ப்பவொடு சூலை கிளர்நீர்க் கடுப்புமுதற்
சர்ப்பநெடும் பாடுந் தணியுமே - அற்பமென
எண்ணாதே யிந்த வினியசந்த னாதியெண்ணெய்
முன்னோர்கள் செய்தமுறை.

## சுக்கிலமேகத்தின் குணம்

சுக்கில மேகம் வாய்தான் சூழவே புண்ணாய நாறும்
பக்கத்திற் றண்ணீர் பாயும் பாதிநீர் சலம்போல் வீழும்
தொக்குடல் காயும் வற்றுஞ் சூட்சத்தின் மின்போ லோடும்
கக்குமே கோழை யாக விக்குணங் கண்டி டாயே.

## சிகிச்சை

### சாத்தாவாரிநெய்

தண்ணீர் விட்டான் கிழங்குடன்வெள் ளாக்காய்குமரித் தண்புனலும்
மன்னா வரையி னிலைச்சாறும் வகைக்கோர் நாழி நெய்நாழி
விண்ணார் சூத மத்தியுடன் வெள்வேல் பூலா விவைமரத்தோல்
பண்ணாய் நாலொன் றாயவித்துப் படிநீர் பிழிந்த கஷாயமிடே

இடுநற் சரக்குவெட்பாலை யிருசீர் தக்கோல முடனேமுக்

மேகரோகநிதானம்

கடுமுப் பலைநல் விலவங்கங் கராம்பு சாதிக் காய்மதுரம்
எடுமிச் சரக்கொன் றிருகழஞ்சோ டிலவின் விரையு மறுகழஞ்சு
வடுவற் றிடுமா தளம்பிஞ்சு வளர்முந்திரிகை விளாங்கனியே

கனிசே ரால முகைகோரோ சனைமுள் ளிலவின் கரியபிசின்
முனையார் கலங்கொம் புடன்சீந்தின் மூல மிலாமிச் சிருவேலி
வனையார் கீழ்காய் நெல்லிசிங்க வல்லி சிறுபூ ளையில்வேரும்
புனைமா தலைசெப் பதினொருஞ்சி புகல்வே ரரத்தம் பூத்தேடே

பூமேல் வாச முகையுடன்கர்ப் பூரம் புதுமா தளம்பூவும்
தாமேயொன்று பிடியரைத்துச்சாற்றுங்கஷாயந்தனிற்கரைத்திட்
டாமேயெ ரித்துபதத்தில் வடித்தடைவாய்க்கால் மண்டலமருந்தில்
போமே மேகம் பலவுமுடற் புண்ணு முவர்ந்து பொருக்காமே.

## முள்ளிலவம்பட்டைநெய்

முள்ளிலவோ டொதிநாவல் முட்பூல் வெட்பூல்
முத்தமொடு நன்னாரி முல்லை சீந்தில்
தெள்ளியசெந் தாமரையார் சிற்ற மட்டி
சீதேவி சிறுகீரை திருவ ராகி
கொள்வதுநல் லிருவேலி பொன்னாங் காணி
குலவுமிலா மிச்சினொடு குளிரி யாம்பல்
அள்ளுமதி லிளநீர் பால்விட்டுக் காய்ச்சி
யடைவுபெற மூன்றொன்றாய்க் கஷாய மாக்கே.

ஆக்கிய கஷாயந் தன்னி லாவுறு நறுநெய் நாழி
தாக்கிய நறவு சீனி தாழ்வில்முந் திரிபே ரீஞ்சு
தூக்கிய நிறையோ ரொன்று தூய்மையாய்ச் சமம தாக்கி
வாய்க்கவே சேர்த்துப் பின்னும் வளமுறு கற்கங் கூட்டே.

கூட்டுவெண், கோட்ட மேலங் குலவுதக் கோல மாஞ்சில்
காட்டினி னாகம் பூவுங் கச்சோலம் பச்சை சந்தம்
கேட்டிடு கணித வேதி கிளியூறற் பட்டை வங்கம்
தீட்டுசெண் பகப்பூ வோடே செவ்வள்ளி யகிலு மாமே.

ஆமதி மதுர நெல்லி *யடவிகச் சோலங் குப்பை

நாமுறு தேவ தார நற்சீரஞ் சிற்ற ரச் ்தை
வேமுறு பதத்தி லாக்கி விருப்புடன் கழஞ்சு நெய்கொள்
தீமைசெய் பிரமி யத்திற் சேர்ந்திடு கடுப்புப் போமே

## பிரமேகசூலைக்குணம்

சுக்கிலஞ் சலமி ரத்தந் தோன் றிடுஞ் சதைக ணாறும்
மிக்கநீர் தன்னில் வீழ்ந்து மெய்யெலா நையக் குத்தி
அக்கியு ம்குந்து கைகா லவயவங் களிலே கட்டும்
இக்குண மேக சூலை யென்றுதானியம்ப லாமே.

அறவுலர்ந் தென்பு தோன்று மமர்ந்திடு முணர்வு காணா
உறமனக் கச்சந தோன்று முந்தியே கனத்துக் குத்தம்
திறமற மடக்கிக் கொள்ளுஞ் செப்பிய வீக்க மாகும்
பிரமேக சூலையென்று பேசினார் பெரியோ ரன்றே.

## சிகிச்சை

### பஞ்சகல்யாணித்தயிலம்

திருவே யெண்ணெ யிரண்டுபடி சித்ர மூலங் + சாதிபைந்து
கருவேல் வெள்வேல் விளாவுடையுங் கழிந்த பிசின்கல்நார்மதுரம்
அரிசி யாறு சிற்றரத்தை யபின் * கா கோளி யதின்வர்க்கம்
உரிய ‡ பஞ்ச வாசமுட னோம மொன்று முக்கழஞ்சே

சேரநிறுத்தேயிடித்தரைத்துச் செறியக்கரைத்துப்பதத்தில் வடித்
தாரக் கரண்டி யளவருந்தி யடைவே யுடம்பு தனிலுமிட
நீரிற் கடுப்புத் தாதுவிழல் நெடிய கைகால் குத்துளைவு
தீரும் பஞ்ச கல்யாணித் தயல மென்று செப்பினரே.

சுத்திசெய் குக்கில் பலமொன்று துவர்ச்சிகை +யட்டவர்க்கமுடன்
கொத்துறு § சாதி வகையைந்து வெண்குந் துருக்கங் குளவிந்தம்.

**குக்கிற்கிரும்**

சந்திச் சார மெவச்சாரந் தரகங் கோட்டங் குங்குமப்பூ
அத்தித் திப்பிலி யரிசிவகை யசமோ தகநற் குறாசானி
சாதி லிங்கம் பறங்கியில்வேர் சாத்திர வேதி துரிசுதுத்தம்
ஒதும் பத்திரி முப்பலையு மொன்று மூன்று கழஞ்சாக
ஈதையுரலி லிரைத்தங் கினிய நெய்பா லொன்றொர்படி
மாதே புகட்டிய பதந்தனில் வடித்துதச் சீனி தனில் விரவே

விரவிக் கரண்டி மண்டலக்கொள் மேவு முப்புரிப் புளிதவிரில்
திருவே மேக வகைபலவுஞ் செப்பு மேக கலம்பித்தம்
புரையாய் வீங்குங் கடுப்புளைவு பொருந்துத் தோறுங் கட்டுதும்
திரமே தீரு மெனமுன்னோர் செப்புங் குக்கிற் கிருதமிததே

**சலப்பிரமியத்தின் குணம்**

நீருங் கடுத்துச் சலங்கழித்து நின்றே சீயுந் தான்வீழ்ந்து
சேரு மிர்த்தந் துவண்டுவிழுந் தினவா யபானங் கடுப்பெடுக்கும்
பாருங் காய நாள்வரையிற் பாழாய் முடக்கிப் பதிகிடத்தும்
வாரஞ் சென்றான் மரணமதா மயக்குஞ் சலத்திற் பிரமியமே

+ சாதியைந்து - சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கபத்திரி, மாங்கொட்டை, விடத்தலிலை * காகோளிவர்க்கம் - காகோளி, சீரகாகோளி, சீவகம், இடவகம், மேதை, மஹாமேதை, இலுப்பைப்பூ, கோரைக்கிழங்கு, திருநாமப்பாலை, வேறுங்கூறுவர், முதலிற் கூறிய ஆறு சரக்குகளும் இன்னவையென்று விளங்கவில்லை. சீவகம் என்பது இலந்தைத்தம்பலமென்றும் இடவகம் - மாம்பிசின் அல்லது பனம்பிசினென்றும் சிலர் கூறுவர். பஞ்சு ‡ பஞ்சவாசம் - சிறுநாகம் பூ, வால் மிளகு, செண்பகப்பூ, பூலாங்கிழங்கு வங்காளப்பசை.

+ அட்டவர்க்கம் - செண்பகப்பூ, அதிமதுரம், செங்கழுநீர்க்கிங்கு, கறுவா, இலவங்கபத்திரி, குறாசானி, அகிறபூ, பூலாங்கிழங்கு. சாதிவகையைந்து - சாதிக்காய், வசுவாசி, பிச்சிப்பூ, சாதி பத்திரி, விடத்தலிலை.

## சிகிச்சை

### குளிரிநெய்

மேவு மிதற்குக் குளிரிநில வேம்பு தொய்யி லிருநெருஞ்சி
பூவி விதமொன் றுறுகமலம் பொன்னாங்காணி ‡ சாகினி* மால்
தேவி கீழ்க்காய் நெல்லிநெய்தல் சிறியபூளை பிறாமுட்டி
தாவு நரியின் பயறிவைகன் சமூலஞ் சாறொன் றுரிதேடே
தேடுங் கமலந் தண்டு நிலப் பனைநீர் வள்ளி சிலையுறுநீர்
நேடு ‡ மிரண்டு குரங்கின்கை நீர்ப்பூ லாவிவ் விலைச்சாறு
நாடு மிவையொன் றுரிதயிர்நீர் நறுநெய் யிளநீர் பாலிவைகள்
கூடு மொரோன் றிருநாழி கூடப் புகட்டிக் கஷாயமிடே

இடுமிங் கிதற்கு நன்னாரி யிருமுட் யுடிநீர்ப் பூலாவும்
* புடவிக் குமிழ்நற் ^ றளவமுசு முசுக்கை பொருவி லிருவேலி
வடுவற் றிடுநா யுருவிமுத்த மணக்கு மிலாமிச் சிவைசிவையோர்
பிடிபச் சிலைகச் சோலநற்சீர் பேணுங் கணித வேதியுமே

வேதித் திடுசந் தனங்கோட்டம் விரைசே ரேல மிலவங்கம்
சாதிக் காய்முப் பலைமாஞ்சில் தருவார் மலையி னிருவேலி
சீதக் கராம்பு வசுவாசி செண்ப மட்டி கிளியூறல்
போதக் கழஞ்சொன் றரைத்துமுனம் புகன்ற கஷாயந் தனிற்கரையே

கரைத்தங் கெரித்து நாலாநாட் காய்ச்சி வடித்த நெய்யதனில்
திருத்தங் கரண்டி யளவெடுத்துச் சீனி கலந்து தின்பீரேல்
வருத்து மெரிப்புப் பிரமியமு மறிப்புக் கடுப்பு மாறாதேல்
உரைத்த வங்க சிந்தூர முடனிட் டொருமண் டலமருந்தேர

### இரத்தப்பிரமியத்தின் குணம்

நீரி லிரத்தங் கடுத்துவிழு நீருஞ் சிவப்பா முடவிளைக்கும்
பாரு முடம்பி லனல்காலும் பகருங் கைகா லோய்ந்துவரும்
சாரு மயக்கங் கிறுகிறுப்புந் தாகங் கொள்ளும் வேர்லையுண்டாம்
பரு முள்ளங் கால்கையு மெரியு மிரத்தப் பிரமியமே

‡ சாகினி - சிறுகீரை *மமால்தேவி - சீதேவியார் செங்கழுநீர்
‡ இரண்டு குரங்கின் கை - முசுமுசுக்கை

## சிகிச்சை

### நீற்றுப்பூசினிநெய்

பூசினிப் பழங்க ரும்பு பொற்காணி தன்னீர் மீட்டான்
பேசுமோ ரிதழின் சஞ்சம் பழிந்திடு சாற்றி னோடு
மாசிலா விளநீ ராநெய் வகைக்கிரு நாழி கூட்டி
எசற முந்நாட் காய்ச்சி யின்புற வடித்துக்கொள்ளே

வடித்திடு நெய்யிற் பின்னும் வருபசுப் பாலீர் நாழி
விடுத்துமா தளம்ப ழத்தின் மேவிய சாறு நாழி
எடுத்தபே யன்ப ழத்தி னிற்சாறு நாழி கூட்டி
அடுத்திடு மதுரங் கோட்ட மரவிந்த வளைய மேலம்

இருவேலி சராம்பு நாகம் பூவிலா மிச்சுக் கூகை
தருநீறு கண்டில் வெண்ணெய் சந்தனஞ் சண்பக கப்பூ
வருவாரி நுரைமஞ் சிட்டி மாசிக்கா யிலவங் கத்தோல்
திருவார்பச் சிலையி னோடு செவ்வள்ளி கமலப் பூவே

பூவிவை வகைக்கு மூன்று கழஞ்சுறப் பொடித்துத் தூவி
மேவற வடித்துச் சீனி யிருபல மேலே தூவி
நாவுற நக்கி முனினோர் நவின்றபத் தியமாய்க் கொள்ளில்
தாவுறு பிரமி யங்க ளிரத்தமுந் தணிந்து போமே.

### பூசினிச்சுரசம்

நீற்றுப்பூ சினிப் பழத்தை நேரிதாய்க் கீறி யுள்ளே
தோற்றிய குடலை நீக்கிச் சொல்லிய வாநெய் நாழி
ஏற்றநற் றேனுநாழி யினித்திடு சீனி நாழி
சாற்றிய பேயன் வாழை தரும்பழ மிருப தோடே
சேர்த்ததில் லவக்க நீராந் தினமுரி கலக்கி யுண்ணச்
சூர்த்திடு பிரமி யங்கள் சுற்றுறு தலைச்சு ழற்சி
ஆர்த்திடு பித்தங் கைகா லனல்கடுப் பெரிப்புத் தாகம்
பார்த்தறி போகு மென்று பகர்ந்தனர் முனிவ ரம்மா

## பஞ்சகௌவியநெய்

பஞ்சகௌ வியம்வ கைக்குப் படியொன்று பொன்னாங் காணி
எஞ்சலில் சாத்தா வாரி தாழைவீ ழின்கரும்பு
துஞ்சிய சாற்றி னோடு சொல்லிய விளநீ ரொன்று
வஞ்சியே படிகால் கூட்டி மதுரஞ்சந் தனமே! கோட்டம்
செங்கழு நீர்க்கி ழங்கு திரிபலை கணிதபேதி
கொங்குறு மேல மல்லாற் கூறில வங்கப் பட்டை
இங்கிவை கழஞ்சி ரண்டா யிடித்தரைத் தடுப்பில் வெந்து
தங்கிய நாலா நாளிற் சால்புற வடித்துக் கொள்ளே.
வடித்தபின் சீனி கூட்டி வருசாம்பல் வாழை தன்னில்
எடுத்திடு பழத்தை நெய்யி லிராவிட்டு மறுநாட் காலை
அடுத்துண விந்த வண்ண மாகுமண் டலமே! கொள்ளக்
கடுத்திடு மெரிப்பி ரத்தங் கழறிய பிரமி யம்போம்

## குடிமருந்து

மாம்பட்டை பலமொன் றோடு மதித்திடு குமரிச் சோறும்
ஆம்படி கடுக்கா யாறு மாவின்பால் விட்ட ரைத்து
நாம்புகன் றிட்ட வண்ண நலமுறப் பழிந்தான் பாலிற்
காம்புறழ் தோளி னாய்கொள் கடுப்புட னிரத்தம் போமே
சந்தனஞ் செண்ப கப்பூச் சாரவே கழல்சொவ் வொன்று
வந்திட காவிக் கல்லும் வகுத்தபொன் மெழுகு தானும்
தந்திடு கழஞ்சி ரண்டாய்த் தகுமுலைப் பாலா லாட்டி
அந்தநன் மருந்து சுண்டைக் காயள வுருட்டிக் கொள்ளே

உருட்டியே நிழலுலர்த்தி யொண்டொடி மங்கை பாலிற்
கரைத்தருந் தடவி ரத்தப் பிரமியங் கழன்று போகும்
திருத்திய தேற்றா வித்தை யெண்ணெயிற் றின்ன நன்றாம்
கருத்துற நெல்லி முள்ளி சங்கின்வே ரிளநீ ரிற்கொள்

கொண்டிடு முரங்கை யிற்புக் குமரியின் சோறு வெண்ணெய்
மிண்டிடா தரைத்துக் கொள்ள வெகுசுகஞ் சிறுநெருஞ்சி
கண்டிடும் வேர்வெள் ளாட்டின் கருதுபா லிற்கொ ளின்னும்
உண்டிடப் பிரமி யத்துக் குறட்டியுஞ் செய்து கொள்ளே

செய்தகு முறட்டி வெள்ளைக் காக்கணம் வேர்தா ளாகச்
செய்துபச் சரிசி மாவிற் சேர்த்ததை யடையாச் சுட்டுச்

மேகரோகநிதானம்

செய்தநல் லெண்ணெய் தன்னிற் சூட்டுட னிட்டுத் தின்ன
மைதரு குழலாய் தீரு மென்றனர் மறைவல் லோரே

## சீப்பிரமியம்

சிறுநீர் மிகவுங் கடுத்துநொந்து சீபோல் வெள்ளை யுடன்வீழும்
பெறுமே யுடல மிகமெலியும் பேத மிகந்து குளிருண்டாம்
உறுமே மயக்கஞ் சோகமுமா முதர நோகு முடல்கைகால்
தொறுமே குத்து மசதியுண்டாந்தோன்றும் வெயர்வைதாகமுமே

நீருங் கடுக்குஞ் சீவீழு நிறமு மெலியுங் கால்கடுக்கும்
சேரு நாபி புண்ணாகுஞ் சிறுநீர் பலகாற் கடுத்திறங்கும்
சாரு மெரிவு நீர்த்தாகஞ் சந்து நோகும் பதிகிடத்தும்
கூரு முணர்வின் முன்னோர்கள் குறித்தார் சீயின் பிரமியமே.

## சிகிச்சை

### குடிமருந்து

சேருமத்திப் பிஞ்சதனைத் தேங்காய்ப் பால்விட் டிடித்ததன் பின்
சாருஞ் சாறு பிழிந்தெடுத்துத் தகுகுந் துருக்கப் பொடி தூவி
நீரு மாறு நாட்குடித்து நேருமுப்புப் புளிமறக்கில்
தீவுஞ் சீயுங் கடுப்பெரிவுந் தேற்றா விரையுஞ் சந்தனமும்

ஆவின் பாலி லரைத்தருந்த வதுவு நன்றாங் கலங்கொம்பு
தாவும் பவளஞ் சலாசத்துச் சாரும் பற்பம் வெண்ணெயினில்
தேவை நினைந்து குழைத்தருந்தத் தீரு மெந்தப் பிரமியமும்
நோவுங் கடுப்பு மெரிவுளைவு நுவலும் புண்ணு மாறிடுமே.

### சந்தனாதிச் சூரணம்

மணமுறு சந்தன மதிமது ரத்தொடு
வாய்ப்புறு நற்சீரம்
வந்திடு மாமல கக்கனி யாலையும்
வாங்கீர் பலமாயே
குணமுறு கூகையி னீறது தானிறை
குறைவற முப்பலமாய்க்

கொண்டிடு செண்பக நன்மலர் கல்நார்
    கூறிய கச்சோலம்
வணமுறு மரிதகி முக்கடு கேலமும்
    வளமுறு தான்றிக்காய்
மற்றினும் வெட்டி குலக்காய் பத்திரி
    மஞ்விய கொத்தமதும்
பணமுறு மிலவங் கத்தொடு கோட்டமும்
    பகர்தரு மாயாக்காய்
பண்புள வெட்டி யிலாமிச்சை சிங்கிவை
    பயனுறு மாறுகொளே

எடுத்திடு கழஞ்சி ரண்டாயிடித் தரித்திட்ட பின்னர்
வடித்திடு சூரணத்தை வரும்வெரு கடிய தாக
அடுத்திடு சீனி கூட்டி யருந்திடப் பிரமியங்கள்
தொடுத்திடு பித்தமாகி தொலையுமென் றுரைத்தார் நல்லோர்

## அமிர்தசஞ்சீவிச் சூரணம்

கோட்டமுன் செங்கழுநீர்க் கிழங்கு தானுங்
    கொள்வதுநாற் கழஞ்சுகுலக் காய்க் ராம்பு
நாட்டுவச வாசிகுறா சானி யேல
    நவிலுமதி விடயமிவை முக்க ழஞ்சு
காட்டுமில வங்கமுறு பட்டை யொன்று
    கருதுமுத்த நன்னாரி சந்த னத்தூள்
வாட்டமறு மாவரை தனிலைந் தோடு
    வளரிலுப் பூவுமிவை யறுக ழஞ்சே
ஏயுமரைப் பூவல்லி கழஞ்சு பத்தா
    மின்னுபுனுகு கஸ்தூரி கழஞ்சொவ் வொன்று
தூயவபி னரைக்கழஞ்ச சீந்தில் தன்னிற்
    சொல்லியமா விரண்டுபலஞ் சோர்வு றாமே
நேயமுடன் கலந்துரைத்து வெல்லந் தானு
    நிகழ்த்துமொரு பலங்கூட்டி யனுபா னத்தில்
ஆயமுறை யுட்கொள்ளப் பிரமி யங்க
    ளகலாத நீரிழவு நீர டைப்பே

மேகரோகநிதானம்

அடைகின்ற கிரிச்சி ரங்க ளதிசலக் கழிச்சல்மேகம்
புடைக்கின்ற பிரமியங்கள் பொல்லாத வுள்ளுருக்கி
தடைப்படுங் கல்லடைப்புச் சார்ந்திடுஞ் சீயி ரத்தம்
விடுத்திடு மென்று நூலோர் விளம்பினா ரறிந்து கொள்ளே

## பறங்கிக்கிழங்குப் பாகு

அத்திநீர்ப் பூலா வெள்வே லறைந்திடு கயட்டை யெல்லாம்
ஒத்திடு பட்டை செங்கத் தாரிவேர் துடரி யின் வேர்
நத்திடு தென்னம் பாளை நலமுடன் பல மைநதாக
வைத்திடு நீரெட் டொன்றாய் வளமுறப் பிழிந்து கொள்ளே

கொண்டிடு பறங்கிப் பட்டை குறைவிலா தொருப லந்தான்
விண்டிடு முலுவா வுள்ளி விரைகமழ் வசம்பு காயம்
மண்டிடு சீர மோமம் வசுவாசி குலக்காய் கைப்புக்
கண்டமுக் கடுக மெல்லாங் கழஞ்சொன்று பொடித்துத் தூவே

தூவியே வற்றக் காய்ச்சிக் சொல்லிய நெய்யி ரண்டும்
மேவுமென் ளெண்ணெ யொன்று விரும்புதே னதுவு மொன்று
பாவுறு பங்கு வீதம் பண்புடன் கூட்டிப் பாகாய்த்
தேவிபொற் பாதம் போற்றித் தின்றிடப் பிரமியம் போம்

## முள்ளிவலம்பட்டை நெய்

முள்ளிலவோ டொதிநாவல் பட்டை வெட்டி
முட்பூலா நீர்ப்பூலா முல்லை சீந்தில்
தெள்ளியநன் னாரிசிறு மட்டி கோரை
சீதேவி பொற்காணி சிவையீ தெல்லாம்
கொள்ளவகை பலமைந்து தண்ணீர் தூணி
குறையவெரித் தொட்டொன்றாய்ப் பிழிந்துகொண்டே
எள்ளலறு மரைவளையச் சாறு தானு
மிளநீரு மாநெய்யும் படியொவ் வொன்றே

ஒன்றவெரித் தேசரக்குக் கோட்ட நெல்லி
 யுயர்நாகம் பூமதுரந் தேவ தாரம்
ஈன்றிபெறு கச்சோல மாஞ்சில் குப்பை
 நாற்சந்த மகிலிருசீர் நவையு றாமே
வென்றிபெறக் கழஞ்சிரண்டு பொடித்துத் தூவி
 மிக்கதயிர்த் தண்ணீர்நாற் படியுங் கூட்டி
ஒன்றுபட மெழுகுபதம் வடித்து நக்க
 வுரைத தபிர மியஞ்சியும் வெள்ளை போமே

## கிரிச்சிரம்

### அதன்வகையும் உண்டாகுமேதுவும்

உற்றே தோன்றுங் கிரிச்சிரந்தா னுரைத்தார் நாலு வகையாகச்
சொற்றவாத பித்தகபந் தொந்த மென்ப ரவைநாலும்
மற்றுங் கல்வி னடைப்பதுவும் வகுத்த பிறநீர் வியாதிகளும்
திற்றி யுறுபல் பேதத்தாற் சிறுநீர் விந்தை யடக்குதலால்
அடக்கும் வாயு வுட்டணமு மடைந்து மிகுந்து நிற்றலினால்
குடிக்குத் தண்ணீ ரதிலுள்ள குற்றமதனா லடிச்கூடலால்
வடத்தை யடர்க்கு முலைமானார் மயக்க மிகுந்த செயதுவால்
எடுக்கும் பலநோய் குறிகுணமுஞ் சிகிச்சை முறையுமியப் பிடுவோம்.

### கிரிச்சிரத்தின் பொதுக்குணம்

சிறுநீ ரெரிந்து துளிதுளியாய்ச் சேரு நிறமு மஞ்சள தாய்
உறுமே சிவப்பாய் வெள்ளையுமா யுவாதி மிகுந்து கடுத்துநொந்து
பெறுமே யன்றிப் புண்ணாகும் பின்னு மபானங் கடுத்துளையும்
செறுமே பொருமுங் கீழ்வயிறு தேக மெலியுங் கிரிச்சிரமே

### * கிரிச்சிரம் 4-ல்

### 1-வாதக்கிரிச்சிரம்

சொற்றிடு வாதந் தன்னிற் றேன்றிடு கிரிச்சி ரந்தான்
உற்றிடு நீரே சிக்கியுறுந் துளி துளிய தாக

மேகரோகநிதானம்

இற்றிடு மடுத்த டுத்தே யெண்ணரு முவாதி யுண்டாம்
மற்றுநீர் குழம்பு போலாம் வலித்திடு மிடுப்பு நாரி

## 2-பித்தகிச்சிரம்

பித்தத்திற் கிரிச்சி ரந்தான் பேசரு மழற்சி யாகி
உற்றநீர் மஞ்சள் போலு முறுசெம்மை நிறமுங் கொள்ளும்
மற்றுட வசதி யாகும் வாய்மிக வுலர்ந்து காட்டும்
சொற்றிடு மபானந் தானுந் துயர் மிகக் கடுக்குமன்றே

## 3- சேற்பக்கிரிச்சிரம்

ஐயினிற் கிரிச்சி ரநதா னடைமுங் குறித லிக்கும்
பெய்யுநீர் தடித்தி றங்கும் பேசரு முவாதி யாகும்
மெய்யெலாங் கடுக்குங் குத்தும் விழியுமே பசந்து காட்டும்
தையலே குறியில் வீக்குஞ் சார்ந்திடு மென்று காணே

## 4- தொந்திரியம்

முற்கூறிய மூன்று கிரிச்சிரங்களின் குணங்களும் கலந்து காணும்.

### சிகிச்சை

### குடிநீர்

வெள்ளுள்ளி யரைப்பலஞ்செம் முருங்கைக் காம்பு
    விரும்புமறைக் கீரையுடன் மூங்கிற் றோலும்
கொள்ளுமொன்றோர் பிடியரிந்து மிளகா மூக்குக்
    குணமாக வறுத்தறல்நா னாழி வார்த்துக்
தெள்ளிதிற்காய்ந் தூரியானால் மூன்று நேரந்
    திறமாகப் பகுத்தருந்திற் சலஞ்சிக் காமல்
அள்ளியெறி நீரெனவே யுடைத்துங் கோடு
    மறிசலங் ளானவையு மகலு மன்றே

சொல்லுவெண் கொடுப்பை வேரைச்சு றுக்குடன் பலமிரண்டாய்
வெல்லுமே சிறிய கீரை வேரையும் பாதி யாக்கி

* கிரிச்சிரம் - நீர்ச்சுருக்கு

பரராசசேகரம்

வல்லுறு பூளை வேரை மட்டரைப் பலமாய்க் கொண்டு
வல்லமா விலங்கை தன்னில் வடக்குறு வேருங் கொள்ளே

கொண்டபின் தேற்றா வின்னற் கொட்டையோ ரைந்துங் கூட்டிக்
கண்டதைக் கஷாய மாக்கிக் கசக்குமுத் தெண்ணெய் விட்டு
வண்டமர் குழலாய் கொண்டால் வந்தநீர்ச் சிறுப்புங் கல்லும்
துண்டுது ண்டாக வீழ்ந்து சுறுக்கென நீரும் போமே

## பற்று

வெள்ளரிவித்து நெருஞ்சிக்காய் வீசும் புழுகு சந்தனமும்
எள்ளுப் பயிரி பழம்பாசி யேலஞ் சாத்திர வேதியுடன்
உள்ள படியே யெலிப்புழுக்கை யொக்க வரைத்து முலைப்பாலால்
அள்ளி யெடுத்தே யடிவயிற்றி லப்பத் தெறிக்கு மருநீரே

வெள்ளரி வித்து நெருஞ்சிக்காய் விளங்கு மத்தம் விதையுடனே
தெள்ளுமேல மெலிப்புழுக்கை யொக்க வரைத்து முலைப்பாலால்
உள்ளவலி தென்னையினி லுற்ற குரும்பைக் கயரெல்லாம்
அள்ளு முளைப்பால் விட்டனரத்தே யப்பந் தெறிக்கு மருநீரே
குப்மைமேனியிலையரைத்துக் கொண்டு விளக்கெண் ணெயிற் குழைத்தே
அப்பத் தெறிக்குஞ் சலமன்றியகத்திலையுமெள்ளுடனே
ஒப்ப வரைதங் கடிவயிற்றி லுறவே பூச நன்றாகும்
செப்பும் பயிரி பழம்பாசி சேருமேல் மரைத் தப்பே

## துன்மாங்கிஷ வளர்ச்சி கல்லடைப்புக்கு

சீனக் காரம் பொரிகாரஞ் சேரிந் துப்புச் சவர்க்காரம்
ஆன விவைகள் பொரித்தரைத்தே யவைக்குச் சமனாய் நாயுருவி
மான விதையு மாண்பனையின் பாளைச் சாம்பலுட னிதரை
ஈன மறுநல் வாழையினிற் றாறுமெரித்த சாம்பல் கொள்ளே

கொள்ளக் கலந்துவெரு கடியாய்க் குழைத்துத் தேனிலருந்தியிடில்
கள்ள மறவே கல்லடைப்புக்கு கடிய துன்மாங் கிஷவளர்ச்சி

மேகரோகநிதானம்

எள்ள லூறுநீர டைப்பதுவு மேகு நீரும் பெருகிவரும்
கள்ளைப் பாகைக் கற்கண்டை யொத்த கிளவிக் காரிகையே

## நீரடைப்புக்கு

சில்லியுடன் சிறுகீரை பொன்னாங் காணி
செப்புநெருஞ் கியுடரைத்துச் சீனி கூட்டி
கல்லபகப் பாலிலுண்ண நீரு டைக்குந்
நாவல்மரப் பட்டைசிறு பூளை வேரும்
மெல்லியவோ ரிதழ்க்கமலங் கமழ்நன்னாரி
வேருமொரு நிறையரைத்து முள்ளிக்காய்போல்
சொல்லுமள வுருட்டி வெள்ளைகப் பசுவின் மோரிற்
துய்த்திடுகி னீரடைப்புத் தொலையுந் தானே

தொலையவின்னம் பாகன்மரு திலையின் சாறுந்
துய்யவே ரண்டுநெய்யுஞ் சமனாய்க் கூட்டிச்
சிலைநுதலாய் கொடுத்திடுகி னீரு டைக்குஞ்
சிறுபாக லிலைச்சாறுங குழைசுண் ணாம்பும்
வலியதொப்பூழ் தனிற்பூசச் சலமு டைக்கும்
வகுத்தகுப்பை மேனியே ரண்ட நெய்யும்
பலமருவு மெள்ளுமரைத் தடிவ யிற்றிற்
பற்றிடவு முடைக்குமெனப் பகர்ந் திட்டாரேரி
விளம்புதிரி கடுகுசிறு தேக்கி னோடே
வியன்கடுரோ கணிபிரமி யிலையுங் கூட்டி
வளம்பெறவே குடிநீரா யெரித்துக் கொள்வின்
மறித்துநின்ற சலமுடைக்கு முருங்கைக் காம்பு
தளம்பெறுவேப் பலகுடனே மூங்கிற் சீவல்
சாற்றுகடுக் காய்மிளகும் வறுத்துத்தண்ணீர்
விளம்புமோரு படியுழக்கா யெரித்தங் கீதல்
மிகப்பொரி காரமிட்டுண் விரைந்து போமே

## சலாசத்துப்பற்பம்

இந்துப்புச் சீனக் கார மிலங்கு பொட் டிலைவெண் காரம்
சந்தித்து நாலு நின்ற நிறைசலா சத்துங் கூட்டி
வந்தித்துப் புடமே போட்டு வராகன்சேர் தேனிற் கொள்ளச்
சந்தித்த கிரிச்சி னங்கள் சார்மூலங் குன்மம் போமே
போஞ்சதை படைப்பிணுக்குப் புகலுநா யுருவிச் சாம்பல்
ஆம்பனைப் பாளைச் சாம்ப லடுத்திடு மிதரை வாழை
தாம்பயில் தாறுச் சாம்பல் தம்முடன் பற்பங் கூட்டி
நரம்புகண் முறையிற் கொள்ள நலமுண்டா நீரும் போமே

## பொரிகாரக்குளிகை

பொரிகார மைங்கழஞ்சு சீனக் காரம்
　　புகன் றிடுவெண் காரநவச் சார மிந்துப்
பாரதான சவர்க்கார மஞ்ச ளின்மா
　　வதனுடனே வெள்ளரியின் பருப்பிதெல்லாம்
சரியாக வொருகழஞ்சு கல்வத் திட்டுச்
　　சாற்றியசெவ் விளநீரிற் றண்ணீர் வார்த்துப்
பரிவாக வரைத்துருட்டு குன்றி போலப்
　　பகரிளநீர் முருங்கையிலை யவித்த நீரே

நீரில்லா லறைக்கீரை யவித்த நீரில்
　　நிகழ்ந்துவெந்நீர் தனிலாதல் கரைந்துட் கொள்ளில்
சாருகின்ற சலமறிப்புக் கிரிச்சி னங்கள்
　　சாற்றியதுன் மாங்கிஷத்தின் வளர்ச்சி யோடே
சேருமரி சலமதுவு மிலிங்க சூலை
　　செறித்தகல்லி னடைப்புநீர்க் கடுப்புத் தானும்
தீருமென வாயுண்மறை யுணர்ந்த மேலோர்
　　செப்பினர்நற் சலாசத்துப் பற்பஞ் சேரே

மேகரோகநிதானம்

## நீர்க்கடுப்புக்கு

மன்னுமணித் தக்காளிச் சாறு தன்னில்
வருமிளகு பொடித்தூவி யுள்ளே கொள்ள
மின்னிடையாய் பத்துநா ளிந்த வண்ணம்
விரைந்தருந்திற் கடுப்புடன்வெண் மாசு தீரும்
பன்னுபுளி யம்விதைபிற் கயர்நல் லெண்ணெய்
பகருமுழக் குடன்குழைத்துப் பருகு வீரேல்
நன்னயமில் கடுப்புடனே சீயு மாறு
நாலுநா ளிப்படியுண் ணெரிப்பும் போமே

நெல்லி முள்ளி யவித்திறுத்த நீரி லேலந்
நேர்ந்தரைத்துக் குடித்திடவு நேர்மை யாகும்
சொல்லுநிலப் பனைக்கிங்கு பேரீஞ் சுற்ற
தூயபழம் பசுப்பாலிற் குடிக்க வல்லால்
வெல்லுநீர் வள்ளியின்றன் சாற்றிற் கொள்க
விளம்பியபூ னைக்காலி விரையைப் பாலில்
விட்டேகு மென முனிவர் விளம்பி னாரே

## பூசனிநெய்

அரிதான பூசனிக்காய்ச் சாற்றி னோடே
யறல்மீட்டான் சாறுவகை படிநான் காகும்
கரிசாலை பொற்காணி பொற்க ரிப்பான்
கருதுசில்லி யிவைசாறு யடியி ரண்டாம்
பரிவான பசும்பால்நெய் படியொவ் வொன்று
பகரேல மதிமதுரங் குலக்கா யோமம்
மருமேவு மிலங்கங் கோட்டாங் குப்பை
வயங்குமிகு சீரகமுந் திரிபே ரீஞ்சே

ஏயவிழா விந்துப்புச் சாதி பத்ரி
யினிமைபெறு வொருகழஞ்சு பொடித்துக் கூட்டிச்
சொலும்பதத்தி லேவடித்துச் சீனி யோடு

நேயமுறு நற்கதலிப் பழமும் பத்து
நெய்யதிலே கடைந்துவைத்துக் கரண்டி யுண்ண
வாய்மையுடன் கிரிச்சிரங்கு ணீர்க்க டுப்பு
மாறா நீர்ப்பாளை மாறு மன்றே

**குளப்பாலைநெய்**

குளப்பாலை யுடன்கொடுப்பை பொன்னாங் காணி
கோவைசிறு கீரையுடோ லிவைக ளெல்லாம்
வளத்தூர்கள் பலமொன்று வீதங் கொண்டு
வண்மைபெற வெட்டொன்றாய்க் கஷாயம் வாங்கிக்
கிளைப்பான பேய்ப்புடோல் கொடுப்பை சில்லி
கிளச்சாறு பசுவினெய் படியொவ் வொன்று
களிப்பான திரிகடுகு கடுக்காய் தான்றி
கராம்புகுலக் காய்மதுர மேல மோமம்

ஒமநற்சீ ரகம்வகைக்குக் கழஞ்சு வீத
முடனரைத்துக் கரைத்துவடித் தெடுத்துக் கொண்டு
நேமமுடன் காசிடைநெய் யுள்ளே கொள்ள
நீர்க்கடுப்பு மெரிப்பொழுகு சலமுந் தீரும்
நாமநெய்யை யுண்ணமுன மீர வுள்ளி
நவில்குமரி யுட்சோறு முடக்கொற் றானும்
ஆமணக்கி ணெய்யிலிட்டே யீர வுள்ளி
யதுசிவக்கில் வடிவத்துமுன மயில்க மாதோ

**எட்பாகு**

சாதிக்காய் வசுவாசி கராம்போ ரொன்று
தான்பலங்கால் பொடியாக்கிச் சாலி மாவும்
தீதிலுரி பருப்பான திலமோர் கொத்துந்
திறமுடனே யுரலிலிட்டுப் பாக தாக்கிக்
கோதறுநற் சீனியுரி கூட்டிச் சேர்த்துக்
குணமான பத்தியத்தோ டேழ்நாட் கொண்டால்

மேகரோகநிதானம்

பேதமின்றிப் பிரமேக வொடுவு மாறிப்
பெருகியசீ யுடனேநீர்க் கடுப்பும் போமே

**எட்பாகு - 2**

எலமுயர் சாதிக்காய் வசுவாசி கராம்போ
டிலவங்கங் கறுவாவொன் றிருகழஞ்ச பொடி செய்
வாலிவெட்பருப்பிரண்டு நாழியையுங் கூட்டி
மருவிவிரு சாமமட்டும் வளம் பெறவே யிடித்துச்
சீலமுறு கருங்கு றுவை நெல்லரிசி மாவுஞ்
சீனியுமோ ரொன்று முக்குச் சேர்த்திதனைத் திரட்டிக்
கோலமுற வேழுதினம் வகுத்தருந்தி வெந்நீர்
கொண்டுவரிற் பிரமியங்க ணீர்க்கடுப்பும் போமே

**கல்லடைப்புக்கு**

கருநொச்சி யுடன் முருங்கை நெருஞ்சி பின்னுந்
கருதுகொடு வேலியிவை வேர்க ளெல்லாம்
வருமுறையே யவித்திறுத்த நீரி லேலம்
வழங்கியதிப் பிலி பொடித்துக் கூட்டி யுண்ணப்
பருமனுறு நற்கடுக்கா யீர வுள்ளி
பகர்ந்தகொடு வேலியுடன் காணம் முன்போல்
எரியிறுத்த நீரினிலே பெரிய காய
மிட்டுண்ணக் கற்றெறித்து நீரி றங்கும்

குடிநீர்

முள்ளிளவு, நாவல். முட்பூலா, வெட்பூலா, முத்தக்காசு, நன்னாரி, முல்லை, சீந்தில், செந்தாமரை, சிற்றமட்டி, சீதேவியார்செங்கழுநீர், சிறுகீரை, விராலி, வெட்டிவேர், இலாமிச்சு, பொன்னாங்காணி, வகை -பலம் - 1, நாலு படி இளநீரிலிட்டு எட்டொன்றாய் வற்றவைத்துக் குடிக்கவும்.

நெருஞ்சிவேர், சிறுபூளை வேர், சிறுகீரை வேர், நன்னாரி வேர், பொன்னாங்காணி வேர், சீரகம் வகை - பலம் -1 எட்டொன்றாய் அவித்துக் குடிக்கத் தீரும்.

உ
சிவமயம்

# பரராசசேகரம்

## பன்னிரண்டாவது
## பிளவைரோகநிதானம்

ஆயுள்வே தத்தின் முன்னா எறைத்திடும் பிளவை தன்னில்
நோய்மிகு பெயர்கு ணங்க ளுவன்றிடு நன்மை தீமை
வாய்மையா மருந்து கார மற்றுள பரிகா ரங்கள்
தூய்மையாக் கண்டு சொல்லைக் கணபதி துணைத்தாள் காப்போ 1

செய்துகை கண்ட நல்ல மருந்தினிற் றிண்மை கண்டும்
உய்தமா மருந்தின் மீளு மெனுமனுத் துண்மை கண்டும்
மெய்யுறத் தொடர்ந்து நிற்கும் வியாதியி னிலைமை கண்டும்
செய்திடப் பரிகா ரங்கள் செப்பினார் முனிவர் ரம்மா 2

முனிவர்கள் கூறி வைத்த முறைதெரி யாமல் வீணே
மனிதர்கள் பொருள்கைக்கொள்ளும் வாஞ்சையான் மருந்துசெய்வோர்
இனிவரு பிறப்பில் நாயாய்ப் பேய்களா பிழிந்து பின்னாட்
துளிபடு மளற்றில் வீழ்ந்து கொடுந்துய ருழப்ப ரன்றே 3

ஆதலா லுடம்பின் வண்மை யடுத்தநோய் நிலைமை யாதி
சோதனை புரிந்து நன்றாய்ச் சுகந்தரு மருந்து மாய்ந்து
தீதிலா முறையான் முன்னோன் சேவடி வணங்கி வாழ்த்திக்
காதலான் மருந்து செய்யக் கடனதாம் பண்டி தர்க்கே 4

### இரசமூர்க்கன்பிளவையின் குணம்

உற்றிடு முதுகின் வன்மத் துறமையைத் தானந் தன்னில்
பற்றிடும் பிளவை தோன்றிப் பரந்திடுங் குவிந்து வீங்கும்
சுற்றுப் பிளந்து பொங்கித் தலைவலித் துயரந் தாகம்
செற்றிடு மிராச மூர்க்கன் பிளவைசெய் தீமை யாமே 5

### இராசவன்மப்பிளவை

பொருந்திடை மையத் தானச் சுழியினிற் பிளவை தோன்றில்
வருத்திட வெதும்பிக் குத்தி மரைமலர் விரித்த போலும்
பொருந்திடும் பலகண் ணாகாப் பேதமாய் பிளந்து வீங்கி
உருத்திடு மிராச வன்மப் பிளவையீ துபாதி செய்யும் 6

### இராசகண்டப்பிளவை

பெருந்திடு முதுகிற் றண்டின் மையத்திற் பிளவை தோன்றி
உருத்திடுந் தலைநோக் காய்ச்ச லுபாதியாய் வீங்கிக் கட்டிப்
பொருந்தினிற் பிளந்தித்துப் பூச்சியு மிகுதி யுண்டாய்
வருந்திடு மிராசகண்டப் பிளவைசெய் வலிமை யாமே

### பாரப்பிளவை

முதுகிடை மையத் தான முள்ளந்தண்ட டதிலே பற்றிப்
பதுமமாங் காயே போலப் பரந்துளே பெருத்து வீங்கும்
அதிகவுள் ளுழலை தாகமனல் செயும் பலகண ணாகும்
விதிவழி யிடரே செய்யு மிகுபாரப் பிளவை யன்றே 8

### பக்கப்பிளவை

பக்கமோர் முதுகு தன்னிற் பருத்தகைக் குழிவன் மத்திற்
தக்கதோர் பிளவை தோன்றிற் றான்றிரண் டெழுந்து வீங்கி
மிக்கதோர் காய்ச்சல் கூதல் விதனமுற் றிருக்கு மென்னில்
தொக்கதோர் பக்கமீதிற் றுரந்தெழு பிளவை யாமே 9

முதுகின் புறத்தி னறைபோல முள்ளந் தண்டு தனைத்தப்பி
விதன மாகித் திரண்டெழுந்து விரிந்து பலகண் ணறைப்பட்டே
அதன்மேற் குளிருஞ் சுரந்தனை மளவிற் கழிச்ச லுள்ளுழலை
இதனிற் காணு பக்கப் பிளவை மரண மிதற்கிலையே 10

## பிளவை உண்டாகுமிடங்கள்

மார்பினி லீரல் தன்னில் வயிற்றினிற் கன்னந் தன்னிற்
பேர்பெறு முச்சி மீதிற் பிடரியின் முதுகிற் றோளில்
சேர்புறு விரல்க டம்மிற் றிரண்டிடும் பிளவை யெல்லாம்
கூர்பெறு மதியாற் கண்டு குணமுறு மருந்து செய்யே 11

## பிளவையில் அசாத்தியக்குறி

வெப்புடன் குத்து மூச்சு விடாதவுள் ளுழலை சோபம்
தப்பிலா நாவ ரட்சி தலைக்குத்துச் சலக்க டுப்பு
முப்புர தகனம் போல முதிர்ந்திடுங் குணங்க டாமும்
இப்படி யிருந்து தென்றா லிடர்செயும் பிளவை யாமே 12

உழலை தவனம் பரிதாக முள்ளிற் சுரங்க ணாவரட்சி
குழறி வெருவல் குறைக்கண்ணாக் கொள்ளு மனந்தலனல்மிகுதல்
அழகு சொரியுங் கொடியிடையே யமரா வாதை யிவைகண்டால்
பழகு நூலி னுரைதேர்வோர் பகர்ந்தார் மீள்வதரிதென்றே 13
மத்திம மலச லங்கண் மற்றுள விழிநீ ணாசி
உத்தம செவிக ணாக்கு முறுதியிற் பரிசங் குன்றி
இத்தனை குணமுங் கண்டே யெழுந்துபுண் பரக்கு மாகில்
வித்தகர் தாம்வந் தாலு மீளுவ தரிது காணே 14

## பிளவையின் உபத்திரவம்§

விக்கல் சக்தி யெனும்வாயு மிகுந்து பொதுவாய்த் தோன்றுமது
பக்க மாறிக் கபாலகுணம் பகைத்து மிகவே யதிற் றேன்றும்
ஒக்கத் தோன்றுங் கழிச்சலதி லுதவு வாத குணமத்தில்
மிக்க வாத பித்தமதில் விரைந்து பொதுவாய்த் தோன்றிடுமே

## பத்தியம்

கண்டதோர் கறிகாய் பால்நெய் கருத்தினி லுற்ற தெல்லாம்
கொண்டிடிற் குற்ற மென்று கூறினார் முனிவர் முன்னாள்
விண்டிடு மாவ ரங்காய் விளங்கி முருங்கை யத்தி
பண்டுமுன் பழகு மோரும் பத்திய முரிய தாமே 16

§ உபத்திரவம் - ஒருநோயை ஆதாரமாகக் கொண்டு தோன்றும் வேறு நோய்கள்

பத்திய மச்ச மாகிற் பருவரா.ல் சுறவு நெய்த்தோல்
சுத்தமாங் கிஷத்தி னத்திற் சொல்லிடு முடும்பு காடை
முத்து வெண் கோழி முட்டை முருங்கைதூ துளைபொற் காணி
அத்தொடு சிறிய கீரை யவையும்பத் தியமா கும்மே 17

**சிகிச்சை**

**உழலைதவனத்துக்கு குடிமருந்து**

பெரிய பிளவை முள்ளெலும்பிற் பெருத்து வீங்கி நடுமுதுகில்
அருமை யதுவு மாறாதுள் ளடங்கா துழலை யனலெடுக்கில்
உரிய பொன்னா வரையல்லி யுவந்து புன்னைக் காயளவாய்
உரிய பழமோ ரதிற் குடிக்க வுழலை தவன மாறிடுமே 18

**காரமிட**

மார்பிற்கீ ழீர லாதி யிடத்தினிற் பிளவை தோன்றி
நேர்படத் தெண்டு கோல்போ னின்றிதிற் பெலத்து வீங்கிற்
கார்செறி குழலி னாளே கருவியாற் கீறிக்காரம்
பேர்பெறக் கட்டிற் பக்கப் பிளவையுங் கரைந்து போமே 19

காரந் துரிசு பாஷாணங் கதியா தளவிற் குறையாமற்
சேரப் பொடித்து வெண்ணெயுடன் றிருந்தவரைத்துச் சீலைதனில்
ஆரத் தடவி யடைசீலை யங்குட்டந் தள்ளிப் புண்ணிலிடப்
பாரப் பிளவை கரைந்துருகி வற்றிப் பவனம் பறிந்திடுமே 20

**காரத்திற்கு மாற்று**

பறித்திடும் புண்ணிற் காரம் பகைத்துநில் லாமன் மாற்றுத்
திருத்திடுந் தயிருஞ் சோறும் பிசைந்துவை மூன்று நாளும்
அறிந்து வைத்தமரக் கட்டி யவிழ்த்து வெப்பாற்றிப் பின்னைச்
சிறந்திடு மெண்ணெய் பண்ணத் தெளிந்துநன் மருந்து செப்பும்

**சுயரெண்ணெய்**

செப்பிய வெண்ணெய் வைக்கச் சிறந்தவா வரைசேர் நாழி
ஒப்புடன் றுடரி பூலா வோரென்று தன்னிற் பாதி

பிளவைரோகநிதானம்

இப்பெரும் வேரினோடே யிதிலிடுஞ் சரக்கி ரண்டு
கைப்புவேம் பாடல் கூட்டிக் கயர்க்குமா வெண்ணெய் வைப்பீர்
எண்ணெயுஞ் சீலை தானு மிடைவிடாப் பகலைக் காகும்
நண்ணுமா வரையி லைத்தூள் நயந்தவெச் சோடு காட்டிப்
புண்ணிலேவைத்துக்கட்டப் பொறுக்குமாம் பிளவைப்புண்ணென்
றுண்மையா யுரைக்கும் வேத முறுதிகை கண்ட தாமே 23

**பூச்சு**

நெல்லியுட னிலப்பனையின் கிழங்கு தாலு
நெற்பொரிபொன் னாவரையி னீண்ட வேரும்
சொல்லியரைத் தாவிலூறு வெண்ணெய் சேர்த்துச்
சுகமாக வீக்கத்தின் மேலே பூசில்
சில்லியதாம் பிளவைதனிற் காய்ச்சல் குத்துச்
சினந்தெழுந்தே யழுகலாய் வருநீர்ப் பாய்ச்சல்
மெல்லியர்தம் முலைப்பாலு மொக்கக் கூட்டில்
வீக்கமதி லனல்வலியும் விட்டுப் போமே 24

ஆவரை யல்லி நெல்லி முள்ளி யதுவு நீர்ப்பூ லாவேரும் (ச
கோவின் வெண்ணெய் தனிற்குழைத்துக் கொள்ளும் வீக்கமதிற்பூ
ஆவி மிகுந்த வனல்வீக்க மதிகப் படாதா லனல் தணியும்
தாவிக் குழைத்துப் பூசிவரத் தயிருங் கூட்டிக் கொளலாமே 25
வஞ்சிக்கொடியார் முலைப்பாலில் வராகிக் கிழங்கோடா வெண்யெ
செஞ்சொற் படியே சேர்த்தரைத்துத் திரும்ப வழித்தங்கலைத்து
அஞ்சும் பிளவை முகந்தன்னி லப்பி வைத்துக் கட்டிடுகில் (த்து கெஞ்சிச்
சுரமோ டனல்வீக்கங் கெட்டுப் பட்டுப் போய்விடுமே
சேரா வரையின் விதைதன்னைத் தீய்க்கக் கருக்கித் தூள்செய்து
பேராத்தியின்வேர் தனைக்கூட்டிப்பிழையாதரைத்துச்* சுவற்கட்டின்
சீராய்ப்பிளவைப் புண்ணதினெய் சிறக்கப்பூசித் தூள் தூவில்
தூராப் புண்ணுஞ் சிவந்துலர்ந்து சுகமா மென்றே மறைகூறும்

*சுவல் - முதுகு

**சேர்வை**

தேங்கா யெண்ணெய் காற்படியிற் றேனின் மெழுகு மிரண்டுபலம்
நீங்காவெண்ணெ யதின் மெழுகை நிதானமுருக்கிவடித் தன்பின்
பாங்காய்ப் பொன்னி னரிதாரம் பகர்நாற்கழஞ்சுவிட்டரைத்துத்
தீங்கார்பிளவைப்புண்ணிலிடத் தீர்ந்து புண்ணும் பொருக்காமே 28

நாலு கழஞ்சு சாதிலிங்க நல்ல் மெழுகு மிரண்டுபலம்
ஏலுந்தேங்கா யெண்ணெய்தனி லிசையவுருக்கி வடித்ததற்பின்
சால வரைத்துச் சேர்வைதனைத் தடித்த பிளவைப் புண்ணிலிட
நீல விழியாய் பொருக்கெழுந்து நில்லா துலர்ந்து போய்விடுமே

துத்தந் துரிசு சாதிலிங்கத் தூய பொன்னி னரிதாரம்
சுத்த விரசங் குந்துருக்கஞ் சுக்கு வசம்பு மிளகுடனே
சித்தமெழுகு தெங்கெண்ணெய் சேர்த்தேயரைத்துப் புண்ணிலிட
நித்தஞ் சியலுஞ் செந்நீரு நீங்கி யுலர்ந்து போய்விடுமே 30

**புழுவிழப் புகை**

ஆமிது பிளவைப் புண்ணி லடுத்திடும் புழுக்கள் வீழக்
காமுறு நெல்லிக் கெந்தங் கதித்தபொன் னரிதா ரந்தான்
நாமுறு வெண்பா ஷாண நலமுறத் தூளா யாட்டி
வேமுறு புளிப்பொரு க்கிற் புகைத்திடப் புழுக்கள் வீழும் 31

**பிட்டு**

மலைசுமந்த மென்கொடியும் வண்குறுவை மாவும்
அலர்சிவந்த வாவரையின் றூரும் - உலைவைத்துப்
பிட்டவித்துத் தின்னப் பெரும்பிளவை நீர்வரண்டு
விட்டோடிப் போமென விள் 32

**இரசசூரணம்**

பெருங்காய மிளகுசுக்குக் கராம்பு வாசி
பெருத்தகெந்த மரிதார முலுவா வேலம்

பிளவைரோகநிதானம்

தருமரத்தை துரிசுதுத்தங் கோட்டந் திப்பில்
தானிரச மோமநற்சீர் கழஞ்சோ ரொன்றாய்
நெருங்கவிதை வறுத்திடித்துத் தேனிற் கொள்ள
நில்லாது பிளவைப்புண் கரப்பன் சூலை
அருங்கிரந்தி யுளைவுகுத்துப் பிடிப்பு வீச்சு
மகலுமென வாயுண்மறை யறையு மன்றே 33

## சிகிச்சை செய்யும் முறை

திருவைப்போன் மேனி மீதே திரண்டெழும் புண்ணை யாற்றில்
வெருமிக்க வாத பித்த வையையும் விரேசிப் பித்து
உருமிக்க குட்டம் விக்க லுரத்தெழு சத்தி மந்தம்
ஒருமித்துச் சிகிச்சை செய்யி லுறதியாங் குணங்கண்டாயே 34

## புண்களுக்குப் பொதுச்சிகிச்சை

### வீக்கத்துக்குப்பற்றிட

பெருங்காயந் துரிசுதுத்தங் குந்து ருக்கம்
பேசுமனோ சிலைவெளுத்தற் பிசின்கா ரீயம்
மருந்தான சூதமபின் சாதி லிங்க
மருவுமரி தாரமுள்ளி சாளி யாவும்
சுருங்காத வாமணக்கின் விதையி னேடோ
சுத்தமுறு மணனைத்துஞ் சமனாக் கூட்டி
வாரணத்தின் முட்டைவெள்ளைக் கருவிற் பூசே 35

கடுகுடனே யுள்ளிசுக்குச் சாளி யாவுங்
காரபினும் வெண்பிசினு மிளகு மின்னும்
அடைவுபெறும் வசம்புபெருங் காய மல்லா
வலர்ந்தநெல்லின் பொரியுமா மணக்கின் முத்தும்
திடமுடைய வாரணத்தின் முட்டை யுற்ற
சிறந்தவெள்ளைக் கருவிட்டே யரைத்துப் பூசத்
துடைவாழை முதலெழுந்த வீக்க மெல்லாஞ்
சோர்ந்துவடிந் திடுமெனவே சொல்லி னாரே 36

வாகுறு மெட்டி வித்து வருகுன்றி மணிப்ப ருப்புத்
தாவுபூ னைக்க ழற்சி தருவிதை யெருக்க லம்வேர்
காவுறு பெரும ருந்து கருதும்வே ருடன்வெந் தோன்றி
பாவுறு கிழங்கு கஞ்சா விலையிவை பரிந்து கொள்ளே 37

கொண்டிவை தூள தாகக் குக்குடத் தவரைச் சாற்றில்
மண்டவிட் டரைத்துப் பூச வற்றிடா தெழும்பு மாயின்
பண்டுளோர்சொன்னவாட்டின் புழுக்கையை வறுத்துத் தூளாய்க்
கண்டவக் கரியே ரண்ட நெய்யினிற் குழைத்துப் போடெ 38

## உடைக்க

போட்டிடப் பழுக்கும் பின்னர்ப் பொல்லாத வெண்பா ஷாணம்
நாட்டிடுந் துரிசு சீனக் காரமும் பொடித்து நன்றாய்ப்
போட்டதி லாவின் வெண்ணெய் பொருந்தவே யரைத்துப் பூசக்
காட்டிடு மாணி போகுந் தயிரிற்சோ றிட்டுக் கட்டே 39

துடங்கிய மருந்து நீலி தோளிகார்த் திகைக்கி ழங்கு
மடங்கிய குன்றிற் காட்டில் வளர்பெரு மருந்து கஞ்சா
முடங்கிய வசம்பு காய முதிரும்வெள் ளுள்ளி கூட்டி
அடங்கவீக் கத்திற் பூசத் தடங்கில துடையுற் தானே 40

## ஆயுதம் பட்டபுண்ணுக்கு ஒற்றிட

வெட்டுப் பட்டா ற்றேசிக்காய் விரைந்தே யிரண்டா யறுத்தனைச்
சட்டிமீதில் வேப்பெண்ணெய் தன்னை வார்த்துக் காயவைத்துத்
தொட்டுப் பார்த்தே யொற்றிடுகிற் சுகமாங் கடுப்பு விதனமென
மட்டு மருவுங் குழலாரே வகுத்தா ரிதனை வாகடரே 41

## எண்ணெய்

இடவேயெண்ணெய் தனக்குக் கேளிலந்தைகறுக்காய் துடர் முட்பூங்
படரெய் நிலத்திற் குமிழ்வேரும் பருத்த வாவரை தன்வேரும்
கடவா தொக்கச் சிறுகறுக்காய் கரம்பை சூரி நாயுருவி (ச்சரக்கே
அடவேயிவற்றின் வேர் கொண்டேயதன் மேற்சொல்வோங்கடை

பிளவைரோகநிதானம்

கோட்ட மதுரம் வேம்பாடல் கொடியிற் சிவந்த செவ்வள்ளி
கூட்டுங் காரிய குந்துருக்கங் கொடிய கைப்புச் சதகுப்பை
மேட்டில் வளரு மேலுள்ளி மிகாம லிந்தோ டிலவங்கம்
கூட்டித் தூளியுடன் செய்து கொள்ளீ ரெண்ணெய் புண்ணுக்கே

## குத்துண்டபுண் ணுக்குச் சிகிச்சை

குத்துக் குடனே யுடைசீலை குடைந்தே யிரத்தக் கறள்தள்ளி
முத்துப் போல விழுநீரை முறிந்துட் சுழலும் வகைசெய்து
சுத்தப் படவே குத்துள்வாய்த் துடைத்து வைக்கத்தசை தள்ளிச்
சித்தந் துளங்கத் தேசிக்காய் திறந்தேயெண்ணெய் சுட வொற்றே
ஒற்றியிட்ட மூன்றாநாளொடுவி சமுலம் புள்ளடியும்
மற்றோர் சிறிய தம்பலைவேர் மணக்கு முத்த நன்னாரி
சிற்ற தேல மிலவங்கந் தின்னுங் கைப்பு வேம்பாடல் (ளே
உற்றோர்ம துரந்தான் கொண்டேயுடை சீலையிலெண்ணெயுடன் தன்
நீம்ப நிலத்தைச் சொல்லுவது நிலத்திற் குமிழுந் துடரொடுவி
சம்புங் கரிசால் தழிற்றோலுந் தக்க தேவி தம்பலையும்
கம்பிப் பிசினுஞ் சற்றேகொள் கைப்பு மதுரம் வேம்பாடல்
அம்புமுதலாயய் வெடியுண்டையாறு மிவையோபாடல்
அம்பு முதலாய் வெடியுண்டையாறு மிவை யோடெண்ணெய்செய்யே

## வேது

வல்லா யுதங்கள் பட்டார்க்கு மங்கா வாவி யுடம்புலைந்தாற்
சொல்லு நிம்ப மதிற்றேலுஞ் சுடவே தண்ணீர் தனிலூற்றி
மெல்ல விருத்தி வெச்சவில் வேது பிடித்துக் குளிப்பாட்ட
நல்ல ததுவு மெனமுன்னோர் நாடி யுரைத்த படியாமே 47
குப்பிழை சொல் முட்கிளுவை கொளவெந்த குழிழமிலை கு
ணஞ்செய் குன்றி எப்பெரிய நறுவிலிலை வவ்விலொட்டி யிணங்
கியசிற் றாமக்கு மிளிய சீந்தில், ஒப்பமுள கொடிப்பாலை யொ
திக்கொழுந்து கழுநீர்வெச்சோடு காட்டி, டிப்பெரிய புண்ணிற்
சீ நாச'முற விராக்கட்டிவ் விலைகடாமே 48

குறிஞ்சா விலையாம் புங்கிலையாங் கொடிய சூழற்சி யிலைதானாம்
அறிந்து வாலி கடலிறாஞ்சி யதுவும் புளித்தேக் கிலைதானாம்
செறிந்த தாளி பாவட்டை சேரும் பெரியபிளை யிலை
பரிந்த பருத்தி யிலைதானும் பகர்ந்தார் புண்கள் சுரப்பனுக்கே 49

**புண்ணினியம்பு**

புண்ணும் வெளுந்து நிர்மிகுந்து போதக் குத்தி வலிமிநீந்தால்
உண்மைப்படவேயொடுக்கொள்ளுங்கொள்ளாதிருக்கி லூரஞ்செய்யும்
திண்மைப்படவே செங்கல் மங்க விரத்தமாகிற் றீராது
நண்ணிச் சீராய்ச் சீவிழுகி னலந்து புண்ணு மாறிடுமே 50

தினவுடன் சொறிந்து நீற்குந் தீர்ந்தீடாப் புண்ணை யாற்றில்
வினைகெடத் தீயச் சுட்டு வெருவவே புகைக்க நன்றாம்
நினைவுடன் குணங்கள் கண்டு நின்றெழு தலமுங் கண்டு
தனையது வாத பித்தத் தகுதியுங் கண்டு கொள்ளே 51

திரண்டெழுவியாதி தோன்றுஞ்செய்தியாங் குணங்கள் கேண்மின்
பொருந்திய தோலைப் பற்றிற் புரையறு மருந்தான் மீளும்
புரண்டெழு தசையைப் பற்றிற் பொருந்துமந் திரம மருந்து
அரண்படு மத்தி யாகி லனேகநாட் செல்லுங் காணே 52

**காரம்**

இசைந்தவூ மத்தங் காயோ டெரியினிற் கருக்கிக் கொண்டு
பசந்தசுண் ணாம்புங் கூட்டிப் பகருமா மணக்கி னெய்யில்
வசம்பெறக் குழைத்துப் புண்ணில் வைத்திட பொடுவு மாறும்
கசந்தவெண் பாஷா ணத்திற் கடுந்துரி சதுவுங் கூட்டி 53

கூட்டியே பசுவி னெய்யிற் குழைத்திடக் குணமா மின்னும்
நாட்டிய வெண்பா ஷாண நலமுறு துரிசு துத்தம்
காட்டுவெண் காரஞ் சீனங் கருதுநேர் வாளந் தானும்
மூட்டிநெய் தனிற்து ழைத்தால் முதிர்கடுங் கார மாமே 54

### பிளவைரோகநிதானம்

உற்றவெண் பாஷா ணத்தை யுப்பினுட் புதைத்து வைத்துப்
பத்துநாட் சென்றெடுத்துப் பகராங்கங் கரியுங் கூட்டிச்
சுத்தமா ராவி னெய்யிற் சூழ்ந்துரை திடவு நன்றாம்
அற்றமி னேர்வா னத்தை யருக்கானிற் பாலிற் போடே 55

துரிசு வெள்ளைப் பாஷாணந் தூய கல்லுந் சுட்டபொடி
எரிமெத் தியதோர் மும்பூலா விலைச்சா நதனைப் பாணசெய்து
கரியொப் பளவு நறுசெய்யுங் தப்பா தொக்கப் பொயிட்டு
விரிபெற் றெழுந்த புணகளவை வெருவஞ்ச் சிலை தனிற் போடே

போடே கார நாண்மூன்றும் புண்ணிற்களவு தீர்ந்ததெனிற்
தேடே தயிருஞ் சோறதுறஞ் சிறக்கக் கட்டு நாண் மூன்றும்
ஆடே யதனிற் சவ்வுபோ லற்றே வீழ்ந்து பண்தெளியிற்
பாடேதீரெ வெந்நீராற் பரிந்து கழுவிப் புகை கட்டே 57

### புகை

இரச மீயஞ் சேங்கொட்டை யியல் பாஞ் சங்கு வெண்ணீறு
உரமே செய்யு மஞ்சளொடு மொக்கக் கஒண்டே யோரொன்று
தரவே நாலு கழஞ்சாகச் சமமே செய்து புகைகட்டி
விரவா விடவே யெப் புண்ணுமீளும் வாதப் பிரமியமும் 58

### குழம்பு

### ஆறாதபுண் ணுக்கு

இரதமுட னீயநிரு விடம்பா ஷாண
மிடுதுரிசு சாதிலிங்க மிவையோ ரொன்று
சரத முட னிவைகழஞ்சு சமன தாகச்
சாந்த மாய்ப் பொடித்திருப்புக் கரண்டி தன்னில்
விரதமுட னாமணக்க மெண்ணெய் விட்டு
மிகமூன்று தரமுருக்கி யிதா மீயம்
வரதமுட னம்மியினி லரை குழம்பாய்
வைத்திருந்து போடவெலா வடுப்புண் போமே 59

**புங்கம்பாலெண்ணெய்**

புங்கியங்கு வோரிரண்டுந் துருவி வேறாய்ப்
புழிந்துதெங்கின பாலதுவுஞ் சமனாய் விட்டுத்
தங்குமதிற் துரிசுதுத்தங் குத்து ருக்கந்
தகுவெளுத்தற் பிசின்சடுக்காய் பொடித்துக் கூட்டிப்
பொங்குமெண்ணெய் முதிந்த பத மிறக்கி நீர்மேற்
பொருந்தவைத்தே யெடுத்திடவெப் புண்ணுந் தீரும்
இங்கதற்குச் சேர்வை சொல வூசிக் காந்த
மிடுதுரிசு சாதிலிங்கந் துத்தங் கேளே 60

**சேர்வை**

கேளிதெல்லாங் கண்டெடைக்குக் குந்து ருக்கங்
கிளர்முருக்க மிலைச்சாறு விட்ட ரைத்து
மீளவதை யுவர்த்தியெள்ளி லெண்ணெய் விட்டு
மிகவரைத்துத் தண்ணீர் விட் டரைக்கப் பின்னர்
வாள்விழியா யிறுகிவரும் பதத்திற் சேர்வை
வழித்தெடுத்துப் புண்ணிலிட வாய்ப்ப தாகும்
கோளறுவெட் பாவட்டை காழு நீரிற்
கொதிக்கவைத்துக் கட்டியிடச் சீயும் போமே 61

போகுமே பழத்தேங்காய்த் துருவ லோடு
புங்கம்வே ருந்துருவிப் பால்பி ழிந்து
வேகவைத்து நிலவேரு மரைத்துக் கூட்டி
மெழுகுபதந் தனிலெண்ணெய் வடித்துக் கொண்டு
பாகமுறத் தேன்மெழுகு கூட்டிச் சேர்வை
பண்ணியதை மூன்று பங்காய்ப் பகுந்தோர் பங்கில்
வேகமுறு பாஷாணந் துரிசு சீனம்
விரவியிட விதுகாரச் சேர்வை யாமே 62

சேர்வையுற மற்றொருபங் கதிலே சீனஞ்
சிறந்தவெள்ளைக் குந்துருக்கந் துரிசு கூட்டிப்

### பிளவைரோகநிதானம்

பார்வையுறு புண்ணிலிட வழுக்கு நீங்கும்
பகர்ந்தமற்றைப் பங்கதிலே சாதி லிங்கம்
நீர்மையுறு துரிசுதுத்தங் குந்து ருக்க
நிகழ்கெந்தி யரிதாரஞ் சீனக் காரம்
நேர்மையுறப் பொடிசெய்து கலந்து போட
நீங்காத புண்வகைக ணீங்கு மன்றே 63

### ஒடுவடக்கியெண்ணெய்

நீங்குவதற் கோரெண்ணெ யொடுவ டக்கி
நிம்பமா வாரைமரு தோன்றி யாத்தி
பாங்குபெறு புல்லாந்தி கடலி றாஞ்சி
பகருமொதி யால்கிளுவை நாவல் ரத்த
வேங்கையத்தி பாவட்டை கயட்டை பாலை
வேல்கறுவா விவையனைத்தும பட்டையோடு
தீங்கற்றும் புங்கியங்கு செங்கத் தாரி
திகழ்கறுக்காய் கருஞ்சூரை யிவைவேர் தேடே 64

தேடியின்னுஞ் சாதிலிங்க நெல்லிக் கெந்தஞ்
சிற்றரத்தை துரிசுதுத்தஞ் சீனக் காரம்
நாடிய பொன் னரிதாரங் காரம்பு வாசி
நற்கடுக்காய் குந்துருக்கஞ் சிவந்த சந்தம்
பீடுடைய சாதிக்காய் கரிய சீரம்
பெருவிருக்கம் வசம்புள்ளி மிளிகு திப்பில்
கோடுபெறு வேம்பாடல் கழஞ்வொவ் வொன்று
கொண்டிடித்துப் புங்கம்பால் படியி ரண்டில் 65

தெங்கினெண்ணெ யரைப்படியுங் கூட்டிங் கொண்டு
சேரமற்றுஞ் சரக்குடன்வேர் பட்டைத் தூளும்
பங்கமற வேகரைத்துக் காய்ச்சி நல்ல
பருவமது புண்ணாறும் படியே பார்த்துத்
துங்கமுற வேவடித்துக் கணேசன் பாதத்

துணைவணங்கி யறுமுகனைத் தொழுவ வாழ்த்தி
அங்காமுற புண்ணிலிடத் தீரு மென்றே
யகத்யதினா ருரைத்தபடி யறிந்து செய்யே

எழுமுள்வேர் கறுக்கா யின்வே ரிம்பூறல் கரப்பை யின்வேர்
வழுவறு சூதங் கெந்தி வகுத்தவேம் பாடல் புங்கின்
பழுதகல் பால்தெங் கெண்ணெய் பதத்தினிற் காய்ச்சிப் பின்னா்
மெழுகுடன் சூதங் கெந்தி விரைந்திட்டுப் புண்ணிற் போடே 67

நாயுருவி யுடன்வேலிப் பருத்தி பிச்சி
நவில்கோழி யவரையிவை சாறு ழக்குத்
தூயவெள்ளி லெண்ணெயுமோர் நாழி கூட்டிச்
சொலுமுத்த மாகாணி தூது சில்லி
ஆயவிவை வேர்கோவைக் கிழங்கு நிம்ப
மதின்கொழுந்து வேம்பாடல் மதியி னுப்பு
வாய்மையுறு மொன்மெழுகு சிவந்த சந்த
மாமரஞ்சள் மஞ்சளெள்ளுத் திப்பில் சேரே 68

## சேர்வை

சேர்த்துநல்ல பதமதிலே வடித்துக் கொண்டு
சீலை தனிற் றேய்த்தாறாப் புண்ணி விட்டால்
ஊத்தைகொளும் புண்டுதலாத் தீரு மேலு
மொருசேர்வை கூறிடுவந் துரிசு துத்தம்
சாற்றுமரி தாரம்வங் காளப் பச்சை
சாதிலிங்க முடனிரசங் கழஞ்சொவ் வொன்று
போற்றுவெள்ளைக் குந்துருக்கங் காய்ச்சுக் கட்டி
புகல்கடுக்காய் தான்றிநெல்லி முக்க ழஞ்சே 69

ஏயசரக் கெலாமிடித்துச் சீலை தன்னி
லியல்பாக வாரித்தெடுத்து லிங்க மாதி
ஆயவையுங் கூட்டியொரு வட்டி லிட்டே

யரைத்துவெயின் முகத்தில் வைத்துப் பின்ன ரைத்து
நேயமுட னிப்படி யேழ் முறையே செய்தால்
நிகழ்த்துமருந் ததைச்சீலை யூட்டிப் போடத்
தூய்மைபெறப் புண்ணாறிப் பொருக்கெ ழும்புஞ்
சொற்றனர்மா முனிவரறி சுவற்புண் ணும் போம் 70

## குழம்பு

இரசந் துரிசு சாதிலிங்க மெழில்சேர் துத்தங் § கல்லோசை
கரத முறுகை யாந்தகரை தன்சா றதனைக் கலஞ்செம்பு
புரவு நறுநெய் விட்டறுகாற் புகலுங் குழம்பு தானாக்கி
அரசந் துளிரிற் றடவியிட வப்புண் ணாறி யுலர்ந்திடுமே 71

## குலைப்புண்ணுக்கு

சாதிலிங்க நேர்வாளந் துரிசு துத்தஞ்
சாற்று கெந்தி யரிதார மிரச நாவி
ஓதுவெள்ளை கெவுரி தொட்டி மாங்க்ஷ பேதி
யுற்றநிரு விடமிவைகள் சமன தாகத்
தீதகற்றும் புங்கெண்ணெய் நிம்ப வெண்ணெய்
சேர்த்தடுப்பிற் கொதியிட்டுப் புண்ணிற் போட
ஏதமுறு சூலைப்புண் கிரந்திப் புண்க
ளிடர் புரியுங் கொருக்குப்பு ணிரிந்து போமே 72

## திரி

வல்லோரே துரிசு துத்தம் வளர்புங்கம், பாலிந் துப்புச
சொல்லுசம் பிரக்காய்ச் சாற்றாற் துயரற வரைத்துப் பின்னை
நல்லசீ லையிலே யூட்டி நலம்பெறத் திரிய தாக்கிப்
புல்லிய வொடுவி லொற்றப் பொறாததோ ரொடுக்கள் போமே 73

மயிற் பீலி சுட்டகரி தலையி லுள்ள
மயிர்சுட்ட கரிஃபருமைக் கொம்பு தன்னைத்

§ கல்லோசை - கன்மம்

தியிற்சுட்ட கரியுடனே யொதியம் பட்டை
சேர்சமனா யெலுமிச்சம் புளியா லாட்டி
உயர்ச்சிபெறு மெள்ளெண்ணெ யதிற்க லக்கி
யுறவெந்து சிறுதேனின மெழுகு போட்டு
மயற்சியறும் பதம்வடித்துத் திரியிற் றேய்த்து
வைக்கவொடுப் புண்வகைகண் மாறு மன்றே 74

ஒடுவினை மாற்ற வேண்டி லுற்றகெந் தகஞ்சா திக்காய்
படிமிசை கனலின் மீது பயில்ரச கர்ப்பூரங் கூட்டிப்
பொடிசெய்து திலத்தி லுற்ற வெண்ணெயிற் பொருந்தக்காய்ச்சி
வடிசெய்து திரியிற் போட மாறுமென் திருஷி சொன்னார் 75

## நெருப்புச்சுட்டபுண்ணுக்கு

நெருப்புப்பட்டவுடனே நெருப்பாற் காய்ச்ச நன்று, தேன்
பூச நன்று எருமைநாக்கி யரைத்துப் பூச நன்று, பருத்தியிலை
மிளகு நன்று சுண்ணாம்பு பூச நன்று, கள்ளிப்பால் தடவ நன்று 76

## சுட்டபுண்ணில் ஒடுவுக்கு

அரத்தம் பூ விலைவேம் பாட லதிமது ரஞ்செஞ் சந்தம்
உரத்தநற் புளியங் கொட்டைத் தோலுறு கைப்புக் கோட்டம்
இரத்தநற் சாத்ர வேதி யிவைபொரு நிறையிற் கொண்டு
தரித்திடு தேங்கா யெண்ணெய் தனிற்காய்ச்சச் சுட்டபுண்போம்

## இராச புகை

துரிசுபண விடையேக முபய துத்தஞ்
சொல்லுவெள்ளைப் பாஷாண மொன்ற தாகும்
பெரியவங்க மிரசமிவை யுருக்கிச் சேர்த்துப்
பிறங்குதூ ளினிற்புகையாய் முடித்த பின்னர்ப்
புரிகுழலாய் புளிப்பொருக்கிற் புகைந்த நன்றாம்
புகைகதித்துக் கழிச்சல்கடுப் படுக்ககு மாகில்

பிளவைரோகநிதானம்

திரிமேதித் தயிராடை நீக்கி நீரிற்
நின்னுமிது ராசபுகை தேர்ந்து காணே 78

**பெரியபுகை**

தானமுறு பெரியபுகை சாற்றாக் கேளுந்
தகுமிரச மூன்றுகா ரீய மூன்று
வானமுறு சாதிலிங்க மரைய தாகு
மனோ சிலைவெண் பாஷாணஞ் சிவந்த மேனி
தீனமுறு பாஷாணந் துரிசு துத்தஞ்
சேர்ந்த நெல்லிக் கெந்தகம்வெண் குந்து ருக்கம்
ஊனமறு மரிதாரஞ் சமனோ சொன்றா
யுகந்தவிலை பதினொன்று மொருங்கு கொள்ளே 79

**பெரிய புகை -2**

திருமருவு மரிதாரந் துரிசு கல்நார்
சிவந்தபா ஷாணங்கள் மதம்வ சம்பு
மருவியதோர் வசநாபி வெண்பா ஷாணம்
வயங்குமா பொடிகாந்த நிருவி டத்தோ
டிருவிகருஞ் சீர்சாதிக் காயுந் துத்த
மிசைந்தபஞ்சள் திப்பிலியுங் கராம்பு வாசி
தருமரத்தை கடனுரைசேங் கொட்டை வாளஞ்
சாற்று நெல்லிக் கெந்தகமு மக்க ராவும் 80

அக்கி தரு கார்புகாக் கிருமி சத்ரு
வடுகூகை நீறுடனே காரி னீயம்
மிக்கதொகு சூதமிவை வகைக்கோ ரொன்று
விளம்புமொரு சுழஞ்சு கொண்டு புகையைக் காட்டில்
பக்கமுறு பவுந்திரமு மரையாப்புச் சூலை
பலகரப்பன் கிரந்தியுடன் பற்றும் புண்கள்
நக்கனருள் முருகசர வணநன் னாம
நவிற்றுபவர் பாவமென நலியுந் தானே 81

## இரசபற்பம் - உள்ளேகொள்ள

பொடுதலை கழற்சி நொச்சி புகல் தளிர் குறுவை நென்மாப்
பிடியொவ்வொன் றிரசந் தானும் பேசுமீர் கழஞ்ச கூட்டி
அடியினிற் பிடியா வண்ண மதைவறுத் திடித்துத் தூளாய்க்
கடிபெறு வெந்நீர் ரிற்கொள் கருதுமெப் புண்ணுந் தீரும் 82

## இரசபற்பம் -2

பருத்தியே கழற்சி நொச்சி பகர்குப்பை மேனி யோடு
முருக்கிவை யிலைக ளொன்றோர் பிடிமூன்று கழஞ்சு சூதம்
கருத்துறு கராம்பு சீரங் கார்புகா வரிசி கோட்டம்
தரித்தொரு கழஞ்சு பச்சை யரிசிமா வுழக்குக் கூட்டே 83

கூட்டியே வறுத்துத் தூளாய்க்கொள்ளிளம் வெந்நீர் தன்னில்
நாட்டபட்ட சகல புண்ணு நாசமாம் புத்தி யந்தான்
கோட்பாடு முணவு நீக்கிக் கொண்டு பன்னிரணடா நாளில்
மாட்புற முழுக லாகும் வாயவெந்தான் மருந்து கேளே 84

## மாற்று

மருந்தெனும் வசம்பு தூளாய் மருவுமா வெண்ணெய் கூட்டித்
திருந்துநற் சம்பீ ரத்தின் சேர்புளி விட்ட ளாவி
வருந்தலை தனின்மத் தித்து வார்த்திடு முழுக வின்னும்
பொருந்துகுங் குமம்பூத் தேசிப் புளியுடனுள்ளே கொள்ளே 85

## வெள்ள றுகுப்பற்பம்

வெள்ளறுகு கொடிக்சுழற்சி பிரண்டை மேனி
மிகுபருத்தி முசுமுசுக்கை பால் முடாங்கி
கள்ளவிழும் பாற்சோற்றி யுருவி கையான்
காக்கணத்தின் கோவையுடன் குப்பி ழாயும்
தெள்ளுமிவை யொவ்வொர்பிடி முருக்கி லூற்ற
செய்யவிலை யிரண்டுபிடி துரிசு துத்தம்
கள்ளமறு மரிதாரஞ் சூத மின்னுங்

பிளவைரோகநிதானம்

கராம்புவசு வாசிகுலக் காயு மெல்லாம் 86
ஒருகழுஞ்சு வகைகூட்டி யிடிக்கு நேர
முரைத்தவிலை வகையனைத்து நிழலு லர்த்தி
வருமுறையே கூட்டியிடித் தினவ றுப்பாய்
வறுத்தரைத்துத்துக் கொண்டுவெரு கடியின் வீதம்
கருதுமிள வெந்நீரிற் கலக்கி யுண்டு
கடியபுளி யுப்புமறந் தசனங் கொண்டே
சிமதமனி னீர்தோய்ந்து வருகிற் சூலை
சேர்ந்தபிடிப் புடன் பிளவை புண்ணும் போமே 87

## பறங்கிக்கிழங்குச் சூரணம்

சீனக்கிழங்கு பலமொன்று செய்ய விலிங்கம் பலமொன்று
கானக் குக்கில் கெந்தகமுங் கர்ப்பூ ரமுமே கழஞ்சொன்று
பானைக் குள்ளே சங்கிலையும் பகரும் பீச்சு விளர்விலையும்
தானே துவைத்த சாறு விட்டுத் தன்வாய் தெங்கி னெய்யரியால்

மூடிக் கட்டி யதன்மேலே மொழியும் வெள்ளைச் சீலைதனை
நாடி விரித்து மருந்தெல்லா நருக்கிப் பரவிச் சட்டியினால்
மூடிச் சீலை மண்செய்து முதிரு நெருப்பிட் டொருசாமம்
கூடிப் பிரித்து மருந்தெடுத்வக் கொண்டு பற்ப மாயிடியே 88

இடித்த மருந்து திடிகடியி னளவாய்த் தேனி விட்டுண்மின்
அடுத்த நோயின்பெலமுடனே யாளின்லெமும றிந்து நன்றாய்க்
கடுத்த வுப்புப் புளியகற்றிக் கருது நாட்கள் பதினைந்தின்
முடித்துப் பின்னா மணக்கெணணெய் முழுகப் புண்க ளாறிடுமே

ஆறிடுங் கரப்பன் சூலை யடுத்திடுங் கடுப்பு வாதம்
ஊறிடுங் கிரந்தி வெட்டை யுறக்கட்டி வெடித்த புண்கள்
நீறிடுந் தொண்டர் தம்மு னில்லாத மாயை போலப்
பாறிடு மென்று முன்னோர் பகர்ந்தனர் மதியி லாய்ந்தே 90

உ
சிவமயம்

# பரராசசேகரம்

## பதின்மூன்றாவது
## பவுந்திரரோகநிதானம்

### மூலப்பவுந்திரம்

மூலா தார மதுதனிலே முளைபோ லெழும்பு பொருபுறத்தில்
மேலே மாங்கி ஷம்புடைத்து மிகவும்புண்ணாய் மாங்கிஷம்வெந்து
சேலே சேவற் சூடதுபோற் சிறுகப் புறத்திற் புலப்படுமே
மாலேயிதுக்குத் துவாலையுண்டாம் வயிறு கழியவொட்டாது 1

### சிகிச்சை -பூச்சு

சீயுஞ்சார்ந்தாலெடுபாயுஞ் செலவோ நாற்ற மிகவுண்டாம்
மேயுஞ் சலதாரையும் மிகவுங் கடுக்கு மெல்லியலே
ஆயுங் குணங்களிவை கண்டா லமரு மருந்து நீ கேளாய்
சேய குன்றி மருதோன்றி சேரு மெட்டி வெள்ளுள்ளி 2

உள்ளி வசம்பு பெருங்காய முற்ற பூத விருக்கமுடன்
தெள்ளு நீலி*யாலியினிற் சேருங் கிழங்கு சடைக்கஞ்சா
உள்ள விவைகள் வெந்நீரா லொக்க வரைத்துப் பூசியிடக்
கள்ள மருவும் பவுந்திரத்திற் கட்டி யமரு மமராட்டால் 3

### எண்ணெய்

அறுத்துத் தீச்சு வதற்குமே லழகா ரெண்ணெ யிருநாழிக்
நிறுத்து மாங்க்ஷ பேதியிந் துப்பு நிறையோரொன் றுபலமூன்று
கறுத்தத் துரிசு பலமுன்று கடிய வர்க்கம் பாலரைத்து
கரைத்து வடித்து புண்ணிலிட்டுக் காசிடையுள்ளே கொள்ளுகவே 4

*ஆலி - கார்த்திகைக் கிழங்கு

வேரிலாக் கொற்றான் சாறு மிகுகொழுங் கொடியின் சாறு
சாருறு மாடா தோடை தனிற்சாறு மௌ்ளி லெண்ணெய்
தேருறு வகைக்கு நாழி தேவர்கடாரு கல்நார்
வாரியி னுரையினோடு வருமதி விடயம் பின்னும் 5

இடவகஞ் சீவகத்தோ டிடுதுவர்ச் சிகையு மெல்லாம்
எடுவகை பலமிரண்டா யிடித்ததிற் கரைத்துக் காய்ச்சி
இடநன்று பங்கம் பாலி லெண்ணெயு மிடுத லேற்கும்
அடைவுடன் பறங்கிப் பட்டையதன் பற்ப முள்ளே கொள்ளே 6

## தாரைப்பவுந்திரம்

தாரைப் பவுந்தி ரக்குணத்தைச் சாற்றக் கேளாய் மடமயிலே
பார நரம்பு நீளத்திற் பருத்துத் திரண்டு முரணித்து
மேரு மசத்துள் ளேபுடைத்து மிகவுமுடைத்து வலியுண்டாம்
காரு நீரிற் றாரைபோற் கருகியிரத்த மிகப்பாயும் 7

## சிகிச்சை - எண்ணெய்

சுண்டை சமூகம் புங்கம்வேர் சொல்லு மாயிற் பட்டையுடன்
கண்ட மிளகு சாரணைவேர் கருது மாடு தொடாமூலி
அண்டுஞ் சீந்தில் சமூகமிவையாகத் துவைத்துச் சாறளவாய்க்
கொண்டு கடக சிங்கியுடன் கார்பு காநற் குங்கிலியம் 8

கருஞ்சீ ரகமிந் துப்பரத்தை கரிய மிளகு நற்சூதம்
வருஞ்சாத் ரபேதியோரொன்று வகுத்தபடியேயரைப் பலந்தான்
பெருஞ்சாத் தம்மி தனிலரைத்துப் பின்னரெள்ளினெண்ணெயினில்
மருந்தாய் வடித்துக் காசினிடை மாந்தி மேலும் பூசிடுமே 9

## விளைபவுந்திரம் சிகிச்சை

விளைப வுந்தி ரக்குணங்கேள் வீணா தண்டின் முகமதனில்
எழுமே யத்தி முகிழ்போல விதற்கு மருந்து கள்ளிப்பால்
பழகு மெண்ணெய் கல்லோசை பகர்சீ தாரி மாங்க்ஷபேதி
வளரு மரசு புன்னைவோ் வருவேம் பாடல் சன்னியிலை
குழைய வரைத்துக் காய்ச்சிவடித் திடவே யந்நோய் குணமாகுமே 10

## சுரோணிபவுந்திரம் - சிகிச்சை

சுரோணிபவுந்திரக் குணங்கேள் சொல்மிதிலிங்கத்தின் முகத்தில்
தரணிமதிக்குங் கோவைக்காய் தனைப்போற்றிரண்டு மிகவுடையும்
குறுனி மருதி னிலைச்சாறு குறிஞ்சா விலையின் சாறதுவும்
குறுணி பன்றி மொந்தாளி கொள்ளு நரியின் விளாச்சாறும் 11

அரத்தை குப்பை கல்நாரு மருங்குத் துருக்க நவச்சாரம்
உரத்த சாதிக் காயுடனே யொக்க வரைத்தே யெண்ணெயினிற்
கரைத்துக் காய்ச்சி வடித்தெடுத்துக் கருதுஞ்சுரோணிபவுந்திரத்தில்
பொருத்துமோலை தனிலூட்டிப் புண்ணிற் போடவுலா்ந்திடுமே 12

## யோனிப் பவுத்திரம்

யோனிபவுந்திர ரக்குணத்தை யுரைக்கக் கேளாய் மடமயிலே
யோனி யடுக்க வொருபுறத்தி னத்தைச் சதைபோலுண்மலா்ந்து
யோனி யடுத்த வாறிடத்திலுடனே நாலு பக்கத்தில்
யோனி யடுக்க வுட்டணமா யுரத்துப்புண்ணா யாயிடுமே 13

## சிகிச்சை - எண்ணெய்

செங்கல் மங்கல் போலே தான் சீலையதனிற் பட்டிடுமே
முங்குங் கருவா ழைக்கிழங்கு முழுதுந்துமைத்துச் சாறுகொண்டு

பொங்கு நத்தைச் சூரிவேர் புகலும் வேம்படலின்றன்வேர்
செங்கை யுடல்வேல் பானாவேர் சிறிய நிலவா வரை கூட்டே 14

குட்டித் தக்காளி வேர்சமூலங் கொத்தி யிடித்துத் துளாக்கித்
திட்டமான நல்லெண்ணெய் சேர விருநா ழியிற்பிசைந்தே
இட்டநாக தத்துவங்குங் கிலியமெவச்சா ரத்தினுடன்
சட்டமான மாங்க்ஷ்பேதி யன்ன பேதி சமன்கூட்டே 15

கூட்டியெரித்துப் பதந்தன்னிற் கொதிக்கக் காய்ச்சி யேயிறக்கி
மீட்டு மிந்து வெண்ணெய்தனை மிகவும் புண்ணிலே தடவி
நாட்டமாகக் காசிடைகொள் நல்ல யோனிப் பவுந்திரங்கள்
கூட்டம் விட்டேபோடுமெனக் குறித்துச் சொன்னாருண்மையிதே 16

## பவுந்திரஒடுவின் குணம் - சிகிச்சை

இந்தப் பவுந்திரவொடுவி லிருக்குங் குணத்தை யியம்பக்கேள்
அந்தப் பவன மதுதனக்கு மடுத்த விலிங்கம் யோனிக்கும்
சந்தி நடுவே புடைகொண்டு வீங்கி வலிக்கு முளை போலாம்
கந்த மருவுஞ் சந்தனத்தைக் கட்டி நிரம்பப் பூசிடுமே 17

## உடைக்க

பூசும் பின்ன ரமராட்டாற் புதிய வெண்ணெய்ப் பிண்ணாக்கும்
பேசுங் காரையிலைகாடி பிறகு சோறுந் தவிட்டுடனே
வீசுந் தேற்றாங்கொட்டையதும் விளக்கெண் ணெயிற்குழைத்துக்
கூசவேண்டா மேற்பூசிற் கொடிய கட்டியுடைந்திடுமே 18

## எண்ணெய்

உடைந்த பின்னர்ச் சந்திரத்தா லுரமாய்க் கீறி யிடம்விரித்துத்
தொடர்ந்தகளவு தனைப்பார்த்துத் தொடுக்குமெண்ணெய்சொல்லக்கேள்

படர்ந்த வெள்ளி லெண்ணெயுடன் பகருங் கார்புகாக்காரம்
அடர்ந்த கரிய சீரகமு மரத்தை குக்கில் சடாமாஞ்சில் 19

சீனக் கார மௌச் சாரஞ் சிறக்குங் கத்தரி நாயனுடன்
ஈன மணுகா மாங்க்ஷிபேதி யெண்ணு நிமிளை பலங்காலாய்ப்
பேணு மனோசிலை தீமுறுகல் பெருகுஞ் சரக்கு வகைகழஞ்சு
மானே வெள்வே லுடற்பட்டை மருக்கரையின்றோற் சாறுரியே 20

வல்லோ ருரைத்த மருந்திவைகள் வழாமற் கூட்டிக் கஷாயத்தில்
அல்லார் குழலாய் சரக்கதனையரைத்து க்காய்ச்சிவடித்தெடுத்துச்
சொல்லார் புண்ணி லொடுவிலிடச் சூழும் வீக்க மதுவற்றும்
நல்லோ ருரைத்த மருந்தினை நாடிக் குணமாச் செய்வீரே 21

### பூச்சு

எள்ளு மஞ்ச ளிலவண நிம்பமும்
தெள்ளி தாகவே தேனிற் குழைத்திடில்
உள்ள புண்ணு மொழுகு மொடுக்களும்
கள்ள மான கழலையுந் தீருமே 22

### கெந்தகபற்பம்

நெல்லிக்கெந் தகத்தை நன்றாய் நினைவுடன் சுத்திசெய்து
சொல்லிய முறையான் மீட்டு மீட்டுமே சுத்தி செய்து
நல்லியங் கதின்ப முகத் னவில்சாற்றான் முந்நா வாட்டி
வல்லியே ரவிமு கத்தில் வண்மையாய்க் காய்த்த பின்னர் 23

முருங்கைப்பூ சாறினாலே முறைபெற முந்நா ளாட்டி
வம்வில்லை காய்ந்த பின்னர் மணல்மறை வினிற்பு டந்தான்
சுருங்கவே போட்டாற் பற்பஞ் சொற்றிடு குன்றி வீதம்அருங்குண்டைக்
Sஅருங்குண்டைக் கற்பந் தன்னி லார்ந்திடப் பவுந்தி ரம்போம் 24

Sகுண்டைக் கறபம் - சேங்கொட்டைக் கற்பம். இது எம்மால் பதிக்கப்பெற்ற சொக்கநாதர் தன்வந்திரியம் என்னும் நூலில் இருக்கின்றது.

## குக்கிற்சூரணம்

குக்கினற் சுத்தி செய்து கொள்ளுக பலந்தானைந்து
திப்பிலி பறங்கிப்பட்டை சேர்+துடி கறுவா வொன்று
முப்பல மவற்றி னோடு முப்பலை யரைப்ப லந்தான்
அப்படி வறுத்துத் தூளயதுகொளப் பவுந்தி ரம்போம் 25

## இயங்கம் வேர்க்கொதி யெண்ணெய்

இயங்குடனே தூது சவட்டுச் செங்கத் தாரி
யிழ்பூற லிருவேலி யிலந்தை நாரி
வயங்குமா வரையெழுமுள் துடரி புன்கு
வருமுட்பூல் நிலக்குமிழோ டிரசவாழை
பயங்கொள்தென்னை யிவையனைத்தும் வேர்கள் தேடிப்
பருத்தசுக்கு வேம்பாடல் சிவந்தவள்ளி
நயங்கொளுள்ளி கடுகுமிள கிருசீ ரேல
நவிலோம மிரண்டுபுரி வசம்பரத்தை 26

அரத்தைகைப்புக் களிப்பாக்குச் செண்பகப்பூ
வதிமதுர மஞ்சிட்டி கோட்டந் திப்பில்
உரைத்த சிறு தேக்குமலுவாக் கராம்பு குக்கி
லுயர்சீனக் கிழங்கு வசுவாசி மல்லி
இரத்தசந்தங் கச்சோலங் கறுவாப் பட்டை
யிலவங்கஞ் சரக்குவேர் வகைக ழஞ்சாய்
விரைந்தபொடி யெள்ளெண்ணெ யிற்கொ தித்து
மேலுமிட்டே யுள்ளருந்த மேன்மை யாமே 27

+துடி-ஏலம்

## வியத்தி நாலுவகை

1. வாதவியத்தி - பீசத்தின் கீழ் வீங்கி நொய்தாயிருக்கும்.

2. பித்த வியாத்தி - பீசத்தின் கீழ் வீங்கி, அத்திப்பழம்போற் சிவந்திருக்கும். அமுக்கினாற் புண்போல் நோகும். கீழ்வயிறு உள் ளெரிந்து வெந்நீர் காய்ச்சி வைத்தாற் போல் அழலும் வெதும்பும், காமம் அழலும் வெதும்பும்.

3. சிலேற்பனவியத்தி - கீழ் வயிறு கல்லடைசினாற் போலக் கனந்திருக்கும். பீசமிழிந்தாற் கழல் சிக்கென்றிருக்கும். தொட்டாற் கிழித்திருக்கும்.

4. தொந்தவியத்தி - முன்சொல்லிய பலகுணமுங்காணும்.

## சிகிச்சை

### வாதவியத்திக்கு

பூச்சு - ஆமணக்கெண்ணெயில் இந்துப்புப் பொடிசெய்து குழைத்துப் பூசவும்.

ஒற்று - ஆமணக்கிலையும் எருக்கலம்பழுத்தலும் துவைத்துப் பொட்டளிகட்டி அவித்து ஒற்றவும்.

கடுப்பு நோ அதிகமிருந்தால் தாரை - நெய்யும் எண்ணெயும் சமன் கலந்து இந்துப்புப்பொடி செய்து தூவி வெச்செனவைத்துத் தாரை விடவும். இதிற் குணங்கண்டால் பேதி பண்ணி முழுகி விடவும். குணமில்லாவிட்டால் வெள்ளுள்ளியை அரைத்து நல்லெண்ணெயிற் குழைத்து நக்கி மேலும் பூசவும்.

### வாத பித்த வியத்திகளுக்கு

அட்டைவிட்டு உதிரம்வாங்கிவிட்டு; பெருநாவல்மரத்தின் பட்டை இடித்து உரியாகக் காய்ச்சி அவ்வளவு பாலுங்கலந்து தாரைவிடவும்.

### சிலேற்பன வியத்திக்கு

குடிமருந்து :- மரமஞ்சள் பலம் - 2 நாழிநீரும் நாழி கோசலமும் விட்டு உழக்காகக் காய்ச்சிக் குடிக்கவும்.

பூச்சு :- டங்கந்தோல், ஆயிற்றோல், முருங்கைக் கிழங்கு, மாவிலங்கந்தோல், சமன் கோசலத்திலரைத்துக் கொதிப் பித்துப்பூசவும் உவநாயம் :- கொட்டாங்கரந்தை, புன்னையிலை, கொற்றானிலை, இயங்கமிலை சமனாக இடித்துக் கோமயம் வார்த்துப் பிசைந்து வெச்சென வைத்து ஒற்றி உவநாயங்கட்டவும் அதிற் சற்றெடுத்துக் கோமயம் வார்த்து அரைத்துப் பூசவும், அந்திசந்தி ஒற்றி வரவும்.

## கைக்குழித்தாமரை

பொருந்து மீரற் கைக்குழியிற் பொருமி வீங்கி யுளைந்துகுத்தி
இருந்து வயிற்றி லேறிநொந்தே யிடராய் வறுகித்துயருண்டாய்
வருந்து மீரற் பொருத்தடைத்து வசமற்றிடராய்க் களைகளைக்கும்
திருந்து மீரற் கைக்குழியிற் சோ்தா மரையிற் குணந்தீதே 1

பொருத்திற்புயத்தின் முலைமாா்பிற் பொருந்திலீரற் கைக்குழியிற்
பெருத்து வீங்கி வயிறெரிந்து பெலத்து வறுகித் துயருண்டாய்
உருத்து மயக்கிகச் சோகித்தே யுடனே வோ்த்துக் களையுண்டாம்
வருத்து மீரற் கைக்குழியில் வருதா மரையின் வளா்நோயே 2

## (மற்றொரு பிரதி)

கைக்குழியி லுளைந்துகுத்தி முட்ட தாகிக்
கடினமாய் வயிறெரிந்து திரண்டு வீங்கி
மெய்க்குள்வயி றதிபெலமாய் வறுகிச் சோா்ந்து
மிகுந்தகளை யுடன் வோ்வை மிகுதியுண்டாம்
எய்க்குமிந்தக் குணமதிக மிருந்தா லேத
மிதிற்கடினங் குரைத்திருந்தா லவலம்வாரா
உய்க்குமிந்தக் கைக்குழித்தா மரையினன்மை
யுறுகுணமுந் துா்க்குணமு முணா்ந்து காணே 3

## கொலைத் தாமரை

சிறுத்தே யீரற் கைக்குழியிற் றிரள் தாமரையுந் திரண்டெழுந்து
பொறுத்கே கனமாயு ளைந்து குத்திப் பொருமி வீங்கி வயிறெரியும்
அறுத்தே யீரற் றாமரையை யவித்துக் கருகி யருந்துதுராம்
இறுத்தே சிறுத்திட்டுயிர்வாங்குமிதுவே கொலைத் தாமரைநோயே 4

## ஈரற்தாமரையிற் பிளவை

ஒப்புறு மீரல் தன்னி லுற்றதா மரையினூடு
துப்புறு தாமரைக்காய் துலங்கிடு மணிச்சம் பூப்போல்
வெப்புறு பிளவை தோன்றில் விடமென வுயிரை வாங்கும்
செப்பரு மாயுள் வேதஞ் செப்பிய துண்மையாமே 5

துரந்திடுங் கன்மத் தீடாய்த் தொடர்ந்தெழுங் கிரந்தி வெப்புப்
பரந்தெழுந் தீரல் தன்னைப் பசையறக் கருக்கி வாட்டிச்
சுரந்தெழும் பிளவை தோன்றிற் றுயருட னுயிரை வாங்கும்
கரந்தது தீரா தென்று கழறிடு மாயுள் வேதம் 6

## பிளவைக்குறி

புயந்தின் கீழ்க்  குழியில் வீங்கிப் பொங்கியே சீவ டிந்து
பயக்குட நீர்போல் வீழ்ந்து பற்றிய தோலுந் தேய்ந்து
புயத்தடி விலாவு மார்பு புறமுதுகைப் பலகை வீங்கி
அயர்ச்சியும் வேர்வை குத்து மனலொடு தாக முண்டே 7

தாகநெஞ் சடைப்பு விக்கல் தணியாத வாய்வோங் காளம்
ஆகமே வற்றியீர லதில்வலி கண்கண் மஞ்சள்
ஆகுமே பீத முண்டா மலத்தினை யடைக்கிற் றீதாம்
பாகமா மளுந்தாற் றீர்க்கப் பண்டித மறிந்தி டீரே 8

பிளவைரோகநிதானம்

**அசாத்தியம் சாத்தியமறிய**

கைக்குழி யீரல் வன்மக் கமலத்தி லெழுந்து நோய்கள்
மைக்கிளர் வலிய காலன் வலைப்படுந் தீர்ந்திடாது
வைக்குறு வன்மந் தப்பில் மாறிடும் வந்த நோய்கள்
மெய்க்குறு மாயுள் வேதம் விளம்பிய துண்மையாமே 9

உற்றகைக் குழியின் வன்ம முறுமீரற் குழியின் வன்மம்
மற்றுந்தா மரையின் வன்மம் வந்திடும் பிணிக ணீங்கா
சொற்றிடு வன்மந் தப்பிற் றோன்றிய பிணிக ணீங்கும்
குற்றமில் பிணிக ணீங்கக் கூறுவன் மருந்து கேண்மோ 10

**சிகிச்சை**

துலங்குமா விலங்குநுணா விலையிரண்டுந் துவைத்துச்
சுண்ணாம்பு மதிற்கலந்து துகளறவிட் டரைத்தே
இலங்குபனங் கட்டியும்விட் டரைத்துடனே பூசி
யிதமான மிளகு நெய்யும் பாகலிலைச் சாறும்
கலங்காம லருந்தியுள்ளுங் கஞ்சியுள்ளி பசுப்பால்
கதிக்கவிட்டுக் காய்ச்சியிரு நேரமுங்கொண் டிடவே
மலங்காதே கைக்குழித்தா மரைவீக்க மெரிவு
வலிபிளவை படுவன் முதன் மாறியொழிந் திடுமே 11

பெருங்காய முள்ளிமஞ்ச ளவின்வெளுத்தல் மிளகு
பெருங்கடுகு சுண்ணாம்பு வெள்ளாட்டுப் புழுக்கை
தருங்கான மஞ்சணுணாப் பூமத்தை யமுக்கிரா
தனித்தனிவேர் வெள்ளாட்டுச் சலத்தினில் விட்டரைத்து
நெருங்காம லந்திசந்தி நிதானமாய்ப் பூசில்
நீக்கிவிடும் கைக்குழித்தா மரைவீக்கம் பிளவை
மருங்கான புயவாத கரப்பான்மிகு சூலை
மாறுமென வாயுண்மறை வகுத்தமருந் திதுவே 12

உ
சிவமயம்

# பரராசசேகரம்

## பதினான்காவது
## வன்மவிதி

சேவலங் கொடியேன் முன்னாட் சிந்தையி லிரக்க முற்றுப்
பூவுல கோர்க ளுய்யப் புகல்கின்ற வன்ம மற்றும்
மூவுல கோரு மெச்சு முதியசத் திரமும் பாடக்
காவல னொற்றைக் கோட்டுக் கணபதி காப்ப தாமே 1

**வன்மம் - 107**

பெருகு வன்ம நூற்றேழிற் பிறங்கு மொருதா ளோரொன்றில்
மருவு வன்மம் பதினொன்று வயங்கு கரமு மதுவேயாம்
ஒருவு முதரத் தொருமூன்று முரத்தின் மீதி லொன்பதுவாம்
கருது முதுகிற் பதினாலு களன்மேன் முப்பத் தேழாமே 2

கத்தி முதலியவற்றால் ஊறுபடின் அபாயம் உண்டாக்கக் கூடிய அவயம் வன்மத்தானம் என்று கூறப்படும். மர்மஸ் தானம் என்பர் வடநூலார். நரம்புகள், தசை, என்பு முதலியவற்றின் சந்தியே வன்மத்தானமாகும். உடம்பு முழுதிலுமுள்ள வன்மத்தானங்கள் நூற்றேழு. அவை ஒவ்வொரு காலிலும் கையிலும் தனித்தனி பதினொன்றாக 44. வயிற்றில் 3. மார்பில் - 9, முதுகிற் -14 கழுத்தில் - 37. ஆக 107 இனி. அவற்றைத் தனித்தனி பிரித்துக் கூறுகின்றார்.

காலில் வன்மம் பதினொன்றும் அவற்றில் ஊறுபடின் உண்டாகும் அபாயங்களும்.

**1. அடிக்குழி**

ஆன காலி னடுவிரலி னடியைப் பற்றிக் குதியளவாய்
ஈன மறவொன் றாலளந்தே யிரண்டாய் மடித்தா லிதனடுவில்
ஆன வன்ம மடிக்குழியென் றவைவ ரதன்மேற் சத்திரங்கள்

மான முறவே படுமாகின் மரண மாகுங் கண்டாயே 3

## 2 - சிப்பிரம்

அருங்கழற் பெருவிர லடுந்தவங் குலிநடுத்
திருந்திய சிப்பிர வன்மஞ் சேர்ந்திடும்
நெருங்கிடு மெழுச்சியந் நிலையிற் றோன் றிடில்
வருந்துமா சேஷபக வாதங் கொல்லுமே 4

## 3-*கூர்ச்சம்

சிப்பிர வன்ம மேலே சேரிரண் டங்கு லத்தின்
ஒப்புறக் கூர்ச்சமென்னு மொருவன்மந் தோன்றுங் கண்டாய்
அப்புறப் படவெ ழுச்சி யதன்மிசைப் பட்டபோது
தப்பறக் காலைச் சுற்றித் தழிழன்று மெய் நடுங்குங்காணே 5

## 4-கூர்ச்சசிரம்

குற்ப சந்துவின் கீழிரண் டங்குலம்
சிற்ப கூர்ச்ச சிரமெனும் வன்மாம்
அற்ப சத்திரஞ் *சல்லிய மங்குறில்
ஒப்ப வேதினை வீக்கமு மோங்குமே 6

## 5-† குற்பம்

சரனுகீழ்ப் பாதந் தன்னிற் சந்துகுற் பம்மாம் வன்மம்
ஊனுற வெட்டுப் பட்டா லுழற்றிவே தினையைக் காட்டித்
தானுறு கால்தி மிர்த்துத் தளர்ச்சியோ டெடுத்து வைக்கும்
மேனியு மெலிவு காட்டு மெனமுனி விளம்பி னாரே 7

## 6-இந்திரவத்தி

எங்கணைக் கால்நடு விந்திர வத்தியாம்
தங்குறு வன்மத்திற் சத்திரஞ் சல்லியம்
உங்குறப் பட்டிடி லுதிரஞ் தோன்றியே
சங்கரித் திடுமெனச் சாற்றி னார்முனி 8

கூர்ச்சம் - குச்சுப்போன்றது - *சல்லியம் - ஆணி முள் முதலியன.
குற்பம் - கணுக்காற் பூட்டு

## கையில் வன்மம் -11

### (சிலவேறுபாடு)

காலுக்குங் கைக்கு மேற்குங் கடியயேதோர் வன்மமெல்லாம்
மேலது குறப நீக்கி மணிக்கட்டு வேறாய் நிற்கும்
சாலவே சானு நீக்கித் தயங்கிய கூர்ப்ப நிற்கும்
கோலியே யிவைக ணான்குங் கூடிவே றாகுங் காணே 14

உற்றிடு காப்பு மூட்டி லொளியிழைத் தெழுந்த தன்னிற்
கற்புற வதன டுத்தான் கக்ஷயா தரமாம் வன்மம்
பற்றிடு சத்தி ரங்கள் சல்லிய மவற்றிற் பட்டால்
முற்றுமத் தான மொண்டி முறுவலித் திருக்குங் காணே 15

காலில் குறப்பம் (கணுக்கால்) என்பதற்குப் பதில் கையில் மணிக்கட்டு என்றும், காலில் சாணு (முழங்கால்) என்பதற்குப் பதில் கையில் கூர்ப்பம் என்றும், காலில் துடைமூலத்தில் விட்டசந்தி என்பதற்குப் பதில் கையில் கக்ஷபாரதம் என்றும் கூறப்படும். கூர்ப்பம் - முழங்கை. கக்ஷயாதரம் - அக்குளின் நடு. எனவே கையிலுள்ள வன்மம் பதினொன்றும் பின்வருமாறு

1. உள்ளங்கைக்கு நடுமையத்தில் அடிக்குழி என்னும் வன்மம்.
2. பெருவிரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் மத்தியில் சிப்பிரம்
3. சிப்பிரத்திற்கு மேல் இரண்டங்குலத்தில் கூர்ச்சம்.
4. கூர்ச்சத்தின் தலையில் மணிக்கட்டுக்கு இரண்டங்குலம் கீழ் கூர்ச்சசிரம்.
5. மணிக்கட்டு
6. முழங்கைக்கும் மணிக்கட்டுக்கும் மத்தியில் இந்திரவதி.
7. முழங்கையில் கூர்ப்பரம்.
8. முழங்கைக்கு மேல் மூன்றங்குலத்தில் ஆணி.
9. முழங்கைக்கும் மூட்டுக்கும் மத்தியில் ஊரி.
10. மேல் மூட்டில் உலோகிதை
11. அக்குளின் நடுவில் கக்ஷயாதரம்

### 7 சானு

மென்கனுக் காலின் மேலே மேவிய துடையின் கீழே
தன்பொருத் ததனிற் சானுத் தன்மமாம் வன்ம மாகும்
வன்புறு சத்திரங்கள் சல்லிய மதனிற் பட்டால்
பின்புறு பித்தி மூண்டு பிழைக்கிற்கான் முடம் தாமே 9

### 8- ஆணி

சீரு சானுத் திரியங் குலத்தின் மேற்
சோரு மாணி யெனச்சொலும் வன்மமாம்
பார சத்திரஞ் சல்லியம் பட்டிடில்
ஊரும் வாத முதித்திட வீங்குமே 10

### 9- ஊரி

சானுநல் லூரு முட்டுச் சார்நடு வூரி வன்னம்
கூனெனுஞ் சல்லி யங்கள் கொடியசத் திரங்கள் பட்டால்
வானுறு முதிரம் பாய்ந்து வடுவறத் தீர்ந்த போதும்
தேனுறு மொழியாய் வற்றித் தேயுமோர் பக்தந் தானே 11

### 10 - உலோகிதை

ஊருவின் மேலின் முட்டி லுலோகிதை யென்னும் வன்மம்
சாரவே சத்திரங்கள் சல்லிய மதனிற் பட்டாற்
சோருநீ ருதிரம் பாய்ந்து சுருங்கிப்புண் தீர்ந்த போதே
சேருமப் பாகம் வற்று மெனமுனி செப்பினாரே 12

### 11. விடசந்தி

பன்னு குய்யத் தொடுபாதக் கழல் நடு
என்ன நிற்கும் விடசந்தி வன்மமாம்
பன்னு சத்திரஞ் சல்லியம் பட்டிடில்
தன்ன சுக்கிலத் தாதைக் கொடுக்குமே 13

சானு- முழங்கால் *ஊரு- துடை

## வயிற்றில் வன்மம் -3

### 1- குதம்

உற்றிடு முதரத் தன்னி லுறுங்குத மென்னும் வன்மம்
பற்றிடு சத்திரங்கள் சல்லிய மதனிற் பட்டால்
முற்றிடு மலமுங் +காற்று முடுக்கவே கழியா நிற்கும்
தெற்றுற மயக்கிப் பின்னைத் தியங்கவே கொல்லுமன்றே 16

### 2- மூத்திராசயம்

முயங்கிடு கடிதை தன்னில் மூத்திரா சயத்தின் வன்மம்
புயந்தனுப் போல்வளைந்து புரைமுகங் கீழாய் மேவும்
வியந்ததோ ரிறைச்சி நீர்போல் வியன்பெறக் கழிதா லத்திற்
தயங்குசத் திரங்கள் பட்டாற் சடக்கெனக் கொல்லுந்தானே 17

கருமூத்தி ராச யத்தைக் கல்லெரிப் பென்று கூறும்
உருகுகல் விடுநீ ரத்தி லொருபுறங் கீறி வாங்கில்
மருவவே யந்தப் புண்ணில் மாசலம் பலகாலுற்று
வருகையா லந்தப் புண்ணும் வாய்வெளுத் தாறா தென்னே 18

### 3- நாபி

பற்றிடு *மாம தாதுப் ¶பக்குவா சயத்து நள்ளாய்
மற்றெழு நரம்புக் கெல்லா மருவுமா தார மாகி
உற்றிடு நாபி வன்மத் துரத்தசத் திரங்கள் பட்டாற்
செற்றிடு மன்னந் தானுஞ் செரித்துறக் கழியா தென்னே 19

+குதம் - மலாசயம் - பெருங்குடலோடு இணைக்கப்பட்டிருப்பது. காற்றுஅபான வாயு. *ஆமதாது - ஆமாசயம் -இரைப்பை.¶பக்குவாசம்- இரைப்பைக்குக் கீழுள்ள சிறுகுடல் இவ்விரண்டுக்கும் நடுவில் நர்பி என்னும் வன்மம்.

## மார்பில்வன்மம் - 9

### 1. இருதயம்

உரமுறு தனத்து நள்ளா யுதரமே லந்த முற்றுப்
பொருளுறு மிந்தியங்கள் பொருந்திடப் போக்கி நிற்கும்
மருவிரு தயமா மென்னு மன்னிய வன்மந் தன்னில்
பருவுறு சத்தி ரங்கள் பட்டிடிற் கொல்லுந் தானே 20

### 2.3 ஸ்தனரோகி -2

### 4-5 ஸ்தான மூலம்- 2

தனமது மேலுங் கீழுந் தானிரண் டங்கு லத்திற்
குனிதன ரோகி யென்றுங் குயமுல மென்றுங் கூறும்
வினையுள சத்தி ரங்கள் சல்லிய மவற்றிற் பட்டால்
கனமுற வுதிரம் பாய்ந்து கம்பவிழ்ந் ததனின் மாயும் 21

### 6-7 அபத்ததம்பம்-2

அதிதனப் புறத்தி லஙகு வபத்தம்ப மென்னும் வன்மம்
இதமறு சத்தி ரங்கள் சல்லிய மிவற்றிற் பட்டால்
உதிரமங் குதரந் தன்னி லுறைக்கவே நிறைந்த வீழ்ந்து
மதியுறு சுவாத காச மருவியுண் மரிக்குந் தானே 22

### 8-9 அபலாபங்கள் -2

*முதுகுர நடுவு விட்ட மோர்ந்துதோ ளவற்றின் கீழாம்
பதியதி லுரத்தி னுக்குப் பாரிச மாகி யுற்று
வதியுறு மபலா பங்கன் வன்மஞ்சத் திரங்கள் பட்டால்
உதரமுள் ளிரத்தம் பாய்ந்தங் கூறுசீ யாகி மாயும் 23

*முதுகு - உரம் எனப்பிரிக்க - உரம்- மார்பு. மூலநாடி - முள்ளந் தண்டினூடாகப் போகும் நரம்பு - மலக்குழலுயர்ச்சி - இடுப்பின் பக் கப்பிதுக்கங்கள்

## முதுகில்வன்மம் -14

### 1-2 அடிக்கிராணி-2

உற்றெழுந்த மூலநாடி யோடுமை யங்குலத்தின்
மற்றிரண்டு பாரிசம் மலக்குழ லுபர்ச்சிமேல்
ஒற்றுசூர் கரோணித வடிக்கிராணி வன்மமாம்
பற்றுசத் திரம்படிற் பதைத்துவீழ்ந் திறப்பரே 24

### 3-4 சுகுந்தரம்-2

முதுகுநடு வென்பினோடு மூண்டவிலா வாமிரண்டு
மதிசாணங் கூடுசந்து வாசன்மேற் சுகுந்த்ரவன்மம்
இதுவிரண்டுங் குழியதுவா மிசைந்தசத்தி ரம்படுமேல்
மதிமயங்கிக் கீழ்த்திமிர்த்து மந்தமதா யிருந்திடுமே 25

### 5-6 நிதம்பம்-2

சுகுந்தரத்துத் கிருவிரல்கீ ழாகி மற்றைச்
சுரோணிசன்னி யென்பினுக்கு மேலாயுற்று
மிகுந்துவரு மாசயங்கண் மறைக்கப் பட்டு
மிக்கசிறுவெலும் பிருக்கு மிடத்ததாகித்
தகும்புகழ் சேர் நிதம்பவன்ம மிதிலே மிக்க
சத்திரங்கள் சல்லியங்கள் பட்ட போதில்
புகுந்துமிகு வுறவீங்கிப் பெலமுங் குன்றிப்
போதமுறு மேனியது வழியுங் காணே 25

### பாகசந்தி

பாரிச மிரண்டி னுள்ளும் பதிமூட்டுப் பொருத்திடமும்
சீரான விலாக்கூடிச் சிறந்திருக்குங் கீழ்மேலும்
பார்பாக சந்திவன்மஞ் சத்திரங்கள் படுமாயின்
வேர்பரவி மிகவுநின்று வேதனையா யிருந்திடுமே 26

## கழுத்தின் மேலுள்ள வன்மம்

### கபீரம்

கழுத்திரனிற் புறத்தினிலுங் கனதததோளின் மூட்டினிலும்
கிளைத்தெழு நரம்புமுற்றுங் சீறிவந்து பொருந்துமிடம்
இளைத்திடுங் கபீரவன்ம மிவற்றிற்சத் திரம்பட்டால்
வளைந்திடுங் கரமும்வற்றி வன்கழுத்தும் வாடிடுமே 27

### நீலை - மன்னை

கண்டத்தி னின்றெழுந்து கணுவணுவை யாதரித்து
மண்டியெழு நால்நரம்பு மன்னீலை மன்னையெனும்
தண்டிடுமீ ரிருபோதிற் றயங்கியசத் திரம்பட்டால்
கொண்டலெழுங் குரல்தாழ்ந்து கொடுமஞ்ஞை யாயிடுமே 28

### மாகிரிகை

கண்டமதி லிருபுறத்துங் கதிநாசி நாக்கையுற்று
மண்டியது பூண்டிருக்கு மாகிரிகை யெனும்வனமம்
மிண்டியுற விதுதானு மேலெட்டு விதமாகும்
தண்டியசத திரங்களபடிந் சடக்கெனவே கொல்லுமன்றே 29

### கூதாடிகை

உற்றதோர் தலைகழுத்து முடன்கூடுஞ் சந்துதனில்
மற்றகூ தாடியெனு மகாவன்மந் தோன் றுமதிற்
பற்றவே சத்திரங்கள் சல்லியங்கள் படுமாயின்
செற்றமாந் தலைகளெங்குஞ் சிக்கெனவே விறைக்குமன்றே 30

### விதுரை

கன்னமது கீழ்க்கு ழியிற் கனவிதுரை யெனும்வன்மம்
தன்னிலது சத்திரங்கள் சல்லியங்கள் படுமாயின்
மன்னுசெவி யிந்திரிய மற்றதுதன் றொழிலிழந்தே
உன்னியுன்னி யொருபாக மதிலுறவே யதிரும்மே 31

### பணம்

நாசியினி லிருபுறத்து நற்செவிக்குந் தாரையாய்க்
காதுகழுத் துக்கன்ன மளவுநேர் வாயிருக்கும்
ஓதுபண வன்மத்தி லுற்றசத்தி ரங்கள்படில்
தாதுமண மாறியது தன்னாசி யென்றுணரே 32

### அபாங்கம்- ஆவர்த்தம்

கருதியிடுங் கண்புறத்திற் கண்புருவத் தந்தத்தில்
மருவிடுங்கி ழபாங்கமென மற்றதன்மே லாவர்த்தம்
பெருக்கியிடு நாலுவன்மஞ் சத்திரங்கள் பட்டிடுமேல்
அருவி நீர் பெருகும்போ தலர்விழிதந் தொழிலிழகக்கும் 33

### சங்கம்

செவியருகு நெற்றிமுடி சேர்சங்க வன்மமதிற்
சவியுறவே சத்திரங்கள் சல்லியங்கள் படுமாகில்
புவியின் மிசை யவலம்வரும் பொருந்தியகண் ணதுசுழலும்
அவியமிகு மோகமதா யாவியம னுலகடையும் 34

### உற்சேபம் - தபனி

நெற்றியின் மேன் மயிர்முடிச்சி னேரியதோர் சங்கமத்தின்
உற்றிடுமுற் சேபமெனு முறுவன்ம மிரண்டோடு
மற்றிரண்டு புருவநடுத் தபனியெனு மொருவன்மம்
பற்றிடுமச் சத்திரங்கள் சல்லியங்கள் படலாகா 35
சங்கமுட னுற்சேபந் தபனியந்தா மோர் மூன்றில்
தங்கியிடு மெழுச்சிபுண்கள் சல்லியங்கள் படுமாயின்
அங்கதனிற் சத்திரங்கள் சலாகைபடி னபாயம் வரும்
பொங்கிமிகப் பழுக்கவிட்டுப் பொருந்தியிடுங் கிரியை செய்யே 36

### சிருங்காடம்

உற்றகண் ணாவு நாசி யுறுகன்ன மிவைபிரிந்து
வெற்றியுள் வாயிற் காணுமெழிற்சிருங் காட வன்மம்
மற்றுறு சத்தி ரங்கள் சல்லிய மவற்றிற் பட்டால்
சுற்றுடன் கொல்லுமென்று சுகமுனி யருளி னானே 37

**சீமந்தம்**

தலையினி லோடு தானுந் தானாறு வகையி லூற்று
நிலைபெறக் குறுக்குப் போக்கி நீள்வரை வளைவு தன்னில்
மலைவுறு சிமந்த வன்ம மதனிற்சத் திரங்கள் பட்டால்
அலைவுறு பித்த தாகி யிறிவிழந் துயிரி ழுப்பர் 38

**பிரமானந்தம்**

நெற்றிக்கு மேல தாகி நேரெழு முச்சி தன்னில்
சுற்றெழு நரம்புக்கெல்லாஞ் சூழ்ந்திடு மிடமுமாகி
மற்றது பிரமா னந்த மதனிற்சத் திரங்கள் பட்டால்
பற்றுற மோக மெய்திப் பழுதுறக் கொல்லுந் தானே 39

**வன்மத்தினியல்பு**

இப்படிச் சொல்லு கின்ற விவ்வகை வன்மந் தானும்
மெய்ப்படி யமுக்கிப் பார்த்தால் மிகவுநொந் திருக்கில் வன்மம்
செப்புறு தசைகளென்பு சிறுபெரு நரம்பு சந்து
தப்பறு நாடி யாறுந் தங்கிடு வன்ம மாமே 40
அறிந்திடு மாறு வன்ம மதனுளஞ் சேழ தென்னப்
பிறங்கிடு வன்ம மெல்லாம் பிராணனுக் கிருப்பா மென்னும்
குறைந்திடு மிதனி லிங்கு குறித்தசத் திரங்கள் பட்டால்
திறம்பெற வறிந்து நன்றாய்த் தெளிவுறச் செய்க வென்றார் 41

**மேற்கூறிய ஆறுவகையில்**

**1. தசையில்வன்மம்-10**

ஆகவே யிந்த வன்ம மறியினூற் றேழதென்ப
ஏகமாந் தசைமே மிந்திர வத்த நாலும்
சோகமாம் பாதந் தன்னிற் சொல்லடிக் குழியி ரண்டும்
நாகமாந் தனவு ரோகி நாலுடன் பத்து வன்மம் 42

**2. எலும்பில்வன்மம் -8**

சங்கம திரண்டு கடிக தருணந்தா னேரி ரண்டு
பொங்கிய நிதம்பம் ரண்டு புகன்றிடும் மமிசம் ரண்டு

தங்கிய வென்பு தன்னிற் றானெட்டா யிருக்குமென்ப
அங்கவை மதியா லாய்ந்தே யமதர்தன கண்டுகொள்ளே 43

### 3. நாடியில் வன்மம் - 21

ஆணியதி னாலுர்கூர்ச் சரத்தினாலு
மருங்கூர்ச்ச சிரநாலு மபாங்கி யத்திற்
பேணுமிரண் டாகுஞ்சிப் பிரத்தி னாலு
பெருகுமுற் சேபம்ரண்டு வத்தி யொன்று
கோணுமிவை நாடிவன்ப மென்பர் வேதங்
குலவுபல கலைகடந்து குவலயத்திற்
தாணுவென விருந்தருளை யுளத்தேயென்றுந்
தானிருத்தி நினைந்திருக்குந் தவத்தோ ரன்றே 44

### 4. பெருநரம்பில் வன்மம் - 9

அருகுகுத மொன்றங் கபத்தம்பந் தானிரண்டு
பெருவிதுரை யும்மிரண்டு பேர்சிருங்கா டந்நான்கு
மருவியிவை பெருநரம்பில் வன்மநவ மாயிருக்கும்
கருதிமலை யுறுமுனிவன் கழற்றியது கண்டுகொள்ளே - 45

### 5. நரம்பில் வன்மம் 36

சேரிரு பிருகதி செப்பு மெட்டெனும்
மாகிரி நீலைகண் மன்னை யும்மிரண்
டேயிரு கட்டியா தரமுட னிருபணம்
ஒதிரு விடபமு மிதய மொன்றதே 46

பாசமுறு நாபியொன்று பன்னியவொன் றிரண்டான
வீசியபா ரிசசந்தி யபலபந் தனமூலம்
மாசுபெறு முலோகிதைநான் மன்னியவூ ருவினாலு
மூசியமூப் பதுமாற முன்னுநரம் புறுவன்மம் 47

### 6. சந்து வன்மம் - 20

மாதவர்த்தந் தானிரண்டு மணிக்கட்டுத் தானிரண்டு
சீதவிரு சுகுந்தரங்கள் சீமந்த மலையைந்து
கோதுமிரு கூர்ப்பரங்கள் குற்பங்கூ தாடிகையும்

ஓதுமிரு முழந்தா ளுச்சியிவை சந்துவன்மம் 48

### சிலநூலாசிரியர்களது கருத்துவேறுபாடு

சிறக்கின்ற குதவன் மத்தைச் சிலர் தசை வன்ம மென்பர்
உறைக்கின்ற விடபங் கக்ஷயாதரம் விதுரமென்று
குறிக்கின்ற வன்மந் தம்மைக் கூர்நாடி வன்மமென்பர்
பிறக்கின்ற வபத்தம் பங்கன் பெருநரம் பல்லவென்பர் 49

### தசைவன்மத்திற் சத்திரங்கள்பட்டாற் குணம்

உற்றசதை வன்மத்தி னூடுசத்தி ரங்கள்படின்
புற்றுநிக ராய்க்கழுநீர் போலவிழும் புண்முகத்தில்
பற்றிவெளுத் துடலெங்கும் பலவிதன மதுசெய்து
முற்றுமது பிணியாகி முடித்துவிட மூலமிதே

### எலும்பு வன்மத்திற் சத்திரம்பட்டாற் குணம்

எற்றுமவ் வென்பின் வன்மத் திலங்குசத் திரங்கள் பட்டால்
மற்றது தசைகள் தாது மருவிய தண்ணீர் போல
உற்றுறு மென்பு தன்னி லூற்றியே யூனம் பாய்ந்து
பற்றுறு வலிப்புக் கட்டிப் பதைக்கவே கொல்லுந் தானே 51

### சிறுநரம்புவன்மத்திற் சத்திரங்கள் பட்டாற் குணம்

சிறுநரம் புற்றி ருக்குஞ் சீருறு மன்மந் தன்னில்
நெறிபெறு சத்தி ரங்கள் நேர்பெறப் பட்டபோது
மறிபடு மாங்கி ஷத்தில் வாதங்க டம்மி லூற்று
வெறிபட நின்று நின்று வேதினை யாக்கிக் கொல்லும் 52

### பெருநரம்புவன்மத்திற் சத்திரம்பட்டாற்குணம்

பெருநரம் புற்ற வன்மம் பேணியொன் றாகந் தன்னில்
மருவுசத் திரங்கள் பட்டான் மடக்கியே முடக்கு விக்கும்
உருகிடுந் தாது கெட்டங் குறுதசை யிரத்தம் பாய்ந்தே
அருநடை யதுவுங் குன்ற வறிவுவே றாக்கிக் கொல்லும் 53

### நாடிவன்மத்திற் சத்திரம்பட்டாற் குணம்

ஒத்திடு நாடி வன்மத் தொளிகொள்சத் திரங்கள் பட்டால்
மெத்தவே யிரத்தம் பாய்ந்து மேனியு மெலிவு காட்டும்

வன்மவிதி

சத்தமே யன்றிக் காசஞ் சலிப்புமே விளைப்பு விக்கல்
மத்தமே மிகவுங் காட்டி மரிப்பது திண்ண மன்றே 54

சத்துவன்மத்திற் சத்திரம்பட்டாற்குணம்

சந்துக ளுற்ற வன்மந் தனனிற்சத் திரங்கள் பட்டால்
கொந்தித்துக் கொதிப்பு முண்டாய்க் குளிர்ந்துவேதினையைக் காட்டி
முந்துற வீங்கிப் பின்னை முடியவே யூச மாக்கி
வந்துற்று வடிவம் வேறாய் வாடிமெய் தளருங் காணே 55

## ஏழுநாட்களுள் பிராணாபாயத்தை விளைவிக்கும் வன்மங்கள்

உந்தியிரு சங்கமிரு தயமதிப னொன்றா
மோதுகுத மொடுவத்தி யோரொன்று கூட
வந்தசிருங் காடநால் மாகிரிகை யெட்டு
வகுத்தவன்ம மிவைதம்மிற் சத்திரங்கள் பட்டால்
அந்தமென வேகொல்லு மெனத்தரணி மீதே
யாலமுறை கண்டாரு ளாரிய மனைத்தும்
சிந்தையுற வேமவிழி னாலி்.து ரைத்த
தெய்வமுனி வோரிவை தெரிந்தரு ளினாரே 56

முற்படச் சொன்ன வன்ம முடுகுபத் தொன்பான் றம்மில்
சொற்படச் சத்திரங்கள் சூழ்ந்துறப் பட்டபோதில்
கற்புறு முனிவர் தாமுங் கழறினர் நாளோரேழில்
வற்புறக் கொல்லு மென்று வரும்விதி யுணர்ந்து தானே 57

## ஒருமாதம் அரைமாதத்தில் கொல்லும் வன்மங்கள்

தம்பமே யிரண்ட தாகுந் தலவிரு தயங்க ணான்கு
நம்புசந் திகளிரண்டு நற்கடி சுரோணி யஞ்சு
கொம்புறு தனமி ரண்டு கூரிந்தர வத்தி நாலு
அம்புசிப் பிரமு நாலா மபலாப மிரண்ட தாமே 58

உன்னுபிரு கதியுமிரண் டுறுநிதம்பந் தானிரண்டு
மன்னுதன ரோகிரண்டு வன்மழுப்பான் மூன்றாகும்
வன்னமுறு சத்திரங்கள் சல்லியங்கள் படுமாகில்
பன்னுமொரு மாதத்திற் பாதியினிற் கொல்லுமன்றே 59

## சதைமுதலியன அழுகக் கூடிய வன்மங்கள் -3

உன்னுமிரண் டுற்சேப மோர்தபனி யெனுமுன்றில்
மன்னியந்தச் சத்திரங்கள் சல்லியங்கள் படுமாயின்
பன்னுசதை யுண்முளை பகர்நிணமுந் தாமுருகி
மின்னியபுண் வாயினால் மிகுதிபெறப் பாயுமன்றே 60

## ஊறுபடின் நிலைத்து நிற்கும் வன்மங்கள் -44

பணமுடனே யபாங்கியமும் பகர்விதுர நீலைகளும்
கணமுடைய மன்னைகிரு காடிகைக ளமிசங்கள்
துணிவுதரு மமிசபலஞ் சொல்லியவா வர்த்தங்கள்
மணமருவு விடபங்கள் மருவுசுகுந் தரங்களுடன் 61
சானுக்க ளுடன் கட்டி யாதரங்கள் கூர்ப்பரங்கள்
ஆனவிவை யிவ்விரண்டு மாணிகணான் கூருவிநால்
மானமுறு லோகிதை நான் மருவுகின்ற கூர்ச்சரதால்
ஊனமுறு நாற்பான்மே னாலுவன்ம முறுபடும் 62
நீண்டநாளைக்கு வேதினை மாறாதிருக்கும் வன்மங்கள்
கூர்ச்சிர நாலிரண்டு குற்பமிரு மணிக்கட்டு
மாற்றமுற வேவகுத்த வன்மமெட்டா மிவைதம்மில்
ஊற்றமிகு சத்திரங்கள் சல்லியங்கள் பமொயில்
பேர்த்துவரு வேதினைகள் பிணிபலவாய் நின்றிடுமே 63

## வன்மங்களின் அளவு

கருதுவிட பம்மிரண்டு கட்டியா தரமிரண்டு
மருவுமூ ருவிநாலு மன்னியகூர்ச் சிரநாலு
வருமிவைகள் பன்னிரண்டு மருவவொவ்வோ ரங்குலமாம்
நிரையுமணிக் கட்டிரண்டு நேர்குற்பந் தனமூலம் 64

சாற்றுவரி ரங்குலமாய்ச் சானுவுடன் கூர்ப்பரமும்
ஏற்றமுற வங்குலமூன் றென்பர்குதம் வத்தியுடன்
போற்றுமிரு தயநாபி புகனீலை சீமந்தம்
கூற்றுமுறு மாகிரிகை கூர்ச்சமுடன் சிருங்காடம் 65

உற்றமன்னை யிவையொவ்வொன் றுள்ளங்கை யளவாகச்
சொற்றனர்பின் னின்றவன்மஞ் சூழுமரை யங்குலமாய்ச்
சொற்றனர்மா மறைப்பொருளைத் தூயவுளந் தனிலிருந்தும்
பெற்றியினா லறுமுகனைப் பேணுமருந் தவத்தோரே 66

## ஏற்புவாயுவுக்கு வெள்ளுள்ளித் தைலம்-1

விடமிகுந்த செவ்வாலங் கொட்டையிரண் டிருபான்
வேர்க்கொம்போ டிந்துப்புத் திப்பிலிநன் மிளகு
கடமிகுந்த பெருங்காயஞ் சவர்க்கார நற்சீர்
கரியசீ ரகங்கடுகு முள்ளிதனிற் துழக்குக்
குடமிகுந்த வேரண்ட வெண்ணெய் தனிற் கூட்டிக்
குறுகவே காய்ச்சிநல்ல பதந்தில்வடித் துண்டால்
சடமிகுந்த வேற்பிடத்தில் வாயுவும்போம் பின்னைத்
தைலமுறை தானொன்று சாறுவமிங் கினுமே 67

## வெள்ளுள்ளித் தைலம்-2

சாற்றியவுள் ளிப்பருப்பங் கொருசிறங்கை சீலை
தனிற்கட்டிப் புட்டவிய லாயதனை யெடுத்துத்
தோற்றுமதை வெச்சனவாய்ப் பிழிந்து பெருங்காயஞ்
சுக்குமிள கிந்துசவர்க் காரந்திப் பிலியும்
ஏற்குமிவை தமையொக்கக் கொண்டுள்ளித் தைலத்
தினசந்திடுமா மணக்கெண்ணெய் சரியாகக் கூட்டிப்
போற்றியிட வெச்செனவைத் தேயிறக்கி முன்னே
புகன்றமருந் தினைக் கூட்டிச் சாரித்துக் கூட்டே

# பதினைந்தாவது
# சந்திரவிதி

குடவயி றுடைய வேழ முகன்கழ றலை மேற்கொண்டே
இடமிகு நரம்பி லுற்ற வெழிச்சிகள் பிளவை யாதி
விடமிகு கடிகை தன்னை யறுத்திடப் பண்டி தர்க்காய்த்
திடமுறு முனிவ ரந்நாட் சந்திர விதிசெய் தாரே 1

எண்ணுங் கருவி யிருபத்தா றென்றுலகில்
நண்ணிய வாகடந்தை நாட்டினான் - மண்ணில்
இனியதமி ழாலுரைக்க வெந்நாளு நன்முக்
கனியருந்துங் கற்பகமே காப்பு 2

விரிந்துபூ நறுந்தே னாடும் வியன்வரி பாடுஞ் சோலை
பொருந்திய தென்றல் மேவும் பொதியமால் வரையில் வைக் கும்
அருந்தவ முனிவன் றானு மாயுரு வேதத் துள்ளே
தெரிந்துநற் சத்தி ரத்தின் விதித்னைத் தமிழாற் செய்தான் 3

### கருவி - 26ன் பெயர்

மண்டலாக்கிரம் விருத்தி யுற்பல மருவுகை
கொண்ட கோடரி சூசி குறும்பி வாங்கி
ஒண்டொடி சுபத்திரம் பணபத்திரந் துவிமுகம்
விண்டகன்னி விதஞ்சாரி விரிகி வேதசபத்திரமே 4

தூண்டில் வீணை யங்குசம் பிரசோதி சோதி நிறைதாரை
காண்ட தத்திரி கூர்ச்ச நீள்படிச மங்குலி சத்திரம்
மீண்டு மந்தர் முகத்தினோ டசைமுகம் பையென விரித்தோர்
வேண்டுஞ் சத்திரமெட்டுமெட்டு மோர்பத்துமென்ன விளம்பினார் 5

### மண்டலாக்கிரம்

அருக்க னொளிசேர் மண்டலமு மாகத் தரையைப் புடையுடுத்த
உருக்கு நிரறமுக் கழஞ்சளவா யுற்ற வாறு விரனீளம்
நெருக்குத் தலைநெல்லொரு நான்கினள வாய்க்குழியினிறை தசையைப்
பொருக்கென் றறுக்குங் கருவிக்குப் பொருந்தும் பேர் மண்டலாக்கிரமே 6

### விருத்தி

நிறையி லுருக்குக் கழஞ்சானால் நீள மாறு விரல்கொண்டு
குறையாக் கருவி மூன்று விரல் கொள்ளும் வடிவு முக்கோணம்
பெறுமோர் விரலி லகலமதாய்ப் பிடங்கு மடியும் பின்றாழ்ந்து
முறைகூர் நீண்டு விற்போல் முதுகு வளையும் விருத்தியதே 7

### உற்பலம்

கூறிய வுருக்கி ரண்டு கழஞ்சிலை விரலாய்க் கொண்டு
மாறிலாக் கருவிக் காம்பு கால்விர லரையுங் காட்டி
மீறிலாக் கிரமுஞ் செய்ய வதத்தீனி லறுக்கக் கண்ணில்
ஊறிய காசாங் குத்தக் கருவியுற் பலம தாமே 8

### சூசி

உற்றதோ ருருக்கி ரண்டு கழஞ்சிலே யுருட்டி நீளம்
பற்றுநால் விரலே கூட்டிப் பக்கத்தின் முனையைத் தீட்டிப்
புற்றுடன் கடிகை நீக்கிப் புரையிவை முதலா வுள்ள
சித்திரஞ் செய்யச் சூசி சிலாகையை விடுக்க நன்றே 9

### குடோரி

உருக்கு மிரும்புமொருகழஞ்சா யொன்றாய்க் கூட்டிப் பதத்தடித்து
நெருக்கி யாறு விரனீட்டி நெற்போன் முனையை யுள்வளைத்துச்
செருக்கும் வாய்ச்சி தன்வாய்போற் றெளிவாய் வடித்துவைத்தெடுத்தூக்
குருத்திலடிக்குந் தலைவலிக்ககு நரம்பு றக்குங்குட ரோரியிதே 10

### முத்தரி

நன்றுநீ ருருக்ககை வாங்கி நால்விர னீளங் கூட்டி
ஒன்றாய் மூன்று பங்கிட் டொரு பங்கு வாய்க்கூ றாக
நின்றவேல் பலகை போல நீளமாய்க் குலவ நீட்ட
அன்றிய காதுகுத்து முத்தரிக் கருவி யாமே 11

## கத்தரி

ஆகிய காம்பி ரண்டுக் கீரறு கழஞ்சு ருக்ககைப்
பாவியே யடித்து நீட்டிப் பதத்திலை விரலே கொண்டு
மேவியே யஞ்சு கூறிட் டிருகூறும் விரிந்து மாறிக்
காவனஞ் சவரம் பற்றக் கத்தரி யென்ன லாமே 12

## குறும்பிவாங்கி

எண்ணியே சலாகை புற்போ லிருவிர லகலம் வாங்கிப்
பண்ணியே முளையி லெட்போற் பதியவே மடக்கித் தாழ்த்துக்
கண்ணியார் செவியிற் பூந்த கடுந்தும்பி யெறும்பு பூளை
அண்ணவே யடுத்துக் காதிற் குறும்பியு மகற்ற லாமே 13

## கபத்திரம்

இருப்பு தடகங் கிருபலத்தை யிருநால் விரலிற் சாரித்தே
உருக்குத் தகடு மொருபலத்தை யுள்ளே வைத்து மேன்மடக்கி
நெருப்பிற் காய்ச்சி நாலுதர நினைவா யடித்து வெந்தெடுத்துப்
பருக்கச் சாணை தனைவைத்தாற் பரிவாய்க் சலாக பத்திரமே 14

## பணபத்திரம்

இரும்புநாற் கழஞ்சு வாங்கி யீரைந்து விரலே நீட்டி
அரும்புபோன் முனைய கத்தி லாவரை விறகிற் காய்ச்சித்
துரும்புபோ லிசைபண் பாடுந் தொண்டையி லடைப்புண்டாக்கில்
இறும்பண பத்திரத்தை வைத்துளை நாக்கிற் கொள்ளே 15

## கரபந்திரம்

உருக்கு மிரும்புஞ் சரியாக வோரைந் திரட்டி கழஞ்சாக்கிச்
சுருக்கக் காய்ச்சி யாறுவிரல் துலங்க நீட்டி யதிற்பாதி
நெருக்கி யடித்தே யிரண்டுவிர லககங் கொள் நெடி தாக்கிப்
பருக்கும் வியாதி யில்லெலும்பிற் கீறும் பத்திரமே 16

**விண்டகண்ணி**

பற்றியே பதின்கழஞ்சா மிரும்பினாற் பகர நீட்டி
உற்றுமே பதினாலான வங்குல முயரங் கொண்டு
மத்தென முனையில் மூன்று கூறுடன் வகுத்து நீக்கிப்
புத்துடன் கடிக்கைக் காகும புகல்விண்ட கண்ணி யாமே 17

**சாரி**

அல்லறீ ருருக்கி ரண்டு கழஞ்சிலே யன்ப தாகச்
சொல்லிய விருநான் கெட்டு விரலிடை துவளக் கூட்டி
நெல்லிடை முனையை நன்றா யொளியுறு நிறம தாக்கி
வில்லினில் வியாதி யேய விதஞ்சாரி விடுத்த வாறே 18

# பதினாறாவது
# சிரை விதி

சீரணி முனிவ ரந்நாட் செப்பிய வாயுள் வேதம்
பேரணி நோய்க் டீரும் பெற்றியி லுதிரம் வாங்கச்
காரணி சிரையின் றானங் கருத்தினி லாய்ந்து கூற
வாரண வதனத் தெந்தை மலரடி துணைகொள் வோமே 1

## நோயற்ற சுத்தரத்தத்தினியல்பு

மதுரநல் லவண மிரண்டும் வருஞ்சுவை சமம தாகும்
சதிரதுஞ் சீத முட்ணத் தயங்கவூட ழிந்து நிற்கும்
எதிர்வன கமல கோப மேமமா மிவைக ளென்ன
உதிரமு முயலிரத்தம் போலுநற் காய மாமே 2

## இரத்தங் கெடுதிற்கு எதுவும்
## அதனாற் றோன்றும் நோய்களும்

சுத்தவவ் வுதிர முற்றுச் சுகம்பெறு மேனி மீதே
ஒத்திடக் கபமும் பித்து முறுமுறை பிறழ்த லாலே
மெத்தவே வேட்கை தோன்றி மேனியே கனக்கு மென்க
சித்தமுந் தாகந் தோன்றிச் சிறுசொறி யாகுங் காணே 3

விகற்பவிற் புருதி தோன்றும் பீலிகை குன்ம மாகும்
அயர்ப்பனன் மந்தமாகு மனல்வரச் சுரமுந் தோன்றும்
வயப்பெறு முகமு நோகும் வலித்தெழுஞ்சிரத்தி னோடு
கயப்பெறு தாது மற்றுக் கனலுமிவ் வண்ணமாமே 4

* சிரை-காரிரத்தம் ஓடும் நரம்பு. அதைக்கீறி இரத்தமெடுக்கும் விதி சீதமில்லாமலும் உட்டணமில்லாமலும் நடுவாயிருக்குமென்பது கருத்து. ¶ கமலம் - தாமரைப் பூ *கோபம் - இந்திர கோபம் ஏமம் - பொன்

**வாதபித்தமொன்று சொன்னபடி**

குட்டமே நிற்கப் பண்ணுங் கொண்டெழு வாத பித்தம்
துட்டமா யுதிர மிக்குத் தொடர்ந்துற நிற்கு மாயின்
இட்டமா யன்றி மேனி யெரிவெழும் புளித்த வாயு
நட்டமே சுழன்று வீழு நயனமும் பிரபை குன்றும் 5

**சீதோஷ்ணத்தோடு சீதமென்று சொன்னபடி**

**வாதகாலம் வந்து இரத்தமும் பித்தகாலம் பிறந்த இரத்தமும் சொல்லுவாம்**

ஒத்ததோர் வாதந் தன்னி லுறுதுட்ட ரத்தம் வந்தால்
மெத்தவே சீதமுற்று மிடுக்கறுத் துளையு மென்க
பித்தமே துட்ட ரத்தம் பேணியே பெருக வந்தால்
சித்தமே சலித்த மூன்று சேருமுட் டணங்கடாமே 6

**சீதமும் பித்தமும் ஒத்ததற்குக் குணம்**

**கபமும் வாதமும் கூடிக்**

கனத்துடன் வலித்தி ரும்மிக் கரகரப் புற்று நிற்கில்
மனத்துறக் கபத்தினோடு வாதமும் வருவ தென்க
சினத்துற வெரித் தழன்று சிந்திய மந்த னாகி
அனைத்துற வலிந்து நிற்கி லனிலமாம் பயித்திய மென்னே 7
சொற்படி சொன்ன விந்தச் சூழ்பித்த கபங்கார் தன்னில்
முற்படக் கனத்தெ ரித்து மூண்டெழு சிரங்க ளாகும்
மெற்படக் கரக ரத்து மேனியுஞ் சொறிவுண் டாகிக்
கற்படக் கனத்தி ரும்பிக் கசிந்துகண் ணீரு மாமே 8

**இரத்தம் விஷங்கொண்டதனால் உண்டாகும் நோய்கள் தீரச்**

சீதவுட் டணங்களோ டிரத்ததம்வற்றி யுட்புறம்
மோதவுற் றெழுந்தரோக முற்றியே மிகுந்திடும்

*மிடுக்கறுத்து - பெலன்குன்றச் செய்து

போதமுமற் றெழுந்தகாலை பொங்குதுட்ட ரத்தமும்
ஏதமுற்ற நாடிகீண் டெடுக்க நோய்கள் போகுமே 9
துட்டமா ரிரத்து முற்றுத் துவன்றிடப் பொங்கி வந்தால்
இட்டமே யறிந்து நீயு மிதிற்றாரை விடுவதென்க
முட்டவே யிரத்தங் கீறி மீட்கமுன் மருந்து செய்யிற்
கட்டமே படுவ ராகுங் காணுநோய் தீர்ந்திடவே 10

இப்படி யுரோகந் தன்னி லியைந்திடுங் குணங்கள் கண்டு
மெய்ப்பட வுதிரம் வாங்கி மேவியே மருந்து செய்க
அப்படிச் செய்யா யாகி லடுத்தநோய் போகாதென்று
செப்பிடு முனிவர் வாக்குத் தேர்ந்துசெய் குறிகள் காணே 11

## இரத்தம் எடுக்கத் தகாதவர்கள்

இசைந்தபன் னாறுக் குள்ளுமெழுபதின் மேலுமிங்ஙன்
அசைந்திட வுதிரம் வாங்க லவர்தமக் காகா தென்னும்
வசம்பெற நசைபி லார்க்கும் வரள்மிகு வுடைய பேர்க்கும்
கசம்பெறு ரோகி கனத்தெழு கருதுமா னிடர்க்கு மாகா 12

கருதிய வாத ரோகி கனத்தெழு சூலி யாமம்
பெருகிய ரத்த பித்தம் பெலத்தெழு சுவாத காசம்
மருளதி யோகஞ் சத்தி மகோதரம் பாண்டு சோபை
வெருவிட விவைக்கு நாடி விண்டிட லாகா‡தென்னனே 13
கருதிய விரேகஞ் சத்தி கலந்தனு வாசன நையம்
சினேகம் - எண்ணெய் முதலியவற்றைத் தேய்த்துக் கொள்ளுதல் அல்லது உட்கொள்ளுதல்
மருவிமுன் னிரத்தம் வாங்கல் மனத்துறச் சினேகம் பண்ணல்
பரவிய நிமித்த மன்றிப் பஞ்சவற் கிரியை செய்தல்
பெருகியே ரோகம் போகா தெனமுனி பேசி னாரே 14

## இரத்தம் எடுக்கும் நரம்பின் இயல்பற்றிய

### இரத்தமெடுக்கக் கூடாத காலம்

உதித்தெழு சீத மிக்கு மனலுருத் தெழுந்த காலும்
தொதித்தெழு காற்றின் முன்புங் கொடும்பனி மிகுந்த காலும்
மதித்தெழு முறக்கத் தாக்கு மருவுமிக் கால பேதம்
விதிப்படி யிவைக் ளெல்லா மாய்ந்திட வேண்டு மன்றே 15

சுத்தமா யியந்தி ரிக்கிற் சுடர்விடு நரம்பு தன்னை
ஒத்திடக் குறுக்கே யோடிற் குத்திட லாகா தென்னும்
மத்தமாய் மறைந்து நிற்கின் மருவவு மாகா தென்னும்
ஒத்ததோர் நரம்பு கண்டு குத்திட் லுறுதி யாமே 16

### இரத்தமெடுக்கும் தானங்கள்

### தலை கண்வலிகளுக்கு

தலைதனி நயனந் தன்னிற் றான்வலித் துற்றபோது
நலமிகு நெற்றி யுற்ற நரம்பினைக் கீறல் வேண்டும்
விலைமிகு மபாங்கந் தன்னிற் சக்குரை விடா தேயாகில்
பெலமுனை நாசி தன்னிற் பேணியே விடுவ தென்னே 17

### செவிரோகம் நாசிரோகங்களுக்கு

கன்னந் தன்னிற் கலந்து வலிந்துறில்
இன்னுங் கன்னத் தடியிற் சிரைவிடு
மின்னு நாசி யுரோகம் விளைத்திடில்
முன்னு நாசி முனையிற் சிரைவிடே 18

### பீநசத்திற்கு

பீநச மாவ தற்குப் பெய்தூறு கிரியை சொல்வாம்
ஆனவை நாசி லாட மதிலெழு நரம்பை நாடிந்
தானவை குத்தி யிங்குந் தணிவுற வுதிரம் வாங்கில்
ஈனம தின்றி மாறு மியல்பிது கண்டி டாயே 19

## நாசிகாபீடம்

பீநச மான நாடி பெரியதோர் நாசி பீடம்
ஊனெழப் புருவந் தன்னி லுறவலித் துச்சி குத்தும்
தானது வூதை போலுந் தயங்கிநீர் வடியுமெல்லாம்
ஈனம தறவே தேர்ந்தா லியற்றிடு கிரியை சொல்வாம் 20
ஆனது பீந் சத்தி னடுத்திடு கிரியை பின்னும்
தானுறு முரலின் மேலே தலையினைச் சாயவைத்து
வானுறு நாசி பீடம் வயங்குசத் திரத்தாற் குத்தி
ஊனுறக் கவிழ்ந்தி ருந்தே† யுதிரத்தை யூற்று மென்றார் 21
உதிரமே யூற்றங் காலையுறுகண்டத் தியந்தி ரிப்பால்
முதிரவே தோஷ ரத்த முணராமற் போக்கு வித்தும்
எதிருமிப் பீந சத்தி லெழுந்தநீர் மாறா தாகில்
சதிரமே நனைத்துப் பின்னைத் தானையம் பண்ண மாதோ 22

## முகவாதம்

இக்குணங் கண்ட போதே யிதுமுக வாதமென்னும்
புக்குற விதற்குச் செய்யப் புகல்கின்ற கிரியை கேண்மின்
மெய்க்குற லபாங்கந் தன்னின் மேலெழு நரம்பை யுன்னித்
திக்கற வுதிரந் தன்னைத் திறந்திட மீளு மென்றார் 23

உற்ற ரோக மபாங்கிய மேலெழி
லுவந்திந் நாடி திறந்திடின் மாறிடும்
மற்றி தன்னிற்றம் பித்து விடாவிடின்
மதித்த கன்னத் தெழுநரம் பைவிடு
முற்று கந்தச் சிரையைத் திறந்திடு
மூளும் வாகு நரம்பே திறக்கலாம்

‡ முகவாதத்தின் குணங்கூறும் செய்யுளும், அதற்குமேல் நசியமுறை கூறிஞ் செய்யுட்கள் சிலவும்செல்வாய்ப்பட்டொழிந்தனபோலும் § கந்தம் - நாசி வாகு - தோள் ¶ விரிகை - நெ்லபோன் முனையையுடைய ஓராயுதம்

சிரைவிதி

பெற்ற நால்வரும் பேணி யுரைத்தனர்
பேரு மிந்த முகரோகந் தீரவே

### உதட்டுரோகம்

அதரமேல் விதனந் தோன்றி யதுகண்டப் பட்டதாகில்
மதரெயி றடியி லுற்று மறித்துடன் ¶ விரிகை கொண்டு
சிதறிடக் குத்து வித்துத் தினவெழ வுதட்டிற் கீறி
விதமுற வுதிரம் வாங்கில் விளங்கவே தீருமென்றார் 25

### நாக்கு

உற்றணி தாலந் தன்னி லுள்ளவித் துறுதி தோன்றிற்
............................................ சலித்துற வலிக்கு மென்க
மற்றினி யிதனி னாடி மனமுற வலித்துக் கொண்டு
பற்றற விரிகை தன்னாற் பதிசுடர் வாங்கு மென்ன 26

நாக்கினில் விதன முற்றால் நலமறப் பிளந்து காட்டும்
நீக்கிட விதனை நீயு நிருமித்துப் பார்த்தறிந்தே
ஆக்கிட நாம டித்தா லதிலிரு புறத்திற் றுன்னும்
தாக்கிட விரிகை கொண்டு தான்சிரை விடுவதென்னே 27

### பைத்தியம்

சேருமுன் மாத ரோகஞ் செப்பிய வறிவ ழிழக்கில்
மார்பினி லுற்ற நாடி திறந்திட லாகு மென்க
‡ பார்வையின் கடையில் நெற்றி பற்றிய நாடி தானும்
சோர்வுறக் கீண்டு ரத்தம் வாங்கிடச் சுகமா மென்னே 28

‡பார்வையின் நடை - கடைக்கண். கடைக்கண்ணில் நாடி அல்லது நெற்றியில் என்பது கருத்து. அனுசந்தி - முகவாய்க் கட்டை. ‡ வாகு - தோள்

## அபஸ்மாரம் - முறைச்சுரம்

அபஸ்மார ரோகந் கன்னி வனுசந்தி நாடி கிறப்
பகையுற முறைச்சு சுரத்திற் பற்றிய வாகும்மத்தி
வகையுறு நாலா நாளில் வந்திடு சுரந்த னக்கு
மிகையுறு வாகு வின் கீழ் மேவிய நாடியாமே 29

## வயிற்றுவலி கடுப்பு வெட்டை இலிங்கரோகம்

வயிற்றினில் வலித்துளைந்து மருவிய கடுப்புத் தோன்றில்
இயற்படு மிடுப்பின் பின்னி ரங்குலத் துதிரம் வாங்கச்
செயற்படு வெள்ளை வெட்டை சேர்ந்திடி லிலிங்க ரோகம்
மயற்பட விலிங்கத் தின்மேல் வாங்கிட வுதிர மென்றார் 30

## கண்டமாலை முதலியன துடைவாதம்

உற்றிடு கண்ட ரோகத் தூருவி னாடி கீறப்
பற்றிடு துடைவா தத்திற் பகர்கின்ற கிரியை கேண்மின்
சொற்றிடு சானு மேல்கீழ் நால்விரல் தள்ளிக் கீண்டு
மற்றதி லுதிரம் வாங்க மாறுமென் றிருஷி சொன்னார் 31

## நரம்புச்சூலை துடைவலி

நரம்பினித் சூலை தோன்றி நாடெறும் பரவு மாயின்
வரம்புறு மிந்தா வத்தி யதலிரண் டங்கு லங்கீழ்
நரம்பினைத் திறக்க வூரு வதில்வலி தோன்றில் நாடி
உரம்பெறு ‡ குற்ப மேல்நா லங்குல மதனிற் கீறே 32

இந்திரவாதி - முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் மத்திலுள்ள வன்மத்தானம். ‡ குற்பம் - கணுக்கால்* அந்நரம்பு என்றது மேற் கூறிய குற்பத்தின் மேல் நாலங்குலத்திலுள்ள நரம்பை சிற்பம் - நகச்சுற்று *சிப்பிரம் பெருவிரலுக்கும் அடுத்த விரலுக்குமிடையிலுள்ள வன்மத் தானம்

## முழங்கால் வாதம் அடிவாதம் முதலியன

சானுவில் வாதந் தோன்றிற் சாற்று மந் நரம்பே கீற
ஊனுறு மடிசேர் வாதமுறுமொண்டி வெடிப்பெ ரிப்புத்
தானுறு *சிப்ப மாதி தமக்குச் சிப் பிரத்தின் மேலே
ஆனவி ரங்கு லத்தி னச்சிரை விடவென் றாரே 33

## முகத்திலுள்ள நரம்புநிலையறிய

கடறது முகமேல் நாடி கடியிரு ளூடே புக்குப்
பிறக்து பிடரி யுற்றுப் பெருகிய கழுத்தி லோடித்
திறவிடு கன் சங்கத் திகழ்நடுச் சிரத்தி லாகி
உறவிடு புருவத் தாகி யுற்றிடு நயனத் தென்னே 34

இத்தலக் கொத்தும் வண்ண மிதன்குண மறிந்து நீயும்
மெய்த்தனுக் கொத்த நாடி யெழுபத்தி ராயி ரந்தான்
உற்றெழு முகத்து ரோக முகத்திடு நாற்பத் தைந்தும்
முத்திசேர் முனிவர் போற்று முறைமையீ தென்று காணே 35
கண்ணதி லுள்ள நாடி கலந்துபின் பிடரி யுற்றே
எண்ணிய வாகுவோடி யியைந்ததோள் நரம்பைப் பற்றும்
நண்ணிய வந்த நாடி நலம்பெறவ் வழியே யோடித்
திண்ணிய வுடலிற் பாதஞ் சேர்ந்துசில் விரல் தாமே 36
நாக்கடி யுற்ற நாடி நகர்ந்திடு மாகந் தன்னில்
நீக்கிடக் கோசம் பற்றிப் பெருவிர லுற்று நிற்கும்
தாக்கிடப் பண்ணு மின்னுந் தயங்குமவ் வாகி லோடி
நோக்கும்பேர் விரலி லுற்று நுண்சிறு விரலும் பற்றும் 37

## சுண்டிநாடி

உற்றசில் விரலி னாடி யுழுன்றுபின் பிடரியுற்று
நிற்றிடு முதுகந் தண்டி னீள்சரி வழியே யோடி
ஒற்றிடு மூல முன்னி யுறுகண்ட நூலிற் புக்கு
மற்றுமே கனங்கு ளுற்று வருபெரு விரலும் பற்றும் 38

**நாசிநாடி**

நாசியி லுற்ற நாடி நற்சிகை தன்னி லுற்று
வீசிய சுண்டி யோடு விளங்கிய கண்டம் பற்றி
மூசுறு நெஞ்சு முற்று முயன் றுபிங் கலையு மாகி
லாசிய மூலம் பற்றி வந்துதாட் குடலு மாமே 39

**புருவநாடி**

புருவத்து நடுவி னாடி போயிரு கன்ன முற்று
மருவிய கபோலம் புக்கு மன்னுமேற் கன்னம் பற்றும்
உருவவே சானு வுன்னி யுறுபெரு விரல் தாகும்
மருவநற் பாகி யோடி மகிழ்ந்துகை விரல் தாமே 40

**கன்னநாடி**

கன்னம துள்ள நாடி கவிந்துமுன் சிரத்தைப் பற்றிப்
பின்னுறுந் கோணத் தோடிப் பிறகுதாட் சிறுவிர லதாம்
மன்னிய குதத்தை யுற்று மகிழ்ந்துமேற் கன்னம் பற்றி
உன்னிய சானு வுன்னிப் பெருவிரல் புறவடிய தாமே 41

**அபாங்கியநாடி**

கண்கடைப் புற்றதி லுற்றுக் கபாலநற்புறத்தி லோடி
நுண்சிரப் பாதியுற்று நுவல்கன்னத் தடியே யோடும்
விண்சுவற் கூடே யோடி வின விலா குவையும் பற்றி
நண்கணி விரலிற் சேரு நண்ணபாங் கியமா நாடி 42

**பிடரிநாடி**

இயங்கு பிடரி யிருநரம்பு மிசைந்த முதுகுப் புறத்தாகி
அயங்கு மரையி னுடன் சொருகி யமர்ந்து சானுப் புறத்தங்கு
தயங்கு புறநடி தனையுற்றுத் தானே யுரமா யுடம்பினுக்கு
வயங்கி வழங்க நடத்துவிக்கும் வலியே யுரமா மிதுதானே 44

**சங்கலாடநாடி**

சங்கலாடந் தன்னிலுற் றநாடி தயங்கு கண்டத் நாடிபுக்குப்
பொங்குநெஞ்சு புகுந்து வுந்திபொருந்துமே கனம் பற்றி நிற்கும்
அங்கதாகுமருகிடங்ஙனே யரியசானு ணூக்ககியிளகி மோதவே

சிரைவிதி

தங்குமந் தப்புறவுவடியே புக்கித் தானு மோடிப் பெருவிரலிற் சேருமே 45

அக்குமுதலியநாடி

மருவு சுவன்மேற் கழுத்துற்று மகிழ்ந்து கன்ன சங்கத்து
விரவு சிரமு மபாங்கியமு முகத்திற் சாடவனு சந்திகளில்
பரவ நாடி யதிலுற்றுப் பயின்று குத்திச் சுடர்வாங்கில்
விரவி யூனம் வாராமல் விளங்க வறிந்து செய்வாயே 46

வித்திரதி சூலைகட்கு

உற்றுறு மபாங்கந் தன்னி லுறுமக்குண் மார்பின் மத்தி
மற்றுமித் தானந் தம்மில் வந்திடு சிரைக ணாடிச்
சொற்றிடு விரிகை கொண்டு சுடர்குத்தி வாங்குமாகில்
பற்றுத் திரதி சூலம் பகர்ந்திடா தேகுங் காணே 47

மூன்றாநாட்சுரம் நாலாநாட் சுரங்களுக்கு

அங்கசத் துற்ற நாடி யமர்ந்துறக் குத்தி யிங்குப்
பொங்கித்த னுதிரம் போகப் புகுந்தமுச் சரங்க ளேகும்
வங்குற்ற கந்தநாடி வகுத்துறக் குத்தி விட்டால்
தங்கித்து நில்லா தேகு நானாளைச் சுரமுந் தானே 48

மேகநாடி

மேகமே யதனி லங்கு மிகுந்திடு ரோகம் வந்தால்
ஆகன முருந்த தண்டி லடியுறு நரம்பைக் குத்தில்
மாகன மான கோப மண்டிடு மேகம் வெள்ளை
ஏகுமிங் கிதனை யோர்ந்தே யிசைந்துநீ செய்வ தென்னே 49

களகண்ட ரோகநாடி

மருவு (கள) கண்ட ரோகிக்கு மன்னு கிருந்தியந் தான்மெல்லக்
கருதுஞ் சானுக் கீழாகக் கவிந்துநா லங்கு லங்கொண்டே
உருவ நாடி யதுவறிந்தே யுன்னிக் குத்தித் திறந்துவிடின்
பெருகந் தீர்ந்து விடுமென்று பேணி முனிவருரைத் தாரே 50

உற்ற திருத்தியெதுவென்றா லுன்னுங் கொண்டைக் குதிரை முகம்
மற்றைச் சானு விவைநடுவே மதித்த நாடி திறந்திடமேல்
பற்றுந் தோஷ ரத்தமெல்லாம் பாக மாறி விட்டாக்கால்
சற்றுங் களகண்ட ரோகந் தரியா தேருங் கண்டாயே 51

மருவு பரண்டை யதன்மேலே மருவப் பத்தங் குலமலந்து
பெருகுஞ் சானுக் கீழெட்டுப் பேணி யளந்தங் குலங்கொண்டு
லெருவ விதனை யமுக்கியிட்டா லிசைந்து நரம்பு காட்டுமதி
பரவி யிதனைக் கண்டுமனம் பதைக்க வறிந்து பாராயே 52

அறிய விதனைப் பார்த்தக்கா லாகந் தினையினரிசி போல்
மருவி யிருக்கு மதுதன்னை மருவ வாங்கிப் போட்டதற்பின்
பெருகு மெள்ளு முப்புமரை பேணி விரணத் தனில் வைத்தால்
வெருவிக் கண்டரோகமெலாம் விரைவாய்த் தீருமென் றுணரே 53

உன்னி யொருகா லதுவூன்றி யுயரச் சானு மேற்கட்டிப்
பின்னு மொருதா ளதுவூன்றிப் பேணி யெழுந்து நின்றாக்கால்
சொன்னபடியே நரம்புன்னுஞ் சொல்லிக் குத்து நரம்பென்றும்
மன்னு கிருத்திபந்திரிப்பால் மதித்துத் துப்பார்த்துக் கொள்ளாயே 54

## குற்பநாடி

குற்பத்து மேலங் குலநாலு கொண்டே
குணத்தோடு மன்னித்த நாடிப்பு றத்தே
சொற்பட்ட மூச்சைச் சுருக்கிப் பிடித்தே
சுகமாக வங்குள்ள வொருசானு மேலே
கற்பற்ற தாகவே யொருநாளை வைத்துக்
கலங்காம லுன்னித் திறந்திட்ட போதே
விற்பற்ற தங்குட்டந் தன்னா லமுக்கி
விரைந்தே குடோரி யதுகொண்டு தாக்கே 55

இப்படிக் குற்ப நாடி யெந்திரித் தேது றந்து
தப்புறு தோஷ ரத்துந் தன்னையே வாங்கு வித்தே

சிரைவிதி

ஒப்புறு சுத்த ரத்தந் தோன்றிய போதே மாற்றித்
தப்பிடா வண்ணஞ் செய்யத் தான்முனி யருளிச் செய்தான் 56

**முழங்கால்வாதம் முதலியவற்றிற்கு**

இக்குளே கண்ணி னாடி யின்னநாட் டந்தன் னிலது
புக்குறு துடையூறு டோடி மிகுகொண்டைச் சதையைகப் பற்றித்
தொக்குடன் குறப்பத் துற்றுத் துடர்ந்துபின் றாளின் முற்றும் 57

உற்றபின் னடியின் முற்றியுறுகின்ற குறிய தோடு
மற்றிது நடுவே யுன்னி மலர்ந்தெழு நரம்பு தன்னைச்
சுற்றிரண் டங்கு லத்திற் சுடருறக் குத்திவிட்டால்
சொற்படு காலு ரோகந் துவக்கற மாறுங் காணே 58

உற்றங்கு சோகித் துறுநாடி கண்டே
யுறுசூட்சி யுன்னித் திறத்தொத்து நின்றால்
மற்றிங்கு நீயும் மதிப்பின் னடிக்கே
வங்கச் சலாகைத் திறங்கொண்டு சுட்டால்
குற்றங் ளின்றிக் குணமாகு மிங்ஙன்
குளிரும் படிமோர் குடிப்பித்த போதே
பற்றுற்ற தாகம் மதுகெட்டு நீங்கிப்
பலரோக மதுதீரு மதுபாரு நீரே 59

**வாதகண்டம் பாதவெடிப்பு முதலியவற்றிற்கு**

புருவநடு மேலே பொருந்தியுறு நாடி
உருவவது வோடி யுறும்பின் பதத்தில்
மருவவிது தன்னை மகிழ்ந்தறிந்து கொண்டால்
பரவுமது வாகப் பணகுட்ட மாமே 60

உற்றுறு நாடி யுன்னி யூனெழத் திறக்கி லங்கு
பற்றுறு வாத கண்டம் படுபாதப் பிளப்பு மேகும்

* சுவேதிப்பித்தல் - வெயர்வை பிறப்பித்தல்‡ இயந்திரித்தலை - சீலையினால் கட்டுதல

மற்றதி லுப்பு நெய்யு மன்னுசுண் ணமுமே கூட்டிச்
சற்றுற வரைத்துப் பூசத் தாளுறு முரோகம் போகமே 61

## சீரை வீடமுன் செய்யவேண்டுவன

துய்யதோர் மேனி யெல்லாந் துவக்கற நனைத்துப் பின்னைப்
பையவே முழுகச் செய்து பயின்றீர மாற்றிக்கொண்டு
வெய்யவோர் பொழுது தன்னில் விதிபெறச் *சுவேதிப் பித்துச்
செய்யவே மற்றை நாளிற் றேர்ந்துபின் கிரியை செய்யே 62

நரம்புறத் திறக்கும் போது நலமுள வுணவு கொண்டே
உரம்பெற வோடு காய்ச்சி யொற்றிட முண்டந் தன்னில்
சிரம்பெற லொற்றிப் பின்னர்த் திகழவே யியந்தி ரித்துப்
புரந்துபி னுதிரம் வாங்கப் புாமுனி யருளிச் செய்தான் 63

உன்னிரு சாணி லுள்ள வுயரத்தி லிருக்கை சோ்த்தி
மன்னிய முழந்தாண்மேலே மகிழ்ந்திரு கூர்ப்பம் வைத்துப்
பன்னிய முஷ்டி தன்னைப்பதியிரு மன்னை தன்னில்
மன்னிய சீலை கட்டி மலரவே முறுக்குங் காணே 64

## சிரைவிடுமியல்பு

பிறகுற முறுக்கும் போது பிந்திரு தட்டங் கூட்டித்
திறம்படச் சுத்த முன்னே சிக்கெனப் பிடித்துக் கொண்டு
புறம்பொழக் தெசனி தனனாற் புடைக்கவே தெறித்துப்பார்த்து
நிறமுறக் கண்டநாடி யங்குட்டத் தமுக்கிப் பாரே 65

பார்த்துப்பின் னதனி னன்கு பயின்றிடுங் குடோரி தன்னால்
சீர்திடக் கைப்பிடித்துத் திசைநடு நாடி வைத்துச்
சேர்த்திடும் வலக்கை கொண்டு சேர்நடு விரற்றெ றித்தே
ஆர்த்திடக் குத்திப் பின்னை யதிற்சுடர் வாங்கு மாறே 66
கருகிய குடோரி கொண்டு கண்டிடு நாடி தன்னை

சிரைவிதி

உருவுறக் குத்தும் கோதே யுன்னிக்கை நடுங்கி டாமல்
வெருவிய வன்மந் தள்ளி விரைவுறு புத்தி தன்னால்
பரவியே குத்தயென்று பகர்ந்தனர் முனிவ ரம்மா 67

பரிசனஞ் செய்த பின்னைப் பண்பினாற் பிடித்துக்கொண்டு
கருதிய நாடி தன்னைக் காட்டிய விரிகை தன்னாற்
பெருகிய வுதிரந் தோன்றப் பேணியே கிரியை செய்ய
மருவுமா முனிவர் தாமு மகிழ்வுறச் செப்பி னாரே 68

## நாசியியந் திரிப்பு

அங்குட்டந் தன்னால் நாசி யதன்முனை யுயர்த்திக் கொண்டு
தங்கிய தலையை நன்றா யுரவினிற் சாய்த்தி ருத்திப்
பொங்குகைச் சித்தி ரத்தாற் புகலுமுட் சதையைக் கீறி
அங்குறு மிரத்தம் போக்கு மதுநாசி யியந்தி ரிப்பே 69

## நாக்கியந் திரிப்பு

நாக்கெழ நீட்டு வித்து நன்செலத் தாற்பிடித்து
வாக்குடன் மடித்து போது வருமிரு புறத்தி னாடி
தாக்கிடும் விரிகை கொண்டு தான்விட ரத்தம் போக
நீக்கிடு மிதுநாத் தன்னி வியந்திரிப் பென்று தேரே 70

## கழுத்தியந்திரிப்பு

உற்றிடு கழுத்தின் மேலே யுறுகின்ற நாடிக்கெல்லாம்
மற்றுறு கிரியை சொல்வன் மாகண்டத் தியந்தி ரிப்பால்
சற்றி மறவா வண்ணஞ் சாதனமாகக் கொண்டு
பற்றிநீ செய்க வென்று பரமுனி யருளிச் செய்தான் 71

## உதரரோகத்துக்கு

கல்லுக்கை யுள்ளே வைத்துத் கருதிய சானு மேலே
புல்லிய கூர்ப்பம் வைத்துப் புறங்கையை யூன்றிப் பின்னர்
ஒல்லிய வுதர முற்று மொக்கவே பிசைந்தங் கேற்றி
மெல்லிய கூர்ப்ப முற்று மேலிரு விரன்மேற் கட்டாய் 72

கட்டிடுஞ் சலமுற் கொண்டு கலந்துறப் பார்த்த போது
தொட்டிடு நாடி தானுஞ் சொல்லிய வாகிற் றோன்றும்
விட்டிடும் விரிகை தன்னை வியப்படு முதிரம் போகப்
பட்டிடும் பிலிகை குன்மம் பறந்திடும் வலியும் போமே 73

உற்றவங் குட்டந் தானு முள்ளுறக் கைம டித்து
மற்றிதன் மேலே யிங்ஙன் மருவுநா லங்கு லங்கொண்
டுற்றவஸ் திரத்தாற் கட்டி யூன்றியே தெசனி தன்னாற்
பற்றிட வமுக்கி யூன்றப் பாரிச நரம்பு தோன்றும் 74

பாரிசந் தன்னி லிங்கே பதைந்தெழு நாடி தன்னைச்
சீரிய முறையாற் றேர்ந்து சிக்கெனப் குடோரி கொண்டு
பிடரித் தாக்கிப் பின்னைப் பெருகிடு மிரத்தம் போக்கில்
வேருறு சிரங்கு குன்ம மிகவிரைந் தேகுங் காணே 75

## செவியியந்திரிப்பு

உற்றுறு கணைக்கால் தன்னை யுவந்துபின் னூன்றிக் கொண்டு
மற்றடி சானு வூன்றி வாகுபந் தனமே செய்து
வெற்றிடுங் கன்னத் தின்கீழ் மேவியங் கதன்மே லூற்றுப்
பற்றிடு கின்ற நாடிகள் பார்த்தங்ஙன் குத்தி யாயே 76

பார்த்திடக் குததிப் பின்னைப் பதிவிட்ட ரத்தம் போக்கில்
ஆர்த்துப சங்க மெல்லா மமர்ந்துற மாற்று விக்கும்
சீர்த்திநோய் சிரங்கு குட்டந் தீரவே மாற்றுமென்று
சரத்துமுற முனியு ரைத்தான் றக்கவர் பாருமென்றே 77

சிரைவிதி

உற்றிடுங் கன்ன நாடி யுன்னிய கடிகை புக்குப்
பற்றிடும் பானுஞ் செங்கோல் பாதவங் குட்டஞ் சேரும்
மற்றிது வண்ட முடே மார்க்கமோ டுந்தி பற்றும்
எற்றிடு நெஞ்சு கண்டத் தெய்திரு நயனத் தாமே 78

சானுநாடி

தானுறக் காலை யூன்றிச் சானுவின் மேலே கட்டி
ஊனறு சானு வைத்தே யொக்கவே யியந்தி ரித்தால்
மேலுறு நரம்பு தோன்றின் மேவியே குத்துமென்று
வானுறு முனிவன் சொன்னான் வகுத்து நீ செய்வதென்னே 79

ஒருபாதந் தன்னை யூன்றி யுற்றநற் சானு பட்டும்
உருவியே பிடித்து விட்டா லுற்றெழுங் குற்பநாடி
மருவுற விதனைக் குத்தி மகிழ்ந்துபின் சானுநாடி
இருவிர லதன்மேற் குத்தி யியந்திரிந் துதிரம் வாங்கே 80

இப்படி யியந்தி ரித்தே யியல்பாக வாங்கு மந்த
மெய்ப்படு தோஷ ரத்த மேவியே வந்த போதில்
தப்பிடா வண்ணஞ் செய்யுந் தானுறு நோய்கட் கெல்லாம்
அப்புறு கண்ணி னாலே யறிந்துச் செய்வ தென்னே 81

அப்புரு வத்தை யூன்றி யதிற்சீலை தன்னாற் கட்டி
இப்படிக் கழுத்தி னாடி யிதிலுற வழுந்தும் போது
மெய்ப்புற மங்கை நாடி மேவிய தோன்று விக்கில்
ஒப்புறச் சுவாச முள்ளே யுவந்திநீ யிருத்திக் கானே 82

கந்தநாடி

தலையொரு குறத்திற் சாயத்துத் தானகந் தன்னிற் கட்டி
நிலைபெற முறுக்கும் போது நின்னிரு சுவாச நோக்கும்
மலையொரு தனத்தி னானே மாகந்த நாடி தோன்றும்
அலைவறக் குத்தி விட்டே யதிலவிஷ ரத்தம் போக்கே 83

பெறவிது வாங்கிக் காயம் பேணியே சொல்லக் கேளாய்
திறவிது கந்தநாடி யியந்திரிப் பாக்கிக் கொள்வாய்
உறவிது கிரியை முற்று முகந்திடு நோக்கா டெல்லாம்
பெறவறச் சாற்றி வைத்தார் பேரருண் முனவ ரம்மா 84

இப்படி யியந்தி ரித்தே யிதின்படி கிரியை செய்யும்
மெய்ப்படு நாடிக் கெல்லாம் விளங்கவே யியம்பி வைத்த
அப்படி யந்த மதிலுறு சந்துத் தானம்
தப்பிடா வண்ணஞ் செய்யச் சகமுனி யருளி னானே 85

## விரிகையும் குடாரியும் பிரயோகிக்க வேண்டிய அளவு

கருதுநோய்ச் சதைப்பு றத்திற் கதித்தவவ் விரிகை கொண்டு
நிறமுறு நாடி தன்னி னெல்லினி லளவே குத்தும்
மருவிய யவையின் பாதி மற்றங்கு குடோரி கொண்டே
உருவிய வத்தி நாடி யுற்றிடத் திறப்ப தென்னே 86

## நரம்பு நன்குகீறப்பட்டதின் குறியும் பின்செய்ய வேண்டியதும்

நரம்பினி லியல்ப றிந்து நன்குறக் கீறி விட்டால்
பரவிட ரத்தம் பாயப் போக்கிப்பின் யந்திரிப்பு
விரவிட வவிழ்க்க நிற்கு மிகக்கீறி ரத்த மிக்குப்
பரவிடிற் றயில மல்லாற் சூரணந் தடவ மாறும் 87

சார்ந்திது நாடி வன்மஞ் சார்புறு நாடி குத்திச்
சீந்திடச் சுருங்கா தென்றுஞ் செறிந்துற துரைத்துப் பாயில்
ஆர்ந்துறு முதிரந் தன்னை யனிலமா ரோக முற்றும்
சேர்ந்துறக் கொதிக்கு மென்று செப்புவார் முனிவர் தாமே 88

## இரத்தம் நன்கு வெளிவராமல் இருக்கும் சில காரணங்கள்

பயந்துமுச் செறிப வர்க்கும் பருவுடல் தளர்ந்த பேர்க்கும்
வியந்திடு வேகந் தார்க்கும் வேர்ததுமெய் நடுங்கு வோர்க்கும்
நயந்துமுன் னியற்றக் கூறுங் காரிய வழிநில் லார்க்கும்
சயம்பெற வுதிர நன்றாய்ச் சாருத லில்லை யென்றார் 89

## நரம்பு மூசித்தார்க்கு மருந்து

நரம்பினின் முகந்தா னிங்கு நலமறக் கொதித்து நின்றால்
உரம்படு விழால்நன் மஞ்ச ளுற்றமுக் கடுகு முப்பும்
அரம்படு புகையு றையு மரைத்துநல் லெண்ணெய் தன்னில்
திறந்திடு நாடி தன்னிற் றேய்த்துநீ யிடுவ தென்னே 90

செப்புமித் தயிலத் தாலே சேர்ந்தபுண் மாறா தாகில்
உப்புட னெண்ணெய் தன்னை யுற்றுறக் கொதிக்க வைத்து
மெய்ப்படத் திறந்து நாடி மேலிதைப் பூசித் தேய்க்கில்
வெப்பிடும் விரண மாறும் விரைந்திது செய்க வென்றார் 91

நயம்பட வுதிர முற்ற நாடியுந் திறந்தி ருப்பின்
இயம்பிடு தயில முப்பும் வெச்செனத் தேய்க்க வென்பர்
வியன்படு துட்டரத்த மேவிய குசும்பைப் பூவின்
லயம்படு தபில முற்போல் வருஞ்சுக மாகக் காணே 92

அதில்விஷ ரத்தமெல்லா மதிசுக மாகவாங்கி
மதியுறச் சுத்த ரத்தம் வந்தவப் போதே மாற்றி
எதிர்விடு நாடி தானு மெதிர்த்துறப் புடைத்து நிற்கில்
கொதிவரு மருந்து தன்னைக் கொண்டுற வைப்ப தென்னே 93

## சிரைவிடும்போது மூர்ச்சையுண்டானால்

வியன்பெற மூர்ச்சித் திட்டு விதனமே யுற்று நிற்கில்
நயந்திரு தினத்தி லாதல் நாளது மூன்றி லாதல்

அயர்ந்துறத் திறந்து நாடி யசையவே பாயவிட்டு
வயம்பெற லடைந்து மாற்றில் வருந்துநோய் தீரு மன்றே 94

## வாதரத்தம் பித்தரத்தம்மறியும் படி

மாருத மான ரத்த மாசறக் கருக்கி காட்டும்
ஊருறு வரட்சி யாகி நெகிழ்ந்துபின் னுரைத்துக் காட்டும்
சீருறு பித்த ரத்தஞ் சேர்கரு மஞ்சள் போலாம்
பாருறை யாது சூட்டிற் பலபுள்ளி வடிவங் காட்டும் 95

## கபரந்தித்ரம் திரிதோஷரத்தம்

கபத்தினால் வந்த ரத்தங் கனத்தெழு நெய்ப்ப தாகு
நிபத்துற வெளுத்துப் பின்னை நிணப்பிசு பிசுப்ப தாகும்
அபத்திரி தோஷ மெல்லா மமர்ந்துறக் கூடி நிற்கில்
விபத்துற மலின மாதி விரிவிமுக் குணடுங் காட்டும் 96

## இரத்தம் குத்திவாங்கும் பிரமாணம்

அந்தவன் னாடி தன்னி லதிபேல வான்க ளாகில்
முந்தவத் துட்ட ரத்த முதிரவே நாழி வாங்கும்
இந்தநல் லளவே யன்றி யதின்மிக வாங்கு மாகில்
சிந்திட வனலா யுள்ளஞ் சிதைந்திடு பாகம் வேறாம் 97

மருவு முதிர மிகப்போகின் மருண்டு நயன மயங்கிவிடும்
கருதும் பவள மதுபோலக் கனத்த வுடம்பு வெளுத்து வரும்
உருவ மயங்கி யுட்புகைந்தே யுள்ளே யிருமி யனல்கொளுத்தும்
பெருக்கி வாத மோதித்துப் பிதற்றிப் பிழைத்துக் காட்டுமன்றே 98

## இரத்தம் மிகுந்து வடித்தாற் பானம்பண்ணுவிக்க

உற்றவவ் வளவி லன்றி யுதிரத்தை மிக்கு வாங்கில்
செற்றிடு நோய்மி குந்து மரணமாஞ் சிகிச்சை கேண்மின்

சிரைவிதி

உற்றபா லுதிர மாமி சத்தினி லுதிர மின்ன
குற்றம தறவே யூட்டிற் குணமுறு மெனவு ரைத்தார் 99

கருத்தினின் மிகவு மாய்ந்து கழறிய முறைதப் பாமற்
பருத்திடு சிரையைத் கீறி யுதிரத்தை வாங்கல் பண்பாம்
இரைத்திளைத் திருப்ப வர்க்கு மிசையமூத் திருப்ப வர்க்கும்
உரைத்திடுசிரையைக் கீண்டல் தீமையென்றுரைத்தார் முன்னோர் 100

செப்பிய முறைக டேர்ந்து திறம்படச் செய்யா னாகில்
அப்படித் தீமை சூழ்ந்து வறிவிலாச் சிகிச்சை யாளன்
மைப்படு நரகி லாழ்ந்து மறுபடி நாயாய்ப் பேயாய்
இப்படிப் பிறந்தி றந்தே யிடருழ்ந் திருப்பன் பன்னாள் 101

இங்கு 4-5 செய்யுட்கள் வரை செல்வாயப்பட் டொழிந்தன. பின்வரும் மூன்று செய்யுட்கள் சிதைந்து போன ஏட்டிலிருந்து ஒருவாறு செப்பஞ் செய்யப் பட்டன. சிலவற்றின் பொருள் விளங்கவில்லை.

மாதமுலவாமம் பயின்று வலக்கை.... றானினிப்
பீதமிடா வாமகரம் பின்னுதலஞ் சாகுமெனும்
ஒதுமிது வடைவே யொன்றேழில் நாடிவிட
வேதமது வப்படியே விரிந்துரைக்குங் கண்டாயே 102

பலநிறை

பத்துமுன் றரைப் பலமொரு நாழியென்
றொத்திப்படியே யுற்றறிந்தே கொளும்
............................................................
சித்தமுற்ற சிவமுனி செப்பினன் 103

உற்றிடுங்குதிர முறமிகவே போயிலைக் க்கில்
மற்றிங்குற நனைந்து மகிழ்ந்திரத்தந் தான்மாற்றி
முற்றுமிகு பாலினுடன் முன்னுவசா வுதிரமதும்
குற்றமற வேபருகிற் குணமாம் பெலமாமே 104

உற்றிடு மிரததந் தன்னை யுவந்தியந் திரித்து வாங்கில்
மாற்றினி யிரத்தம் போகர வாறுவெக் நீரான் மாற்றிச்
சொற்றிலே வெண்ணெய் கொண்டு சுகமுற வொற்றி யங்கே
பற்றுமச் சிரையிற் கட்டிப் பார்த்துநீ கிரியை செய்யே

## தோஷரத்தம் மிஞ்சியிருந்தால்

அதிர்த்தெழு தோஷ ரத்தமது மிஞ்சி யிருக்கு மாயின்
எதிர்த்திடு மறுநா னன்றி யைந்தாநா ளிருபத் தொன்றில்
மதித்தநா லாறு நாளின் மறுபடி கிரையைக் கீறி
கதித்திடு தோஷந் தானுங் கலந்தவவ் வுதிரம் வாங்கே 106

## அற்பமாய் மிஞ்சிய இரத்தம் சுத்தி செய்யும் வழி

துட்டரத்த மற்ப நிற்கிற் றொடர்ந்தநோய் மிகுந்திடாது
விட்டவவ் விரத்த நீங்க வெகுவித கிரியை செய்மின்
சுட்டிடு மிலங்க ணத்தாற் சோஷண மாதி யாலும்
இட்டிடு மருந்தி னாலு மியல்புற நீக்க லாமே 107

## விரணத்துக்குச்சூரணம்

உற்றவெள்ளிலோத்திர முழுந்து ஞாழ லஞ்சனம்
முற்று செஞ்சந் தனத்தினோடு முளரி நாக கேசரம்
பட்டு நல்ல வத்திரம் பகரிந்தை காவிமண்
அந்தி யால ரசினே டருங்கொழுந்து தோலிவை 108

ஒத்துலர்த்தி யிங்ஙனே யுவந்திடித்த சூரணம்
சித்திமுற் றவிரணமேற் செறிந்து தூவி யுள்ளுறச்
சத்துமிக்க நாரிசீந்தி லாதிசேர் கஷாயமுண்
சுத்தமுற்ற விரணமாய்ச் சுகம்பிறந்து மாறுமே 109

மாறிடா திரத்துமிக்கு வந்திடிற் சலாகையால்
ஊறுறக் கருக்கியங்க னுற்றநாடி வேறிடம்

சிரைவிதி

கீறுறக் கசந்திரத்த நின்றிடும் முபாயமாய்
வீறுறத் தெறிக்கவென் றிசைத்த வார்த்தை மெய்ம்மையே 110

பரிந்தவவ் வுதிரம் போக்கிப் பரவுநல் லுதிரம் வந்தால்
தெரிந்ததை யறிந்து மாற்றித் தெளிவுறச் செய்யா யாகில்
புரிந்துறத் தாக மோகம் புகையெழுப்ப போலிவிழுந்து
தருந்துயர் குரலுந் தாழுந் தகுந்தது செய்கு வீரே 111

## துட்டரத்தம் நீங்கியதற்கு அறிகுறி

புதியநல் விரத்தஞ் சேரிற் பொருந்திய பலன்கள் கேளும்
கொதியனற் சூட தாகா கொள்சிறு சூடு கொள்ளும்
மதியுறு பாகஞ் செய்யு மகிழ்ந் துநல் விரதஞ் சேரும்
கசியுறு தேக மெங்குங் கண்ணுறத் தெரிவ தாமே 112

கருதியுட் டெளிவ தாகுங் கண்களு மொளியைக் கொள்ளும்
மருவிமுன் கெட்ட வேக மதுமதி வேக மாகும்
அருவியுட் சுகம தாகி யதிபெல முள்ள தாகும்
பெருகுநல் லுதிர முற்றாற் பேணியே கண்டு கொள்ளே 113

## பாத அங்குட்ட நாடி

பாதவங் குட்டநாடி பரந்துதாட் குழியைப் பற்றி
ஒதிய குற்பத் தோடி யுறுஞ்சானு கடிகை புக்குக்
காதுறு முந்தி புக்குக் கழுத்திற்றுச் சிரசி லேறித்
தாதுற புருவம் வந்து தான்கெந்தகக் கடிய தாமே

## தெசனிநாடி

பதமுறு தெசனி நாடி பதிந்துமுன் னடியைப் பற்றி
விதமுறு குற்பத் தேறி விளங்குடுற் சானு புக்குக்
கதமுறு துடையூ டோடிக் கலந்தவக் கடிகைபுக்கு
மதமுற மார்ப்பு கண்ட மகிழ்ந்துற நிற்குங் காணே 115

இதன்கீழ் நரம்பு நாடி முதலியவற்றின் நிலைகளும்; எலும்பு, தசை, நரம்பு முதலியவற்றின் வன்மங்களிலும் மற்றிடங்களிலும் வரும் எழிச்சிபிளவை வாதம் முதலியவற்றின் குணங்களும், அவற்றின் சாத்திய அசாத்தியங்களும், ஏற்புவலி தோன்றும் ஏதுக்களும் குறிகளும் சிகிச்சையும் முதலியன கூறும் பகுதிகள் பிரதியைக் கொண்டு செப்பஞ்செய்து கொள்ள முடியுமானால் விடப்பட்டன. இடையிடையில் அரிதிலெழுதிய சில செய்யுட்களை இதன் கீழ்ச் சேர்ந்திருக்கிறோம்.

கதிந்தமுன் னடியி லங்கு கலந்துபுண்ணாக வுற்றால்
குதித்ததில் வியாதி யென்னு மனிலாமா ரோகந் தோன்றில்
விதித்து முன் சொன்ன நாடி விரிந்துமத் தானத் தூடே
எதிர்த்ததி லோடிப் பற்றி யெரியெழத் தாக்குமென்னே 116

அருஞ்சிறு விரலி லங்கே யமர்ந்துறக் கொதிகள் வந்தால்
வரும்பவன் மானி யென்னும் வாதமே வந்து தோன்றில்
பொருந்து முன் சொன்ன நாடி போம்வழி யேகிக் குத்தி
மருண்டுற வலித்துப் பின்னை மாள்பவர் சிலரு முண்டே 117

விரலிடை யதனிறும் வியன்வரை வழியிலும்
உரமுறு கணுவினு முயர்வு கடியினும்
வருபிடர் சுழியினும் வருதலை சந்தினும்
வருவலி தினவுகள் வன்மமா மறிகவே 118

பின்னடி தன்னி னாடி பேர்ந்தவக் குதியி னூடே
மன்னிய கெண்டை யுற்று மயக்களை யூடே புக்கும்
பன்னிய மூலத் துற்றப் பரந்திரு முதுகுதன்னில்
நண்ணுறப் பிடரி யுற்று நடுச்சிரத் தமருங் காணே 119
மருவுபின் னடியி லங்க மயங்கிய விரணம் வந்தால்
தருபதம் பிறங்கி யென்றுக் தாள்பல வாதந் தோன்றில்
கருவுறு வுடல்கொ தித்துக் கண்ணுறு பிடரி யோடும்
மருவியே பொருந்து நாடி யமர்ந்துற வலிக்குங் காணே 120

சிரைவிதி

பாதமச் சந்து மத்திற் பரிவறப் பாதி நிற்கும்
ஏதவக் குதிப்பு றத்தி லிசைவாத குட்டத்தி னிற்கும்
மோதவக் குறப்பத் துற்று .............ந் தானு நிற்கும்
கோதறு பிண்டி தன்னிற் குறட்டினி னிற்குங் காணே 121

உற்றசங்கை லாடமேவு முபனிசங்க மேதியாம்
மற்றுமிங்கு லாடமேவு மணிதிலாட போதியம்
நற்றவச் சிரத்திலே நயந்கைச் சிரோதியாம்
பற்றமுற் றலகுமேவும் பாவுகேசப் பிரமியே 122

உற்ற தான மெண்பது முரைத்தான் தமனிமேல்
மற்றதோல் தசைகளன்றி மருவுநாடி யென்பிடை
உற்றகாற் றெழிச்சியு முசிந்திசைவு பேசியில்
தெற்றுமுற்று வன்மமாஞ் சேர்ந்தவவ் வுரோகமே 123

## என்புச்சிலந்தி

உற்றிடு மென்பி லங்கே யுரத்துற வெழிச்சி தோன்றிற்
பற்றியே யெரிந்த மூன்று பரந்துடன் றினவ தாகும்
மற்றுறச் சோப மன்றி மயங்கியுட் கொதித்து மேனி
முற்றுற வென்பி னூடு முயன்றுசீ விளையுங் காணே 124

இக்குணங் கண்ட போதே யென்பினிற் சிலந்தி யென்னும்
புக்குற விதனி லொன்று புரைத்தெலும் பிற்றுப் பின்னை
உக்குற வுள்ளே யோடி யுருகியே சீயும் பாய்ந்து
மெய்க்குற வோடு மென்னின் மீளுவ தரித்து காணே 125

## நரம்புச் சிலந்தி

நரம்பினி லெழிச்சி யாகில் நடுக்கிமெய் யழன்று காட்டும்
உரம்பெறு தினவ தாகு முபத்திரம் பலவுங் காட்டும்
நிரந்தர மானவாத நின்றதி லொன்று மென்க
பரந்திடு சோப மன்றிப் பரந்தபுண் ணாற தென்னே 126

**வன்மநிலை**

உற்றகைச் சீப்பினு முன்னுமூட் டயினும்
மற்றுகீழ்க் கட்டினுங் கைவிரல் வரையினும்
பற்றுநட் டென்பினும் பகருநெஞ் சடியினும்
உற்றமென் தனத்தினு முதுகுரந் தோளுமே 127

கன்னமோடு நாரியுங் கருதுதான் குடல்களும்
பன்னுசந் தசைவினும் பதித்தவக் குழைச்சினும்
முன்னுகெண்டை.............................கண்டமும்
மன்னுமங்கை தன்னினும் மதித்தறிந்த வன்மமே 128

## பதினேழாவது
# இரட்சைவிதி

இரட்சையக் கினியி னாலு மெரிந்திடு காரத் தாலும்
உரைத்திடு தான நோக்கி யுறுநோயிற் செய்வ தாகும்
பொருத்தநோய் நிலைமை கண்டும் பேணிய தானங் கண்டும்
கருத்துடன் றீங்கு றாமற் செய்யெனக் கழறும் வேதம் 1

### இரட்சை செய்யத் தகாதோர்

சுரமதி சாரம் பித்துக் துர்ப்பலம் பாண்டு சோகை
வருமிரு தயத்து ரோகம் மருத்திடு மிரந்த பித்தம்
சிரம்விழி தமினோ யாதி செப்பிய ரோகந் தோர்க்கும்
உருவுற மூத்த பேர்க்குஞ் சிறுவர்க்கு மிரட்சை யாகா 2

### இரட்சைசெய்யத்தகாத இடங்கள்

ஆகாத விடங்கள் சந்து மவயவ முனைகண் மற்றும்
தோபாய்முன் னுரைத்த வன்மத் தானங்கள் தொண்டை நாமி
தேகாருங் கோச பீசந் திருவிழி யுச்சி மேலும்
ஆகாத நகக்கண் ணாதி யகற்றிமற் றிடங்க ணாடே 3

நாடிய மருந்தி னாலே நலம்பெறத் தீரா விட்டால்
ஏடவிழ் குழலி னாளே யியம்பிய டேர்ந்தே
பாடுறாக் கனலின் மீது பழுக்கவைத் திரட்சை செய்யும்
பீடுறு கருவி நுண்மை பேசிமா தவர்கள் வைத்தார் 4

மாதவர் கணித்துச் சொன்ன வச்சிரக் காலே யொன்றாம்
ஒதிய வுடுக்கைக் காலே றுமுக் கவர்க்கான் மூன்று
பேதமி லிருக வர்க்கால் பிறைக்காலுங் கலப்பைக் காலும்
எதமில் சங்கி லிக்கா லிசைந்தகுள் ளடிக்கா லொன்றே 5

ஒன்றிய *வாளி பொட்டு முற்றபொற் றூண்டி லோடு
கன்றிடுங் கயிறு போன்ற கருவியிங் கிவையே யன்றி

*ஆளி - மோதிரம் போன்று இடைவளியுள்ள பொட்டு

வென்றிடுங் கம்பி மேலும் விரும்புதேன் வெல்ல நெய்பால்
ஒன்றிடு மிவையுஞ் சூட்டிற் குவந்தன வென்று கொள்ளே 6

### வலிகளுக்கு இரட்சை

ஏயவலி பன்னிரண்டுந் தீருதற்கி ரட்சை
யியம்புமுச்சி புள்ளடிக்கால் பிடரியிலே பிறைக்கால்
ஆயகைகால் நடுமுதுகு பரண்டையின் மேற் கணுக்கா
லன்றிவிழி யிமைநெற்றி நேன்மார்பு தொப்பூழ்
சேயபரண் டையின் மேலுள் நாலுவிரல் தள்ளிச்
செப்புகதிர் வளைத்துமிக விளக்கினிலே காய்ச்சி
ஏயவிரண்ட டங்குலஞ்சுட டெருக்கலம்பால் சூத
மெந்நாளு மத்திக்க வலிகளவை போமே 7

### கன்னவாதம் அலகடிவா தங்கட்கு

பேசிய கன்ன வாத மலகடி வாதந் தீர
மாசறு வச்சி ரக்காற் கருவியைப் பழுக்க வைத்ததே
தேசுறு பிடரி ரோமந் தெரிவுறு மிரேகை தன்னில்
ஆசறு மிரட்சை செய்ய வலகடி வாதம் போமே 8

### முகவாதம் முகவா தசன்னிகட்கு

போகுமே முகவா தந்தான் புகன்முக லாதஞ் கன்னி
ஏகுமே கண்ணிற் கீழே யிருவிரல் தள்ளி யப்பால்
வாகுறு நாடி மீதிற் பொட்டுச்சூ டாக வைத்தே
ஆகும்புண் ணானற் போமென் றறைந்தனன் முக்க ணானே 9

### தோளடிவாதத்திற்கு

முக்கணான் வகுத்துச் சொன்ன முப்புரிக் கவர்க்கால் தன்னாற்
பக்கமே மாறிக் கொண்டு பரிவுற வலகு சூட்டிற்
புக்கவே யறிவு செய்தே யழுந்திடப் புண்ண தாக்கில்
மிக்கதோ ளதனைப் பற்றி விசித்திடும் வாத மீளும் 10

இரட்சைவிதி

### சிங்கவாதத்திற்கு

மீளுமே சிங்க வாதம் வியன்பிறை வட்டக் காலய்ச்
சூழுகற் கருவி தன்னாற் றொகுத்திடு பிடரி ரோமம்
தாழுநற் குழியிற் சுட்டுச் சளிக்கவே புண்ண தாக்கி
நாளுநன் மருந்து செய்ய நவில்கிங்கூ வாதம் போமே 11

### விலாவாதத்திற்கு

போமது விலாவில் வாதம் புகலுமே னியினிற் பூண்ட
வாமமார் பழுவே போலுங் கருவியைப் பழுக்க வைத்தே
தோமறு பழுவி ரண்டு முழுந்திடை பதியச் சுட்டே
ஏமமண் டலம்புண் ணாக்க விலாவுறு வாதம் போமே 12

### முழங்கால்வாதம் முதலியவற்றிற்கு

மேவிய முழங்கால் வாதமிகுநரித் தலையின் வாதம்
வாவிய மூட்டு வாத மாற்றநல் விரட்சை கேண்மின்
தாவிய முழங்கால் தன்னிற் றங்கிய சிரட்டைக் குக்கீழ்ப்
பாவிய பள்ளத் துக்குப் பக்கமா யிருபு றத்தும் 13

இருபுறந் தனிலும் பொட்டா யிணங்கவே சுடுபுண் ணாறப்
பொருவிலா வட்ட பற்பங்கொள் புரைதீர் சூதத்
துரைசெய்சிந் தூர மாத லுண்டிட வொழியு மந்நோய்
விரவிய கோரை வாயு மீளுதற் திரட்சை கேளே 14

### கோரைவாயு தலைவலிகட்கு

கேளிரு புறத்திற் சந்நிற் கிளர்பள்ள மிரண்டின் மீதும்
தாழ்விலாப் பொட்டுச் சூடு சுடுகமேற் றலைவ லிக்குக்
கூழையாம் பிடரி தன்னிற் குழியினுங் கடைக்கண் டொட்டுச்
சூழிரு விரற்கப் பாலுந் துணைப்புதல் நடுவின் மேலே 15

மேலுறப் பொட்டுச் சூடாய் விளங்கவே சூடாய் விளங்கவே சுட்டாற் றீரும்
வாலிதாங் குதிரை தன்னில் வலியுடன் முயல் கண்டன்
ஓலமார் வலிகாக் காயி னுறவலி தனக்குஞ் சூடு
சீலமார் நெற்றிக் குக்கீழ்ச் செப்பிரு புருவ மீதும் 16

மீதுறு நாபி மேல்கீழ் * விரலிடை நேருக் கப்பால்
ஓதிய பிறைக்காற் சூடு பரண்டைக்கீ முற்ற பள்ளத்
கேதமில் சுரங்கால் தன்னி விடுமணிக் கட்டின் பள்ளத்
தாதியிற் சுட்டுச் சிந்து ரங்களை யருந்தத் தீரும் 17

தீருமே பரண்டை தன்னிற் செப்புநால் விரற்கு மேலாய்ச்
சாரு ‡ மண் டலாக்கி ரந்தான் றடுநடு கவர்க்கா லாகும்
பேருநற் பிடர்மு டிக்கின் மேற்பெரு நரம்பி ரண்டும்
சோவே பிறைக்கா லாக வைத்துப்பின் செய்கு றுக்கே 18

குறுக்கிலும் பிடரி மேலுங் குதியிலு முத்திச் சுற்றும்
மறுத்திடு புயங்க ரங்கான் மார்பிலு மறிவு செய்யச்
சிறப்புறு கலப்பைக் காலுந் திருந்துசங் கிலியின் காலும்
பொறிப்கொகுட் டலரோன் சொன்ன புள்ளடிக் காலும் பாரே 19

## பாரிசவாதம் முதலிய 80 வாதத்திற்கும் உள்வீச்சிற்கும்

பாரிச வாதஞ் சன்னி வாதம்பின் பயித்திய வாதம்
கூரிய சூலை குதிவாதஞ் சரண வாதம்
கேரிய துணுக்கு வாத நிறைசரு வாங்க வாதம்
வீரிய முறுமுள் வீச்சு மெழுக்குறு வாத மாமே 20

வாதைசெய் தமர வாதந் துடிவாத மரண வாதம்
ஊதிய வாதஞ் சக்தி லுள்ளடி தன்னில் வாதம்

*விரலடி நேருக்கப்பால் என்றிருக்கலாம். ‡ மண்டலாக்கிரம் - வளைவுள்ள பொற்கம்பி.

இரட்சைவிதி

மோதுறு மண்ட வாத முதிரசை வாதம் விண்ணின்
சோதிபோன் முற்று வாதஞ் சூழலாஞ் சிரேணு வாதம் 21

சிரமுறு நாக்கு வாதஞ் செப்புமிவ் வகையி னோடே
மருவுமெண் பத்து நான்கு வாதத்திற்கு கிரட்சை கேண்மின்
பொருவிலா வுச்சி மீதிற் புகன்றிடு குறுக்குச் சூடும்
தருநெற்றி நெறியிற் பொட்டுந் தான்சுடச் சால தன்றே 22

சாலவே பிடரி மூட்டின் மேல் நோக்கிப் பிறைபோற் சூடும்
மேலுமுன் கைக்கு மேலே யிரண்டிடம் பொட்டுச் சூடும்
சீலமாங் கமுக்கட் டின் கீழ்ச் செறிவிரல் நாலுக் கப்பால்
வாலிதாங் குறுக்குச் சூடும் வகுத்தநா பியின்மேலாக 23

ஆகிய விருபு றத்து மரும்பிறைச் சூடுமாகும்
வாகுறு நரம்பிற் குக்கீழ் வலியதோர் பொட்டுச் சூடும்
தேகமார் நாரி மீதிற் சிறக்கவே யாளிச் சூடும்
ஏகுறு முழந்தாள் மேலே யியமபிய குறுக்குச் சூடும் 24

## அற்புதவாதம் முதலியவற்றுக்கு

குறுக்குக் கீழ்ப் புறந்தாள் தன்னிற் குலவுநா லங்கு லத்தின்
நெறித்தரு குறுக்குச் சூடு நீதிபாயச் கடவு நன்றாம்

குறித்தவற் புதவா தந்தான் கூர்பிர மியத்தின் வாதம்
நெறித்தரு மசல வாத நீள் குளிர் வாத மென்னே 25

என்னுநால் வாதங் கட்கு மிரட்சைதோட் கட்டி னுள்ளும்
மன்னிய பிறையும் பொட்டுச் சூடதாம் வளர்ப்ப ரண்டை
தன்னின்மேற் குறுக்குச் சூடுஞ் சாருந்தொப் பூழைச் சூழப்
பொன்னனா யாளிச் சூடும் பொருவுநா ரியற்பொட்டாமே 26

## காமாலை முதலியநோய்களுக்கு

ஆமுழந் தாளைச் சுற்றி யாளிச்சூ டதற்குள் ளாக
வாமமார் பொட்டுச் சூடும் வகைபெறச் சுடுபுண் ணாகக்
காமலை பாண்டு ரோகங் கடியதோ ரழற்கா மாலை
நாமமார் வஞ்ச மாரி நவையுறு செங்க மாலை 27

மாலுறு சிவக்கா மாலை வரளுங்கா மாலை சோகை
தாலுறும் பசுங்கா மாலை கன்னொடு தியாகமலை
மூலவா யுவஞ்சொன் மூலக் கிராணிமோ சனம தாகச்
சீலமா ரிரட்சை தன்னைச் செப்பினார் தெளிந்து ளோரே 28

தெளிவுறு நெற்றி மீதுஞ் சிறந்ததோர் பிடரி தன்னிற்
குழியிலும் பொட்டுச் சூடுங் கோலமார் நாரி மூட்டின்
நெளிவுறு பிறைச்சூ டும்மின் னிகழ்த்துநா பியினைச் சூழ
வளையமா யாளிச் சூடும் வழுந்திரு முலைக்குக் கீழே 29

இருவிலா வளவுக் கப்பா லியம்பிய பிறைச்சூ டும்பின்
அருகிற மதனி லாளிச் சூடுநா பியினைச் சூழக்
கருகிய வாளிச் சூடுங் கனவயி றதனி னேராய்
இருவிலாப் பக்தந் தன்னி லியம்பிய பிறைச்சூ டாமே 30
மேவிய நாரி தன்னில் விளங்கவே யாளிச் சூடும்
ஓவிய மனையா யுந்திச் சுழியின்கீழ்ப் பொட்டுச் சூடும்
நாபிமேற் பொட்டுச் சூடு நவிவலப் புறம் தாக
மேவுமு விரலுக் கப்பா லொருபுறத் தாளிச் சூடே 31

## காயா சுவாதம் முதலியவற்றிற்கு

சூடுகா யாசு வாதந் தொடருளை மாந்தை கோழை
வாடுசேற் பனங்கி ரந்தி மந்தார காசந் தன்னோ
டேடுறு சுவாத காச மிருமல்மா சயரோ கங்கன்
நாடுவிற் புருதி தீர விரட்சைக ணவிலக் கேளே 32

### இரட்சைவிதி

கேள்கொணெஞ் சாங்கொ முந்திற் கீழுறப் பிறைபோற் சூடும்
ஆளுநா பியின்மே லாக லாளிச்சூ டிரண்டே யாகும்
சூழ்பழு வறைக்கோ ழைக்குத் தொடக்கமுக் கட்டின் கீழே
தாழுநல் விரற்கீழ் பொட்டுச் சூடதாந் தனிமென் றோகாய் 33

### கபாலவலிக்கு

தோளகயே கபாலத் தீர நெற்றியிற் றுடிந ரம்பில்
எகமாம் பொட்டுச் சூடு மிருபுறந் தனிலு மாகிற்
பாகமா யிருபு றத்தும் பருத்திடாப் பொட்டுச் சூடும்
ஆகுமேற் புறம் தாகின் மாறியே யிரட்சை யாமே 34

### மண்டைக்காப்பான் உச்சிப்பிளவைகட்கு

மேவுமண் டைக்க ரப்பன் றனக்கிரு விரலுக் கப்பாற்
தாவிலா நெற்றி சடுதியிற் பொட்டுச் சூடாம்
ஓவிய மனையா யுச்சிப் பிளவையிற் குருப்புத் தோன்றில்
வாவிய குருப்புத் தன்னை வளைத்துநல் விரட்சை செய்யே 35

### காசிபீடம் கபாலசூலை மண்டைவியாதிகட்கு

செய்பிடச் சுழியின் மீதுசெப்பிய குறுக்குச் சூடாம்
வெய்யதோர் நாசி பீடம் விரவிய கபால சூலை
துய்யமண் டையில்வி யாதி தொடருமூ வகையுந் தீரத்
தையலாய் நடுவு நெற்றி தனிற்பொட்டுச் சூடு தானே 36

### வாய்ப்புற்றுக்கு இரட்சையும் சிகிச்சையும்

தானமா முச்சி மீதும் பிடரியிற் சுழியின் மீதும்
மானனாய் பொட்டுச் சூடாம் வாய்ப்புற்றுக் கிரட்சை கேண்மின்
ஆனவாய்க் குள்ளே தோன்று முளைதனி லறிவு செய்தே
ஈனமில் காதின் கீழி ரங்குல மதனுக் கப்பால் 37

பாலதாம் புரத்தின் மீதும் பகருச்சித் தலையின் மீதும்
சாலவே பொட்டுச் சூடுக் தகும்பிடர்ச் சுழியின் மீது
சீலமாயக் குறுக்குச் சூடுஞ் செய்தழி புண்ண தாக்கி
நாலிரு நாளப் புண்ணி னாரண தயில மிட்டே 38

இட்டபின் றயிலைக் தான்மூ வைந்துநா ளுள்ளுங் கொண்டு
முட்டவே சத்தாங் கத்தின் புகையிரு நாளு மூட்டி
கட்டமில் வச்சிர காயக் குளிகையா கிலுதற் சூதத்
தட்டசிந் தூர மாத வருந்திடிற் புழுக்க டோன்றும் 39

தோன்றிய கிருமி சாம்பின் றொடர் மருந்தின் வேரும்
ஊன்றிய வெருக்கம் பால்கல் லுப்புட னரைத்துப் புல்லிற்
கான்றிடத் தேய்த்துப் பின்பு கரும்பனை வேர்தென் னம்வேர்
சான்றாநா யுருவி வேருஞ் சமனதாய்த் தகர்ப்ப தாமே 40

தகர்த்தவேர் தனில்நீர் நாலு நாழியிட் டெரித்தொன் றாக்கிச்
சுகத்துடன் வாயில் வார்த்துத் துயரறக் கொப்ப ளித்தால்
மிகுத்தவாய்ப் புற்று மாறும் விரவுபால் நெய்தான் கூட்டிப்
பகைத்தவுப் புடன்பு ளிப்புப் பசுர்கிரந் திகணீத துண்ணே 41

## புகை வாயிற்பிடித்தாற் பூச்சு

உண்டபின் புகதைன் வாயி லுபாதியே செய்து தானால்
தொண்டையி னிலைந் தென்னங் குரும்பையுந் துய்ய தாளி
கொண்டநல் விலையுங்கூட்டியரைத்துக்கோ வெண்ணெய் தன்னில்
மிண்டவே குழைத்து நாவு முரசிலும் விரவப் பூசே 42

## கொப்பளிக்க

பூசியே யெருக்கின் வேரு மமுக்கிரா வேரும் போட்டு
நேசமாக் +குவாதம் வாயி னிறையவே புகட்டிப் பின்னர்க்

இரட்சைவிதி

கூசவே வேண்டா நீயுங் கொப்பளித் திடுவை யாகில்
ஈசனா ரருளி னாலே யேகுமே வாகை யெல்லாம் 43

## உண்ணாக்கு நாக்கொட்டி சிலந்திகட்கு

## இரட்சை - சிகிச்சை

வாதைசெய் யுண்ணாக் கோடே வருத்துநாக் கொட்டி தானும்
ஏகமா முடைசி லந்திக் கிரட்சைபொற் கம்பித் தூண்டில்
தீதறக் காய்ச்சித் தோன்று முனைகளி லறிவு செய்தே
ஓதுகண் டத்தி ரண்டு புறமும்பல் லடுக்க வூன்றே 44
ஊன்றுபொட் டுச்சூ டாய்ப்பி னுயர்பொரி கார மிங்கோ
டான்றதோர் துரிசிந்துப்பு மருநவச் சாரத் துத்தும்
தோன்றவோர் நிறைசம் பிரப்பழச்சாற்றி லரைத்துத் தோகாய்
கான்றதோ ரெருகம் பாலு மருத்துநற் கலையி லூட்டே 45
ஊட்டியே திரியதாகி யுயர்தொண்டை யளவா யேற்றிப்
போட்டுநா ழிகைதான் சென்றாற் பொட்டெனத் திரியைவாங்கிச்
சூட்டுநீர் வாயில் லார்த்துச் சுகமதா யுமிழ்ந்து மீட்டும்
நாட்டமா யைந்து நாளு நாவில்திரி யேற்றி வாங்கே 46
வாங்கநாக் கொட்டி யுண்ணாந் குடனுடை சிலந்தி மற்றும்
பாங்குடன் கரைந்து புண்ணாம் பத்துநா ளந்தி சந்தி
ஓங்குவத் திராஞ்ச னத்தீன் புகைதனை யுண்பி ராகில்
தீங்குள புண்ணு மாறிக் கண்டநோய் பலவுந் தீரும் 47

+குவாதம்- சரக்கின் எட்டுப் பங்கு தண்ணீர்விட்டு நாலொன்றாய்க் காய்ச்சியொடுக்கப்படும் கஷாயம்.

## கண்டமாலை முதலியவைகட்கு

## இரட்சை - சிகிச்சை

தீருமே கண்ட மாலை திகழ் கெந்த கண்டத்
தூருநற் பனசை கண்டக் கிரந்தியோ டுயர்கண் டத்தின்
நேரிய குருகோ டஞ்சு வகைக்குநே ராக ரட்சை

சாரவே சிவனடி யென் பிற்பொட்டுச்சூ டாகுந்தானே 48

ஆகுநற் காதிற் கீழ்முன் றங்குல மதனுக் கிப்பாற்
தோகையே பொட்டுச் சூடுந் தொடர்பிடர் மூட்டின் மீதே
வாகுறு குறுக்குச் சூடும் வைத்துநா யுருவி வாழைப்
பாகுறு தாற்றின் சாம்பர் பகருமே ரண்ட வித்து 49

வித்துநேர் மஞ்ச டானும் விரையவே யரைத்துப் பூசிப்
புத்தியா யறுநா னாரோக் கியப்புகை புகைக்க நன்றாய்ப்
பத்தியத் துடனே சூத பாற்பமு மருந்து வீரேற்
சுத்தமா யைந்து நோயுந் தொலையுமென் றீசன் சொன்னான் 50

## ஆரோக்கியப்புகை

சொன்னவா ரோக்கி யத்தின் பகைதொடா சூத மியம்
பன்னுசா திலிங்கம் வெள்ளைப் பாஷாணத் துரிசு துத்தம்
மின்னரி தாரம் வெண்குந் துருக்கங் கெந்தகம் வெண்காரம்
நன்மனோ சிலையோ றொன்று நவில்கழஞ் சொன்றுதானே 51

தானெருக் கிருந்தை தானுங் கழஞ்சுபன் னொன்று தன்னோ
டீனமில் சரக்குங் கூட்டி யிடித்தெருக் கலம்பா லூட்டும்
மானமாங் கலையிற் பன்னான் குண்டையாய் வகுத்துக் கட்டி
ஆனதோர் தழவி லேழ்நா ளடாவே புகைத்திடாயே 52

புகைத்தபின் குளிர்ந்த நீரிற் பொருந்தவே தோய்ந்து பால்நெய்
திகைத்திடா தருந்தி யுப்புச் செழும்புளி தவிர்த்துண் பீரேல்
பகைத்தபுண் சூலைக் கட்டுப் பகர்வாத கரப்பான் சூலை
மிகுந்தசீழ்ப் பாரமான வியாதிகள் பலவுந் தீரும் 53

இரட்சைவிதி

**வத்திராஞ்சனப்புகை**

பலமிடி யகற்றும் வத்தி ராஞ்சனப் புகையைக் கேண்மின்
சலமிகு மீய மொன்று தழலினி லுருக்கிச் சூதம்
குலவிய விருகு முஞ்சு கூட்டியே துரிசு துத்தும்
இலகுமெந் தகத்தி னேடே யியம்மனோ சிலைமால் தாரம் 54

தாரம்வெண் குந்து ருக்கந்தகுமிவை கழஞ்சோ றொன்றாம்
ஏர்செறி கடுகு ரோணி யிருகழஞ் சிலிங்க மூன்று
சாரநற் பொடிய தாக்கித் தகர்த்தெருக் கலம்பா லூட்டும்
சீரிய கலையிற் பன்முன் றாக்கியே திரியாச் செய்யே 55

செய்புகை குடித்து மூக்காற் றிடம்பெற றுஞ்சி விட்டால்
துய்யதோர் நாசி பீடந் தொடர்நாசி கெந்தஞ் சூலை
நையுநாக் கொட்டி நாக்கின் குறுமுடை சிலந்தி யுண்ணாக்
கையமில் கபால சூலை யடர்தலை மண்டை நோயும் 56

மண்டைசேர் கபாலக் குத்து வருபிர மியந்தி னாலே
மிண்டிய வொடுவு மேகச் சலத்திலே விரவும் வாதை
தண்டுறு கிரந்தி தண்டுப் பிளவையுண் மூலந் தானும்
மிண்டுறு புறமு லங்கண் மிகுதசை மூலந் தானும் 57

தனமா மபானந் தன்னிற் றகுபவுந் திரம்பீ சத்திற்
தேலுறு தட்டே போலத் திகழ்பவுந் திரந்தண் டின்கண்
ஏனைய வுருண்ட வாத மிவையெலா மகலு மன்றே 58

**உருண்டவாதம் முதலியவற்றிற்கு**

***இரட்சை - சிகிச்சை***

அன்றியே யுருண்ட வாத மடர்குடல் வாத மந்தும்
துன்றிய வண்ட வாதந் தொலைந்திட ரட்சை கேளும்
கன்றிய நாபி மூட்டிற் காற்பெரு விரன ரம்பில்

வன்றிநற் பொட்டுச் சூடும் வலியநா யியின்கீ ழாக 59

ஆகுமா றங்கு லம்விட டப்பால்நல் லாளிச் சூடும்
பாகுறச் சுட்டுப் பஞ்சாந் கினியெனுந் தபிலம் பண்ணி
ஓகையா யிட்டை யைந்து நாளுபர் புகையுங் காட்டி
வாகுட னட்ட சூத பற்பமு மருந்த தன்தே 60

## அட்டசூதபற்பம்

நன்றிசேர் சூதத் தோடு நவையில்கெந் தகந்தா னொன்று
துன்றவே யறுக முஞ்சு தொடர் முருக சிலையின் சாறும்
நின்றதைத் தாரை யாடா தோனடநற் குமரி நீரும்
வன் றிறற் கடுக்காய் நீரும் மருவவார்த் தரைப்ப தாமே 61

ஆமொவ்வோர் சாற்றின் மூன்று தினமடை வுடன ரைத்துச்
சேமமாய் வெயிலின் மூன்று தினமுலர்ந் திடவே வைத்துப்
பூமிசைக் கோழிக் குஞ்சு பொரித்தமுட் டையினி லோடு
வரமமா யிடித்துச் சீலை வடிகொண்டு வைத்த டாயே 62

வைத்திடு தூள் தான் மூன்று பங்குமுன் மருந்தோர் பங்கும்
புத்தமாா சட்டி தன்னிற் புகட்டியோர் சட்டி கொண்டே
அத்தினை மூடிச் சீலை மண் செய்தங் கடுப்பி லேற்றிப்
பத்தியோ டெட்டுச் சாமம் பருநெருப் பெரித்துப்பாசே 63
பார்த்போ திம்ம ருந்து பழுதிலா வெள்ளை யானால்
ஏர்த்தநன் மிளகு சுக்கோ டியல்பெருங் காய மோமம்
நேர்த்தவெண் காரமெல்லா நிறைகொண்டு பொடிய தாக்கிக்
கூர்த்தமுன் னெரித்த பற்பத் தளவிதைக் கூட்டிக் கொள்ளே 64
கொள்ளுமிம் மருந்து தேனிற் பணவிடை குறையா துண்டால்
விள்ளுமே மூல வாயுவெளி மூல முண்மூ லந்தான்
தள்ளுறாக் கெர்ப்ப சூலை தண்டுறு பிளவை மேகத்
துள்ளுறு வாயு வும்மா வாதமு மொழிந்து போமே 65

இரட்சைவிதி

ஒழிந்துற வாத ரோக முறுசூலைக் கடுப்பு மாறா
தழுந்திய கிரந்திப் புண்ணோ டடருநீர்க் கடுப்பெ ரிப்பும
எழுநத்வா சனக்க டுப்பு மிடர்செயும் பவுந்தி ரங்கள்
உளைந்திடு மண்ட வாதங் குடல்வாத முருண்ட வாதம் 66

வாதைசெய் சன்னிவாத முகவாதம் வலிசேர் வாதம்
ஒதிய நெந்த முயர்நாசி பீடமெல்லாம்
தீதறவேகு முப்புத் திகழ்புளி கசப்பு நீக்கிக்
கோதையே மண்டலங்கொள் குறித்தநோய் குணம தாமே 67

## குதிரைவலிக்கு இரட்சை

குணமிலா திடரே செய்யுங் குதிரையின் வலிக்குச் சூடு
துணையிரு விலாவின் மீதுங் கரத்துங்கீழ் வயிற்றுஞ் சூடாம்
இணையதா முச்சி மீதும் பிடரியிற் சுழியின் மீதும்
வணமதா முள்ளந் தண்டால் வருஞ்சுழி மீதுஞ் சுட்டே 68

## துணுக்குவாதம் முதலியவைக்கு இரட்சை

கட்டுப்பின் புண்ண தாக்கச் சுகம்வருந் துணுக்கு வாதம்
மட்டில்தோ ளேறு வாதந் துடைவாமேறு பாடல்
பட்டிடத் தொல்லை சூழும் பலகையிற் பொட்டுச் சூடல்
கிட்டகை மேல்நா லங்குலத் திரட்சை செய்யே

## கரப்பன் வாதம் முதலியவற்றிற்கு
## இரட்சை - சிகிச்சை

செய்துபன் னிருநாட் பஞ்சாக் கினித்தயி லந்தான் றேய்க்க
மெய்வரு கரப்பான் வாதம் விஷவாத கரப்பான் மீளப்
பொய்யிலுச் சியினிற் றோளிற் பொட்டுச்சூ டுரத்தின் மீது

துய்யவா ளிச்சூடு டும்பின் பிடரியிற் பிறைசூடாமே 70

ஆமுழந் தாளின் மேலே யடைவுற வளையச் சூடும்
மேவுகெண் டைக்கால் தன்னிற் பொட்டுமாய் விளங்கச் சுட்டே
ஓவிலாப் புண்ண தானா லுள்ளியா மணக்க மெண்ணெய்
பூவையே யருந்து வீரேற் புகன்றநோய் பலவும் போமே 71

## நாக்கிளை கிரந்திப் புண்ணுக்கு

## இரட்சை - சிகிச்சை

போகுநாக் காளை நாக்கிற் கிரந்திநாக் கினிற்புற் றுக்கும்
ஏகவே பொன்னி னாலே மெனவுஞ் செய்து
பாகன மொழியி னாளே பணம்போலப் பொட்டுஞ் செய்து
வேகவே காய்ச்சி நாக்கின் முளையெலாம் வெதும்பச் சுட்டே 72

சுட்டுக் கீழ் நாக்கிற் றோன்று முளைதொறுஞ் சுகமாய் வைத்துத்
தொட்டவவ் வளையத் தாலே சுற்றெலாம் வெதுப்பிப் பின்பு
தட்டற வஞ்சு சாக்கினத் தயிலந்தன்னை
இட்டுச்சீ லையினைப் போட்டங் கேழாநாட் புகையு முண்ணே 73

## சத்தாங்கப்புகை

உண்டிடும் புகையைச் செய்யும் வகையினை யோதக் கேண்மின்
மண்டுகெந் தகமி லிங்க மனோ சிலை மாலின் றாரம்
துண்டவெண் குந்து ருக்கம் வகைக்கொரு கழஞ்சு துத்தம்
எண்டகு துரிசோ ரொன்று கழஞ்சரை யிவற்றோ டீயம் 74

ஈயமங் கறுக மூஞ்சோ டிருகழஞ் சிரதஞ் சேர்த்துத்
தூயநற் கடுகு ரோணி யிருகழஞ் செல்லாந் தூள் செய்
ஏயுநற் சீலை தன்னி லிட்டிரு புகையாய்ச் செய்து
காயுமிப் புகையுண் ணோய்போங் கருங்குயி லைய சொல்லாய் 75

இரட்சைவிதி

## சகல மேகம் நீரழிவு பவுந்திரம் முதலியவற்றிற்கு

## இரட்சை - சிகிச்சை

சொல்லரு மிரத்த மேகஞ் சுக்கில மேக தோஷம்
புல்லிய பெருநீர் மேகம் புக்கத்தி மேகம் பாரக்
கல்லெரிப் புடனே நீரின் கடுப்பு மூத்திரக் கிரிச்சம்
வல்லதோர் சலக்க ழிச்சல் வலியநீ ரழிவு மற்றும் 76

மற்றுநீர்க் கடுப்பு மாறா வலிப்பிர மேகத் தோடே
நற்பிர மியவெ ரிப்பு நவிலுமூத் திரபா வந்தான்
சுற்றுமுச் திரவு பாதி சுக்கில தரமுண் மூதம்
பற்றுகண் டிற்கி ரந்தி பகர்தண்டுப் பிளவைப் பாவாய் 77

பாவுமா சனவெ ரிப்புப் பிரமேகம் பவுந்தி ரங்கள்
மேவிய மூல வாயு மிகுமூலப் பவுத்தி ரந்தான்
தாவுமாங் கிஷரோ கம்பின் றரும்பிர மேகந் தன்னில்
ஓவிலா வாயுமேக வாதமும் பிறமூ லந்தான் 78

மூலமா மிக்நோய் கட்கு மொழிகுவ னிரட்சை நாரி
மேலுமே யாளிச் சூடு மிகுமிடுப் பபான வாயிற்
சாலவே யடுத்தாய் போலச் சடக்கெனப் பொட்டுச் சூடும்
சேலவேல் விழிநா பிக்கீழ்ப் பிறைச்சூடுந் திறமையாய்ச் செய்யே 79

செய்துநா பியினைச் சூழத் திறமதா யாளிச் சூடும்
தைலமாய் சுடுபுண் ணாக்கித் தகுவங்க பற்ப மாதல்
ஐயமில் வங்க சிந்தூ ரத்தினை யாதன் மேதித்
துய்யநற் றயிரில் நேரம் பணவிடை துய்ப்ப தாமே 80
துய்ப்பதை யைந்து நாட்பின் றொடுகட விறாஞ்சிப் பட்டை
கைப்பிலா மருதம் பட்டை கருதுதேற் றாவின் கொட்டை
மெய்ப்புறு தான்றிக் காயும் விரைந்திடித் தெட்டு நாழி
அப்பிணை யிரண்டு நாழி யாக்கியுண் குணம் தாமே 81

## கண்வியாதி தொண்ணூற்றாறுக்கும்

### இரட்சை - சிகிச்சை

குணமதா மமரங் காசங் கொடியபூப் படலங் குந்தம்
இணையினீர்ப் பாய்ச்சல் புட்ப காசமோ டிமைத டித்தல்
தணிவினீர் முட்டிமோகஞ் சூரிய காச மின்னும்
பணியிறு மிரத்த ரோகம் படலமும் பற்ப ரோகம் 82
தனமா மிரண சுக்கிரன் றசைச் சிக்குப் புழுவெட் டோடே
ஆனநீர்க் காசஞ் சந்தர படலமற் றழுகண்டீர
மானனா யிரட்சை கேளும் புருவத்தி னடுவாங் கண்ணில்
ஊனமில் குவளைக் கப்பா லங்குல மிரண்டி லூன்றே 83

### கஸ்தூரிகாரக் குழம்பு

ஊன்றிய கண்ணிற் கீழி ரங்குல மொழிந்த தானத்
தான்றபொற் கம்பி யாலே யறிவுசெய் பொட்ட தாக
என்றகஸ் தூரி தாரக் குழம்புசெய் திடவே சொல்வன்
சான்றவ ருரைத்த மேதிப் பாலொரு மரக்கால் தன்னில் 84

காலுநற் கள்ளிப் பால்நற் காசிடை கலந்து பின்னர்
ஏலவே பிரைமோ ரிட்டங் கீரிரு சாமஞ் சென்றால்
சீலமாய்க் கடைந்து வெண்ணெய் திரட்டியே யெடுத்துத்துத்தம்
சாலுநற் றுரிசு தேவ தாரமஞ் சனாதிக் கல்லு 85

கல்லுவெண் கலஞ்செம் போடே காரீயம் பவளமுத்து
நல்லரத் தினமே தங்க நவையிலாப் பொடிமற் றம்பர்
சொல்லுகஸ் தூரி பச்சைச் சார்புரத் துகளி னோடே
வல்லசாத் திரமாம் பேதி மனோசிலை சமனாய் வாங்கே 86
வாங்கிநற் றுகள தாக்கி மதிந்திடும் வெண்ணெ யோடே
தீங்கறக் குழைத்து நன்றாய்ச் செப்பமா யெடுத்துக் கொண்டே
ஆங்கொரு கலப்பு றத்திட் டருங்கலம் வேறென் றாலே
பாங்குற மூன்று நாளு மரைத்தபின் பதந்தான் பாரே 87

இரட்சைவிதி

பதமது நாக்கி விட்டாற் பனியெனக் குளிர்ந்தி ராமல்
வெதரியே விறுவி றுத்து விதனமாய் நாக்கிற் பற்றில்
இதமுடன் பின்னு மோர்நா ளரைத் தெள்ளி னளவு நேரம்
கதமுறு கண்மீ திட்டத்தாற் கருதுநோய் தொண்ணூற் றாறும் 88

ஆறுமே கண்ணு றுத்த லரியகண் ணெழுச்சி மற்றும்
சீறிய கண்ணோய் தீரச் சிறுவர்க டமக்கு நன்றாம்
தேறவே மூன்று நாட்கண் டேய்த்தபின் சாம்பர் வாழை
மாறிலாக் கனியைக் கண்ணில் வைத்தெடு மூன்று நாளும் 89

நாளுமிம் மருந்து போட நவையுறு காசமெல்லாம்
பீளையாய்க் கரைந்து போம்பின் பேணியே யைந்து நாளும்
தாளதா மரைமு கத்துத் தண்புன விடவு மாயாக்
கோளிலாப் பாலு நெய்யுங் கூட்டுப்புப் புளிதன் மாற்றே 90

## துத்தாஞ்சனப்பொடி

மாற்றுந் துத்தும் பலமைந்து மன்னஞ் சனக்கல் பலமாறு
ஏற்ற தொட்டிப் பாஷாண மிசைந்த துரிசு பலமரையாய்ச்
சீற்ற மறுபொற் காணியுடன் சிறிய கீரை *சூறாசானி
தோற்று மூலி யிவைமுன் றுஞ் சொல்லுஞ் சமூல மாய்வாங்கே 91
வாங்கித் தேசிப் புளிவிட்டே வாகா யரைத்து வகையொன்றுக்
காங்கு தேசிக் காயிளை வாகக் கூட்டிச் சரகுகளும்
பாங்கு பெறவே யிட்டரைத்துப் பகரும் வில்லை யாயுலர்த்தி
ஒங்கு மோட்டிற் சீலைமண்செய் துற்ற முழங்கா லளவுபுடம் 92

* சூறாசானி - நாய்க்கடுகு

புடமிட் டெடுக்க மஞ்சணிறம் போலே யிருக்கு மில்லாட்டால்
புடமுன் போல வரைந்திடவே பொலியு மஞ்சள் போலிருந்தால்
எடுபின் பசிய கர்ப்பூர மிட்டே யரைத்து நயனமதில்
இடவே கண்ணி லுண்டாகு மெல்லா நோயு மாறிடுமே 93

## இமைக்கழலை முதலியவற்றிற்கு இரட்சை - சிகிச்சை

மாற்றியபின் னிமைக்கழல் நாசின் மேவுங்
வலியதடிப் புடன்காதிற் றண்டின் மேவும்
சாற்றியதண் டிற்கழலை செவிநோத் தீரத்
தாம்பிரத்தின் கம்பினைத் தழலிற் காய்ச்சித்
தோற்றுமுளை தொறுமறிவித் துடனே காரந்
துவட்டியபின் றயிலமிடச் சுகமாங் காதில்
ஏற்றமிடை யுறிற்காதை வளைத்துச் சூடங்
கீரிரண்டு பொற்பணம்போ லிசைய வூன்றே 91

## கிரகணி முதலியவற்றிற்கு இரட்சை- சிகிச்சை

ஊன் றியபின் னாரணனார் தயிலம் பூச
வுற்றமிடி யகற்றிடும்பின கீரி நோதல்
ஆன்றபெருங் கிராணியெட்டு வகையி னோடே
யடர்பெரிய கிரந்தியுள்ளே யருடங் காய்ச்சல்
ஏன்றவிந்த வகைக்கிரட்சை நாபி மேலு
மிதன்கீழும் பொட்டுச்சூ டிட்டு நாரி
தோன்றுமிரு புறத்திலுநற் பிறைச்சூ டாம்பின்
றொடருமுரந் தனிலாறு பொட்டுச் சூடே

## மூலக்கிராணிக்கடுகம்

பொட்டெனவே யிட்டபின்பா மணக்க முத்துப்
புதியவரி சனமுமுரைத் துடனே பூசிற்
திட்டமுடன் புண்ணாஞ்சொற் பிணியுந் தீருந்
திகழ்பிரண்டைச் சாறிரண்டு நாழி தூது
மட்டுறுவேர் சாரணைவேர் பிரண்டை வேரும்
வளர்கருணைக் கிழங்கியங்கு வகையோ ரொன்று
சட்டமுட னேயுழக்குப் பொடியி னோடே

இரட்சைவிதி

சாருருக்குத் தூளுழக்குச் சரியாய்க் கூட்டே 96

கூட்டுதிரி கடுகிரண்டு காய மோமங்
குலவுமிரு சீருலுவாக் கொடிய கைப்புக்
காட்டுறுமே யதிவிடய மிந்துவப் பேலங்
கடுதான்றி வெண்காரங் கழஞ்சோ ரொன்று
மீட்டுமிடித் துச்சாற்றிற் பால்நா னாழி
விட்டெரித்துச் சரக்குத்தூள் வேர்த்தூள் தூவி
ஈட்டுறு நெய் யிரண்டுழக்குத் தேனென் றாக
விட்டளவிப் பதத்திறக்கி யெடுத்துக் கொள்ளே 97

கொவ்ளுமருந் திரண்டுவெரு கடிதாளேரங்
குணம்வருநோ யெலும்புருக்கி கொடுங்கி ராணி
விள்ளுமசீ ரணவாயு மூலவாயு
விளம்பியகா மலைபாண்டு ரோகம் வீக்கம்
எள்ளுவயிற் றுப்பொருமல் புளித்தங் கேப்ப
மிடுதல்பெருங் கீரிநோ வெல்லாந் தீரும்
தள்ளருமூ லக்கிராணிக் கடுகமென் றிதனைச்
சாற்றினர்க் ளாயுள்மறை தனைக்கற் றேரே 98

## முத்தோஷ சுரம் சன்னிகளுக்கு

கற்றவர் புகல்பன் மூன்று சுரங்களுக் கிரட்சைக் காண்கில்
உற்றிடு குறுக்குச் சூடு வுரந்தனி னடுவி லூன்றி
அற்புறு முலைக்கு மேல்நா லங்குல மதனுக் கப்பால்
பொற்புறு மிருப்பு யத்துப் பொட்டுச்சூ டாக வூன்றே 99

ஊன்றியே நாபிக் கிரண்டங் குலமொழித் திடம்வ லத்தில்
தோன்றவே பிறைச்சூ டாகச் சுட்டுப்பின் காரம் வைத்தே
ஆன்றபுண் ணாக்கத் தீரு மருஞ்சன்னி தனக்கிரட்சை
சான்றவ ருரைத்த நெற்றி மீதினி லுரோமஞ் சார 100

சார்புறத் பொட்டுச் சூடு.........................................
நாரியி லதுபோற் சூடு நவில்கமுக் கட்டுத் தன்னில்
......................................................................................
சேருநால் விரலுக் கப்பாற் செறியவே கயிற்றுச் சூடே 101

கயிறுபோற் கையைச் சூழக் கயிற்றினாற் சுட்டுப்பின்பு
துயரறு முழந்தாள் மேலே சொல்லுந குறுக்குச் சூடும்
குயின்மொழி மடவாய் காலின் விரற்குமேற் குறுக்குச் சூடும்
அயர்வறச் சுட்டுச் கார மதிலிட வாதை போமே 102

## உதரவாயு ஈரற்கொழுப்பு முதலியவற்றுக்கு

## சிகிச்சை - இரட்சை

வாதைசெய் யுதர வாயு வளரீரற் கொழுந்தைநல் சத்தி
சீதநோய்க் கொழுத்த லோட திகழரு வருத்தல் சேட
மீதிர ணக்கொ முத்தல் விரவுமக் கினிமாந் தந்தான்
தீதுறு மிரத்த ரோகந் தீரவே மருந்து செய்யே 103

செய்பொரி காரஞ் சந்தந் திறமுட னரைத்துத் தேனிற்
ரையலாய் மூன்று நாளுஞ் சம்பிரக் கனிநீ ருண்டு
வெய்யநீர் பருகும் பின்னர் வெற்றிலை தனைநா வின்மேல்
வெய்யபொற் றகடு காய்ச்சி வெதுப்பமுன வகுத்த நோய் போம்104

## குனமம் முதலியவற்றிக்கு

## இரட்சை - சிகிச்சை

வகுத்திடு சத்தி குன்மம வலிமைகுன்ம மழற்றுங் குன்மம்
தொகுத்த நீர்க் குன்ம பெய்யிற் றொடரெரி குன்ம மாதி
பகுத்தவீ ரொன்ப தென்னுங்குன்மமுங் வாயு பத்தும்
மிகுத்ததோ ரெகுத்துப் பக்கக் கவிசைமேற் குடற்பு ரட்டே 105

இரட்சைவிதி

புரட்டுகுண் டலவா யுப்பின் புகலுமுட் டணவா யுக்கள்
திரட்டிய பக்கவாயு செறி பயித் தியவா யுத்தான்
வரட்டுமந் தரமாம் விட்டி வருமிவை யெட்டுந் தீர
முரட்டரு மிரட்சை செய்யு முறையினை மொழியக் கேளே 106

மொழியுநா ரியினு மார்பு தன்னினு முறைமை யாலே
பழுதறு மாளிச் சூடும் பண்டியி லிருவி லாவில்
வழுவிலாப் பிறைபோற் சூடும் வகுத்துநா பியினைச் சூழக்
கழிவிலா தாளிச் சூடுங் காட்டிப்பின் காரம் டோடே 107

போட்டுப்புண் ணதினாராண தயிலமே பூசிப் பின்னும்
மீட்டுமித் தயில மிட்டு விசைவினில் முழுக்கி யுள்ளே
ஈட்டுதாம் பிரசிந் தூர மிரகசிந் தூரமாதல்
கூட்டிய பற்ம மாதல் மண்டலங் கொள்ள லாமே 108

ஆகுமே *வங்கா ரத்தி னக்கினி குமாரனாதல்
ஏகதச வக்கினி குமார னென்னுஞ்சிந் தூர மாதல்
வேகுறு குன்மத் துற்ற குடோரிச்சிந் தூர மாதல்
ஓசையா யிவற்றி லொன்றை யுண்டிட மிகவு நன்றே 109

*வங்கார சஞ்சீவி - அக்கினி குமாரன் ஏகதச அக்கினிக்குமாரன் என்னுமிச் சிந்தூரங்கள் எம்மாற் பதிப்பிக்கப்பெற்ற வைத்திய சிந்தமணி என்னும் நூலிலுள்ள.

நன்றியா மருந்து தேனிற் பணவிடை நயந்த ருந்திக்
கீன்றிய புளிப்போ டுப்புக் கசப்பொடு கிரந்தி மாற்றித்
துன்றுமான் பால்நெய் கூட்டித் துய்ப்பிரே லுரைத்த நோய்கள்
வன்றிறத் கதிர்முன் றோன்றும் பனியென மாறிப்போமே 110

## கெர்ப்பசூலை கெர்ப்பவாயு யோனிச்சூலை

## முதலியவற்றிற்கு இரட்சை - சிகிச்சை

மாறிலாக் கெர்ப்ப சூலை வளர்கெர்ப்ப வாய்வு மற்றும்
ஈறிலா யோனிச் சூலை யெண்வகை தனக்குஞ் சூடு
வீறுநா பிக்குக் கீழு மேலும்பொட் டுச்சூ டாம்பின்
கூறுநா பியின்மேல் கீழ்மற றிடம்வல மிருபுறத்தும் 111

இருபுறந் தனிலு மும்மூன் றங்குல மிதனுக் கப்பால்
பெருகிடா தாளிச் சூடும் பிறைச்சூடு நாரி தன்னில்
உருகவே போட்டுப் பஞ்சாக் கினிதயி லந்தா னுள்ளே
பருகுமக் கினிகு மார பற்பார கிலுங்கொள் வீரே 112

கொள்ளுநற் றயில மாகில் நேரங்கா கிடைதான் கூட்டு
மெள்ளவே பற்ப மாகில் வெருகடி தேனில் மாந்தும்
தெள்ளிதாய் வயிற்றிற் புண்ணைத் தீர்க்கநெய் சிவந்தமுள்ளி
தள்ளுறா வியங்கு கையாக தகரைமுண் முருக்குத் தேடே 113

தேடுறு மாங்குச பாதி திகழ்பெடு தலையின் சாறும்
கூடவே யொன்றோர் நாழி குலவிய நறுநெய் நாழி
வாடா வியங்கு தூது வளை திராய் கிரந்தி நாயன்
சாடிய செங்கரித் தாரி சரணை பிரண்டை வேரே 114
வேரிவை வகைக்கோ சொன்று விரவுமோர் பிடிவெட்பாலை
சீரகமிரண்டு குப்பை சிறுதேக்குக் கடுகு ரோணி அங்குசபாதி -
வாழை நேரிய விடயங் கோட்ட நெடியதோ மதுரங் கைப்புக்
கார்புகா வெளுத்த லோமல் கடுகசாத் திரமாம் வேதி 115

மாசிறு மூலமூன்று கமுகமக் காரமா யாக்காய்
காசறு வேத தாரம் வகைக்கொர்க்கா கிடைக டுக்காய்
ஏசில்நாற் பதுதா னீர வெண்காயம் பலமூன் றித்தைக்
கூசிடா தரைத்து முன்னர்க் கூறிய சாற்றிலிட்டே 116

இரட்சைவிதி

இட்டெரித் தறுநா ளூறி யியல்புடன் வடித்த நெய்யைத்
திட்டமாய் நேரநாலு காசிடை - தின்பீ ராகில்
துட்டமாம் வயிற்றுப் புண்கள் தொலையுமுட் கிரந்தி தீரும்
சட்டமாய்ப் புளிய முப்புந் தவிர்ந்திடுந் தடங்கண் மாதே 117

## முலைப்புற்று முலைகிரந்தி முலைக்குத்து முலைப் பிளவை முலைஅசுகுணி இவைக்கு இரட்சை-சிகிச்சை

மாதுகேள் முலையிற் புற்று வளர்முலைக் கிரந்தி - சிகிச்சை
தீதுறு பிளவை சொர்க்கத் தசுகுணி பலவுந் தீர
வாதைசேர் முலைக்கு நாலு புறத்தினும் வளமாய்ச் சுட்டு
மீதுறு மார்பி னேரா யளந்துநால் விரலிற் சூடே 118

சூடெலாம் பொட்டையாய்ச் சுட்டுத் தொடரெட்டிப்பட்டை மஞ்சள்
கூடவே யரைத்துச் சூட்டில் வியாதிற் குலவப் பூசும்
ஈடுறு மூன்று நாளு மிப்படிப் பூசிப் பின்பு
நீடுநீர்ப் பூலாப் பன்ன நெடுவாசம் புள்ளி மஞ்சள் 119

மஞ்செனுங் குழலாய் தான்றி வளர்ப்புற்று மண்ணுங் கூட்டித்
தஞ்சமா முருங்கை வேரிற் சாறுவார்த் தரைத்துக் காய்ச்சி
மிஞ்சவே பூசிப் பின்னு முருங்கையின் விரைக ருஞ்சீர்
விஞ்சுநெற் பொரியோ ரொன்றாங் குழக்கதாய் விரைந்து வாங்கே

வாங்கியே யிடித்து தூளோர் பிடிவளர் பனையின் கட்டி
ஆங்கரைப் பிடியு மீர வுள்ளிச் சாறதனி னோடே
பாங்குறக் குழைத்துத் தின்னப் பறம்பி னோப் பலவுந்தீரும்
பூங்குழன் மடவா யுப்புப் புளிநீக்கிப் புசிக்க நன்றே 121

நன்றிசே ரிம்ம ருந்து நவைபற வெட்டு நாளும்
தின்றிட மாறா தாகிச் சியல்வரிற் கருஞ்ஞா நாரி
தன்றிய வெருக்குக் கான்றை துடரிபா வட்டை வீழி
சென்றுநற் குலத்திற் காணி சிற்யதம் பலைகி ளாவேர் 122

வேரிவை சமன் றூ ளாக்கி வெளிறங்கு குத்துருக்கங் கைப்புப்
பாரிவேம் பாட லேலம் பகர்களி ப்பாக்குத் துத்தம்
தாரில்செவ் வள்ளி யோக மிலவங்கஞ் சமனன்றூ ளாக்கிச்
சேருமெட் டயிலங் காய்ச்சித் திகழ்பதந் திறக்கி யாற்றே 123

ஆற்றியே முன்னூள் தூவிய யாங்கலைக் கூட்டிப் புண்ணில்
ஏற்றமாக திலாவிற் போட்டங் கிரவிற்குப் பனையின் பன்னம்
போற்றியே வறுத்துக் கூட்டிப் புகல்வெட்பா லைக் கொழுந்து
தோற்றுழக் கரிசி கூட்டிச் காபியின் பாலிற் கொள்ளே 124
கொண்டிட முலையிற் குத்துங் குணம்வருஞ் சுரக்கும் பாலும்
மிண்டுமா வரைநன் னாரி வேர்பலி வரைத்துப் பூசும்
கண்டகுந் தம்வேர் சுக்குக் காய்ந்த நீர் வார்த்த ரைத்து
மண்டுவீக் கத்திற் பூச வளர்முலை வானத் போமே 125

## ‡ விஷமுட்டித்தைலம்

காஞ்சுரங் கொட்டையின் றூள் பட்டைத்தூளுங்
கருத்துறவே மரக்காலொவ் வொன்று சேர்த்து

‡ இதற்கு முன் உள்ள நாராயணத் தைலம் நிம்பசமூலத்தைலம் ஆக்கிரமங்கத் தைலம் என்னும் மூன்றும் முதற்பாகம் சிரரோக நிதானத்தில் நாக்குரோகப் பகுதியில் கூறப்பட்டிருத்தலின் இங்கு தவிர்க்கப்பட்டன. முன்பலவிடங்களிற் குறித்த பஞ்சாங்கினித் தைலம் என்பதே நாராயணத் தைலம் போலும்.

இரட்சைவிதி

வாஞ்சையுடன் முன்போலமத் தைலங் கொண்டு
லாகான வேப்பெண்ணெய் சரியாய்ச் சேர்த்துக்
காய்ஞ்ச மஞ்சண் மாவிதர மெருக்கலம்பால்
கடுங்கெந்தி கலந்தெரித்துப் பதத்திற் பூசிக்
காய்ஞ்சவெந்நீ ராற்கழுற்றக் குட்டம் யாவுங்
கருங்கிரந்தி கரப்பான் முதலனைத்தும் போமே 126

## சதுரக்கள்ளதித் தைலம்

சதுரக்கள்ளிப் பட்டை கொட்டிக் கூட்டிச்
சரியாயொவ் வொருமரக்கால் தூள்க லந்தே
இததமுறவே புடத்தில் முன்போற் றயிலம் வாங்கி
யிதனிடைக்கு நிமபவெண்ணெய் கலந்துகொண்டு
பதமுறவே காய்ச்சும்போ திரசங் கெந்தி
பசுமஞ்சட் டுள்கலந்தே யெருக்கம் பாலால்
இதமுறவே யாட்பொடி நிறையத் தூவி
யிதுமுழுகி யுண்டுமேல் வெந்நீர் கொள்ளே 126

†முன்போல் என்றது நாராயணத் லைத்தை முறையிற் கண்டபடி குழித்தைலம் இறக்குதலை மஞ்சண்மா முதலியன நாராயணத்தை லதத்திற் கண்ட அளவுப்படி சேர்க்க வேண்டுமென்றலின் இங்கு அளவு கூறப்படவில்லை.

கொள்வெகு பத்தியமாய்க் கொண்டபோது
குணங்கெட்ட குட்டமொரு பதினெட் டோடு
தள்ளுபெரு வியாதிவலி பதினெமட்டும் போந்
தாங்கவொண்ணாச் சன்னிகளு முறிகி ரந்தி
விள்ளரிய வுட்குத்துப் பிறவீச் சோடு
விடாமண்டை வலிமண்டைக் கரப்ப னாதி
உள்ளபல பிணிகளெலா மோடிப் போகு
முன்மையென வாயுண்மறை யுரைத்த தாமே

# அனுபந்தம்

## முறிவுக்கு

நறுவிலி, மாவிலங்கை, முருங்கை - இவை பட்டை, நத்தைச் சூரிவேர் இவை நாலும் சமமாயெடுத்து நன்றாயிடித்து, நன்றாகக் கொதித்த காற்படி வெந்நீரில் ஊறப்போட்டு அரைத்துக் கொதிக்வைத்து முந்தின தூளுடன் கிளறிப் பிசைந்து முறிந்த இடத்திலணைத்து மூங்கில் சீவி வைத்துக்கட்டவும். கட்டும்போது அரிசி உலையிலிட்டுக் கமலாக்கினியாயெரித்து அரிசி பொங்கும்போது அவிழ்த்து போடவும். எலும்பு பொருந்தியபின் எண்ணெய் போடவும்.

குன்றியிலை, நாய்க்குரக்கன், உப்புக்கொடி, சாந்தாவாரி, நீலக்கொடி, வெற்றிலை, ஆத்தியிலை கடும்வெந்நீர் விட்டிடித்துக் கட்டவும்.

அசுவத்தை, இலுப்னபப்பட்டை, தவிட்டைப்பட்டை மஞ்சள் முன்போல் இடித்துக்கட்டவும்.

மாவிலங்கந்துளிர் இருபங்கு, புளிச்சலிலை ஒரு பங்கு, மஞ்சள் உப்புக் கூட்டியிடித்து வைத்துக்கட்டவும்.

ஆயிட்பட்டை சிம்பெழுத்தட்டி, மஞ்சட்டுள் தூவி அதன்மேல் தேங்காய்ப் பால்விட்டுப் பனையோலையால் மூடித் தணல் நெருப்பிற் புதைத்து, புழுங்கினபின் எடுத்துக்கட்டவும்.

தேறியிலை, குறிஞ்சாவிலை, கொட்டைத் தேங்காயிடித்துப் பிழிந்து பால்விட்டு அவித்துக்கட்டவும். இந்த மருந்துடன் கருஞ்சீரகமும் துரிசுங்கூட்டித் தேங்காய்ப் பாலிற் கரைத்துக் காய்ச்சிய எண்ணெய் பூசிவரவும்.

**முறிவு வெட்டுக் காயங்களுக்கு**

**வேடர் கைமருந்து (உசித்மானது)**

**1வது மருந்து**

நறுவிலிப்பட்டை, சிரட்டைக்கரி, நத்தைச்சூரி, கஞ்சித்தெளிவு அரைத்துக்கட்டி அரிசியவியும் நேரம் பார்த்து அவிழ்த்து போடவும்

**2வது மருந்து**

நாவற்பட்டை, மஞ்சள், உப்புஞ்சிறுகச் சேர்த்து இடித்து மூன்று நாட்கட்டவும்.

**3வது மருந்து**

விண்ணாங்கமிலை, சுக்கு, மஞ்சள் இடித்து மூன்று நாட்கட்டவும்.

**இதன்மேற் பற்று**

சாளியா, கரியபவளம், பெருங்காயம் சமன் கொண்டு கோழிமுட்டை வெள்ளைக்கருவிட்டு அரைத்துப் பற்றிடவும்.

**முறிநத வீக்கத்தில் முடக்கிநீட்ட**

**இளக்கமருந்து**

கச்சற்சூரையிலையும், பிஞ்சும் தோல்நீக்கியரிந்து, மஞ்சள் நிறத்திற் சிறுபயறு, பளிச்சாமையரிசி, பிரண்டைத் தண்டுச்சாறு, குன்றியிலைச்சாறு, தேங்காய்ப்பால் கூட்டியவித்து மூன்றுநாட் கட்ட இளகும்.

பூவரசம்பட்டை, சாத்தாவாரியிலை, குன்றியிலை, புளிச்சற்பட்டை தேங்காய்ப்பாலில் எண்ணெய் பிறக்கக் காய்ச்சி வைத்துக்கட்டவும்.

சாத்தாவாரி, குன்றிக்கொடி, வளைகிற கொடிப்பூவரசம் பட்டை, தேங்காய்ப்பூ எல்லாமொன்றாயிடித்துப் பிழிந்து சீலைவடிகொண்டு கறள்வட்டிலில் வார்த்து எண்ணெய் பிறக்கும் போது எடுத்து பூசி உருவவும்.

ஆலம்விழுது, புங்கம்வேர், கக்கிரிக்கோழை, அத்திப்பட்டை இவை சாறு, வெங்கிடாத்திப்பாம்பிலெலும்பு, இருசீரகம், துத்தம், துரிசு, கடுக்காய், தான்றிக்காய், வசம்பு, சுக்கு, பெருதேன்மெழுகு தேங்காய்ப்பால் விட்டுக்காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்துப்போட இளகும்.

## வீக்கம் நோத்தீர

வட்டுக்குழை, உப்பு மஞ்சள் இடித்துக் கட்ட வீக்கம் மாறும், பறங்கியாமணக்கமிலை, முள்ளிலகம்பட்டை, கொக்காம் பாறைப் பட்டை இவை தேங்காய்ப்பால்விட்டுத் துலைத்துப் பிழிந்து கராம்பு வசுவாசி சாதிக்காய் திப்பிலி இருசீரகம் பொடி செய்து தூவி வட்டிலிற் சூரியபுடம் வைத்து எடுத்துப்பூசவும் அல்லது அச்சாற்றில் வம்மில்ப்பட்டை, கருந்தெகின், அடப்பம்பட்டை, நாவற்பட்டை, துடரிப்பட்டை, குமிழம்பட்டை, இலுப்பைப்பட்டை, பாலைப்பட்டை இவையிடித்துத் தெளிவிய தூள் கூட்டிப் பாணிகாய்ச்சிப் பூசவும். குன்றியிலைச்சாறு, காவிளாயிலைச்சாறு குரக்கன் மாக்கூட்டிக் குழம்பாகக் காய்ச்சிப் பூசவும்.

## நோவுக்கு ஒற்று

ஆமணக்கமிலையரிந்து ஒரு பானையிற் போட்டு, தண்ணீர்விட்டுப் பானைவாய் சீலைப்பால் வேடுகட்டி அதன்மேல்; பச்சைமஞ்சளும் பருத்திகொட்டையுமிடித்து இரண்டுபொட்டளி கட்டி வைத்தவித்து மூன்று நேரமொற்றியபின், நொச்சியிலையும் பழத்தேங்காய்ப்பூவும் முன்போலவித்து மூன்றுநேரமொற்றி மூன்றுநாட் சென்றபின்;

**பற்று :**

பாலைப்பட்டை, ஒதியம்பட்டை, வேப்பம்பட்டை, நாவற்பட்டை இவையிடித்து நாலொன்றாய்யவித்துப்பிழிந்த நீரில் வேம்பம்பிசின், விளாம்பிசின், ஒதியம்பிசின் கூட்டியவித்து, வெள்ளுள்ளி, உலுவா, கடுகு சாளியா, கொடும்புளி,

வெளுத்தற்பிசின், சுக்கு, கருங்கறையான் மண், வகை கழஞ்சு 2 மஞ்சள்மா, குரக்கன்மா வகை படி கால் மேற்படி நீர்விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சிக் குழம்புப்பருவத்தில், கோழிமுட்டை வெள்ளைக்கரு விட்டு அம்மியிலரைத்துப் பசைப்பருவத்தில் சீலையிற் பூசிப் பற்றிடத் தீராதநோ, பழநோ எல்லாந் தீரும்.

மருதஞ்சருகு சுட்டசாம்பல், மஞ்சள், கரியபவளம், சாளியா இவற்றை நல்லெய்ணெய் விட்டரைத்துப் பின் மூந்திரிகையரக்கு விட்டரைத்து அதன்பின் கோழிமுட்டை வெள்ளைக்கருவிட்டரைத்துச் சீலையிலூட்டிக் கட்டவும்.

காற்றும் பூமித்தாயும் தந்தையாகிய வானமும் நமக்கு ஆனந்தத்தைத் தருவதான மருந்தை அளிக்கட்டும். ஆனந்தம் தருவதான மருந்தைத் தயாரிப்பதற்கான கற்களைச் சோமனின் மகனான புதன் நமக்குத் தரட்டும். இரட்டையரான அஸ்வினி சகோதரர்கள் நமக்குப் புத்தியில் ஒளியைத் தரட்டும்.

-இருக்குவேதம்

Printed by Harikanan Printers, Jaffna. T.P. 021-2222717